உ


சிவமயம்

கல்வயல் - சாவகச்சேரி

புலுட்டையன் பிள்ளையார் என அழைக்கப்பெறும்

# திருவருள்மிகு ஆயிலடி வீரகத்தி விநாயகர் ஆலய

# புதிய சிறப்பு சித்திரத் தேர்



# வெள்ளோட்ட விழா சிறப்பு மலர்

21.07.2012


உ
சிவமயம்

உ
சிவமயம்

# புதிய சித்திர சிற்பத்தேர்
# வெள்ளோட்ட விழா
# சிறப்புமலர்



இஃது

கல்வயல் - சாவகச்சேரி

புலுட்டையன் பிள்ளையார் என அழைக்கப்பெறும்

திருவருள்மிகு ஆயிலடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தினரால்

வெளியிடப்பெறுவது


தொகுப்பாசிரியர்

**திரு. கா. சிவஞானசுந்தரம் அவர்கள்**

(வெள்ளோட்ட விழா உபயகாரர்)

"ஈஸ்வர பவனம்"

கல்வயல், சாவகச்சேரி



வெளியீடு

**21-07-2012**

# நூற்பதிப்பு விளக்கக்குறிப்பு


| | |
|---|---|
| நூற்பெயர்:- | சித்திர சிற்பத்தேர் வெள்ளோட்ட விழா சிறப்பு மலர் |
| தொகுப்பாசிரியர்:- | திரு. கா. சிவஞானசுந்தரம் (வெள்ளோட்ட உபயகாரர்) |
| வெளியிடுபவர்:- | தர்மபரிபாலகர் திரு. சி. விவேகானந்தன்<br>ஆயிலடி வீரகத்தி விநாயகர் ஆலயம்<br>கல்வயல், சாவகச்சேரி. |
| வெளியீட்டு நாள்:- | 21-07-2012 சனிக்கிழமை நேரம் பி. ப. 2-00 மணி |
| நூல் அளவு:- | B5 (¼ கிரவுண்) |
| பக்கங்கள்:- | I - XXIV + 1 - 96 = 120 |
| பிரதிகள்:- | 500 |
| அச்சிட்டோர்:- | திருக்கணித பதிப்பகம்<br>டச்சுவீதி, சாவகச்சேரி. |


உ

சிவமயம்

அகரமென அறிவாகி உலகமெங்கும்
அமர்ந்தகர உகரமக ரங்கள்தம்மால்
பகருமொரு முதலாகி வேறுமாகிப்
பலவேறு திருமேனி தரித்துக்கொண்டு
புகரில்பொருள் நான்கினையும் இடர்தீர்ந்தெய்தப்
போற்றுநருக் கறக்கருணை புரிந்தல்லார்க்கு
நிகரின்மறக் கருணைபுரிந் தாண்டுகொள்ளும்
நிருமலனைக் கணபதியை நினைந்து வாழ்வாம்

- *ஸ்ரீகச்சியப்ப முனிவர்*

"இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க"



மூலமூர்த்தி



உ

# "இறைபணியே இன்பப்பணி"

கல்வயல், **கா.சிவஞானசுந்தரம்** அவர்கள்

"பொற்பொதுக் குடபாற் பொற்புற நடிக்குங்
கற்பகத் திருதாள் கற்பவர் நமரே."

- சிவஞானமாபாடியம்

யாழ்ப்பாணம் சாவகச்சேரி கல்வயல் புலுட்டையன் பிள்ளையார் என அழைக்கப்பெறும் திருவருள்மிகு ஆயிலடி வீரகத்தி விநாயகர் ஆலயத்திற்கெனப் புதிதாக அமைக்கப்பட்ட திராவிட மரபும் நவீன கலைநுட்பமும் கூடிய சித்திர சிற்பத்தேர் வெள்ளோட்ட விழாச்சிறப்பு மலரினைத் தொகுத்து அமைக்கும் தெய்வீகப் பணியினை ஆற்றுவதற்குக் கிடைத்தபேற்றினைச் சிரமேல் ஏத்தி அகமகிழ்ந்து எல்லாம்வல்ல விக்ன விநாயகன் பதம் பணிந்து நிற்கின்றேன்.

இம்மலரினை ஆக்குவதற்கு என்னையும் ஒரு பொருட்டாக மதித்து அப்பணியை என்னிடம் ஒப்படைத்து எல்லாவகையிலும் அனுமதி அளித்த ஆலயத்தின் தர்மபரிபாலகர் திருவாளர் சி. விவேகானந்தன் அவர்களுக்கு என்னுடைய குடும்பத்தினர் சார்பிலும் இம்மலரைப் படைப்பதற்குப் பல்வேறு வகையிலும் ஒத்துழைத்தவர்கள் சார்பிலும் என்னுடைய அன்பானதும் பணிவானதுமான நன்றியினைச் சமர்ப்பித்து மகிழ்கின்றேன்.

தர்மபரிபாலகர் திரு. சி. விவேகானந்தன் அவர்கள் தன்னலமற்றவர். தென்மராட்சி மண்ணில் கல்வயல் பதியில் மற்ற ஆலயங்களோடு ஒப்பிடும்போது சகல வளங்களுடனும் கூடிய ஓர் ஆலயமாக இவ் ஆலயத்தைத் திகழவைப்பதில் வெற்றிகண்டுள்ளார்.

திரு. சி. விவேகானந்தன் அவர்களின் காலத்தில் இவ் ஆலயம் அனைத்து வளங்களுடன் விளங்கினாலும் இராஜகோபுரம், சப்பறம் போன்ற திருப்பணிகள் இன்னும் நிறைவேறக்காத்திருக்கின்றன. கல்வயல் வாழ் மக்களின் உணர்வுகள், எண்ணங்களை நிறைவேற்றுமுகமாக தர்மபரிபாலகர் அவர்கள் இரவு பகல் பாராது உழைத்து தனது சிந்தனைக்கு அப்பால் சென்று இச்சித்திரத்தேர் உருவாக்குவதற்குப் பாடுபட்டவர். அவரது எண்ணம் அவரது மனம்போல் நிறைவேறியுள்ளது. அவரதும் அவரது குடும்பத்தினரதும் அர்ப்பணிப்பான பணியை கல்வயல் மக்கள் என்றும் வாழ்த்தி நிற்பர் என்பது திண்ணம்.

இம்மலர் பிரசவிப்பதற்குக் காரணமான தேர், திரு. கி. கலாமோகனின் சிற்பத்திறனிற்கு ஒரு சான்று எனலாம். கலாமோகன் அவர்கள் 1984-ம் ஆண்டு சரசாலை நுணுவில் பிள்ளையார் ஆலயத்தில் முதன்முதலில் ஆரம்பித்து 1987ல் விளைவேலி துர்க்கையம்மன் கோவிலிலும் 1991ல் கல்வயல் வேதவனப்பிள்ளையார்

ஆலயத்தில் "சிற்பக்கலைச் செல்வன்" எனும் பட்டமும் பெற்று 1992ல் சாவகச்சேரி முத்துமாரி அம்மன்ஆலயத்திலும் 1994ல் நுணாவில் முருகன் (வைரவர்) கோவிலிலும் 1995ல் பெருங்குளம் பிள்ளையார் கோவிலில் "சிற்பக்கலாமணி" எனும்பட்டமும் பெற்று 1998ல் சாவகச்சேரி இத்தியடிப் பிள்ளையார் கோவிலில் "சிற்பக்கலா இரத்தினம்" எனும் பட்டமும் பெற்று 2001ல் வவுனியா வெளிவட்டவீதி சிந்தாமணிப் பிள்ளையார் கோவிலில் "சிற்ப கலாகேசரி" எனும் பட்டமும் பெற்று 2006ல் மலேசியா கிளாங் அம்மன் கோவிலிலும் இன்று எமது ஆலயத்தேர்வரை சுமார் பத்து சித்திரத்தேர்களைப் படைத்தவர். ஆனாலும் இன்று வெள்ளோட்டம் கண்டதேர் எங்கும் இல்லாத அளவுக்குச் சிற்பநுணுக்கம் பெற்றது. இத்தேரினைக் கண்டு வியந்து பாராட்டியவர்கள் மத்தியில் சிறந்த சிந்தனைச் சிற்பியாக மிளிரும் கலாமோகனை நாம் வாழ்த்துகின்றோம்.

சித்திர சிற்பத்தேர் வெள்ளோட்ட விழா மலரானது நிறைவான அறிஞர்களின் ஆசிச்செய்திகள், வாழ்த்துரைகள், கருத்தாழம்மிக்க கட்டுரைகளைத் தாங்கி வெளிவருகின்றது. இம்மலராக்கத்தில் எனக்குத் தோளோடு தோள் நின்று பணி செய்தவர்கள் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் (துணைவேந்தர் யாழ் பல்கலைக்கழகம்) பேராசிரியர் தி. வேல்நம்பி (பீடாதிபதி முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடம், யாழ் பல்கலைக்கழகம்) திரு. கைலாசநாதன் (உதவிக்கல்விப் பணிப்பாளர், வலயக்கல்வி அலுவலகம், தென்மராட்சி) திரு. ச. மார்க்கண்டு (ஆசிரியர் யா/ டிறிபேக் கல்லூரி, சாவகச்சேரி), திரு. ச. லலீசன் (விரிவுரையாளர், கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை), திரு. க. ஈஸ்வரன் (ஆசிரியர் யா/ நாவற்குழி ம.வி. நாவற்குழி) ஆகியோர் எனது நன்றிக்கும், விநாயகர் அருளுக்கும் உரியவர்கள் ஆகின்றனர்.

இவ்வாலய வரலாற்றை எழுதப்புக்கபோது எனக்குப் பல்வேறு ஆலோசனை களையும் தகவல்களையும் வழங்கியவர்கள் தர்மபரிபாலகர் திரு. சி. விவேகானந்தன் அவர்கள், சிவஸ்ரீ கி சோமமுந்தரக்குருக்கள் அவர்கள், கல்வயல் வே. குமாரசாமி அவர்கள், திரு. நாகப்பு ஆசிரியர் அவர்கள், திரு. ஆ. செல்வராசா அவர்கள், திரு. கா. சிவபாலன் (துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.) என்போராவர். அவர்களின் ஆலோசனைப்படி இவ்வாலயத்தின் வரலாறு இங்கு பதியப்பட்டிருக்கின்றது. இவர்கள் என்மனதில் என்றும் நிலைத்திருப்பார்கள் அவர்களின் வாழ்வு நலம்பெற நன்றியுடன் பிரார்த்திக்கின்றேன். அத்தோடு இவ்வாலயத்தின் பெயரில் திரு. சி. நடராசா ஆசிரியர் அவர்கள் வெளியிட்ட திருவூஞ்சல்பாக்கள் எனும் மலரில் ஆலய சிறு வரலாற்றுத்தொகுப்பு அமைந்திருந்தது. இவ்வரலாற்றை தொகுப்பதற்கு இம்மலரும் துணையானது.

இம்மலராக்கத்திற்கு எனக்கேது கடப்பாடு என்பீராயின் எனது தாயார் பிறந்தமண் கல்வயல் ஆகும். கல்வயல் பதிக்கும் மட்டுவில் பதிக்கும் நெருங்கிய

தொடர்பு பேணப்பட்டிருக்கிறது. அந்த வகையில் யான் மட்டுவிலில் பிறந்து எனது தாயாரின் பதியாகிய கல்வயலில் வாழ்ந்துவரும்பேறு பெற்றவன் என்பதால் இம்மலரை ஆக்கும் பணிக்கு உள்ளானேன்.

என்னை இறைபணிகளுக்கும், சமூகப்பணிகளுக்கும் இட்டுச்செல்வதற்கு வித்திட்டவர்கள் மட்டுவில் வடக்கு கந்தையா சுப்பிரமணியம் இளைப்பாறிய அதிபர், சரசாலை இளைப்பாறிய ஆசிரியர் ச. கைலாயபிள்ளை ஆகியோரே. 1970களில் மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்பாள் ஆலயத்தில் அறிவிப்புப்பணியில் என்னை ஈடுபடுத்தி சேவை மனப்பாங்கை ஏற்படுத்தியவர்கள் இவர்களாவர். இத்திருப்பணியை யான் செவ்வனே தொடர்வதற்கு மேலும் ஊக்கமளித்தவர்கள் சிவஸ்ரீ சி. சிதம்பரநாதக்குருக்கள் அவர்கள், கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள், (துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.) செல்வி அன்னலஷ்மி சின்னத்தம்பி அவர்கள் (வாழ்வக ஸ்தாபகர்) என்போராவர். சிதம்பரநாதக்குருக்கள் அவர்களின் ஆசியுரைகளில் வரும் கருத்து என்னை மிகவும் இப்பணியில் ஈடுபடத்தூண்டியது. அதாவது "எம் எதிர்கால வாழ்வுக்குரிய சேமிப்பு பணமோ பொருளோ அல்ல; புண்ணிய நற் செயல்களே" என்ற வாக்கு என்மனதில் பதிந்துவிட்டது. இன்று என்னை சமூக, சமயப்பணிகளில் ஈடுபடவைத்ததும் அவ்வித்தே எனலாம்.

இத்தகைய சிந்தனையோடு இம்மலரை ஆக்கத்துணிந்தபோது எனக்கு ஆக்கமும் ஊக்கமும் வழங்கிய கல்வயல் திரு. து. ரூபசிங்கம் அவர்களுக்கும், திரு. வே. செந்தில் அவர்களுக்கும் ஆலய தர்ம பரிபாலகருக்கும், ஆசிச்செய்திகள், வாழ்த்துச்செய்திகள் வழங்கிப் பெருமைப்படுத்திய ஆச்சாரியப்பெருமக்கள், அறிஞர்கள், பெரியோர்கள் அனைவருக்கும், கட்டுரைகள் நல்கி இம்மலரின் பெறுமதியை உயர்த்திவைத்த பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், ஆசிரியர்கள், மற்றும் பெரியோர்கள் அனைவருக்கும் இம்மலர் வெளியீட்டுக்குக் கைகொடுத்துதவிய அனைத்து அன்புள்ளங்களுக்கும் எனது இதயபூர்வமான வாழ்த்துகளையும் நன்றிகளையும் தெரிவித்து இம்மலரை கல்வயல் ஆயிலடி வீரகத்தி விநாயகர் பாதக்கமலங்களில் சமர்ப்பித்து அமைகின்றேன்.

"என்கடன் பணிசெய்து கிடப்பதே"

மட்டுவில் திருக்கணித பஞ்சாங்ககணிதர்

கலாபூஷணம், **சிவஸ்ரீ சி. சிதம்பரநாதக்குருக்கள்** அவர்களின்

# ஆசிச்செய்தி

மஹோற்சவத்திலே தேர்த்திருவிழா மிகவும் சிறப்பானது. மஹோற்சவ கிரியைகளிலே இது அழித்தல் தொழிலைக் காட்டுவதாகும். இதனை உள்ளடக்கியே "சாற்றிடும் அங்கியிலே சங்காரம்" என்று கூறப்பட்டது. இறைவன் திருக்கரத்திலேயுள்ள அக்கினி சங்காரத்தைக் குறிக்கிறது. தேரின் தோற்றத்தை அவதானித்துப் பார்ப்போமானால் அதன் முழு ஆகிருதியும் கொழுந்துவிட்டு சுவாலித்து எரியும் அக்கினியின் அமைப்புக்கு ஒத்திருப்பதைக் காணலாம்.

ஆயிலடி வீரகத்தி விநாயகர் ஆலயத்திலே இவ்வருடம் புதிதாக அமைக்கப்பட்ட சித்திரத்தேர் வெள்ளோட்டம் நடைபெற இருக்கிறது. அதனை உருவாக்குவதற்கு செலவிட்ட ஆலய அறங்காவலர், ஏனைய அபிமானிகள், எல்லோரும் பாராட்டுக்குரியவர்கள்.

முப்புரங்களையும் அழிப்பதற்கு புறப்பட்ட பரம்பொருள் பூமியைத் தேராகவும் சூரிய சந்திரர்களை அதன் சில்லுகளாகவும், நான்கு வேதங்களும் அதனை இழுக்கும் குதிரைகளாகவும் அமைய அதிலே எழுந்தருளி இருந்து உலகம் முழுவதும் தம்முள் அடக்கம் என்பதை உணர்த்துகிறது. பிரபஞ்சம் முழுவதும் பீடசக்தியாகவும் அகில சராசரங்களும் இறைவனது உருவத்திருமேனியாகவும் அவற்றுள் மறைந்திருப்பது சிவசொருபம் என்ற நினைவுடன் இரதத்திலே இறைவனைத் தரிசிப்பதனால் சிறந்த பலனை அடையலாம்.

பெருமரங்களைவெட்டி சிறுதுண்டுகளாக ஆக்கித்தருபவன் தச்சன். சிற்பசாஸ்திர நுணுக்கப்படி அவைகளை உருவாக்குபவன் சிற்பாசாரி அதனால் அமைந்த உருவமே தேர். அதில் வீற்றிருப்பவன் இறைவன். தச்சன், சிற்பாசாரி எல்லோரையும் நாம் வணங்கவேண்டும். எல்லா விழாக்களுடன் தேர்த்திருவிழாவும் சிறப்பாக நடந்தேற விநாயப்பெருமான் திருவருளை வழுத்தி எல்லோருக்கும் நல்லாசி கூறி அமைகின்றேன்.

"இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க"

மட்டுவில்

"பிரதிஷ்டா வித்தகர்" **சிவஸ்ரீ கி. சோமசுந்தரக்குருக்கள்** அவர்களது

# ஆசிச்செய்தி

யாழ்ப்பாணம் - தென்மராட்சி - சாவகச்சேரிப்பதி சைவத்திற்கும் தமிழுக்கும் ஆலய வழிபாட்டிற்கும் சிறப்புடையது. இப்பிரதேசத்தின் நாப்பண் கல்வயல் எனும் ஊர் சைவம், தமிழ், குருத்துவம், புராணிகம், விவசாயம் ஆசிரியப் பணி என்பவற்றால் மேலோங்கிய இடமாகும். அத்துடன் பெருங்குளம் பிள்ளையார் கோவில், வேதவனப் பிள்ளையார் கோவில், சித்தன்மாவடிப் பிள்ளையார் கோவில், ஆயிலடி வீரகத்தி விநாயகர் கோவில் ஆகிய நான்கு பிள்ளையார் கோவில்களின் திருவருள் கிடைக்கப்பெறும் பெருமை பெற்ற ஊர். மக்கள் கந்தபுராண கலாசாரத்தோடு வாழ்பவர்கள். இவற்றில் கந்தபுராணச் சிறப்பு, திருவாசக உண்மைத் தன்மை, பக்தி வழிபாடு என்பவற்றால் பக்தி பெருமை பெற்ற ஆலயம் அருள்மிகு ஆயிலடி வீரகத்தி விநாயகர் ஆலயமாகும். இவ்வாலயம் பக்தியோடு பூசனை புரிந்து வந்த பரம்பரையினரின் வழிவந்த திரு. சி. விவேகானந்தன் அவர்கள் தலைமையில் சிற்பக்கலை, ஓவியம், கோவில் சுற்றுப் பிரகாரம், மண்டபங்கள் அழகுற அமையப்பெற்று நித்திய நைமித்தியங்கள் வழுவாது நடைபெற்று வருகின்றது. நைமித்திய விழாவாகிய மஹோற்சவ விழா நடந்துவருகின்றவேளை விநாயகருக்கு ஒரு புதிய சித்திரத்தேர் வேண்டும் எனும் விநாயகரின் திருவருள் கொண்டு தர்மபரிபாலகர் அவர்களின் பெரும் பொருட்செலவில் புதிய அழகிய சித்திரத்தேர் நிர்மாணித்து இன்று வெள்ளோட்டம் நடைபெறுகின்றது.

இச்சித்திரத்தேர் நிர்மாணிக்கும் சிற்பாசாரியாரைப் பற்றிச் சிறிது சிந்திப்போம். கல்வயல் ஊருக்கு மேற்கே உள்ள கிராமம் மட்டுவில். அக் கிராமத்தில் கல்வம் சிவன் ஆலயம், அருள்மிகு பன்றித்தலைச்சிக் கண்ணகி அம்பாள் ஆலயம் என்பவற்றால் மக்களுக்கு என்றும் திருவருள் கிடைத்துக் கொண்டிருக்கிறது. மேலும், இவ்வூருக்கு பெருமை சேர்க்கும் வகையில் ம. க. வேற்பிள்ளை அவர்கள், இலக்கியக் கலாநிதி பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்கள், ஆசிரியமணி சுப்பையா அவர்கள் வாழ்ந்த இடமாகும். புராணிகரான சங்கரப்பிள்ளை ஆசிரியர், ஆறுமுகம் அவர்கள் போன்ற பெரியார்கள் வாழ்ந்த இடமும் ஆகும். எங்கள் நாட்டில் சிறந்து விளங்கும் திருக்கணித பஞ்சாங்கம், மெய்கண்டான் கலண்டர் என்பன முதன் முதலில் உருவாகியதும் இவ்வூரே. இப்படிப்பட்ட சிறப்பு மிகுந்த மட்டுவிலில் சிற்பக்கலை களுக்கும் குறைவில்லை. அவ்வண்ணம் சிற்பக்கலைகளை அறிந்து செவ்வனே தேர்கள், வாகனங்கள், வீடுகள், கோவில்கள் என்பவற்றை உருவாக்குகின்ற

சிற்பக் கலைஞர் பரம்பரையில் உதித்த சிற்ப கலாமணி திரு. கிருஷ்ணபிள்ளை கலாமோகன் அவர்கள் இச் சித்திரத்தேரை சிறப்புற அமைத்துள்ளார்கள்.

அவர்கள் கைவண்ணத்திலே இறைவன் திருவருளோடு உருவாகிய தேர்கள் சரசை நுணுவில் பிள்ளையார் கோவில், சாவகச்சேரி துர்க்கை அம்மன் கோவில், கல்வயல் வேதவனப் பிள்ளையார் கோவில், பெருங்குளம் பிள்ளையார் கோவில், நுணாவில் வைரவ முருகன் கோவில், சாவகச்சேரி இத்தியடி விநாயகர் கோவில் ஆகிய ஆலயங்களிலும் அவர் கைவண்ணத்தினால் செய்யப்பட்ட தேர்கள், வாகனங்கள் என்பன அவரின் கலைத்திறனை பறைசாற்றிக் கொண்டிருக்கின்றது. பெருமானுடைய திருவருளோடு இச் சித்திரத் தேரை தன்னுடைய சிந்தனையில் ஏற்பட்ட சிற்பக்கலைத்திறன் அனைத்தையும் சேர்த்து செய்யவேண்டும் என்று நினைத்து நல்ல முறையிலே இச்சித்திரத்தேரை நிர்மாணித்துள்ளார். இதற்குப் பரிபாலகர் சி. விவேகானந்தன் அவர்களின் பரிபூரண ஒத்துழைப்பும் ஊக்குவிப்பும் ஒரு காரணமாகும். பரிபூரணமாக இன்று இச்சித்திரத்தேர் வெள்ளோட்டவிழா பெருமான் திருவருளோடு நடைபெறுகின்றது. இவற்றிற்கு எல்லாம் மூலகாரணமான அருள்மிகு ஆயிலடி வீரகத்தி விநாயகப் பெருமானுடைய திருவருளோடு இவற்றை நடத்திக் கொண்டிருக்கும் தர்மபரிபாலகர் திரு. சி. விவேகானந்தன் குடும்பத்தினருக்கும் சித்திரத் தேரை அழகுற அமைத்துக் கொடுத்த சிற்பக்கலாமணி திரு. கி. கலாமோகன் அவர்கள் குடும்பத்திற்கும் எல்லாம் வல்ல விநாயகப் பெருமான் திருவருளினால் சகல செல்வயோகமுமிக்க பெருவாழ்வும் நோயற்ற வாழ்வும் சிறந்த கலைத்திறனும் நல்வாழ்வும் கிடைக்க என்மனத்துறையும் விநாயகரை வணங்கி வாழ்த்தி அமைகின்றேன்.

மேலும், இவ் வெள்ளோட்ட விழாவை சிறப்பிக்கும் முகமாக மலரும் வெள்ளோட்ட விழா மலர் சிறப்பாக அமையவும் பிரார்த்திக்கின்றேன்.

வாழ்க! வளர்க!
வணக்கம்

மட்டுவில், சாவகச்சேரி.

"சமஸ்கிருத பண்டிதர்" **சிவஸ்ரீ கி. சதாசிவக்குருக்கள்** அவர்களது

# ஆசிச்செய்தி

"ஆயிலடிக் கல்வயலூர் பதி விளங்கும்
வீரகத்தி விநாயகரின் சித்திரத்தேர் பவனிவிழா
பூரணமாய், அழகுரத வடம் பிடிக்கும்
காரணமாய் காத்தருளும் கரிமுகனே போற்றி"

அகரமென அறிவாகி ஆயிலடி வீற்றிருக்கும் ஸ்ரீ வீரகத்தி விநாயகப் பெருமான் புதிய சித்திரத்தேரில் பவனிவரும் விழாக்காண நாமெல்லாம் பாக்கியம் செய்தவர்களாவோம். பூக்கொண்டு தும்பிக்கையான் பாதம் தப்பாமல் சார்வார் தமக்கு. வாக்குண்டாம், நல்ல மனமுண்டாம், மாமலராள் நோக்குண்டாம் என்னும் இறை நம்பிக்கையுடன் வாழும் எம்மக்கள் விநாயகப் பெருமானையே வழுத்தி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவ்வகையில் சாவகச்சேரி கல்வயல் பதியில் அருளாட்சி செய்யும் ஸ்ரீ வீரகத்தி விநாயகப் பெருமானின் மஹோற்சவ விழாக் காலத்தில், புதியதோர் சித்திரத்தேரில் இறைவன் பவனிவர, அவ்வருட்காட்சியைக் காண பக்தர்கள் ஆவலாக இருக்கின்றார்கள். 'தேரில் வடம் பிடித்தால் வானிலும் இடம்பிடிக்கலாம்', ஊர் கூடித் தேர் இழுப்போம்" எனும் முதுமொழிக்கிணங்க இவ்வாலயத்தின் தர்மபரிபாலகர் உயர்திரு. சி. விவேகானந்தன் அவர்களின் அயராத அரிய முயற்சியின் பயனாக உருவானதே இச்சித்திரத்தேர். எமது குல தெய்வம் விநாயகப் பெருமானை புதிய சித்திரத்தேரில் பவனிவரக் காணவேண்டும் எனும் அவரது ஆவலும், ஆலய சிவாச்சார்யார்களின் நல்லாசிகளும், கல்வயலூர் மக்களின் வேண்டுதலும் விருப்பும் ஒன்றுசேர்ந்து உருவான இப்புதிய "ரதப்பவனி விழா" இன்று எல்லாம்வல்ல ஆனைமுகப் பெருமானின் திருவருளோடு சிறப்பாக பூரணப் பொலிவு காண எமது நல்லாசிகளை மனமகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், இச்சித்திரத் தேரை சமய தத்துவங்களும் கலைப்பொக்கிஷங்களும் புராண வரலாறுகளும் சித்திரச் சிற்பங்களும் அடங்கியதாக உருவாக்கிய பெருமை மட்டுவிலூர் சிற்பக் கலைஞர் திரு. கி. கலாமோகன் அவர்கட்குரியதாகும். எனவே அவருக்கும் மற்றும் இச் சிறப்போடமைந்த புதிய தேர்ப்பவனி விழா சிறப்புற்றமையவும் இவ்வெள்ளோட்ட விழா மலர் வெளியீடு பொலிவு தரவும் எல்லை காணரும் பேரின்ப மெய்தவும் வல்லபைக்குரியானை வாழ்த்தி, வணங்கி நல்லாசிகள் வழங்கி அமைகின்றேன்.

வணக்கம்

சாவகச்சேரி வடக்கு ஸ்ரீ இலஞ்சியாரணியம் மண்டுவில் அம்மன் ஆலய பிரதம குருக்கள், **சிவஸ்ரீ க. கிருபானந்தக்குருக்கள்** அவர்களது

# ஆசிச்செய்தி

சாவகச்சேரி கல்வயல் ஆயிலடி வீரகத்தி விநாயகருக்குச் சித்திரத்தேர் இல்லாத குறையை நிறைவுசெய்யு முகமாகக் கடந்த சில வருடங்களாகத் தேரினை அமைப்பதற்கு ஏற்றவகை மரங்கள் சேகரிக்கப்பட்டுத் தேர் நிர்மாணம் செய்யப்பட்டு இன்றைய தினம் மிகவும் சிறந்ததான கலையம்சங்களுடனான தேராக வெள்ளோட்டம் விடப்படுகின்றது. இந்தச் சித்திரத்தேர் குறித்த ஆலயத்தின் தருமபரிபாலகரான திரு. சின்னத்தம்பி விவேகானந்தனது பெருமுயற்சியினாலும் சிற்பக்கலைஞர் திரு. கலாமோகனதும் அவரது உதவியளாளர்களதும் அயராத உழைப்பில் உருவாகி நிறைவாகியுள்ளது.

எமது இந்து சமய ஆன்மீக நெறியில் புராதன காலம் தொட்டு இரதோற்சவம் எவ்வாறான முக்கியத்துவம் பெறுகிறதென்பதை மாமல்லபுரத்துப் பஞ்சபாண்டவரது பஞ்சரத கற்சிற்பங்கள் எடுத்துக்காட்டாக உள்ளன எனில் மிகையாகாது. இப்பஞ்ச ரதங்கள் இந்தியாவின் ஆந்திரப் பிரதேசத்தைச் சார்ந்த சுரதவர் மன்னனும் பல்லவ மன்னன் காலத்தில் கி. மு. 400-ல் அமைக்கப்பட்டதென வரலாறு கூறுகின்றது. அந்தவகையில் ஆயிலடி வீரகத்தி விநாயகருக்கான இந்தத் தேரினைச் சிற்பக் கலைஞர் திரு. கி. கலாமோகன் மிகவும் உன்னதமான கலையம்சம் நிறைந்ததாக நிர்மாணித்துள்ளார்.

தேரினது அமைப்பைச்சற்று உற்று நோக்குவோமாக இருந்தால் எ.்.கினாலான அச்சுக்களில் பொருத்தபட்டுள்ள அதன் பார் பூதங்களுடனான அமைப்பாகவும், துவார பாலகர்களைக் கொண்டதாகவும் செதுக்கப்பட்டுள்ளது. நான்கு சக்கரங்களும் சூரிய சந்திரர்களுடனும், பூதப்பாரின் மீது கூர்மாஸனமும் அதன்மீது பூமாதேவியும் அட்டதிக்குப் பாலகர்களும் காணப்படுகின்றதான அமைப்பு மிகவும் சிறப்பானதொரு கலையம்சமெனில் மிகையாகாது. இதன்மேல் வரிசையில் ஷோடச கணபதி மூர்த்தங்களும் சுற்றிவர அமைக்கப்பட்டுள்ளது. இந்தச் சித்திரத்தேரானது திராவிட மரபிலான வட்டவடிவ எண்கோண அமைப்பில் உருவாக்கம் செய்யப்பட்டிருப்பது மற்றுமொரு சிறப்பம்சமாகும். மாளிகைத் தூண்களுடனான பண்டிகையும் கபோதகமும் பவளக்கால்களும் சுற்றவர மாலைத் தூக்கமும் மேலும் அழகூட்டுகின்றது.

யானை மத்தகத்தின்மீது யாழிகள் அமைப்பும், திரணைப்பண்டிகையுடனான விமானமும் மிகநேர்த்தியாக உள்ளது. இறக்கைகள் விரித்தபடி காட்சியளிக்கின்ற சரபப்பக்ஷிகளும் பரிவார மூர்த்திகளின் சிற்பங்களும் அழகுறக் காணப்படுகின்றன. தேரினை இழுத்துச் செல்கின்ற குதிரைகள் இறக்கைகளை விரித்துப் பறப்பது போன்ற காட்சியமைப்பும் மிக நேர்த்தியாக உள்ளது. இவ்வாறான பல கலையம்சங்களும், சிறப்புகளும் அதன் அழகை மேலும் மெருகூட்டுவதுடன், இவ்வாறான கலைப் பொக்கிஷத்தைக்காண கண்களிரண்டும் போதாதெனில் மிகையாகாது. இவ்வாறான சிறப்புப் பொருந்திய சித்திரத்தேரை நிர்ணயித்த கலைஞர் கலாமோகனைப் பாராட்டுவதுடன் அவருக்கு உறுதுணை புரிந்த அனைவருக்கும் ஆயிலடி விநாயகர் நீண்டநோயற்ற ஆயுளையும் இஷ்டசித்திகளையும் வழங்க வேண்டுமெனப் பிரார்த்தித்து ஆசிகூறி வாழ்த்துகின்றேன்.

"சர்வஜனகா சுகினோபவந்து"

நல்லூர், யாழ்ப்பாணம்.
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்**
அவர்களின்

# ஆசிச்செய்தி

விநாயகர் அடியார்களுக்கு,

சாவகச்சேரி கல்வயல் ஆயிலடியில் எழுந்தருளியிருந்து அருளாட்சிபுரியும் வீரகத்தி விநாயகருக்கு இன்று புதிதாக அமைக்கப்பட்ட சித்தரத்தேர் வெள்ளோட்டவிழா நடைபெறுவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம். ஆலய விழாக்களில் முக்கிய இடம்பெறுவது தேர்த்திருவிழாவாகும். தேர் பல தத்துவச் செய்திகளைக் கொண்டது. மூன்று பாகங்களான பிரம்மா, விஷ்ணு, உருத்திரன் மூவருடைய செயற்பாட்டையும் உள்ளடக்கியது தேர். அஞ்ஞான இருளை அகற்றி மெஞ்ஞான ஒளியை ஏற்றுவதன் தத்துவமாக இறைவன் தேரில் எழுந்தருளுகின்றான். இக்காட்சியைக்காண்பதற்கு தேவர்களும் விண்ணுலகிலிருந்து பூவுலகு வருகின்றனர். இதனையே திருப்பல்லாண்டுப்பாடல் எடுத்துக்காட்டுகின்றது.

“தேரில் வடம்பிடித்தால் வானத்தில் இடம்பிடிக்கலாம்” எனும் வேதவாக்கிற் கமைய எல்லோரும் வடம்தொட்டு அசைப்பதால் தேர் அசைகின்ற காட்சியைக் கண்ணாரக்கண்டு மனதார அனுபவிக்கின்றோம். சிறப்புடைய சித்திரத்தேரை உருவாக்கிய சிற்பக் கலைஞர்களை வாழ்த்துகின்றோம். ஊரினுடைய பெருமையையும் ஆலயத்தின் சிறப்பையும், இங்கு வாழும் மக்களின் ஆன்மீக உணர்வையும் வெளிப்படுத்தி நிற்கும் இப்புண்ணிய காரியத்தை ஆக்கியிருக்கும் அனைத்து அன்புள்ளங்களையும் வாழ்த்திப் பாராட்டுகின்றோம்.

“என்றும் வேண்டும் இன்ப அன்பு”

யாழ். மாவட்டம்
மாவட்டச் செயலர், அரசாங்க அதிபர்
**திரு. சு. அருமைநாயகம்** அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

பல்வேறு சிறப்புக்களையும் தன்னகத்தே கொண்ட தென்மராட்சிப் பிரதேசத்திலே கோவில் கொண்டெழுந்தருளளு வேண்டும் வரமீந்து அருள்பாலித்துவரும் அருள்மிகு ஆயிலடி வீரகத்தி விநாயகருக்குப் புதிய சித்திரத் தேரொன்று அமைத்து அதன் மீதவன் பவனிவரும் அற்புதக்காட்சி காண வேண்டுமெனும் அவனடியார்களின் பேராசை இன்று புதிய சித்திரத்தேரின் வெள்ளோட்டத்துடன் நிறைவேறுகின்றது. தெய்வீக வரலாறு செப்பிநிற்கும் புலுட்டையன் பிள்ளையார் என அழைக்கப்படும் திருவருள்மிகு கல்வயல் ஆயிலடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் அருள்மிகு வரலாற்றில் இத் தேரோட்டம் மிக முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாகும். இந்துக்களின் மஹோற்சவங்களில் தேர்த்திருவிழா மகத்தானதாகும். இத்தகைய சிறப்பு வாய்ந்த தொரு நன்நாளில் அருள்மிகு வீரகத்தி விநாயகப் பெருமான் புதிய சித்திரத்தேரில் எழுந்தருளி, வீதியுலா வந்து, அடியார்க்கு அருள்பாலிக்கக் காத்திருக்கும் மகத்தான நாளின் நிகழ்வுகள் அனைத்தும் சிறந்து நிற்க விநாயகப் பெருமானை வேண்டி எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், வினை தீர்க்கும் விநாயகனாய்ப் போற்றப்படும் வீரகத்தி விநாயகரின் வரலாற்றை நாளைய சந்ததிக்காய் ஆவணப்படுத்தும் நோக்கில் விநாயகனின் துணையோடும், அருளோடும் வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு எனது நல்லாசிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தென்மராட்சி பிரதேச செயலர்

**திருமதி அ. சாந்தசீலன்** அவர்களின்

# *வாழ்த்துச் செய்தி*

சிவபூமி எனத் திருமூலர் சிறப்பித்த இலங்கையின் வடபால் சாவகச்சேரியின் மேற்கே, முக்கனி மரங்களும் தென்னையும் பனையும் செந்நெல்லும் சிறந்தோங்கும் கல்வயல் பதியின் மத்தியில் இனிதிலங்குவது புலுட்டையன் பிள்ளையார் என அழைக்கப்படும் ஆயிலடி வீரகத்தி விநாயகர் ஆலயம். வேண்டுவார் வேண்டும் திறனறிந்து அருள்நல்கும் வீரகத்தி விநாயகர் ஆலய புதிய சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்க எனக்குக் கிடைத்த இச் சந்தர்ப்பம் பெரும் பேறாகும்.

"தேர்" என்பது பெயரும் வினையுமாய் நிற்கும் பண்புடைச் சொல்லாகும். தேர்ந்து கொள் என்ற வினையடி வாழ்க்கையின் படிகளைத் தேர்ந்துகொள் எனும் தத்துவத்தை உணர்த்தி நிற்கின்றது. தேரோட்டம் என்பது ஆணவம், கன்மம், மாயை எனும் மும்மல நீக்கத்தின் வெளிப்பாடே எனலாம். இத்தகைய தேர்த்திருவிழா இறைவன் முப்புரம் எரிக்கப் புறப்பட்டதன் நினைவாக அழித்தல் தொழிலை நினைவு படுத்துவதாக ஆலயங்களில் வருடம் தோறும் கொண்டாடப்பட்டு வருகின்றது.

இவ்வாலயத்தின் தேர் வேறு ஆலயங்களின் தேர் அமைப்புக்களை விடச் சற்று வித்தியாசமானது. திராவிடக்கலை மரபின் உன்னத நிலைக்குச் சான்று பகரும் இத்தேர் தென்மராட்சியின் புகழ்பூத்த சிற்பக் கலைஞன் திரு. கிருஷ்ண பிள்ளை கலாமோகன் அவர்களால் ஆசாரபூர்வமாக அமைக்கப்பட்டிருக்கின்றது. இவர் சுமார் பத்துக்கும் மேற்பட்ட தேர்களை தனது சிற்பக் கைவண்ணத்தால் உருவாக்கியவர். அவருடைய கலைத்திறன் மலேசியா வரை பரந்திருக்கின்றது. சிற்பத்திறனால் பல பட்டங்களைப் பெற்றிருக்கும் திரு. கி. கலாமோகன் அவர்களின் கலைப்பயணம் மேன்மையுற இறைகடாட்ஷத்தை வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

இத்தேர் உருவாக்கத்தில் அயராதுழைத்து வருபவர் ஆலய பரிபாலகர் திரு. சி. விவேகானந்தன் அவர்கள். அவர்களது அரும்பணி போற்றுதற்குரியதாகும். இக்கைங்கரியத்தில் அவரோடு அவர்தம் குடும்பத்தினரும் இணைந்து நிற்பது பாராட்டுக்கும் வாழ்த்துக்கும் உரியதாகும்.

ஐந்துகரத்தோடும் ஆனைமுகத்தோடும் அமர்ந்திருந்து அருள்புரியும் கல்வயல் ஆயிலடி வீரகத்தி விநாயகரின் திருத்தேர் வெள்ளோட்ட விழா நிறைவாக நடைபெற இறைஞ்சி அனைத்துத் தரப்பினர்க்கும் விநாயகர் அருள்வேண்டிப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர்

பேராசிரியர் **வசந்தி அரசரட்ணம்** அவர்களின்

## *வாழ்த்துச் செய்தி*

சைவமும் தமிழும் செழித்தோங்கும் சீர்மிகு பதிகளுள் கல்வயலும் ஒன்று. இங்குள்ளவர்கள் விநாயக வழிபாட்டில் இன்பங் காண்பவர்கள். கல்வயலில் விநாயகருக்கென நான்கு ஆலயங்கள் அமைந்திருக்கின்றன. அவற்றுள் ஒன்று புலுட்டையன் பிள்ளையார் என அழைக்கப்படும் ஆயிலடி வீரகத்தி விநாயகர் ஆலயம். மற்றையவை கல்வயல் வேதவன விநாயகர் ஆலயம், பெருங்குளம் அம்பலவாண வீரகத்தி விநாயகர் ஆலயம், சித்தன் மாவடிப் பிள்ளையார் ஆலயம் என்பனவாம்.

குறுகிய காலத்தில் விநாயகர் திருவருளால் பெருவளர்ச்சி கண்டது ஆயிலடி வீரகத்தி விநாயகர் ஆலயம் ஆகும். இக் கோவிலின் தர்மபரிபாலரான திரு.சி.விவேகானந்தன் வெளிநாட்டில் வாழ்ந்த போதிலும் தற்போது ஆலய வளர்ச்சியை நாடி நாடு திரும்பி வந்து ஆலயத்தில் தங்கியிருந்து பெருந்தொண்டாற்றி வருகின்றார் என அறியும் போது இவ்வாலய வளர்ச்சிக்கான இயக்க சக்தியின் மகிமை புலப்படுகின்றது.

இப் பூவுலகில் உள்ள மாந்தர் யாவருக்கும் கடமையாவன என நான்கு விடயங்களை பாரதியார் குறித்துக் காட்டுகின்றார்

கடமையாவன தன்னைக் கட்டுதல்
பிறர் துயர் தீர்த்தல் பிறர் நலம் வேண்டுதல்
விநாயக தேவனாய் வேலுடைக் குமரனாய்
நாராயணனாய் நதிச் சடை முடியனாய்
பிறநாட் டிருப்போர் பெயர்பல கூறி
அல்லா யெஹோவா எனத்தொழு தன்புறும்
தேவருந் தானாய் திருமகள் பாரதி
உமையெனுந் தேவியர் உகந்தவான் பொருளாய்
உலகெலாங் காக்கும் ஒருவனைப் போற்றுதல்

உலகெலாங் காக்கும் ஒப்பற்றவனாக விளங்குகின்ற விநாயகக் கடவுள் கல்வயல் ஆயிலடியில் வீற்றிருக்கிறார். அவரது திருத்தேர் வெள்ளோட்டம் சிறப்புற்று அமையவும் விநாயகரது கருணை மழை பூவுலகெங்கும் குளிர்ச்சியை உண்டாக்கவும் பிரார்த்திக்கின்றேன். இவ்வாலயத்தின் சித்திரத் தேரினைப் புதிய பாணியில் அழகுற அமைத்துத் தந்த சிற்ப வித்தகர் திரு. கி. கலாமோகன் அவர்களையும் பாராட்டி வாழ்த்துவதுடன் அவரது பணி மேலும் தொடரவேண்டும் எனவும் வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

ஆசிரியர் லேன், சங்கத்தானை, சாவகச்சேரி.

கல்வயல் **கவிஞர் வே. குமாரசாமி** அவர்களின்

வாழ்த்து

# குலம் தரும் செல்வம் வாழி

கல்வயல் பண்டுதொட்டு பக்திநெறியில் சிறந்து விளங்கும் பெருமைக்குரியது. இதற்கு இங்குவாழ் மக்களிடம் காணப்பெறும் பக்தி நலமும் கலைப்பண்பாடும் சமயமேம்பாடும் ஆசார சீலமும் தக்கசான்றாகும்.

மேலும் இவற்றிற்கு இங்கு காணப்பெறும் நான்கு பிள்ளையார் கோவில்களும் அங்கு நிகழும் நித்திய நைமித்திய பூசை வழிபாடு திருவிழாக்களும் புராண படனங்களும் மேற்கூறிய கூற்றை உறுதி செய்கின்றன.

அத்தோடு பல சான்றோர்களையும் அறிஞர்களையும், கல்விமான்களையும், கவிஞர்களையும் உலகிற்குத்தந்த பெரும் புகழும் கல்வயலுக்கு உண்டு.

இந்த வரிசையில் இன்று முதல் வரிசையிலே நிற்பவர் அருட்கடாட்சம் நிரம்பப் பெற்ற தவச்செல்வர் திருவாளர் கதிரவேலு. சின்னத்தம்பி. விவேகானந்தன் தனி ஒரு மனிதனாக நின்று ஆற்றிவரும் அருட்பணியும் கலைப்பணியும் அளவிட முடியாதன. அவற்றை எடுத்துரைக்க வார்த்தைகளே இல்லை எனலாம். இதற்குரிய நற் பலாபலன்களை இன்றைய கல்வயல் வாழ் மக்களும் அடுத்த தலைமுறையினரும் நிச்சயம் ஆனந்தமாக அனுபவிப்பார்கள்.

அவருடைய பணிக்கு அணிசெய்த பெருமை அவரது வாழ்க்கைத்துணைவியார் புவனேஸ்வரிக்கே உரியது. அவர் உண்மையிலேயே புவனத்துக்கு ஈஸ்வரி தான். உலகம் பணம் பணம் என்று பிளந்த வாய் மூடாமல் அலகைகளாய் அலைகையில் அவர் செய்யும் ஆலய திருப்பணிகளை தடாதகை பிராட்டியாய் செயல்படும் செம்மனச்செல்வி திருவாளர் விவேகானந்தனையும் அவர் பெற்றோர் மூதாதையரும் ஆற்றிய அருந்தவப் பேறானதன் தொடர்ச்சியே இத்திருப்பணி அருட்தொண்டும் அறநெறியும் என்றால் அது மிகையன்று.

தான் ஒருவனே தன்னந்தனியாக சவுதி அரேபியா சென்று பொருளீட்டினார். அவற்றை அறநெறிநின்று புலுட்டையன் பிள்ளையார் என்று அழைக்கப்பெறும் கல்வயல் ஆயிலடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தை புதுக்கிக்கட்டினார். பின்னர் குடும்பத்தோடு நோர்வே சென்று வந்து அழகிய மாபெரும் அற்புதச் சிற்பத்தேரை தான் ஒருவனே முழுச்செலவையும் ஏற்று செய்வித்தார். எடுத்த பணியைச் சிறப்பாக முழுமையுற செய்துள்ளார்.

நாமெல்லாம் அவர் பல்லாண்டு பல்லாண்டு மேலும் சிறப்புற நீடுழி வாழ எல்லாம் வல்ல விநாயகப் பெருமானை வேண்டி வாழ்த்திப் பணிகின்றோம்.

கலாகேசரி சிற்பாலயம், மட்டுவில்.

"சிந்தனைச் சிற்பி" ஸ்தபதி

விஸ்வ பிரம்மஸ்ரீ **கலாமோகன்** அவர்களின்

## உள்ளத்திலிருந்து . . .

ஒரு படைப்பாளி உருவாகின்றான் என்றால் அதற்கு முதன்மையானவர்கள் மாதா, பிதா ஆவார். அவர்கள் தம் பிள்ளைகளின் ஆர்வத்தை, திறமைகளை இனங்கண்டு அவர்களை வளர்த்தெடுக்கும் பொறுப்பும் கடமையும் அவர்களையே சாரும். அந்தவகையிலே எனது தந்தையார் கந்தையா கிருஷ்ணபிள்ளை அவர்களும் ஒரு பரம்பரைச் சிற்பக் கலைஞர். எனவே தமது கலைப்பயணம் ஸ்தம்பித்துப் போகக் கூடாது என்பதற்காகவும் ஒரு தேர்ச்சி பெற்ற கலைஞனை உருவாக்க வேண்டும் என்ற எண்ணத்துடனும் அக்காலத்தில் இலங்கையில் தலை சிறந்த ஸ்தபதியாக விளங்கிய அமரர் கலாகேசரி தம்பித்துரை அவர்களிடம் முறைப்படி சிற்பக்கலையைக் கற்பதற்கு உறுதுணையாக இருந்து செயற்பட்டார்கள். அவர்களுக்கு எனது முதல் வணக்கம்.

எனது குருநாதராக அமரர் கலாகேசரி ஆ. தம்பித்துரை அவர்களை ஏற்றுக் கொண்டு எனது கலைப்பயணத்தை ஆரம்பித்தேன். ஒவ்வொரு கலைஞனுக்கும் அவர்தம் குருவானவர் கடவுளே தான். அதற்கு மாற்றுக்கருத்து கிடையாது. அந்த வகையிலே எனது குருவும் ஒரு மாறுபட்ட படைப்பாளியாகத் திகழ்ந்தார். வடமாகாண சித்திரபாட வித்தியாதிபதியாகவும் எழுத்துத் துறையிலும், பொறியியற்துறையிலும், பரதக் கலையிலுள்ள தெளிவும் சமஸ்கிருதத்துறையில் அறிவும் நளினமாக ஓவியம் வரையும் திறமையும் ஒருங்கே பெற்றமையால் இவரை நான் முதன்மைக் கலைஞன் என்று குறிப்பிட்டேன். ஒரு கலைஞனின் வெற்றிக்குக் காரணமாய் உள்ள ஆகமவிதி நுண்கலைத்துறையில் ஆழமான அறிவு, தனக்கென ஒரு பாணி, கற்பனாசக்தி, தகுந்த தலைமைத்துவம் இவை அனைத்தையும் ஒருங்கே பெற்றவர் தான் கலாகேசரி அவர்கள். எனவே அவரிடம் கலை பயின்றது ஒரு பெருமைக்குரிய விடயமாகும்.

நாகரமும் வேசரமும் திராவிடமும் ஆந்திரமும்
தேர்ந்த தெய்வமகாகலை முயற்சி என்ற
யோகநிலை கைவந்த "தேவ தச்சன்" என்று
காலமெல்லாம் அதில் நின்ற கலைஞரே வாழ்க!

எமது பிரதேசத்தை குழைக்காடு என்று சொல்வதில் பெருமைப்படுகின்றேன். தென்மராட்சிப் பிரதேசத்தில் எமது மூதாதையர்கள் தேர்ச்சி பெற்ற சிற்பக்கலைஞராக விளங்கினார்கள். எமது குருவினுடைய தந்தையார் மட்டுவிலைச் சேர்ந்த ஆறுமுகம் அவர்கள், சின்னத்தம்பி அவர்கள், சிற்றம்பலத்தார், எனது தந்தையார் கிருஷ்ண பிள்ளை போன்றோர் தென்மராட்சிப் பிரதேசத்திற்கு பெருமையைச் சேர்த்த படைப்பாளிகள். எனவே சிற்பக்கலையின் வித்து இங்கிருந்து வளர்ந்து கிளை

பரப்பி வியாபித்து மற்ற பிரதேசங்களில் சிறந்த முறையில் கலைப்பணியாற்றி பெருமை சேர்க்கின்றது என்றால் அந்தப் பெருமையும் எமது பிரதேசத்தையே சாரும். அந்தவகையில் எனது கலைப்பயணமும் இங்கு தொடர்வதையிட்டுப் பெருமை அடைகின்றேன்.

இங்கு முக்கியமானதொன்றை குறிப்பிடுகின்றேன். எனது 24-வது அகவையிலே தீராத கலைப்பசியுடன் சந்தர்ப்பத்தைத்தேடி சரசாலை நுணுவில் சிதம்பர விநாயகர் ஆலயத்திற்குச் சென்றேன். அங்கே ஆலய நிர்வாகசபைத் தலைவராக இருந்த அமரர் 'சிவநெறிச் செம்மல்' நமசிவாயம் அவர்கள் எனது கலைப்பசியையும், கலை உணர்வையும் புரிந்துகொண்டு 1982-ம் ஆண்டு எனக்கு முதன்முறையாக தேர் செய்யும் ஒரு சந்தர்ப்பத்தைத் தந்து என்னையும் தென்மராட்சியையும் பெருமைப்படுத்தி பிள்ளையார் சுழி போட்டு எனது கன்னிப்படைப்புத்தேரை உருளவிட்ட பெருமை அவர்களையே சாரும். அவருக்கு எனது நன்றி. இந்த ஆலயத்திற்கு சித்திரத்தேர் செய்வது சம்பந்தமாக மதிப்புக்குரிய சிவஸ்ரீ. சிதம்பரநாதக்குருக்கள் ஐயாவின் ஆலோசனையின் பெயரில் அவரின் மைத்துனர் மட்டுவிலைச் சேர்ந்த சிவஸ்ரீ. சோமசுந்தரக் குருக்கள் ஐயா அவர்களின் அனுசரணையுடன் எமது ஆயிலடி வீரகத்தி விநாயகர் ஆலய தர்மகர்த்தாவும் அவ் ஆலய வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றியவருமான மதிப்புக்குரிய அண்ணன் விவேகானந்தன் அவர்கள் என்னுடன் தொடர்பினை ஏற்படுத்திக் கொண்டார். அப்போது எனக்கிருந்த தொழில் நெருக்கடி காரணமாக அவசரமாக செய்யமுடியாது என்பதை உணர்த்தினேன். அதை அவர்கள் பெருந்தன்மையுடன் புரிந்துகொண்டு ஆறுதலாக சிறந்த முறையிலே உங்கள் கற்பனைக்கு எட்டியபடி அழகிய தேரை அமைத்துத் தரும்படி கேட்டுக்கொண்டனர். இக்கலைப்பணி தொடர்பாக எந்தவித நெருக்குதல்களும் ஏற்படவில்லை. இது எனது கலைப்பயணத்தில் கட்டப்பட்ட கைகள் அவிழ்க்கப்பட்ட நிலையில் கலையுணர்வு எனக்கு ஏற்பட்டது. எனவே இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி எனது கற்பனா சக்திக்கு எட்டியமட்டில் இந்த வேலையை ஆரம்பித்தேன்.

தேரின் அமைப்பை உளத்திலே ஆராய்ந்து அவதானிப்போமாயின் அதன் முழுத்தோற்றமும் கொழுந்து விட்டெரியும் அக்கினியின் அமைப்பை நிகர்க்கும். இக்கருத்தை உள்ளடக்கியே 'சாற்றி இருக்கும் அங்கியிலே சங்காரம்' என நவிலப்பட்டது. ஈசனின் திருக்கருத்திலே ஏந்தி இருக்கும் அக்கினி சங்காரத்தை குறிப்பதாகும் தேர், இரதம் என்பன ஒரே பொருளைக் குறிப்பன. இங்கே உருவாக்கப்பட்டுள்ள தேர் நவீன கலை நுணுக்கத்துடன் அமைக்கப்பட்ட திராவிட மரபுத் தேராகும். இதில் முதன்முறையாக பல மாற்றங்களை ஏற்படுத்தியிருக்கிறோம். குறிப்பிட்டு சொல்லுவதாக இருந்தால் வரி வர்க்கங்களில் இரட்டைக் கலை இணைப்பை ஏற்படுத்தியிருக்கின்றோம். வளைவு பண்டிகையும் சாய்வு பண்டிகையும் சங்கமிக்கும்

நிகழ்வு சிவனும் சக்தியும் இணைந்திருப்பதை பதற்றுகிறது பண்டிகையின் துவாழிப்பு பகுதியிலே முழுமையான இரட்டை கலைப்பிரயோகம் இணைக்கப்பட்டுள்ளது. இதனை விஷ்ணுவும் லக்சுமியும் இணைந்திருப்பதை ஒத்ததாகும். பண்டிகையில் தோகை விரித்தாடும் பாவனையில் அட்ட சரவப்பட்சிகளும் மகர யாழிகளும் செதுக்கல் சிற்பங்களாக இணைக்கப்பட்டுள்ளன. மேல் விமானத்தை வழமையான எழுதக வடிவில் இருந்து திரணைப்பண்டிகைகளாக முழுமையான மாற்றம் செய்யப் பட்டுள்ளது. அதில் தொகுதிக் குவியல்களாக பண்டிகை அமைக்கப்பட்டிருப்பது சிறப்பம்சமாகும். தேரில் நான்கு சக்கரங்களும் சூரிய சந்திரர்கள் ஓவியமாக தீட்டப்பட்டுள்ளதும் ஒரு சிறப்பம்சம். எனவே இவ்வாறான ஒரு கலைப்படைப்பை உருவாக்குவதென்றால் அது விநாயகப் பெருமானின் அருளே. இக்கலைப்படைப்பை உருவாக்குவதற்கு என்னுடன் இணைந்து பணியாற்றிய கலாகேசரி சிற்பாலய சிற்பக் கலைஞர்களை பாராட்டுகின்றேன். எமது சிற்பக்கலைக் குழுவிலே பணியாற்றிய க. சேகர், சி. வினோதன், காலஞ்சென்ற இதயராசா (மாமா), சி. ரமேஷ், ந. ரமணன், ச. கமலதாசன் ஆகியோரின் கலைப்பணியை மறக்கமுடியாது. அத்தோடு இரும்புவேலை இணைப்பாளர் ச. சிவகுணேசன், வர்ணவேலை தே. தணிகாசலம் என்போரின் பணியும் பாராட்டத்தக்கது. மற்றும் வெளியில் இருந்து உதவிகள் புரிந்த சகோதரக் கலைஞர்களையும் பாராட்டுகின்றேன். இவை எல்லாவற்றிற்கும் மேலாக இப்பாரிய கலைப்பணியைச் செய்வதற்கு எனக்கு உதவிய ஆலய தர்மகர்த்தா விவேகானந்தன் அண்ணர் அவர்களிற்கும் எனது வாழ்த்தையும் நன்றிகளையும் தெரிவிப்பதில் மனநிறைவடைகின்றேன்.

அத்துடன் இன்றைய விழாவினை இத்தனை விமர்சையான முறையில் செய்வித்து எமது விழுமியங்களுக்கும் கலைகளுக்கும் மதிப்பளித்து வெள்ளோட்ட மலரினையும் ஆக்குவித்து வெளியிட்டு கௌரவித்த இன்றைய விழா உபயகாரர்கள் திரு. கா. சிவஞானம் அண்ணர் குடும்பத்தினருக்கும் (திருக்கணித பதிப்பகம்) விநாயகப் பெருமானின் அருளும் ஆசியும் எனது அன்பும் கிடைக்க வாழ்த்துகின்றேன்.

நன்றி

தருமபரிபாலகர் **சி. விவேகானந்தன்** அவர்களின்

# வாழ்த்துச்செய்தி

எமது குலதெய்வம் கல்வயல் ஆயிலடி வீரகத்தி விநாயகப் பெருமானின் அருளை வேண்டுகின்றேன். புலுட்டையன் பிள்ளையார் என அழைக்கப்படும் எமது ஆலயத்தில் திருவருள்பெருக்கிக் கொண்டிருக்கும் விநாயகப் பெருமானின் புதுமைகள் அனேகம். அவற்றுள் இன்று இடம்பெறுகின்ற தேர்வெள்ளோட்டமும் ஒன்றாகும். எமது ஆலயத்திற்குச் சித்திரத்தேர் ஒன்று வேண்டும் என்ற எண்ணம் என்மனதில் உதித்தாலும் அதற்குச் செயல் வடிவம் கொடுப்பதில் ஈடுபட்டபோது விநாயகப் பெருமானின் அருள்மழை என்னை மூழ்கவைத்தது. மிகச்சிறப்பான திராவிடக் கட்டிட முறைக்கமைந்த நவீன சித்திரத்தேர் இன்று எம்பெருமானின் திருவிழாவிற்காகக் தயாராகி வெள்ளோட்டம் காண்கின்றது.

இச்சித்திரத்தேர் அமைக்கப்பெற வேண்டும் என்ற எண்ணத்தை சிவஸ்ரீ சோமசுந்தரக்குருக்களிடம் முன்வைத்தபோது அவர்கள் கலாமோகனைத் தெரிவுசெய்தார்கள். திரு. கி. கலாமோகன் அவர்கள் சிற்பக் கலைத்திறனில் சிறப்புத்தேர்ச்சி பெற்றவர். அவரின் கைவண்ணத்தில் உருவான தேர்கள் நாட்டின் பல பாகங்களிலும் இறைவன் திருவருளால் ஓடிக்கொண்டிருக்கின்றன. எமது ஆலயத்தில் அமைக்கப்படுவது அவரது பத்தாவது தேர். இதனை மிகவும் நுண்ணிய முறையில் சிற்ப நுணுக்கங்களைப் புகுத்தித் திராவிட முறைப்படி அமைத்துள்ளார். அவரது கலைத்திறன் இன்னும் பல படிகள் தாண்டி வளரவேண்டும் என எமது கல்வயல் கிராமத்தினர் சார்பில் விநாயகப்பெருமானின் அருள்வேண்டி வாழ்த்துகின்றேன்.

வெள்ளோட்ட விழாவிற்கான உபயகாரர் திரு. கா. சிவஞானசுந்தரம் குடும்பத்தினர் அவர்கள் இப்பிரதேசத்தோடு தாய்வழி உறவுபூண்டவர்கள். இப்பிரதேசத்திலேயே வாழ்ந்து வருகின்றனர். தாம் இவ்வுபயத்தை விரும்பி ஏற்றுக்கொண்டதோடு, சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா மலர் ஒன்றையும் ஆக்கி வெளியிட்டுள்ளனர். ஆலய வரலாற்றுடன் கூடிய மிகச்சிறந்த அறிவியல் சிந்தனைகளை வெளியிடுகின்ற சிறப்பான மலர் ஆக்கம் எமது ஆலயத்தின் பதிவேடுகளில் ஒன்றாக காத்திரமான படைப்பாக அமைந்திருக்கின்றது. அத்தகைய பெருமனது கொண்ட அவர்களது குடும்பத்தினர் சகல நலன்களும் பெற்று நீண்ட ஆயுளுடன் வாழ்ந்து ஆலயவளர்ச்சியில் பங்கெடுக்கவேண்டும் என விநாயகப்பெருமானின் பாதங்களைப்பணிந்து வாழ்த்துகின்றேன்.

எமது ஆலயத் திருப்பணிகளில் இராஜகோபுரம் அமைத்தல், சப்பரம் அமைத்தல் என்பன இன்னும் மேற்கொள்ளப்படவேண்டிய பணிகளாகும். இத்திருப்பணிகளும் விரைவில் நிறைவேறும் என்பது எமது அசையாத நம்பிக்கையாகும். இறைவனது திருவருளால் ஆலய வளவு செழுமை அடைந்திருப்பதோடு சிறந்ததொரு கல்யாண மண்டபத்தையும் கொண்டுள்ளது. இக்கல்யாண மண்டபத்தினாலும் இப்பிரதேசம் பெருமை பெற்றிருக்கின்றது. இல்லற தர்மங்களைத் தொடங்குவதற்கு களம் அமைத்துக் கொடுக்கின்ற இடமாக இவ்வாலயம் திகழ்வது பெருமைக்குரியதாகும்.

எமது ஆலயத்தின் வளர்ச்சி எமது ஊர் மக்களின் கைகளிலேயே தங்கியுள்ளது. ஆலயத்திற்கு நீங்கள் அணியணியாக வரவேண்டும் விநாயகப் பெருமானின் அருள்மழையில் நனைய வேண்டும். இவ்வாலயத்தில் நடைபெறுகின்ற சொற்பொழிவுகளைக்கேட்டுப் பயன்பெறவேண்டும் என்று கேட்டு எல்லாம் வல்ல விநாயகப் பெருமானின் பாதங்களைப் பணிந்து வாழ்த்தி விடை பெறுகிறேன்.

**"மேன்மை கொள் சைவநீதி**
**விளங்குக உலக மெல்லாம்"**

இ∴து

சாவகச்சேரி - கல்வயல்

புலுட்டையன் பிள்ளையார் என அழைக்கப்பெறும்

திருவருள்மிகு ஆயிலடி வீரகத்தி விநாயகர் ஆலயத்திற்கு

மட்டுவில் **சிற்பக்கலாமணி உயர்திரு. கிருஷ்ணபிள்ளை கலாமோகன்**

அவர்களால் புதிதாக நிருமாணிக்கப்பெற்ற சிற்பமணித்தேர்

வெள்ளோட்ட விழாவின்போது மனம் உவந்து வாழ்த்தி வழங்கிய

# வாழ்த்துப் பாக்கள்

## வெண்பா

தங்கத் திருத்தேர்ப் பணியில் மணியாக
எங்கள் கலாமோகன் ஈசர்க்குப் - பங்களிக்கும்
ஆற்றல் வளர்க இமயம்போல் ஆனைமுகன்
பேற்றால் பெரிதும் பிணைந்து.

தேர்ந்த சிற்பக் கலைத் தெளிவும்
திட்ப நுட்பத் தேர்ச்சி நிறை
கூர்த்த மதியும் கலை ஞானக்
கோட்பாட்டு உணர்வும் குலவும் எழில்
வார்த்து வழங்கும் வகைமை வழி
வந்த வலுவும் வனப்பும் உயர்
கீர்த்தி மிக்க **கலா மோகன்**
கியாதி கிளைத்து வாழியவே!

சிற்பக் கலைஞர் **கலாமோகன்**
செய்தேர் திருப்பணிகள்
அற்புதம் ஈசன் அருளாம் அருமை
அகம் மகிழ்ந்தே
நற்பெறு பேறுகள் நாளும் பெருக
நலம் நிறைக்கும்
கற்பக ஞானக் கணபதி அன்பு
கனிந்திடவே

சித்திரத் தேர்செய் நேர்த்தி
செழுமைசேர் நுணுக்க நோக்கு
கற்பனைத் திறத்தி னூடு
கலைக்கு உயிர்கொடுக்கும் தீரர்
சத்தியம் சிற்பம் தோயும்
தகவினை நல்க வல்ல
முத்திரை பதித்த மேதை
**கலாமோகன் குடும்பம்** வாழ்க.

கவியாக்கம்:-
கவிஞர் வே. குமாரசாமி

**ஆலய தர்மபரிபாலகர்**
**சீ. விவேகானந்தன் குடும்பத்தினர்**

*ஸ்தபதி* ***கி. கலாமோகன்*** *அவர்கட்கு*

***சிற்பக் கலைக்குரிசில்*** *எனும் பட்டம்வழங்கி கௌரவித்த ஞான்று*

*வாழ்த்தி வழங்கிய*

# வாழ்த்துப்பாமாலை

'சிற்பக் கலைக்குரிசில்' செம்மல் **கலாமோகன்**
வெற்றி மணித் திருத்தேர் வெள்ளோட்டம் - பொற்புமிகும்
கல்வயலூர் எங்கள் கணேசன் அருள் பெருக
மல்குக செல்வம் மலிந்து.

வேதா கமங்கள் விளக்கும் உயர்
விதியும் வித்த கமும் பேணி
தோதாய் தோற்ற ப்பொலிவுதிகழ்
தெய்வத் தீர்ப்பு த்திறன்சேர
ஆதாரத்தின் அச்சாணி
அமைய துணைசெய் அனைவருமே
நாதன் விநாய கன்அருளால்
நாடு செழிக்க வாழியவே.

கைவினைத் திறன் மிகுந்த
கவர்ச்சியும் எழிலும் சேர்ந்த
செய்கைகள் செறிந்த சிற்பம்
சேர்திருத் தேரை எம்மூர்
உய்வகை தெய்வ மேறி
உலாவர உவந்து அளித்த
மெய்நெறிச் சிற்பஞான
மேன்மையைப் போற்றுகின்றோம்.

தேர் இழுத்ததில் தெய்வம் உலாவர
தேவை யாவுமே தீர்ந்து அரும்பேறுகள்
ஊர்பெறும் உயர் உன்னத வாழ்க்கையை
உத்தமம் என ஊர் உலகேத்திடும்
ஆர்வலர் பலர் அன்பும் நல்ஆசியும்
அரிய செல்வமும் கல்வியும் பிள்ளைகள்
பேர் பெருமையும் கீர்த்தியும் ஓங்கிடும்
பிள்ளையார் தரும் பேரருற் சக்தியால்

அந்தணர் பெரியோர் வாழ்க
அறமுறை சான்றோர் வாழ்க
இந்த நற்கிராம மக்கள்
இயல் நலம் எல்லாம் மேவ
சிந்தனை இறை நெறிக்கு
செல்சிவ சித்தர் வாழ்க
சுந்தரத் தேரைத் தந்த
சிற்பியர் குலமும் வாழ்க.

"ஈஸ்வர பவனம்"
கல்வயல், சாவகச்சேரி.

கவியாக்கம்:-
கவிஞர் வே. குமாரசாமி

**கா. சிவஞானசுந்தரம் குடும்பத்தினர்**
வெள்ளோட்ட விழா உபயகாரர்.

-தர்மகத்தா-

**உயர்திரு சின்னத்தம்பி விவேகானந்தன் அவர்கள்**

குடும்பத்தவரின்

## பணியுவந்து பாராட்டி நல்கும்
## பாராட்டிதழ்

**-காப்பு-**

ஆயிலடி அமர்தருளும் அரியநறுங் கணபதியே
தாயினிய தத்துவனே தவத்தின்பேறே- மேயினியான்
சீர்வளரும் பணியாற்றும் விவேகானந்தப் பெரியோன்
பேர்பரவ முன்னின்றே காப்பு.

**வாழ்த்து**

கண்ணாய்க் கருதியெங்கள் கணபதியார் கைங்கரியம்
கவினுறவே யாற்றுகின்ற கலைவல் லாளா!
பண்ணார் பெருங்கோயில் கோபுரங்கள் கணபதிக்கு
படைத்துப் பேர்படைத்த பண்பின் பேறே
உண்ணாது உறங்காது உழைத்து அனைத்தையுமே
ஊருக்காய் அர்ப்பணித்து உவக்கும் தீரா!
மண்ணார் புகழ்பெருமை வேண்டாய் அடக்கமொடு
மனமார் பணிசெய்தாய் வாழி! வாழி!

புவனேஸ் வரியென்னும் புகழ்த்துணையின் நற்பணியும்
புதுமைமகள் சுபாஜினி நல் மயூரதனும்
தவப்பயனார் சிவாஜி நித்தியா எனும்மைந்தர்
தரமிகுந்த மருகர்தாம் யாரும் கூடி
உவப்போடு உயர்தெய்வ உத்தமப் பணிசெய்தீர்
ஓங்கி எழுந்ததையா உயர்வாம் கோயில்
நவமாம்நல் வாழ்வுற்று நற்பிள்ளை யாரருளாள்
நாநிலத்தில் குலமோங்க வாழி! வாழி!

சித்திரத்தேர் சப்பரங்கள் சீரியநல் மண்டபமும்
சேர்ந்துயர ஆலயத்தை அணியே செய்தீர்
உத்தமரே எங்களுயர் விவேகானந்தப் பெரியோய்
ஓங்குயர்ந்த குலமோங்க உயர்வாய் வாழி!
சத்தியத்தின் நாயகனே சான்றோர் குலத்தலைவா
சந்ததிநல் லுரம்பெற்று தழைத்தே வாழி!
இத்தரையில் என்றென்றும் ஏத்துவிநா யகரருளால்
இனியவரே பலநூறு ஆண்டு வாழி!

-சுபம்-

மனமகிழ்ந்து மங்கல வாழ்த்து வழங்குவோர்
**வெள்ளோட்ட உபயகார்களும்**
**விநாயகர் அடியார்களும்**

கவியாக்கம்:-
கவிஞர் த. நாகேஸ்வரன்



சாவகச்சேரி – கல்வயல்
புலூட்டையன் பிள்ளையார் என அழைக்கப்பெறும்

# ஆயிலடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில்

புதிதாக அமைக்கப்பட்ட திராவிட மரபும்
நவீன கலைநுட்பத்துடனும் கூடிய

## சித்திர சிற்பத்தேர்



# வெள்ளோட்ட விழாவும் சிறப்பு மலர் வெளியீடும்

காலம்: **21-07-2012** சனிக்கிழமை பிற்பகல் 2-00 மணி
தலைவர்: "ஜோதிடமணி" பிரம்மஸ்ரீ சி. ஜெகதீஸ்வரசர்மா அவர்கள்
தேவாரம்: செல்வி பிரபூர்ணா சிவஞானசுந்தரம் அவர்கள்
வரவேற்புரை: திரு. சு. சரவணமுத்து அவர்கள்
ஆசியுரை: "கலாபூசனம்" *சிவஸ்ரீ சி. சிதம்பரநாதக்குருக்கள் அவர்கள்*
"சிவாகம ஞானபூபதி" *சிவஸ்ரீ செ. பரமானந்தக்குருக்கள் அவர்கள்*
அருளாசியுரை: *நல்லை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்*
வாழ்த்துரை: *திருமதி அ. சாந்தசீலன் அவர்கள்* (பிரதேச செயலர், தென்மராட்சி)

சிந்தனைச் சிற்பியை கௌரவித்தலும் பாராட்டுதலும்:
பேராசிரியர் **செல்வி வசந்தி அரசரட்ணம்** அவர்கள்
(துணைவேந்தர், யாழ். பல்கலைக்கழகம்)

நூல் வெளியீடும், சிறப்புரையும்:
"செஞ்சொற்செல்வர்" **கலாநிதி ஆறுதிருமுருகன் அவர்கள்**
(தலைவர், துர்க்கையம்மன் தேவஸ்தானம், தெல்லிப்பளை)

முதன்மைப் பிரதிகள் பெறுவோர்:

1. **திரு. ந. சிவபாலன் அவர்கள்** (அம்பிகா மருந்தகம், சாவகச்சேரி)
2. **திரு. இ. தெய்வேந்திரன் அவர்கள்** (உரிமையாளர், இந்திரன் ஜூவலறி, சாவகச்சேரி)
3. நாதஸ்வர வித்துவான் **திரு. பஞ்சாபிகேசன் விக்கினேஸ்வரன் அவர்கள்**(சங்கத்தானை)
4. நாதஸ்வர வித்துவான் **திரு து. சத்தியநாதன் அவர்கள்** (விளைவேலி)
5. **திரு. அ. கதிரவேற்பிள்ளை அவர்கள்** (கணக்காளர் கொழும்பு)

வாழ்த்துப்பா வாசித்தல்: 1. **கவிஞர் வே. குமாரசாமி அவர்கள்**
2. **திருமதி கிருபாசக்தி கருணா அவர்கள்**
3. **திருமதி ஆ. சுந்தரவல்லி அவர்கள்**

**கலைஞர்கள் கௌரவிப்பு:**
ஏற்புரை: ஸ்தபதி விஷ்வப் பிரம்மஸ்ரீ **கி. கலாமோகன் அவர்கள்**
நன்றியுரை: **திரு. ச. கிருபானந்தன் அவர்கள்**

நாதஸ்வர வித்துவான்கள் சத்தியநாதன், சித்தார்த்தன் குழுவினரின் மங்கல வாத்தியத்துடன் நடைபெறும் வெள்ளோட்ட விழாவினை விநாயகப் பெருமான் அடியார்கள் அனைவரும் கண்டுகளித்து நல்லருள் பெற்றுய்யும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

கல்வயல், சாவகச்சேரி. **தர்மகர்த்தாவும் உபயகாரரும்.**



எழுந்தருளி விநாயகர்

# தலவரலாறு

தொகுப்பு: **கா.சிவஞானசுந்தரம்**

யாழ்ப்பாணக் குடாநாடு வலிகாமம், தென்மராட்சி, வடமராட்சி, தீவகம் என நான்கு பிரிவுகளைக் கொண்டது. இங்கு தென்மராட்சிப்பிரிவு 232 சதுரகிலோமீற்றர் பரப்பளவையும் 60க்கும் மேற்பட்ட கிராமசேவையாளர் பிரிவுகளையும் தன்னகத்தே கொண்டது. இங்கு வாழுகின்ற மக்கள் சைவத்தையும் தமிழையும் தமது கண்களாகக் கொண்டவர்கள். மேலும், ஒரு சிறப்பு அம்சம் கல்வயல், மட்டுவில், சரசாலை, மீசாலை வாழ் மக்களில் பெரும்பாலானோர் தாவரபோசனமான சைவ போஷனத்தை தமது உணவாகக் கொள்பவர்கள். இங்கு பெருந்தொகையாக கோவில்களும், குளங்களும், நெல், தென்னை, மா, பலா போன்ற மரங்களும் பெரும் சிறப்பைத் தருகின்றன. மேலும், மட்டுவில் கல்வம் சிவசந்திரமௌலீசர் சிவாலயமும் சாவகச்சேரி புராதன தான்தோன்றி வாரிவனநாத சிவாலயமும் தென்மராட்சியின் புராதனத்தைக் காட்டுகின்றது.

அந்தவகையில், தென்மராட்சியின் கண்ணே சாவகச்சேரியின் புகழோங்கு பதியாம் கல்வயல் எனும் குக்கிராமம். இக்கிராமத்தவர்கள் இந்திய திருத்தல யாத்திரை செய்வது வழக்கம். அங்கே வேதாரணியத்திலிருந்து விநாயகர் விக்கிரகங்களைப் பெற்று வந்து வேதவனப் பிள்ளையார் ஆலயத்தை ஸ்தாபித்தனர்.

**வேதவனம்:-** திருமறைக்காடு, வேதாரணியம் என்பன இரு மறு நாமங்களாகும். அவ்விடத்தில் உள்ள விநாயகர் **வீரகத்தி விநாயகர்** எனும் நாமம் கொண்டவர். கல்வயலில் நான்கு பிள்ளையார் ஆலயங்கள் இருக்கின்றன. அவற்றில் ஒன்று கல்வயல் வேதவனவிநாயகர் ஆலயம், மற்றையவை பெருங்குளம் அம்பலவாண வீரகத்தி விநாயகர் ஆலயமும், சித்தன்மாவடிப் பிள்ளையார் ஆலயமும் இங்கு வரலாறு பெறும் புலுட்டையன் பிள்ளையார் கோவில் என அழைக்கப்பெறும் ஆயிலடி வீரகத்தி விநாயகர் ஆலயமுமாம்.

இக்கோவில் அமைந்த காணியின் பெயர் ஆயிலடிக்காணி, புலுட்டையன் வளவு என்ற இரு பெயரும் சேர்ந்த காணியாகும். புலுட்டையன் வளவில் அமைந்த பிள்ளையார் என்பதனால் புலுட்டையன் பிள்ளையார் எனவும் அழைக்கப்படுகின்றது. இங்கு ஸ்தாபிக்கப்பெற்று இருக்கும் மூலமூர்த்தியான விநாயகர் விக்கிரகம் பெருங்குளத்துப் பிள்ளையார் கோவிலில் இருந்ததாகும். இக்கோவிலுக்கு மகா கும்பாபிஷேகம் நடந்தகாலை இவ்விக்கிரகத்தை அயற் காணியிலுள்ள கேணியில் இட்டு, புதிய விக்கிரகம் ஸ்தாபிக்கப்பட்டது. ஆண்டுகள் பல சென்றன.

கல்வயலில் பிரசித்திபெற்ற தர்மவானும் தனவந்தருமான திரு. காசிநாதர் என்ற அடியார் தமது குடும்பத்துடன் கல்வயல் பெருங்குளம் அம்பலவாண வீரகத்தி விநாயகர் ஆலய கும்பாபிஷேகத்திற்கு சென்றார். அங்கு அவர் திருவருட்குறிப்பினால் அறிந்து, விநாயகர் விக்கிரகத்தை எடுத்துச்சென்று, தமது புலுட்டையன் காணியில் இவ் விக்கிரகத்தை கிழக்கு முகமாக பிரதிட்டைசெய்து சிறிய திருக்கோவிலை அமைத்தார். ஆயினும் இந்த மூல விக்கிரக விநாயகர், திருப்பத்திருப்ப மேற்குத்

திசைநோக்கி திரும்பியவாறு காட்சி அளித்தது. மேலும் அயல் வீட்டில் ஏற்பட்ட ஒருவிதமான புலுட்டல் மணம் வீசியதால் எம்பெருமான் மேற்குத்திசைநோக்கி திரும்பி இருந்ததாகவும் இதனாலே புலுட்டையன் பிள்ளையார் எனவும் பெயர்வரக் காரணமாகியது எனவும் அறியக்கிடக்கின்றது. விநாயகப்பெருமானின் அற்புதத்தைக் கண்டு அனைவரும் அதிசயித்தனர். புலுட்டையன் பிள்ளையார் கோவில் நீற்றுச் சுண்ணாம்பும், கற்களும் கொண்டு நான்கு மண்டபங்களைக் கொண்ட மேற்கு வாயில் நோக்கிய திருக்கோவிலாக அமைத்தவர் இப்பெரியார் ஆவார்.

இக்கோவிலின் காலம், கல்வயல் பெருங்குளத்துப்பிள்ளையார் கோவிலுக்கு பிற்பட்டது என அறியமுடிகின்றது. இவர் இக்கோவிலுக்கு நித்திய நைமித்திய கருமங்களுக்காக இயக்கச்சிக் கிராமத்திற்கு அருகில் வேரவில் விநாயகர் ஆலயத்திற்குச் சொந்தமான சைவக்குடும்பத்தை அழைத்துவந்து கோவிலுக்குச் சொந்தமான காணியில் குடியமர்த்தினார். அவர்களுக்கு வேண்டிய உதவிகளை காசிநாத வள்ளல் வழங்கினார். அவர்களினால் ஐந்து தலைமுறைகளுக்கு மேல் கிரமமான பூசைவழிபாடுகள் நடைபெற்றுவந்தன. இவர்களே மட்டுவில் பன்றித் தலைச்சி கண்ணகையம்மன் கோவிலுக்குப்பூசை, வழிபாடுகள் செய்த செய்திகளுமுண்டு.

பின்னர், அக்கால மனேஜராக இருந்த காசித்தம்பி பூஜை முறைகளை தானே செய்ய ஆரம்பித்தார். தொடர்ந்து தமையனாரான கதிரவேலு சின்னத்தம்பி என்பவரும், அவரின் ஏக புத்திரரான சி. விவேகானந்தனும் பூஜை முறைகளைச் செய்தனர். இடையிடையே சின்னத்தம்பியின் சகோதரர் கதிர்காமர், கவிஞர் முருகையன் ஆகியோரும் பூஜை செய்துள்ளனர். இக்காலத்தில் அபிடேகங்கள் மற்றும் விசேட தினங்களில் மட்டும் பூஜை வழிபாடுகள் பிரம்மஸ்ரீ பரமசாமிக்குருக்கள் அவர்களால் மேற்கொள்ளப்பட்டது.

இக்கோவிலின் பரிபாலகர்கள் பூசை வழிபாடுகள் செய்தமையின் பின்னர், பிராமணக் குருமார்களால் பூசைகள் தற்பொழுது நடைபெற்றுவருகின்றது. தர்ம பரிபாலகர் சி. விவேகானந்தன் அவர்கள் தமது குடும்பத்துடன் வெளிநாடு செல்ல வேண்டியிருந்தமையால் திருக்கணித பஞ்சாங்க கணிதர் சிவஸ்ரீ சி. சிதம்பரநாதக் குருக்களிடம் நித்திய நைமித்திய பொறுப்புக்களை ஒப்படைத்தார். அவர் தனது மைத்துனர்களான மட்டுவில் கிருஷ்ணசாமி குருக்களின் (பொன்னுச்சாமிக்குருக்கள்) புத்திரர்களான கி. சோமசுந்தரக்குருக்களிடமும் சதாசிவசர்மாவிடமும் ஒப்படைத்தார்.

இவ்வாலயம் 1989-ம் ஆண்டு கார்த்திகை மாதம் பாலஸ்தாபனம் செய்யப் பட்டது. எனினும், 8 ஆண்டுகள் நாட்டு யுத்த நெருக்கடியினால் கும்பாபிஷேகம் நடைபெறாமல் தடைப்பட்டு இருந்தது. பின்னர், இதன் பூர்வாங்க கிரியைகள் 18-08-1997 இல் ஆரம்பிக்கப்பட்டு சிவஸ்ரீ சி. சிதம்பரநாதக்குருக்கள் அவர்களினால் 1997-ம் ஆண்டு ஆவணி மாதம் 6-ம் நாள் ரேவதி நட்சத்திர தினத்தில் மஹா கும்பாபிஷேகப் பெருவிழா நடைபெற்றது. மஹா கும்பாபிஷேகத்தை சிவஸ்ரீ சி. சிதம்பரநாதக்குருக்களும், அவர்களின் புத்திரர்களும், சிவஸ்ரீ கி. சோமசுந்தரக் குருக்களும், சமஸ்கிருத பண்டிதர் சிவஸ்ரீ கி. சதாசிவசர்மாவும் சிறப்பாக நிகழ்த்தினர். தொடர்ந்து சிவஸ்ரீ சி. சிதம்பரநாதக் குருக்கள் அவர்களும் அவரின் மைத்துனர் கி. சோமசுந்தரக்குருக்கள் அவர்களும் 2005-ம் ஆண்டு ஆனி 29-ம் நாள் உத்தர நட்சத்திர தினத்தில் மஹா கும்பாபிஷேகத்தினை நிகழ்த்தினர். 16-07-2005

ஆடிப்பிறப்புத் தினத்தன்று முதலாவது மஹோற்சவத்தையும் சிறப்புற நடத்தியுள்ளனர். வருடாவருடம் ஆடிப்பிறப்பு தினத்தன்று மஹோற்சவம் கொடியேற்றத்துடன் ஆரம்பிக்கப்பட்டு, தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும். நாட்டில் நிலவிய அசாதாரண நிலைமையினால் 2008, 2009-ம் ஆண்டுகளுக்கான மஹோற்சவ விழாக்கள் நடைபெறவில்லை. மீண்டும் 2010-ம் ஆண்டு முதல் மஹோற்சவ விழா நடைபெற்று வருகின்றது.

பின்னர், சிவஸ்ரீ கி. சதாசிவசர்மா குரு தீட்சை பெற்றபின் அயல்நாடு சென்றதனால் அவரின் மைத்துனரான சிவஸ்ரீ சி. சிதம்பரநாதக்குருக்களின் மகன் சிவஸ்ரீ சி. கிருபாகரக்குருக்கள் நித்திய நைமித்திய கிரியைகளைச் செய்து வருகின்றார்.

இவ்வாலயத்தில் இரண்டு காலப்பூசைகள் நடைபெறுகின்றன. மேலும் மாதாந்தம் வரும் சதுர்த்தி, மஹோற்சவம், கந்தஷஷ்டி, பிள்ளையார் பெருங்கதை, திருவெம்பாவை, மற்றும் வெள்ளிக்கிழமைகளில் விசேட பூசைகள், வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன. அத்தோடு ஆயடலடி வீரகத்தி விநாயகர் அறநெறிப்பாடசாலை 31-05-2007-ல் ஆரம்பிக்கப் பட்டு சிறப்பாக இயங்கி வருவதும் குறிப்பிடத்தக்கது.

**திருப்பணிகள்**

இவ்வாலயம் ஏறத்தாழ 1935-ம் ஆண்டிற்கு பின்னர் காசித்தம்பி அவர்களால் சுற்றுமதில் கட்டப்பட்டது. பின்னர் 01-02-1939-ம் அன்று திரு. சி. சின்னையா அவர்களினால் மணிக்கோபுரமும், திரு. ஆ. கணபதிப்பிள்ளை என்பவரால் பிரதான நுழைவாயிலும் கட்டப்பட்டது. தொடர்ந்து 1985-ம் ஆண்டளவில் ஆலய தர்ம பரிபாலகர் சி. விவேகானந்தன் அவர்களுடைய சிறியதந்தையாரான க. சதாசிவம் என்பவரின் வேண்டுகோளுக்கிணங்க துர்க்காதுரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களினால் வசந்த மண்டபத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டு வசந்த மண்டபம் கட்டப்பட்டது. அதன்பின்னர், திரு. க. சங்கரப்பிள்ளை உபாத்தியாயர் அவர்களினால் 1996-ம் ஆண்டு வெளிமண்டபம் கட்டப்பட்டது. மேலும், சுற்றுப் பிரகாரம், வாயிற்கோபுரத் திருப்பணிகளை சி. விவேகானந்தன் அவர்கள் நிறைவுசெய்துள்ளார். இவ்வாலயத்திற்கு சப்பறமும், இராஜகோபுரமும் நிறைவேற்ற வேண்டிய திருப்பணிகளாக உள்ளன.

**தர்மபரிபாலகர் பரம்பரை**

இவ்வாலய பரிபாலனம் பெரியார் திரு. காசிநாதவள்ளலின் பரம்பரையினரால் நடைபெற்று வருகின்றது. திரு. காசித்தம்பி அவர்களின் பரிபாலனத்தைத் தொடர்ந்து இவரின் தமையனார் கதிரவேலு அவர்கள் பணியாற்றினார். தொடர்ந்து திரு. கதிரவேலு அவர்களின் மூத்த மகன் சின்னத்தம்பி அவர்கள் பொறுப்பேற்றார். அதன்பின்னர், சின்னத்தம்பி அவர்களின் ஏகபுத்திரன் திரு. சி. விவேகானந்தன் அவர்கள் பரிபாலனப் பொறுப்பை ஏற்று சிறப்பாக நடத்திவருகின்றார்.

இக்கோவிலின் தர்மபரிபாலகர் பொறுப்பை ஏற்ற திரு. சி. விவேகானந்தன் அவர்களின் குடும்பத்தினர் வெளிநாட்டில் வாழ்கின்றபோதும், கோவில் பூசைகள், விழாக்கள், திருப்பணிகள் சிறப்புற நடைபெறுவதற்காக திரு. சி. விவேகானந்தன் அவர்கள் நாடுதிரும்பி வந்து பெருந்தொண்டாற்றி வருகின்றார்.

இவ்வாலய பரிபாலனத்திற்காக தனங்களப்பு, மறவன்புலோ, பெருங்குளம் ஆகிய இடங்களில் ஆலயத்திற்கு சொந்தமான விளைநிலங்களும் பயன்தரு காணிகளும் உள்ளன. அத்தோடு, இவ்வாலயத்திற்கென வடகிழக்கு (ஈசானம்) மூலையில் காணி கொள்வனவு செய்து திருமண மண்டபம் ஒன்று அமைத்து 12-07-2010 திங்கட்கிழமையன்று திறந்து வைக்கப்பட்டது

மேலும், பரிபாலகர் அவர்கள் 2005-ம் ஆண்டு முதலாவது மஹோற்சவத்தின் போது, கட்டுத்தேரில் எழுந்தருளிய விநாயகப் பெருமானை சித்திரத் தேரில் பவனிவரும் காட்சியைக் காணவேண்டும் எனும் எண்ணம் உருவானது. அதன் பிரதி பலிப்பாக கி. சோமசுந்தரக்குருக்களிடம் கூற அவரும் இணங்கி தன்னுடைய மைத்துனரான சி. சிதம்பரநாதக்குருக்களுடன் ஆலோசித்து மட்டுவில் சிற்பக்கலாமணி கி. கலாமோகன் அவர்களை அணுகினர். அதன் பயனாக இன்று 25½ அடி உயரமும் 13½ அடி விட்டமும் கொண்ட நவீனமுறையில் துல்லியமாக செதுக்கப் பட்ட விக்கிரகங்களை அமைத்து திராவிடமரபு சிற்ப சித்திரத்தேர் கடந்த 5வருடகால கடின உழைப்பில் நிர்மாணிக்கப்பட்டது. இச்சித்திரத்தேர், 2012 மஹோற்சவ காலத்தில் 21-07-2012 அன்று வெள்ளோட்டவிழா செய்து நிறைவுகண்டுள்ளார்.

**புராணபடனச் சிறப்பு**

இங்கு புராணபடன நிகழ்வுகள் காலத்துக்கு காலம் நடைபெற்று வருகின்றது. கல்வயல் வேலுப்பிள்ளை உபாத்தியாயரும், அப்பாக்குட்டி உபாத்தியாயரும், இராமுப்பிள்ளை உபாத்தியாயரும் சிறப்புப் பெற்றவர்கள். இவர்களில் அப்பாக்குட்டி அவர்கள் இலங்கை புராணபடன மேதை எனப்பட்டம் பெற்றவர். இவர் கல்விப் பணிக்காக சைவப்பிரகாச வித்தியாசாலை ஒன்றை நிறுவினார்.

இவரைப் போன்று இராமுப்பிள்ளை உபாத்தியாயரும் சிறப்புப் பெற்றவர். இவர் பிரசித்திபெற்ற பாடல்பெற்ற தலமான திருக்கேதீஸ்வரம் முதல் நாலாபுறமும் உள்ள கோவில்களிலும் திருமடங்களிலும் புராணங்களைப் படித்தும் பயன்சொல்லியும் பௌராணிக வித்தகராக விளங்கியுள்ளார். இவர்களின் மைந்தர்களான ஒருவரான கவிஞர் இ. முருகையன் இ. சிவானந்தன் கல்வி உலகிலும் சைவ உலகிலும் கலங்கரை விளக்காக அமைந்தவர்கள். மேலும், பனைவளவுப் பெரியதம்பி, கயிலாயபிள்ளை, நடராஜா உபாத்தியாயர் ஆகியோரும் இவ்வாலயத்தில் புராணபடனத்தை சிறப்புற நிகழ்த்தியமையும் குறிப்பிடத்தக்கது. இவர்களைப்போன்று, புலவர் வே. குமாரசாமி அவர்கள் புராணபடன மரபுக்கு புத்துயிர் அளித்து வருகின்றார். கல்வயல் ஆயிலடி வீரகத்திப் பிள்ளையார் மீது வேலணையூரைச் சேர்ந்த ஜெகசோதிப் புலவர் ஊஞ்சல் பதிகம் பாடியுள்ளார். இதனாலும் சிறப்பு வாய்ந்த (புலுட்டையன்) ஆயிலடிப் பிள்ளையார் ஆலய தலவரலாறு மகிமைபெற்றது.

மேலும், சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா சிறப்புற அமையவும் இம்மலர் சிறப்புடன் வெளிவரவும் ஆலய தர்மபரிபாலகர் சி. விவேகானந்தன் அவர்களும் அவர்தம் குடும்பத்தினரும் சகல செல்வ பாக்கியங்களும் பெற்று எமது பிரதேசத்திற்கு வழிகாட்டியாக விளங்க வேண்டும் என்றும் எல்லாம்வல்ல ஆயிலடி வீரகத்தி விநாயகரின் திருவடியை வழுத்தி அமைகின்றேன்.

சுபம்.

# திருவூஞ்சல்

இயற்றியவர்:**வேலணையூர் ஜெகசோதிப் புலவர்**

ஓம் கணபதியே நம:

"சீரார் பவளங் கால் முத்தங் கயிறாக
வேராரும் பொற் பலகையேறி இனிதமர்ந்து
நாராயண அறியா நாண் மலர்த்தா ளாயடியேற்
கூராகத் தந்தருளும் உத்தர கோச மங்கை
ஆரா அமுதின் அருட் தாளினை பாடிப்
போரார் வேற்கண் மடவீர் பொன்னூசல் ஆடாமோ.

## காப்பு

01. சீராரும் வளமிலகிச் சைவ மோங்கித்
தேங்கிய சீர்ச் சாவகச்சே ரிக்கண்மேய;
போராருங் கல்வயலாம் பதியில் மேவும்;
பெட்புமிகு ஆயிலடியிற் பிள்ளை யார்மேல்;
ஏராரு மூஞ்சலுளத் தன்பிற் பாட;
இமயவரைக் கொடி, கைலை இறைமு னீந்த;
காராரு மருண் மதத்தை பொழியு மந்தக்;
கற்பகத்தின் பொற் பதங்கள் காப்புத்தானே.

## நூல்

02. திருவருநான் மாமறையுங் கால்களாகத்,
திகழவரு முபநிடதஞ் சட்டமாகத்,
தருமரிய வாகமமே பலகை யாகத்;
சாரவரு முபாகமங்கள் விட்ட மாக;
வரு மறுபா னான்குகலை கயிற தாக;
மன்னியசீ ராசனமுன் னெழுத்தே யாக;
அருளுருவே கல்வயலாம் பதியில் மேவு
ஆயிலடிவிக் னேசுரரே ஆடீரூஞ்சல்.

03. தந்திவத னன்புரியுந் தீதைப் போக்கித்;
தண்ணளிசெய் பண்ணவர்கள் தங்கட்கென்றே;
கந்தமலி கூந்தல் மலைப் பச்சை மாதும்;
கங்கைவர வந்த, வருட் கடலு மீயே;
வந்திடுதந் தாவள, வா னனவெங் கோவே;
வானவருந் தானவரும் வணங்கும் தேவே;
அந்தியுரு வருவரகல் வயலில் மேவும்
ஆயிலடிவிக் னேஸ்சுரரே ஆடீரூஞ்சல்.

04. வாசவன் வெய் பூசனையை ஏற்றே; கும்ப
மாமுனிதன் குண்டிகையிற் பொன்னி சோழ
தேச மெங்கு மோடவருள் செய்த தேவே;
தேவர்கள் தேவன் உமை செவ்வேள் என்னப்;
பேசவரு மாமகிமை பெற்ற கோவே;
பிறைவிளங்கு மா மௌலிப் பெம்மானே;எம்
ஆசகற்றக் கல்வயலில் கோயில் மேவும்
ஆயிலடிவிக் னேஸ்சுரரே ஆடீரூஞ்சல்

05. பூரணமாய் எங்கு நிறை பொருளே; அன்பர்
புந்தியினிற் குடிபுகுந்த தெருளே; எந்தக்
காரணகா ரியங்களுக்கும் முதலே; மூன்று
கட்கரும்பே; மிக்க பெருங் கருணைக் குன்றே;
வாரணாமா முகவசுர னாகும் ஆகு
வாகனா,பா சாங்குச, ஐங்கர, முன்னான
வாரணத்தின் பொருளே; கல் வயலில் மேவும்
ஆயிலடிவிக் னேஸ்சுரரே ஆடீரூஞ்சல்

06. உலகை நொடி யதனில் வலஞ் செய வல்லார்க்கே;
உதவும் யாம் இக்கனியென்; றுமையாள் வாமத்து
இலகிய ஈ ரைந்துகரன் இசைப்ப; யாவும்
எவ்வுலகும் நீயே என்று இறையைச் சுற்றி;
வலமியற்றி; அக்கனியை வாங்கிக் கொண்ட;
வல்லபவல் லபைமகிழும் மா மணாள;
அலகில் புகழ்க் கல்வயலிற் கோயில் மேவும்;
ஆயிலடிவிக் னேஸ்சுரரே ஆடீரூஞ்சல்

07. இங்கிதமாய் அடியவர்கள் ஏக தந்த;
ஈசுரபுத் திர;மோத காஸ்த தேவ;
மங்கையுமை சுதபால; நேத்திர யானை
வதன; சொர்ண மன்ன வர்ண; சூர்ப்பகன்ன;
துங்கமுற்ற வக்கிர துண்ட; வாகு ளேயன்
துணைவ; துதிக்கைய; திறல்தோன்று பாச
அங்குசமார் கர; எனக் கல்வயலில் மேவும்
ஆயிலடிவிக் னேஸ்சுரரே ஆடீரூஞ்சல்.

08. மந்திரத்தான் தன் கைலை சாரச்; சேர

மான் குதிரை மீதும்; உணர் வெள்ளானைக்கட்

சுந்தரரும் ஏக; ஔவை தானு மேகத்

துணிந்தனல் தாம் பூசைதனிற் துரிதஞ் செய்ய;

சந்ததமுப் போது, புரி,யங்கு அவர் முன்

யாம் உன் தன்னை வைப்பா மென்றருளி, அவ்வாறாற்றும்

அந்தமற்ற மாபரக்கல் வயலில் மேவும்

ஆயிலடிவிக் னேஸ்சுரரே ஆடீருஞ்சல்.

09. தெருளிலகும் அவர்கள் உளக் கமலத்தூறி,

தெளிந்துநிறை நறுந்தேனே, சதுர்வே தத்;துட்

பொருள் எனவந்; துலக மெலாம் நீங்காதுற்ற

பூரணமே; சீரணமே! புனித வாழ்வே!

மருளுறுவார் மனத் திலகா, ஞானா னந்த

மாவொளியார் மாட்சி தரு மணியே, சீல

அருளிலகத், திருவருகல் வயலில் மேவும்,

ஆயிலடிவிக் னேஸ்சுரரே ஆடீருஞ்சல்.

10. கந்தமறி மாகரநான் மறைமுன் னாமே

காக்கரத்தின் திருவுருவே, கருணைக்குன்றே,

சந்ததமும் மெய்யடியார் நாளிகேரந்

தனையடித்து, விக்கினங்கள் தவிர்ப்பாய் என்ன,

வந்தவினை மாற்றி,வர மதனை ஈவான்

மன்னிய ஓர் கொம்புள கற்புகமே, மாட்சி

அந்தமற்ற கல்வயலிற் கோயில் மேவும்,

ஆயிலடிவிக் னேஸ்சுரரே ஆடீருஞ்சல்.

11. செப்பும் இப வத்திரரே, ஆடீருஞ்சல்

செய்யவிம வத்திரரே, ஆடீருஞ்சல்

துப்பைநிகர் மெய்ப் பொருளே, ஆடீருஞ்சல்

தொல்லுலக மெய்ப்பொருளே ஆடீருஞ்சல்

ஒப்பில் அருட் காகரமே, ஆடீருஞ்சல்

ஓதுயிர்கட் காகரமே, ஆடீருஞ்சல்

அப்பு முதல் ஆனவரே, ஆடீருஞ்சல்

ஆயிலடிவிக் னேஸ் சுரரே ஆடீருஞ்சல்.

12.

## வாழி

அந்தணரும் ஆவும்உயர் அறமும் வாழி.
ஐந்தெழுத்தும் திருநீறும் மணியும் வாழி.
சந்தமுள வேதமும் ஆகமும் வாழி.
சாற்று சுத்த சித்தாந்த சைவம் வாழி.
பந்தமில் மெய் அடியாரும் பாரும் வாழி.
பார்த்திபனும் செங்கொலும் முகிலும் வாழி.
வந்தனை செய்வார்களுங் கல்வயலில்
பொற்பு வருதளியும் வதிபதியும் வாழி, வாழி,

## எச்சரிக்கை

1. சீரார் சிவன் உமைதந் தருள் செல்வா
எச்சரிக்கை
சிறியேங்களை ஆளும் அருட்தேவே
எச்சரிக்கை
2. பாரார் இடர் தீர்த்தே யருள் பகவா
எச்சரிக்கை
பணிவோர் தமக்கு அருள் ஈந்திடு பாலா
எச்சரிக்கை
3. பலவார் தரு தலம் ஓங்கிடு பதியே
எச்சரிக்கை
பரமன் திரு அருளால் வரு பொருளே
எச்சரிக்கை
4. நல கல்வயல் பதி மேவிய நம்பா
எச்சரிக்கை
நளினத்தவன் மாலோன் தொழும் நாதா
எச்சரிக்கை
5. கந்தன் தனை முந்தன் பொடு காத்தாய்
எச்சரிக்கை
கருதும் அவர் சரிதம் வளர் நகராய்
எச்சரிக்கை
6. பந்தம் வினை தீர்த்தே யருள் பகவா
எச்சரிக்கை
வயலூர் வாழ் ஏரம்ப மூர்த்தி
எச்சரிக்கை

## பராக்கு

1. ஆகுவின்மே லேறியருள் அன்பா பராக்கு.
ஐந்துகரத் தும்பிமுக ஐயா பராக்கு
சேகுவுடைத் திருவடி சேர் தேவா பராக்கு
செங்கணவன் போற்றுதிரு மருகா பராக்கு

2. ஐங்கரனாம் மூத்தோ னேரம்பா பராக்கு
அநுதினமும் அருள் பொழிமுக்கண்ணா பராக்கு
சங்கரனார் உமைமகிழும் தலைவா பராக்கு.
தரணியெலாந் தொழ வந்தருளும் தலைவா பராக்கு

3. சொல்லவருள் சொரியு மருட்செல்வா பராக்கு
தோகையுமை நாதனருள் செல்வா பராக்கு
கல்வயலூர் மேவு கணநாதா பராக்கு
கருது மருள் சொரியும் முக்கண்ணா பராக்கு.

## லாலி

ஒற்றையணி மருப்பினரே லாலி சுபலாலி
ஓங்கார உருவினரே லாலி சுபலாலி
கற்றவர்வாழ் கல்வயலீர் லாலி சுபலாலி
கணபதியாம் முக்கணரே லாலி சுபலாலி
கொற்றவருக் கருள் புரிவீர் லாலி சுபலாலி
கோகனதப் பதமலரீர் லாலி சுபலாலி
வெற்றியெலாந் தந்தருள்வீர் லாலி சுபலாலி
ஆயிலடி விநாயகரே லாலி சுபலாலி

## மங்களம்

திருவாரும் விநாயகர்க்கு ஜெய மங்களம்
சிவ பிரானார்க்கும் தேவியர்க்குஞ் சுபமங்களம்
தேவர் சிறை மீட்டருளுஞ்
செய்ய திரு முருகனுக்கும் மங்களம்
காவல்புரிந் துயிர் புரக்கும்
கருதரிய பைரவர்க்கும் மங்களம்
ஓவற நல் தேவர் தமை
ஒறுத்த வீரபத்திரர்க்கும் மங்களம்
மேவு நல பத்திரைக்கும்
மேலான தேவர்கட்கும் மங்களம்
மங்களம் ஜெய மங்களம்
மங்களம் சுப மங்களம்
மங்களம் மங்களம் மங்களம்

திருச்சிற்றம்பலம்.



# திராவிடச் சிற்பக்கலை மரபுக்குள்ளேயிருந்து வெளிவரும் நவீன தேர்

"Imagination is very important than knowledge"

- Albert Einsten

**கோபாலபிள்ளை கயிலாசநாதன்** - உதவிக் கல்விப்பணிப்பாளர், அழகியல் வலயக்கல்வி அலுவலகம், தென்மராட்சி.

இறைவனைப் பீடத்திலிருத்தி ஊர்வலமாகக் கொண்டு செல்வதற்குப் பயன்படுத்தப்படும் அலங்கார வேலைப்பாடுகளைக் கொண்ட ஊர்தியே தேராகும். திருவிழாக் காலங்களில் பக்தர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து வடம்பிடித்துத்தேரை இழுத்துப்பரவசம் அடைவார்கள். பலதரப்பட்ட மக்களையெல்லாம் ஒரு விடயத்தின் கீழ் ஒன்று சேர்க்கும் நோக்குடனேயே இது ஆரம்பிக்கப்பட்டது எனலாம்.

தேரொன்றினை இழுத்துச் செல்வதற்கு நிறையவே ஆட்பலம் வேண்டும். அதாவது, ஊர் ஒன்றுசேர்ந்து இழுத்தால் தான் தேர் ஒன்று நகரும். இங்குநேரடியாக இல்லாமல் மறைமுகமாக ஊரின் ஒற்றுமையானது வலியுறுத்தவும்படுகின்றது. "ஊரெல்லாம் கூடியொரு தேர் இழுத்து" என்ற கவிதை வரி இதனையே ஞாபகப் படுத்துகிறது.

சங்க இலக்கியங்களில் தேர் பற்றிய தகவல்கள் இருப்பதை அறியமுடிகின்றது. நெடுந்தேர், கொடித்தேர், கொடிஞ்சி ஆகிய சொற்கள் யாவும் தேரையே சுட்டி நிற்கின்றன. தேரின் அமைப்பானது கோயில் விமானத்தை ஒத்தது. சதுரம், அறுகோணி, எண்கோணி, தசகோணி, பன்னிரு கோணி, வட்டம், நீள்வட்டம், முட்டை வடிவம் ஆகிய கேத்திர கணித வடிவமைப்புகளிலெல்லாம் தேர்கள் உருவாக்கப் படுகின்றன. பண்டைய அரசர் காலத்தில் தேர்ப்படை, யானைப்படை, குதிரைப்படை, காலாட்படை என நான்கு படைப்பிரிவுகளைத் தமது நாட்டின் பாதுகாப்புக் கருதி மன்னர்கள் வைத்திருந்தனர். இத் தேர்ப்படையானது முதல் நிலையில் வைத்து மதிக்கத்தக்கதாக இருந்தது.

பாரதப்போரில் கிருஷ்ணபரமாத்மா அருச்சுனனுக்குத் தேர்ச்சாரதியாகவிருந்து அப்போர் வெற்றியடைவதற்கான வழிமுறைகளையெல்லாம் வகுத்தார். கீதா உபதேசமும் தேரடியில் இருந்தே செய்யப்பட்டது. மனுநீதிச் சோழனுக்கும் தேருக்கும் தொடர்புண்டு. காற்றும்; நளன் தேரும் போட்டியில் பங்குபற்றினால் காற்றுத் தோற்றுப்போய்விடும். முல்லையின் மீது எல்லையற்ற பரிவுகொண்டு அக்கொடியானது காற்றிலே துவளாது பற்றிப் படர்வதற்குத் தனது தேரையே வழங்கியவன் வள்ளல் பாரி. தேரடிச்சித்தரும் எமது மண்ணில் அவதரித்துச் சிவத்துட் கலந்த ஞானியொருவர். சிறுவயதில் குரும்பட்டிகளை ஈர்க்கினால் இணைத்துத் தேர் விளையாட்டும் விளையாடியுள்ளோம்.

மேற்கூறியவாறு இலக்கியங்களிலும் இதிகாசங்களிலும் ஆன்மீகத்திலும் வாழ்வியலிலும் 'தேரானது' காலங்காலமாகப் பேசப்பட்டுவரும் பொருளாகவே இருந்தும் வருகிறது. தென்மராட்சியில் நடந்த போரின் காரணமாகப் பல ஆலயங்கள் தமது வாகனங்களையும் சில ஆலயங்கள் தேர்களையும் இழந்துள்ளன. இவற்றின் அருமைகளைப் பலர் அறியார். அவற்றின் மதிப்புத் தெரிந்தவர்கள் அவற்றை இங்கிருந்து கடத்தவும் முயற்சி செய்து கொண்டிருப்பதை நாம் அன்றாடம் அறியக்கூடியதாகவும் இருக்கிறது. இங்கிருந்து கடத்தப்படும் "கலைத்துவ அந்தஸ்துள்ள" மர வாகனங்களையெல்லாம் மேலைத் தேசத்தவர்கள் கொழும்பில் வைத்துக் கொள்வனவும் செய்கின்றனர். அவற்றின் பெறுமதி பல இலட்சங்களைத் தாண்டியுமுள்ளது.

போரின் ஊடாக ஈடுசெய்ய முடியாத இழப்புக்களையெல்லாம் நாம் அடைந்திருந்தபோதிலும் மனந்தளராது புதிய முயற்சிகளையெல்லாம் செய்ய வேண்டுமென்ற எண்ணப்போக்கில் அவற்றிலும் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறோம். அத்தகைய முயற்சிகளில் ஒன்றே "புலுட்டையன் பிள்ளையாருக்கான" தேர்கட்டும் முயற்சியாகும். இம்முயற்சியின் பிற்புலத்தில் இருப்பவர்கள் மிக்க தகுதி வாய்ந்த தேர்ச் சிற்பக்கலைஞரொருவரை மேற்படி தேர்கட்டும் திருப்பணிக்குத் தெரிவு செய்துமுள்ளனர். கையில் வெண்ணெயை வைத்துக்கொண்டு அவர்கள் நெய்க்கு அலையவில்லை. 'நெய்' தென்மராட்சியிலேயே உண்டு. பலரும் சிலாகித்து பேசுமளவிற்கு இத்தேரின் அமைப்பும் அதிற் செய்யப்பட்ட கலைத்துவமான வேலைப் பாடுகளும் அதற்குரிய சான்றாக இருக்கின்றன. தேர்ச்சிற்பக்கலை மரபின்படி தேர்ச்சக்கரங்கள் சூரிய சந்திரர்களைக் குறித்து நிற்கின்றன. இரண்டு சூரியர்களும் இரண்டு சந்திரர்களும் அதனை இழுத்துச் செல்வதுபோல் பாவனை பண்ணப் படுகின்றது. முற்சக்கரங்களின் மையங்களிலிருந்து சூரியக்கதிர்கள் வெளிக்கிளம்புவது போலவும் பிற்சக்கரங்களின் மையங்களிலிருந்து சந்திரக்கதிர்கள் வெளிவருவது போலவும் நிறவேலைப்பாடுகளினூடாக அவற்றைக் கலைஞர் காட்டியுள்ளார். சந்திரவொளி மஞ்சள் ஆகவும் சூரியவொளி ஏழு நிறங்களைக் கொண்டது என்ற தத்துவத்திற்கு அமைவாக அது பல வர்ணங்களாலும் தீட்டப்பட்டிருப்பதை நாம் அவதானிக்கலாம். வழமையான தேர்ச்சக்கரங்களின் வர்ணவேலைப்பாடுகளிலிருந்தும் இது மாறு படுகின்றது. மரபுக்குள் நின்றுகொண்டே அதனைக் குலைக்காமல் மாற்றமொன்றைக் கலைஞர் செய்துள்ளார். வழமையான தேர்ச்சக்கரங்கள் நீலநிறந் தீட்டப்பட்டு அதன்மீது இளஞ்சிவப்பு வர்ணத்தால் தாமரை இதழ் வடிவமைப்பு அலங்காரஞ் செய்யப்பட்டிருக்கும். சிலவேளைகளிலும் சக்கரங்களைச் சுற்றி வட்ட வட்ட அகன்ற வளையங்களாகப் பச்சை, இளஞ்சிவப்பு, வெள்ளை நிறங்களால் நிறப்பிரயோகம் செய்யப்பட்டுமிருக்கும்.

தேர்ச்சில்லுகள் பொருத்தப்பட்டிருக்கும் தேரச்சுகளில் அலங்கார வேலைப் பாடுகள் அடக்கமாகச் செதுக்கப்பட்டுமுள்ளன. வழமையாக அச்சுக்களில் வேலைப் பாடுகள் செய்யப்படுவதில்லை என்பதுடன் வெறுமனே தளமாகவே இருக்குமாறு அவை விடவும்படுகின்றன. இதுவுமொரு மாற்றமாகவே கொள்ளப்படவும் வேண்டும்.

காலவோட்டத்தில் எல்லாமே மாறுதல் அடைகின்றன. காலங்காலமாக ஒரே பாணிக்குள் நிற்பதன் மூலம் சலிப்பையே அடைகிறோம். சிறுசிறு மாற்றங்களை உள்விடாத மரபு என்பது இயங்கமுடியாத மரபாகவே 'கொள்ளப்படும். கற்பனை வளமும் கைத்திறனும் கொண்ட கலைஞரொருவர் புதுமை காண்பதற்கே துடிப்புடன் முனைவார். அந்தவகையில் கிருஷ்ணபிள்ளை கலாமோகனும் மரபுக்குள் நின்றுகொண்டு பல புதுமைகளை இங்கு செய்துள்ளார்.

தேரில்; சுவாமி வைக்கப்படும் தளத்தின் கீழ்ப்பகுதியெங்கும் கொத்து வேலைப்பாடுகள் உண்டு. வழமையாகவே அப்பகுதியெங்கும் செதுக்கல் வேலைப்பாடுகள் இருந்தாலும் இத்தேரில் அப்பகுதிகளில் பல மாற்றங்கள் செய்யப்பட்டிருப்பதை நாம் அவதானிக்கலாம். 'கரனைக்கூடு' இதனை முன்னுக்குக் காட்டுவதற்காக இரட்டைக் கலைக் கலப்பு வேலைகள் அங்கு செய்யப்பட்டுமுள்ளன. விக்கிரகச் சிற்பங்கள் ஒழுங்குபடுத்தப்பட்ட வரியில் ஒரே கட்டையில் செதுக்கப்பட்ட முறிப்புத் தூண்கள் இடையிடையே வருகின்றன. வழமையான தேர்களில் முறிப்புத் தூண்களுக்குப் பதிலாகக் கடைச்சல் வேலைப்பாடுகளையே அங்கு காணவும் முடியும். எனவே இங்கு கடைச்சல் கட்டைகள் இல்லாமற்போயுமுள்ளன. மேலே இரட்டைக் கலைக்கலப்பு எனக் குறிப்பிடப்படுவது இரண்டு வெவ்வேறு வகையான அலங்கார வடிவமைப்புக்களையேயாகும். வேலைப்பாடுகளைக் கூட்டிக் காட்டு வதற்காக எண்கோணத்தில் முகவத்திரம் செய்யப்பட்டிருக்கின்றது. பண்டிகையில் உள்ள 8 மூலைகளிலும் 8 சரவப்பட்சி வடிவங்கள் காணப்படுகின்றன. இவை இருக்கும் வரிசையில் மகர வடிவங்களும் குதிரை வடிவங்களும் மீட்டல் செய்யப் பட்டுமுள்ளன. சரவப்பட்சிகள் வழமையைவிட ஆடிய பாவனையில் வடிவமைக்கப் பட்டிருப்பதையும் நாம் பார்க்கமுடியும். சரவப்பட்சியென்பது யாழியின் முகத்தைக் கொண்டதொரு கற்பனைப் பறவையாகும். தேரின் கூரையை அதாவது பந்தலைத் தாங்கி நிற்கும் பவளக்கால்களை அவதானிப்போமானால்; வெளிப்புறமிருக்கும் பவளக்கால்கள் வழமையான பவளக்கால்களைப் போன்றும் உட்புறமிருப்பவை அரண்மனைத் தூண்கள் போன்றும் அவற்றின் வடிவமைப்புகள் இருப்பதையேயாகும். இரண்டுவகை வடிவமைப்புகளைக் கொண்ட தூண்கள் என்பதால் அவற்றைப் பார்க்கும்போது திடீரெனக் கண்ணுக்குள் ஓர் அதிர்வையும் அவை ஏற்படுத்துகின்றன. இப்பந்தலின் உட்புறமானது கவிழ்ந்த நிலையில் இருக்கும் பூ இதழ்களை ஞாபகப்படுத்துகிறது. உட்புறத்தில் பந்தலுக்குத் தீட்டப்பட்ட நிறங்கள் யாவும் மனதில் 'இங்கித உணர்வை' ஏற்படுத்துகின்றன. தரையில் நின்று பார்க்கும் ஒருவருக்கு பந்தலின் உட்புற "அழகு" கண்ணுக்குள் இறங்குமாறு தேரின் உயரமானது கணிப்பிடப்பட்டுமுள்ளது. 8 நிலைக்குத்துத் தூண்களில் தொங்கவிடப்பட்டுள்ள யாழிகளிலும் மாற்றங்களைக் கலைஞர் செய்துள்ளார். வழமையான யாழிகளில் அவற்றைத் தாங்குவதுபோல ஒரே பலகையில் யானைகளைச் செதுக்குவார்கள். இந்த யானைகள் தோற்றத்தில் சிறியவையாகவே இருக்கும். இங்கு யானைகள்

தனியாகவும் யாழிகள் தனியாகவும் பிரிக்கப்பட்டதுடன் யானைகள் சற்றுப் பெரியன வாகவும் காட்சிக்குப் பொலிவு தருவனவாகவும் உள்ளன. யாழியின் காலானது யானையின் நெற்றியின் மீது படுமாறு; அதாவது யானையே யாழியைத் தாங்குமாறு காட்சி வருவதற்காக அவை இரண்டும் மீளவும் இணைக்கப்பட்டுமுள்ளன. தேரின் விமானம் போன்ற வெளிப்புற அமைப்பு 'பண்டிகை' என அழைக்கப்படுகின்றது. இப் பண்டிகை யானது 'எழுதகம்' வடிவிலிருந்து உருமாறி முழுமையான திரனை வடிவம் பெற்றிருப்பதுடன் இலாவகமாக மீட்பு கைமீட்டப்படுவதன் மூலம் கம்பீரத்தையும் பெறுகின்றது. "அரண்மனைத் தூண் அமைப்புக்கள், அதிகம் உட்குவியாத தட்டையான ஆழமற்ற, ஏற்ற இறக்கங்களைக் கொண்ட கவினுறு வட்டப் பந்தல் வடிவமைப்பு, கம்பீரமான யாழிகளும், அவற்றின் கீழ் பொலிவுறு யானைகளும், திரனை வடிவம் பெற்றுள்ள பண்டிகையமைப்பு, தேரை இழுப்பதுபோல் காட்டப் பட்டிருக்கும் இறக்கைகள் பூட்டப்பட்ட பறக்கும் பாங்கில் வித்தியாசங் கொண்ட சற்றுப்பெருத்த குதிரைகள்" இவையெல்லாமொன்று சேர்ந்து தேரின் மேற்பக்க முழுத்தொகுதியையும் "தூக்கலாக்குகின்றன". விநாயகர் சரித்திரம், அட்டதிக்குப் பாலகர்கள், பூதங்கள், காவற் தெய்வங்கள், இச் சிற்பங்கள் யாவும் கீழ்ப்பகுதியில் காட்சிதருகின்றன.

திராவிடச் சிற்பக் கலை மரபுக்குள் நின்று கொண்டே புதுமையான முறையில் மாற்றங்கள் பலவற்றைச் சிற்பக்கலைஞர் கி. கலாமோகன் செய்துள்ளார். "திராவிடச் சிற்பக்கலைக்குள் ஒளிந்திருக்கும் நவீன தேரென" இதனைக் கூறினால் அது பிழையாகாது. தேக்கமடையாத உளிஓட்டம், உருவங்களின் கட்டமைப்பு (form), அவற்றிற்கு தீட்டப்பட்ட நிறங்களின் தெரிவு (choice of colours), மீண்டும் மீண்டும் வரும் செதுக்கல் வரிகள் (recurrence of the carving lines) இவை மூன்றிலும் ஒத்திசைவுகள் எங்கும் பேணப்பட்டுக் கொண்டே செல்லும்பாங்கு, கடவுள் உருவங்கள், பூதங்கள், காவற்தெய்வங்கள் இவைகள் இருக்கும் நிலைகளிலும், நிற்கும் நிலைகளிலும் இலயம் பிசகாமை, செய்நேர்த்தி ஆகியன கலாமோகனின் சிற்பக்கலை தொடர்பான ஆளுமையை வெளிப்படுத்தும் முக்கிய அம்சங்களாகக் காணப்படுகின்றன. இவை எல்லாவற்றிற்கும்மேலாகப் "புதுமை செய்யும் சிந்தனை வசப்படும் கலைஞனாக" அவர் இருப்பது இன்னொரு 'சிறப்புமிக்க' அம்சமாகவும் கொள்ளப்படத்தக்கது.

தனது 24 ஆவது வயதில் சரசாலை நுணுவில் பிள்ளையார் கோவிற் தேரை வடிவமைத்துச் சாதனை செய்தார். இவர் முதன்முதலில் வடிவமைத்த தேர் அக்கோவிற் தேராகும். இது இவர் வடிவமைத்த பத்தாவது தேராகும். மாத்தளை முத்துமாரி அம்மன் கோவிற் தேரை வடிவமைத்தவர் இலங்கையின் புகழ்பெற்ற தேர்ச்சிற்பக்கலைஞர் "கலாகேசரி ஆ. தம்பித்துரை அவர்கள்". திரு. ஆ. தம்பித்துரை அவர்கள் யாழ்ப்பாணக் கல்வித் திணைக்களத்தில் சித்திரபாடத் துக்கான கல்வி அதிகாரியாகக் கடமையாற்றியவர். இவருடன் மிக இளவயதில் மாத்தளை முத்துமாரி அம்மன் கோவிற் தேர்கட்டும் பணியில் கலாமோகனும் ஈடுபட்டுள்ளார் என்பது இங்கு முக்கியமாகச் சொல்லப்படவேண்டிய விடயமாகும்.

கலாகேசரி அவர்களையே தனது "மானசீகமான" குருவாகக் கொள்ளும் கலாமோகனுக்கு கலாகேசரி அவர்களே மாமனாக இருப்பது அவருக்கு இயற்கை தந்ததொரு கொடையாகவும் இருக்கிறது. கலாகேசரியின் தந்தையார் இலங்கையின் புகழ்பெற்ற சிற்பக் கலைஞர், மட்டுவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட 'ஸ்தபதி ஆறுமுகம்' என்பது இங்கு நினைவுபடுத்த வேண்டிய பிரதானமானதொரு தகவலாகும். அத்தோடு கலாமோகனின் தந்தையார் திரு. க. கிருஷ்ணபிள்ளையும் கோவில் வாகனங்களை வடிவமைப்பதில் திறன் கொண்டவராகவும் இருந்துள்ளார்.

இத்தேர் கட்டும் பணியில் "சிந்தனைச் சிற்பி" கலாமோகனுடன் உதவியாளர் களாக இணைந்து செயற்படுபவர்கள் மிகச் சிறுதொகையினராக இருந்தாலும் அவர்கள் மிக்க சிரத்தையுடன் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்ததை அவதானிக்க முடிந்தது. 25 அடி 4.5 அங்குல உயரமும் 13.5 அடி அகலமுங்கொண்ட இத்தேருக்குள் "பெரும் மனித சக்தியொன்று புதைக்கப்பட்டுள்ளது". எல்லாவற்றையும் அதுபெற்றுக் கொண்டு பேசாமல் இருந்தாலும் அதிலிருந்து வெளிப்படும் "வசீகரம்" எம்முடன் எப்போதும் பேசிக்கொண்டே இருக்கும். திறன்மிக்க எம்மூர்ச்சிற்பக் கலைஞர்களைப் புறக்கணித்துத் தென்னிந்திய சிற்பக் கலைஞர்களை வரவழைத்துச் சிற்ப வேலைகளில் ஈடுபட வைப்பவர்களுக்கு இச்சிற்பத் தேரே மௌனமான பதிலாகவும் அமையும் என்பதில் எந்தவிதமான ஐயமும் இல்லை. இந்தவகையில் சரியானதையே புலுட்டையன் பிள்ளையார் கோயில் தர்மபரிபாலகர் செய்துமுள்ளார். சரியாகப் பலர் செய்யலாம். ஆனால் சரியானதைச் சிலரால் தான் செய்யவும் முடியும்.

தேர் என்பது "அசையும் ஓர் இசை" என நான் கருதுகின்றேன். இசையில் இருக்கும் ஒத்திசைவு, இலயம் என்பவை தேரிலும் உள்ளன. வாழ்க்கையிலும் இவை இருந்தால்தான் வாழ்க்கையும் இசைவுடன் அசையும். தேரின் தத்துவம் வாழ்க்கைக்கும் பொருந்தக்கூடியது என்பதுடன் தமிழரின் கலாசார அடையாளமாகவும் அது இருந்தும் வருகிறது. கோவில்களில் நடக்கும் ஏனைய திருவிழாக்களுக்குச் சமுகமளிக்காத வெளிநாட்டிலிருக்கும் எம்மக்கள் தேர்த்திருவிழா என்றதும் தேரடியில் கூடியும் விடுகிறார்கள். இத்தேரின் ஊர்கையே இவ்வூரின் செழிப்பாகவும் அமையும். தென்னிந்திய சிற்பக் கலைஞர்களுக்கு எந்தவிதத்திலும் சளைக்காத எம்மூர்ச் சிற்பக் கலைஞர் கி. கலாமோகன் அவர்களின் சிற்பக்கலைப்பணி என்றுந் தொடரவும் அதுமேலும் செழிப்புறவும் அவரை வாழ்த்துவோம். எல்லாவற்றிற்கும் மேலாக இத்தேர் கட்டும் முயற்சிக்கு புலுட்டையன் பிள்ளையார் கோவில் தர்மகர்த்தாவிற்கும் அவர்தம் குடும்பத்தினருக்கும் மனப்பூர்வமான வாழ்த்துக்கள். விநாயகப் பெருமானின் ஆசிகள் அவர்களுக்கு எப்போதும் உண்டு.

# கலைநுணுக்கம் காட்டும்
# "சிந்தனைச்சிற்பி"

**திரு. க. மார்க்கண்டு,** ஆசிரியர், யா/சாவகச்சேரி டிறிபேக்கல்லூரி.

உலகம் உவந்திட உளிகொண்டு செதுக்கிடும்
உன்னதக் கலையாம் சிற்பக்கலையினை உளந்தனில்ஏற்றி
உண்மையாய் உழைத்திடும் உயர்ந்த மனிதர் இவர்
மானிடம் மரங்களாய் மாறிடும் காலத்தில்
மரங்களை மானிடம் ஆக்கிடும் வல்லவர்.

மரத்துள் மறைந்திட்ட மாமத யானையை மரத்தை
மறைத்திடும் யானையாய்த் தருபவர்
பட்டமரங்களைப் பட்டுடலாக்கி பலகை பலதிலும்
பாவைகள் வனைந்து பின்உயிர்ப்பை அதற்குள்
ஊட்டிடும் பிரம்மர்
செதுக்கிய சிற்பம் உருக்கொண்ட பின்னே
புதிய கற்பனை புத்தியைக் குடைவதால்
வித்தை வினோதம் புதுக்கிடும் கலைஞர்.
தேவர் தேவர் திருவிழாச்செய்திட திருத்தேர் புனைந்திடும்
தேவ தச்சன் இவர்தான்,

தென்மராட்சியின் செய்தவப் பயனாய்
திகழ்பெறு மட்டுவில் கிராமத்தில் தோன்றி (31-12-1957)
மனைவி, மக்கள், மருவிடும் உறவென
மகிழ்வொடு வாழும் **கலாமோகன் அவர்கள்**

விஸ்வகர்மா மரபில் தோன்றிய
கிருஷ்ணபிள்ளை இரத்தினம் தம்பதியர்
விதைத்தளித்த வித்தை வல்லார் இவர்
மட்டுவில் மகாவித்தியாலயக் கல்வியின்
மகிழ்வுறு மாணவப் பருவத்திலேயே
மனத்தின் முனைப்பு வரைதலில் குவித்ததாய்
முன்னைய நினைவை மீட்டுத் தருகிறார்.

1972 இல் 15 ஆவது வயதில் ஒருநாள்
வடமாகாணச் சித்திரவித்தியாபதியாய் இருந்த
கலாகேசரி தம்பித்துரை அவர்கள் பார்வையில்
கலாமோகன் செதுக்கிய சிறிய சிற்பங்கள் (சூரன், குதிரை)
கவனஈர்ப்பைக் கருத்தில் விதைத்ததால்
"எவர்கைவண்ணமிது?" என்று வினவி
இவரை அறிந்து பாராட்டி மகிழ்ந்தாராம்.
தகைமையாளரால் வந்த புகழ்ச்சியும்
அகத்தில் அரியணை அமைத்த அவாவும்

சிற்பக்கலைபால் உந்தித் தள்ளிட
கலாகேசரி கலாலய வாசலுள் நுழைந்தார்.

1976 பங்குனித் திங்களில்,
மாத்தளை முத்துமாரியம்மன் தேர்வேலையில்
தம்பித்துரையாருடன் சங்கமித்திருந்தார்
1979இல்
தெல்லிப்பழை துர்க்கை அம்மன் தேர்வேலையில்
நல்லன பலதையும் நயமுறக் கற்றார்
1981 ஆம் ஆண்டு வரை,
கலாகேசரி அவர்களின் கருத்திற்கிசைவாய்
கலைச்சிற்பங்களைக் கவினுறச் செதுக்கினர்
புலோலிப் புற்றளைப் பிள்ளையார் கோவில்
கொக்குவில் பதியின் சிவசுப்பிரமணியர் கோவில்
தேர்களின் வேலைகள் செய்திட்ட காலத்தில்
கலாகேசரியின் சமஸ்கிருத அறிவும்
பரதநாட்டிய, ஓவியத் திறன்களும்
கண்டு கேட்டு உண்டுயிர் பெற்றதாய்
குருவின் பெருமையை இன்றும் நினைக்கிறார்.

குருவின் ஆசி வேண்டிய சீடனாய்
குருவை வழிபடும் சிறந்த பக்தனாய்
"கலாகேசரி சிற்பாலயம்" என்ற பெயரில்
மட்டுவில் மண்ணில் கலைக்கூடம் தொடங்கினார் (1981)

கையில் வினையும் கருத்தில் கலையுமாய்
உய்வகைதேடிய கலாமோகனுக்கு,
சரசாலை வயலுறை நுணுவில் பிள்ளையார்
வரமாக பெரியதோர் வாய்ப்பை நல்கினார்

அமரர் நமசிவாயம் அந்நாளில் பெருமனிதர்
அம்பிகா மருந்தகம் அவர்நினைவை இன்றும்தரும்
நுணுவில் பிள்ளையாரின் அருகில்வாழ் நமசிவாயம்
'நுண்கலை விநோதமாய்த் தேரினை அமைத்திட
கலாமோகனாலே முடிந்திடும்' என்று
கருத்தினை விதைத்தார்; மற்றவர் ஏற்றனர்

1982 - இருபத்தி ஐந்தாம் வயதில்
முதல்தேர் வேலை முடித்திடும் படிக்காய்
நம்பித்தந்த நமசிவாய அமரரை
நினைத்து நெகிழ்ந்ததைப் பார்க்க முடிந்தது.

திராவிடமாக (எண்கோண வடிவம்) அமைத்த முதற்தேர்க்கு
ஓரிருவர் மட்டுமே (தந்தையும் இன்னொருவரும்) உதவிசெய்ததாய்
தமது உழைப்பினில் நிறைவு காணினும்
கற்பனை நிறையாக் கலைஞனாய் வாழ்கிறார்.

சாவகச்சேரியூர் மட்டுவில் வயல்வெளித்
தாழையடியின் துர்க்கை அம்பாள்
ஆவலாய் இவரை அருளொடு தேர்ந்திட
அடுத்ததேர் நாகரம் (சதுரவடிவு) அமைந்து சிறந்தது (1987)
மூன்றாவதுதேர் மூஷிக வாகனனாம்
வேதவனப் பிள்ளையாருக்கு திராவிடமாய் நிறைந்தது (1991)
சான்றாதாரமாய்ச் "சிற்பகலைச் செல்வன்"
சாசனப் பாமாலை வழங்கவும் பெற்றது.
ஆர். டி. சுப்பிரமணியம் என்னும் தகையாளர்
அதனை வழங்கிச் சிறப்புச் செய்ததாய்
சீர்பெற்று வாழும்போதும் சிந்தையில் கொள்கிறார்.

வாரிவனப்பதி முத்துமாரி அம்பாட்கு
வனப்புறு சிறுரதம் நாகர வடிவில்
அமைத்துக் கொடுத்ததே இவரின் நான்காம்தேர்.

இவற்றுக்கிடையில், வாகனம் பலதும்
சூர, சிம்ம, தாரக உருக்களும்
கவினுறும் படிக்காய் கல்விக் கூடங்களில்
கலைவாணி எழுந்தருள் பீடங்கள் சிலதும்
கைவினை முற்றிய கலாமோகன் அவர்களால்
செதுக்கப்பட்டமை இவரை உயர்த்தின.

ஐந்தாவது தேர் நுணாவில் வயிரவர்க்கு
ஆந்திரமாக (அறுகோண வடிவு) அமைந்து சிறந்தது (1994)
ஆறாவது தேர் பெருங்குளம் பிள்ளையார்க்கு
திராவிடமாகச் செதுக்கப்பட்டது (1995)
பெருங்குளப் பிள்ளையாரின் பெரியதேர் பார்த்த
நகரசபைச் செயலர் நவரட்ணராஜா
"சிற்ப கலாமணி" என்னும் பட்டத்தை
சிறப்பொடுநல்கிப் பாராட்டி மகிழ்ந்தார்.

இன்னொரு புறத்தில்,
கலாமோகன் குருநாதர் தம்பித்துரையின்
தம்பியாய்த் தோன்றிய ஜீவரட்ணம்
- நூறுதேர் கண்ட பெருங்கலைச் சிற்பி -
'கலாமோகன் கைவண்ணம் நாளும் வளர்கிறது'
என்பதுபோல் சுட்டியதை இன்றும் நினைந்து
'பெரியவர் அவர்' என்று புளகிக்கிறார் கலாமோகன்.

சங்கத்தானை இத்தியடிப் பிள்ளையார்
சங்கார மூர்த்தியாய் பாவங்கள் விலக்கிட
வீதி உலாக்கொள்ளும் சித்திரத்தேர் ஒன்று
வேசரமாக (வட்டவடிவு) அமைக்கப்பட்டது.

கலைநயம் நிறைந்த ஏழாவது தேராய்
கலாமோகனால் இது செதுக்கப்பெற்றது. (1998)
"சிற்ப கலாரத்தினம்" என்னும் பட்டமும்
இவரின் பெயரொடு இணைந்து கொண்டது.
எட்டாவது தேர் வவுனியா நகரின்
சிந்தாமணிப் பிள்ளையார் தேவசந்நிதிக்காய்
வேசரவடிவிலே அமைக்கப்பெற்றது (2001)
"சிற்பகலாகேசரி" என்ற பட்டமும்
சிறந்ததேர் படைத்த இவர்க்காய் ஆனது.

ஒன்பதாவதாக மலேசியா - கிளாங்கில்
கில்லத்தம்மன் பவனி செய்திட
சிறிய ரதமொன்று செதுக்கப்பெற்றது (2005)

இரண்டாயிரத்தின் முதல்வந்த தசாப்தம்
இலங்கை மண்ணின் போர் நிறைவுகாலம்
மிரண்டு ஓடியும் கலங்கிக் கதறியும்
அலைந்து அழுத அநியாயக் காலம்
வரண்ட பாலையாய் மனங்கள் எரிந்து
வல்லமை இழந்து வதங்கிய காலம்
திரண்ட கலைகள் திராணிகள் அற்று
திக்குகள் தோறும் சிதறிய காலம்.

இக்காலக் கொடுமையால் உதவிகளின்றித்
தம்தொழில் நிலைகண்டு தமக்குள் அழுததாய்
கலாமோகன் சொல்வதும் கருத்தான சொற்களே.

மீண்டும்,
கல்வயல் பதியில் கருணையோடிலங்கும்
ஆயிலடி வீரகத்தி விநாயகன் அருளால்
நல்லவகையினில் திராவிடத் தேரொன்று
நவீன கற்பனைத் திறன்கள் பொதிந்ததாய்
பல்லோரும் தொழும்படி பவனிவருகிறது (21-07-2012)
பலகோடி அடியார் பாவங்கள் போக்குவர்
எல்லோரும் இத்தேரின் இலங்குதல் கண்டு
தர்மபரிபாலகரும் உபயகாரரும் அடியவர்களும்
**'சிற்பக் கலைக் குரிசில்'** எனும் பட்டத்தை
சிறப்புடன் வழங்கி பாராட்டி மகிழ்ந்தனர்
இனிமையாய்க் கலாமோகன் புகழினைச் சாற்றுவர்

கலாமோகன் அவர்கள்,
பத்தாம் தேரொடு இன்னும் பலபடி
முத்தான தேர்களைச் சமைத்து
வித்தையில் வீறுகொண்ட சிற்பியாய்
நித்தமும் வளர நெஞ்சார வாழ்த்துவோம்.

**நீடு வாழ்க.**

# தேரின் கதை

## பேராசிரியர் அ. சண்முகதாஸ்

### 1. முன்னுரை

இன்று ஒவ்வொரு கோயிலிலும் தேர்த்திருவிழா அக்கோயில் திருவிழாக்களிலே ஒன்றாக இடம்பெறுவது இயல்பாகிவிட்டது. கோயிலுக்குள்ளிருந்து அருள்பாலிக்கும் இறைவன் ஆண்டுக்கொருமுறை கோயிலுக்கு வெளியே வந்து, தேரேறி வீதிவலம் வந்து அடியார்களுக்கு அருள் வழங்கும் காட்சி அருமையானதொன்று. கோயிலுக்குட் செல்லாதவர்களும் செல்லமுடியாதவர்களும் கோயிலின் வெளி வீதியிலே நின்றும், தூரத்தில் நின்றும் இறைவனை வணங்கி மகிழ வாய்ப்பளிப்பதாகத் தேர்த்திருவிழா அமைகின்றது. இப்பொழுது தேர் என்றால் கோயில் தேர் பற்றியே எண்ணுகிறோம்.

"திருவாரூர்த் தேரழகு" என்றும்,

"தேரில் வாறாண்டி வேலன் தெருவில் வாறாண்டி
ஆனைமுகன் வேலனுக்கு அண்ணனாமடி – அவனைக் காட்டி
வள்ளிப் பெண்ணை மணந்துகொண்டாண்டி"

என்றும் கோயில் தேர்பற்றிப் பாடல்கள் உள்ளன. தேர் என்னும் தமிழ்ச் சொல் முன்னர் கோயில் தேரை மட்டும் குறிப்பிடவில்லை. மன்னர், தலைமக்கள், போர்வீரர் முதலியோர் ஏறிச்சென்ற தேர் பற்றியும் விளையாட்டுகாகப் பயன்பட்ட சிறுதேர் பற்றியும் அது குறிப்பிட்டது. தமிழிலக்கியங்கள் பலவற்றிலே தேரைப்பற்றிய குறிப்புகள் வருகின்றன. இக்கட்டுரை தமிழிலக்கியங்களிலே தேர்பற்றி வரும் செய்திகள் சிலவற்றைத் தொகுத்துத் தருவதாக அமைகின்றது.

### 2. பண்டைய தமிழிலக்கியங்களில் தேர்

பண்டைத்தமிழ் இலக்கியங்கள் தேர்பற்றிப் பல்வகைப்பட்ட விவரமான செய்திகளைத் தருகின்றன. முதலில், சங்க இலக்கியம் தரும் செய்திபற்றி நோக்கலாம். சங்க இலக்கியங்களுள் **புறநானூறு, அகநானூறு** ஆகிய இரு நூல்களிலும் தேர் பற்றிய குறிப்பு வரும் எல்லாப் பாடல்களும் நோக்கப்பட்டன. அவற்றுள் வரும் சில தகவல்களைக் கீழே தருகிறோம்.

பல வகையான தேர்கள் பற்றிச் சங்கப் பாடல்கள் கூறுகின்றன. தேரினுடைய நீள உயரத் தோற்றப்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு "நெடு" என்னும் அடைகொடுத்துத் தேர்கள் பல பாடல்களிலே குறிப்பிடப்பட்டுள்ளன. புறநானூற்றிலே.

"நெடுந்தேர்க் கொடிஞ்சி பொலிய" (77:4)

"கடும்பரி நெடுந்தேர்" (141:3)

என்னும் பாடலடிகள் இடம்பெற்றுள்ளன. அகநானூற்றிலும் நெடுந்தேர் பற்றிப் பல பாடல்களிலே குறிப்புகள் இடம்பெறுகின்றன.

"நெடுந்தேர்க் காரி" (35:15)

"இழையணி நெடுந்தேர்" (47:15)

ஒரு தேருக்கு இயல்பாக இருக்க வேண்டியவற்றையெல்லாம் கொண்டமைந்த தேர் "இயல் தேர்" என்று கூறப்பட்டிருக்கலாம். இயற்றப்பட்ட தேர் என்று உரைகாரர் உரைகூறியுள்ளனர். பல மன்னர்களுடைய, குறுநில மன்னர்களுடைய தேர்கள் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளன. புறநானூற்றில் கூறப்பட்டவை பின்வருமாறு:

"இயல்தேர் வளவ" (7:12)

"இயல்தேர் வழுதி" (52:6)

அகநானூற்றில் பின்வரும் பாடல்களில் இயல்தேர் இடம்பெறுகின்றது:

"இயல்தேர்ப் பொருநன்" (36:19)

"இயல்தேர் மோரியர்" (69:10)

வேகமாகச் செல்லும் தேர் "கடுந்தேர்" எனப்பட்டது. திண்மையுடையது "திண்தேர்". புறநானூற்றிலே வரும் இடங்கள் பின்வருமாறு:

"கடுந்தேர் குழித்த ஞெள்ளல்" (15:1, 326:4)

"கடுந்தேர் இராமன்" (378:18) "

அகநானூற்றில் கடுந்தேரும் திண்தேரும் இடம்பெறும் இடங்கள் பின்வருமாறு:

"கடுந்தேர் விளங்க" (210:12)

"திண்தேர்ப் பொறையன்" (60:7)

பண்டைக்காலத்தில் தேரில் வருபவர் யார் என்பதை அத்தேரிலுள்ள கொடி புலப்படுத்தும். புலிக்கொடி சோழனையும், விற்கொடி சேரனையும், மீன்கொடி பாண்டியனையும் குறித்து நின்றன. இராவணனுடைய தேரிலே வீணைக்கொடி பொருந்தியிருக்கும். கொடித்தேர் பற்றிப் புறநானூறு பின்வருமாறு கூறும்:

"கொற்ற நீள்குடைக் கொடித்தேர்ச் செழிய" (24:23)

"நெடுங்கொடிய நிமிர் தேரும்" (55:9)

"விண்பொரு நெடுங்குடை கொடித்தேர்" (175:6)

"கொடி நுடங்கு மிசைய தேரினர்" (197:2, 351:2)

"கொற்ற வெண்குடை கொடித்தேர் வேந்தர்" (367:14)

அகநானூற்றில் பின்வரும் பாடலடி இடம்பெறுகின்றது:

"கொய்சுவல் புரவிக் கொடித்தேர்ச் செழியன்" (36:13, 57:14)

## 2.2. தேரொலி

தேர் ஓடும்போது ஏற்படும் ஒலியினை வாழ்வியற் கோலங்களுடன் சங்கப் புலவர்கள் கூறியுள்ளனர். இன்னாருடைய தேர் வருகின்றதெனக் கூறக்கூடியதாக அதன் ஒலி அமைகின்றது. பேகனுடைய தேர் நல்லூரிலே வருவதனை,

"ஒல்லென வொலிக்குந் தேரொடு

முல்லை வேலி நல்லூ ரானே" (144:13)

என்று புறநானூற்றுப் பாடல் கூறுகின்றது. பல மணிகள் கட்டப்பட்ட தேர்கள் ஒலியேற்படுத்திச் செல்கின்றனவாகப் பாடல்கள் கூறுகின்றன. "ஒலிமணி நெடுந்தேர்" என அகநானூறு (146:5) கூறுகின்றது. தேரினுடைய மணியிசையைக் கேட்டு சிள்வண்டு ஆரவாரஞ் செய்வதாக இன்னொரு பாடல் (145:2) குறிப்பிடுகின்றது. தன்னுடைய கடமையினை நன்கு முடித்துக் காட்டுப்பிரதேசத்தூடாக வீடு திரும்பிக்கொண்டிருக்கிறான் தலைவன். தன்னுடைய தேரின் மணி அக்காட்டுப்பிரதேச விலங்குகளுக்கு இடையூறாக அமையலாம் என்று கருதி தேரிலே பூட்டப்பட்டுள்ள மணிகள் மெதுவாக ஒலிக்கத் தேரை ஓட்டும்படி பாகனுக்குக் கூறுகிறான்:

"தாடாழ் தார்மணி தயங்குபு இயம்ப

ஊர்மதி வலவ தேரே" (அகம் 154:13)

தேருடன் தொடர்புடைய ஓர் அன்புள்ளத்தினை இதிலே கண்டு மகிழ்கிறோம்.

## 2.3. தேர்ப்பரிசு

சங்ககாலத் தமிழ் மன்னர் தேரைப் பரிசாகக் கொடுக்கும் வழக்கமுடையவர். சில மன்னர்களுக்குத் "தேர்வண்" என்னும் அடை கொடுக்கப்பட்டுள்ளது. "தேர்வண் பாரி" (புறம் 118:5), "தேர்வண் கிள்ளி" (புறம் 220:5), "நெடுந்தேர்க் கைவண் செழியன்" (அகம் 47:15) என பாரி, கிள்ளி, செழியன் ஆகியோர் குறிப்பிடப்படுகின்றனர். இவர்கள் தேரைப் பரிசாகக் கொடுக்கும் வள்ளல் தன்மையுடையவர்களாக இருக்கவேண்டும். பாரி மன்னன் பரிசில் வேண்டி வந்தோர்க்குத் தேரைப் பரிசாகக் கொடுத்தது மட்டுமன்றி, வாய்பேசாத முல்லைக் கொடிக்கே தன் தேரை ஈந்தவன்.

தேர்வீ சிருக்கை நெடியோன் குன்றே" (புறம் 114:5)

ஆய் அண்டிரன் இரவலர்க்குத் தேர் வழங்கிப் புகழ்பெற்றவன்.

"திண்தேர் இரவலர்க் கீத்த தண்தார்

அண்டிரன்..............................."

என்று புறம் (241:1) பாடுகின்றது.

## 3. பிற்கால இலக்கியங்களில் தேர்

சங்கத்தமிழ் இலக்கியங்களிலே காணப்படும் தேர் பற்றிய விவரங்கள்தான் பிற்கால இலக்கியங்களிலும் காணப்படுகின்றன. எனினும், சில புதிய சுவையான செய்திகள் பிற்கால இலக்கியங்களிலே காணப்படுகின்றன. கடுந்தேர் பற்றிச் சங்க இலக்கியங்கள் கூறுகின்றன. வேகமாக ஓடும் இத்தேர்களை அவை நன்றாக விவரிக்கின்றன. இந்நிலையில் ஓடாத தேர் பற்றிய ஒரு செய்தி பிற்கால இலக்கியமாகிய **நந்திக்கலம்பகத்திலே** (கி.பி. 8ஆம் நூற்றாண்டு) கூறப்படுகின்றது. வினை முடித்துத் தலைவன் தேரிலே திரும்பி வருகிறான். வினைக்குச் செல்லும்போது கார்காலம் வருவதற்கு முன்னர் வந்துவிடுவேனென்று தலைவிக்கு அவன் கூறிச் சென்றான். இப்பொழுது வினை முடித்து வேகமாக வரும்பொழுது, அவனுடைய தேரை முந்திக்கொண்டு கார்கால மேகம் வேகமாகச் சென்றது. தான் செல்வதற்குமுன் இந்த மேகம் சென்றுவிட்டால் தலைவி துன்பப்படுவாளே

என்று எண்ணி அந்த மேகத்திடமே தூது சொல்லிவிடுகிறான். ஓடாத தன்னுடைய தேரிலே வெறும் கூடுதான் வருகின்றது. தன்னுடைய உள்ளமும் உயிரும் முன்னாலே சென்றுவிட்டன என்னும் செய்தியைக் கூறும்படியாக மேகத்தை வேண்டுகிறான்:

"ஓடும் முகிலினங்காள் ஓடாத தேர்சுமந்த
கூடு வருகுதென்று கூறுங்கோள் - நாடியே
நந்திச் சீராமனுடை நல்நாட்டில் நாயகியைச்
சந்திச்சீர் ஆமாகில் தான்"

என்பது ஓடாத தேர் பற்றிக் குறிப்பிடும் நந்திக்கலம்பகப் பாடலாகும்.

### 3.1. பாண்டியனின் தேர்

ஒரு பெண் வீட்டினுள் இருக்கும்பொழுது பல வகையான மங்கல முழக்கம் முழங்குவதைக் கேட்டு ஓடிவந்து கதவின் அருகில் நின்று பார்க்கின்றாள். நெடுந் தூரத்திலே பெரிய தேர் ஒன்றின் உச்சியிலே கட்டப்பட்டுள்ள கொடிமட்டும் தெரிகின்றது. அதனையே சிறிது நேரம் பார்த்துக்கொண்டுநின்றாள். சிறிது நேரம் செல்ல பெரிய தேர் ஒன்று தெரிகின்றது. அத்தேரையே பார்த்துக்கொண்டிருக்கிறாள். தேரும் அருகே வருகின்றது. தேரினுள் இருப்பவனுடைய மணிமுடி தெரிகின்றது. தேர் நன்றாகப் பக்கத்தில் வந்துவிட்டது. உள்ளே பாண்டியன் இருக்கிறான். மாறனுடைய மார்பிலே முத்தாரங்கள் கிடந்து மிளிர்கின்றன. அவற்றைப் பார்த்துக்கொண்டிருக்கத் தேர் போய்விட்டது. மீளவும் அப்பெண் அத்தேர் வந்த காட்சியை மீட்டுப்பார்க்கிறாள். பல தடவை மீட்டல் நடைபெறுகின்றது. அம்மாவின் காவலிலே இருக்கும் அப்பெண் தான் கண்ட அக்காட்சியை அம்மானையாகப் பாட ஆசைப்படுகிறாள். அவளுடைய ஆசை,

"கொடிபாடித் தேர்பாடிக் கொய்தண்டார் மாறன்
முடிபாடி முத்தாரம் பாடித் - தொடியுலக்கை
கைம்மனையில் ஓச்சப் பெறுவனோ யானுமோர்
அம்மனைக் காவல் உளேன்."

என்னும் பாடலூடாக வெளிப்படுத்தப்படுகின்றது. இப்பாடல் **முத்தொள்ளாயிரம்** என்னும் இலக்கிய (கி.பி. 8ஆம் நூற்றாண்டு) நூலிலே இடம்பெற்றுள்ளது.

### 3.2. விரைவான தேர்

சங்கப் பாடல்களிலே விரைவான தேர் பற்றிய குறிப்புகள் தொகையாகக் காணப்படுகின்றன. ஆனால், பிற்கால இலக்கியமாகிய **நளவெண்பாவிலே** நளன் செலுத்திய தேர் விரைவாகச் சென்றமையைப் புகழேந்திப் புலவர் புதுமையாகக் கூறுகிறார். கலியினுடைய பிணிப்பாலே நாடிழந்து, தமயந்தியை விட்டு நீங்கி அயோத்தி மன்னனுடைய தேர்ப்பாகனாக இருக்கும்போது தமயந்திக்கு இரண்டாவது சுயம்வரம் என்ற அறிவிப்பினைக் கேட்டு அயோத்தி மன்னன் விதர்ப்ப நாட்டுக்குச் செல்வதற்கு நளன் தேர் கொண்டு வந்து, "ஒன்றாகிய ஒப்பற்ற சக்கரத்தை உடையதான கதிரவனின் தேர் என்றாற் போல விரைந்து ஓடத்தக்கதொரு வெற்றி பொருந்திய உயர்ந்த தேரினைப் பூட்டிக்கொண்டு வந்துள்ளேன். இதிலே வந்து அமர்க" என்று மன்னனிடம் கூறியதை,

"ஒற்றைத் தனியாழித் தேரென்ன ஓடுவதோர்
கொற்ற நெடுந்தேர் கொடுவந்தேன் - மற்றிதற்கே
போந்தேறு கென்றுரைத்தான் பொம்மென் றளிமுரலத்
தீந்தேறல் வாக்குந்தார்ச் சேய்."

என்னும் பாடலாக அமைகின்றது. அத்தேர் எவ்வளவு வேகமாகச் சென்றதென்பதற்குப் புலவர் ஓர் எடுத்துக்காட்டுத் தருகிறார். அயோத்தி மன்னன் தேரிலேறி வரும்பொழுது "என்னுடைய மேலாடை வீழ்ந்துவிட்டது, அதனை எடுக்க" என்று அவன் சொல்வதற்குள் நளன் செலுத்திய தேர் நாலாறு காதம் கடந்துவிட்டது. மின்னல் வேகத்திலே சென்ற தேரினைப்பற்றி **நளவெண்பா** ஆசிரியர்,

"மேலாடை வீழ்ந்த தெடுவென்றான் அவ்வளவில்

நாலாறு காதம் நடந்ததே – தோலாமை

மேல்கொண்டான் ஏறிவர வெம்மைக் கலிச்சூதில்

மால்கொண்டான் கோல்கொண்ட மா." என்று வியந்து கூறுகிறார்.

### 3.3. தேர்க்காலில் பட்ட பசுக்கன்று

தேரினாலே உற்ற துயரம் ஒன்றினைப் **பெரியபுராணம்** விரித்துரைக்கின்றது. அநபாயச் சோழனுடைய மகன் இளவரசன் என்ற முறையிலே தேரை விரைவாகச் செலுத்துகிறான். தேரோடும் வீதியிலே சென்ற அத்தேர்க் கால்மீது ஒரு பசுக்கன்று பட்டு இறக்கின்றது. அதனுடைய தாய்ப்பசு அரண்மனை ஆராய்ச்சி மணியை அடித்து நீதி கேட்கின்றது. அப்பொழுது தலைமை அமைச்சர் மன்னனுக்கு நடந்தவற்றை எடுத்துக் கூறுவதை,

"வளவநின் புதல்வன் ஆங்கோர் மணிநெடுந் தேர்மே லேறி

அளவில்தேர்த் தானைசூழ் அரசுலாந் தெருவில் போங்கால்

இளையஆன் கன்றுதேர்க் காலிடைப்புகுந் திறந்த தாகத்

தளர்வுறும் இத்தாய் வந்து விளைத்ததித் தன்மை என்றான்"

என்னும் பாடலால் சேக்கிழார் கூறுகிறார். அரச குமாரனிலே எப்பிழையுமில்லை என்பதனையே தலைமை அமைச்சர் மன்னனுக்கு அறிவுறுத்த முயல்கிறார். அவருடைய நியாயங்களைப் பின்வருமாறு நிரைப்படுத்தலாம்:

(அ) **மணிநெடுந்தேர்மேலேறி:** மன்னா! உன்னுடைய புதல்வன் ஏறிவந்தது நெடுந்தேர். அத்தேர் வருவதை முன்கூட்டியே உயிருள்ளன யாவும் உணரக்கூடியதாக அத்தேரிலே பல மணிகள் பொருத்தப்பட்டுள்ளன. இம்மணிச்சத்தம் கேட்ட கன்று ஓடியிருக்கக்கூடிய வாய்ப்பிருந்தது. இதனால் அரசகுமரன் தவறிழைக்கவில்லை.

(ஆ) **அளவில்தேர்த் தானைசூழ் அரசுலாந்தெருவில்:** அரசகுமாரனுடைய தேர் சென்ற வீதி மன்னருடைய தேர்ப்படை செல்லுகின்ற அரசவீதி. இந்த வீதியிலே பசுக்கன்று வந்ததற்கு யார் பொறுப்பு? இத்தகைய தேரோடும் வீதியிலே வந்து தேரில் மோதியது பசுக்கன்றின் பிழையேயன்றி அரசகுமாரனின் பிழையல்ல.

(இ) **தேர்க்கால் இடைப்புகுந்து:** தேர் சென்று இக்கன்றினை முட்டியதாலோ நெரித்ததாலோ அது இறக்கவில்லை. கன்று தானாகவே தேர்க்காலிடைப் புகுந்தது. இதற்கு அரசகுமாரன் என் செய்வான்?

அமைச்சர் கூறிய நியாயம் எதனையும் மன்னன் ஏற்றுக்கொள்வதாயில்லை. தன் மகன் செய்த பிழைக்குத் தண்டனையாக "முன்னிவனை அவ்வீதி முரண்தேர்க்கால் ஊர்க" என்று கட்டளையிடுகிறான். இது தேர் விளைவித்த ஒரு துன்பம். எனினும் அது நீதியினை விடாப்பிடியாகப் பிடிக்கும் மன்னனியல்பைக் காட்டுகின்றது.

### 3.4. சிறு தேர்

சிறு தேர் கட்டி விளையாடுகின்ற வழக்கம் சங்க கால முதல் இருந்துவந்தது. அகநானூறு 16ஆம் பாடலில்,

"யாவரும் விழையும் பொலந்தொடிப் புதல்வனைத்

தேர்வழங்கு தெருவில் தமியேற் கண்டே"

என்று குறிப்பிடப்பட்டுள்ளது. "யாவரும் விருப்பமுறுகின்ற கவர்ச்சியினையுடைய பொற்றொடியினை அணிந்த நம் புதல்வன் சிறுதேர் ஓட்டி விளையாடிக்கொண்டு தெருவிலே தனியனாய் நிற்பதைக் கண்டு" எனும் பொருளுடைய இப்பாடலடிகளில் சிறுவர் விளையாடும் தேர்பற்றிக் கூறப்படுகின்றது. தச்சனாலே செய்யப்பட்ட சிறிய குதிரை பூட்டப்பட்ட விளையாட்டுத்தேரை இழுத்து மகிழ்வடையும் சிறுவர் பற்றி குறுந்தொகை 61 ஆம் பாடல் கூறுகிறது.

பிற்காலத்தில் ஓர் இலக்கிய வடிவமாக அமைந்த பிள்ளைத்தமிழ் சிற்றிலக்கியத்தில் சிறுதேர் உருட்டும் பருவமும் ஒன்றாக அமைந்துள்ளது. கவிராச பண்டாரத்தையா என்னும் புலவர் பாடிய **திருமலை முருகன் பிள்ளைத்தமிழ்** நூலிலே ஒரு சுவையான பாடல் இடம்பெறுகின்றது. "முன்னர் சூரனோடு போர் செய்த காலத்திலே இந்திரஞாலம் என்னும் பெருந்தேரைப் பறித்த முருகா! இச்சிறுதேரை உருட்டியருள்" என்று புலவர் பாடுகிறார்:

"புகழ்கொண்ட திறல்வீர வாகுவுடன் நவவீரர்

பூதர்கள் இலக்கர்தம்மைப்

புத்தியை மயங்கிஒரு நொடியில்வா ரிக்கொண்டு

திகழ்இந்திர ஞாலப் பெருந்தேர் பறித்துநீ

சிறுதேர் உருட்டியருளே!

சிவஞான முத்திதரு திருமா மலைக்கடவுள்

சிறுதேர் உருட்டியருளே"

ஆண்பாற் பிள்ளைத்தமிழ் நூல்களில் அவ்வாறு பாடல்கள் பல இடம்பெறுகின்றன. சிறுதேர் உருட்டிச் சிறுவர்கள் விளையாடும் மரபினை இருபதாம் நூற்றாண்டிலே **காதலியாற்றுப்படை** பாடிய பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை பின்வருமாறு சுவைபடக் கூறுகிறார்:

"தென்னங் குரும்பை தெரிந்துதான் எடுத்தே

அன்னதன் மேலே அளவுடை ஈர்க்கை

அமைவுறக் குத்தி அழகு சிறுதேர்

பூப்பல சூடிப் புனைந்தினி தியற்றி

நாப்பண் கடவுளை நலமுடன் ஏற்றிக்
காகா டுண்டுண் காகா டுண்டுண்
ஈதோ சாமி எழுந்துதேர் வாரார்
காகா டுண்டுண் காகா டுண்டுண்
அம்மா வழிவிடு ஆத்தைநீ விலகு
காகா டுண்டுண் காகா டுண்டுண்
என்றே இயம்பி ஏருறு தேரினைக்
கட்டிய இழையால் பற்றி இழுத்தும்"

இவ்வாறு விளையாட்டுத் தேரைப் பேராசிரியர் விவரணஞ் செய்கிறார்.

4. **கோயில் தேர்**

கோயிலிலே நடைபெறும் தேர்த்திருவிழா பற்றி எமக்குக் கிடைக்கும் முதற் சான்று **சிலப்பதிகாரம்** பத்தாவது காதை(நாடுகாண் காதை: 22)யில் இடம்பெறுகிறது. இது சமணர்களுடைய ஸ்ரீகோயிலிலே இடம்பெறுவதாக உரைகாரர் கூறுகின்றனர்:

"ஐவகை நின்ற அருகத் தானத்துச்
சந்தி யைந்தும் தம்முடன் கூடி
வந்துதலை மயங்கிய வான்பெரு மன்றத்துப்
பொலம்பூம் பிண்டி நலங்கிளர் கொழுநிழல்
நீரணி விழவினும் நெடுந்தேர் விழவினும்"

என்று வரும் அடிகள் தரும் பொருள் பின்வருமாறு:

"ஸ்ரீகோயிலில் ஐந்து சந்தியும் தம்முட் கூடி கலந்து சிறந்த பெரிய மன்றத்தின்கண், பொற்பூவினையுடைய அசோகின் எழில் விளங்கும் கொழுவிய நிழலின்கண் திரு அபிடேக விழா நாளினும், தேர்த் திருவிழா நாளினும்". இவ்வாறு தொடங்கிய தேர்த்திருவிழா பிற்காலத்தில் தமிழ்நாட்டிலுள்ள எல்லாக் கோயில்களிலும் நடைபெறலாயிற்று.

தமிழ்நாடு முழுவதும் கோயில்கள் அமைக்கப்பட்டபோது பெரிய தேர்களும் உருவாக்கப்பட்டன. கோயில்களைச் சுற்றி தேரோடும் வீதிகளும் அமைக்கப்பட்டன. சுந்தரரைத் தடுத்தாட்கொண்ட பெருமான் திருவாரூருக்கு வந்தபோது,

"தேராரும் நெடுவீதித் திருவாரூர் வாழ்வார்க்கு
ஆராத காதலின்நம் ஆரூரன் நாம்அழைக்க
வாராநின் றான்அவனை மகிழ்ந்தெதிர் கொள்வீரென்று
நீராரும் சடைமுடிமேல் நிலவணிந்தார் அருள்செய்தார்"

என்று திருவாரூரின் தேராரும் நெடுவீதிபற்றிச் சேக்கிழார் குறிப்பிடுகிறார்.

தேரின் கதை மிக நீண்ட கதை. அது எங்கள் பண்பாட்டோடு இணைந்ததொன்று. தேர்ச்சிற்பங்களை ஊன்றி நோக்கினால் அவை எங்கள் வரலாற்றை ஓரளவு எடுத்துக் கூறுவனவாக அமையலாம்.

# சமூக இருப்பில் கல்வியின் பங்கு
# Role of Education in Social Stability

**பேராசிரியர் கலாநிதி தி. வேல்நம்பி அவர்கள்**
பீடாதிபதி
முகாமைத்துவக்கற்கைகள் வணிகபீடம்
யாழ் பல்கலைக்கழகம்

அறிமுகம்:

எந்தவொரு நபரும் தனது பிறப்பிலிருந்து அங்கத்துவம் பெறக்கூடிய முதலாவது சமூக அலகு குடும்பம் ஆகும். உடலியல் ரீதியாகவும், உளவியல் ரீதியாகவும் ஆரோக்கியமான பிள்ளைகளுக்கான அடிப்படையாக விளங்கும் பல குடும்பங்கள் சேர்ந்து ஒரு சமூகத்தை உருவாக்குகின்றன. அதாவது தனிப்பட்ட குடும்ப அலகுகள் சமூகத்தின் இருப்புக்குப் பங்களிப்புச் செய்கின்றன. இன்னொரு வகையில் கூறின் நிலையான குடும்ப அலகுகளைக் கட்டியெழுப்புவதன் மூலம் நிலையான சமூகத்தை உருவாக்க முடியும். அதாவது ஒவ்வொரு குடும்பத்தினதும் நன்னிலையானது (The well being of each family) சமூக நன்னிலையை (Well being of Society) கட்டியெழுப்புகின்றது. இவ்வகையில் சமூக அமைப்பினை நாம் காண முடிகிறது.

ஒரு சமூகம் தனக்குரிய கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்களைக் கொண்டு ஒரு கட்டமைப்புக்குள் நீடித்து நிலைத்துநின்று செயற்படுவது சமூக இருப்பு (Social Stability) என்று அழைக்கப்படுகிறது. நவீன தொழில்நுட்ப நாகரீக மாற்றங்களுக்கேற்ப தேவையான நெகிழ்வுத்தன்மையினைப் பின்பற்றுகின்றபோதிலும் சமூகக் கட்டமைப்பின் ஆணிவேர் ஆட்டம் காணாதவகையில் முன்நோக்கிய முறையில் எமது செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்லுவதே நிலையான சமூக இருப்புக்கு அடிப்படையானதும் அவசியமானதுமாகும். இவ்வடிப்படையில் மனிதன் சமூகமயமாக்கலுக்குள்ளாகின்றான். சமூகமயமாக்கல் என்பது ஒருவன் தான் சார்ந்துள்ள சமூகத்தின் நடத்தைகள், பெறுமாணங்கள், மற்றும் சிந்தனைகளைக் கற்கும் செயன்முறையாகும் (கருணாநிதி. மா, 2008) இதன் மூலம் ஒருவர் தனிப்பட்ட அடையாளத்தைப் பெற்றுக்கொள்வதுடன் தன்னைச் சூழவுள்ள கலாசாரத்தின் நம்பிக்கையினையும் சமூகத்தில் எவ்வாறு நடந்துகொள்ளவேண்டும் என்பதனையும் கற்றுக்கொள்ள முடியும் (Musgrave, 1977)

இவ்விதமாக ஒரு சமூகத்தின் நிலைத்திருப்பில் பல்வேறு காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்ற போதிலும் அதில் கல்வியே பிரதான பங்குவகிக்கின்றது. கல்வி என்பதற்குப் பலவிதமான வரையறைகள் கொடுக்கப்படுகின்றன. "குழந்தையின் உள்ளேயிருக்கும் அறிவாற்றலை மலரச்செய்தல் கல்வியாகும்" (செல்வராசா. மா, 2009). ஆன்மாவுக்குள் இருக்கும் ஆற்றலை வெளிக்கொணர உதவுவதே கல்வி

என்று அரவிந்தரும் பிள்ளையினுள்ளே அடங்கியுள்ள அனைத்து ஆற்றலையும் வெளிக்கொணர்வதே கல்வி என்றும் மகாத்மா காந்தியும் குறிப்பிட்டுள்ளார். தன்னை உணர்தல் கல்வி என்று சங்கரரும் மனிதனுள் ஏற்கனவே அமைந்துள்ள தெய்வீக பூரணத்துவத்தை வெளிக்கொணர்வதே கல்வி என்று விவேகானந்தரும் குறிப்பிட்டுள்ளனர்.

முதியோர் இளையோர் மீது செலுத்தும் செல்வாக்கு கல்வி என றெட்டின் குறிப்பிடுகிறார். இச் செல்வாக்கானது போதனை, ஒழுக்கம், அமைதியான அபிவிருத்தி என்பவற்றோடு தொடர்புடையதாகவும் உடல், அறிவு, அழகியல், சமூகம், ஆத்மீகம் என்பவற்றில் தாக்கத்தை ஏற்படுத்துவதாகவும் இருக்கும். எனவே இத்தகைய வரையறைகளிலிருந்து கல்வி என்பது தனிமனித விருத்தியினூடாக சமூகத்தை நோக்கியதாகவும் சமூகத்தின் நிலைத்திருப்புக்குப் பங்களிப்பு செய்வதாகவும் இருப்பதை உணர முடிகின்றது.

## கல்வியின் வகைகள்
## (Types of Education)

நாம் பல்வேறுவிதமான கல்வியைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கின்ற போதும் இதனைப் பொதுவாகப் பின்வருமாறு வகைப்படுத்திக் கொள்ள முடியும்..

1. முறை சார்ந்த கல்வி — Formal Education
2. முறை சாராத கல்வி — Informal Education

இங்கு முறையில் கல்வி என்ற ஒரு வகுதியினையும் சேர்த்து கல்வியை மூன்றாக வகைப்படுத்துவதுமுண்டு. ஆயினும் தேவை கருதி மேற்குறிப்பிட்ட இரு வகையினையுமே இக்கட்டுரை ஆராய்கின்றது.

### 1. முறை சார்ந்த கல்வி
### Formal Education

ஒழுங்குபடுத்தப்பட்ட வகையில் நிறுவனமயப்படுத்தப்பட்ட கல்வி முறைசார்ந்த கல்வி எனப்படுகிறது. இதனைப் பின்வருமாறு வகைப்படுத்திக் கொள்ளமுடியும்.

1. பொதுக்கல்வி அல்லது பாடசாலைக்கல்வி – General Education
2. உயர் கல்வி – Higher Education
3. தொழில் மற்றும் தொழிநுட்பக் கல்வி – Professional and Technical Education

### பாடசாலைக் கல்வி
### General Education

ஒருவனுடைய வாழ்நாளில் / கல்வி கற்கும் காலத்தில் மிக முக்கியமான, மறக்கமுடியாத காலப்பகுதி பாடசாலையில் கல்விபயிலும் காலமாகும். "இளமையிற்

கல்வி சிலையில் எழுத்து" என்பதற்கிணங்க இளம்பருவத்தில் பாடசாலையில் பெற்றுக்கொள்ளும் கல்வியறிவே ஒருவரது எதிர்கால ஏற்றத்துக்கும், உயர்கல்விக்கும் அடிப்படையாக அமைகின்றது. பாடசாலைகளில் பிள்ளைகள் முதலாம் தரத்திலிருந்து பதின்மூன்றாண்டுகள் கல்விக்காகத் தமது காலத்தைச் செலவுசெய்கின்றனர். பாடசாலைகளில் கல்வி மற்றும் இணைபாடவிதானச் செயற்பாடுகளை மாணவர்கள் பயில்கின்றனர்.

கல்வி என்பது ஒருவரது அடிப்படைத் தேவைகளில் ஒன்றாகக் கருதப்படுகின்றது. இதனாலேயே அனைவருக்கும் கல்வி என்ற அடிப்படையில் இலங்கையரசாங்கம் இலவசக்கல்வியை அறிமுகம் செய்துள்ளது. இதன் மூலம் நாட்டின் கல்வியறிவுவீதம் மிகவும் உயர்வாக இருப்பதைக் காணமுடிகின்றது. பாடசாலைகளுக்கென வரையறுக்கப்படும் விதிமுறைகள், கட்டுப்பாடுகள், பாடவிதானங்கள், நேர முகாமைத்துவம் போன்ற நல்லம்சங்களை எமது இளம் சமூகத்தினர் பெற்றுக்கொள்ள முடிகிறது. அத்துடன் வாரநாட்களில் தினமும் காலை குறித்த நேரத்துக்குச் சென்று பிற்பகல்வரை நீண்டநேரம் பாடசாலையில் கற்கும் மாணவர்கள் தமது வாழ்நாளைத் தினமும் ஒரு முறைமையான கட்டுக்கோப்புக்குள் வைத்திருக்கப் பழகிவிடுகின்றனர். இதனால் மாணவர்களது பெற்றோர் / பாதுகாவலர் மற்றும் குடும்ப அங்கத்தவர்களும் தமது தினவாழ்வை முறைமைப்படுத்துகின்றனர். இது நல்ல குடும்ப வாழ்வுக்கும் சிறந்த சமூக உருவாக்கத்துக்கும் வழிவகுக்கின்றது.

ஓரினத்தன்மை (Unity), ஒத்த எண்ணங்கள், உணர்வுகள், வேறுபாடுகளற்ற பழக்கம், புரிந்துணர்வு, நட்பு, அன்பு போன்றவற்றையும் பெற்றுக்கொள்ள முடிகிறது. குறிப்பாகப் பாடசாலைகளில் நடைமுறையிலிருக்கும் சீருடை (Uniform) ஓரினத்தன்மைக்கும், ஏழை, பணக்காரன், அந்தஸ்து என்ற வேறுபாடுகளின்றிப் பழகுவதற்கும் வழிவகுக்கின்றது. அத்துடன் பாடசாலையின் பாடவிதான செயற்பாடுகள் அறிவாற்றலையும் இணைபாடவிதானச் செயற்பாடுகள் (Co-curricular Activities) மென்திறன்களையும் (Soft Skills) வளர்ப்பதற்கு உறுதுணை புரிகின்றன. இத்தகைய செயற்பாடுகள் மூலம் மாணவர்கள் விரும்பியோ, விருப்பமின்றியோ நம்பிக்கைகள் (Beliefs), பெறுமானங்கள் (Values), மனப்பாங்குகள் (Attitudes) மற்றும் நடத்தையியல் அம்சங்களைக் கற்றுக்கொள்ள முடியும். இத்தகைய செயற்பாடுகளினூடாக விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கு, வெற்றி தோல்விகளை எதிர்கொள்ளும் பக்குவம், சகிப்புத்தன்மை என்பவற்றையும் வளர்த்துக்கொள்ள முடியும். இவையே ஒரு நல்ல சமூகச் சிருஷ்டிப்புக்கு உதவுவதாக அமையும்.

மாணவர்களின் குழு வேலைச் செயற்பாட்டுக்கும் (Team Work), தலைமைத்துவத்துக்கும் பாடசாலைச் சூழல் வழிவகுக்கின்றது. குழுக்கற்றல் மற்றும் போட்டி நிகழ்வுகளின்போது ஆண், பெண், வயது வேறுபாடின்றி எல்லோரும் ஒன்றுசேர்ந்து இயங்கும் நிலையை அவதானிக்க முடிகிறது. அத்துடன் பலர் அங்கத்தவராக இருக்கும் குழுவில் ஒருவர் தலைவராக இருப்பார். வழிகாட்டிக் கருமங்களை முன்னெடுத்துச்செல்வதிலும், குழுவின் ஒருமைப்பாட்டைப் பேணுவதிலும் தலைவர் முக்கிய பங்காற்றுவார். இத்தகைய கற்றல் அனுபவங்களே பின்னர்

அவர்களது குடும்பச் செயற்பாட்டுக்கும் ஆக்கபூர்வமான சமூகச் செயற்பாட்டுக்கும் காரணமாக அமைகின்றது. அத்துடன் குழுவிலுள்ளவர்களின் ஆளுமை விருத்தி (Personality Development) சமூக அபிவிருத்திக்கு உறுதுணையாக அமையும்.

பாடசாலைக்கல்வியினூடாகப் பெறக்கூடிய மற்றுமொரு சிறப்பம்சம் மரபுகளையும், வழமைகளையும் பின்பற்றுதலாகும். அதாவது நல்ல பாடசாலைச் சூழலிலே கலாச்சாரம், மரபுகள், வழமைகள், நியமங்கள், சம்பிரதாயங்கள் முதலானவை ஒழுங்குமுறையாகப் பேணப்படுகின்றன. உதாரணமாக தினமும் காலையும், பாடசாலை முடிவடைந்த பின்னும் இறைவழிபாடு, பாடசாலைக் கீதம் ஓதுதல் முறையாகப் பின்பற்றப்படுகின்றன. இவை சமூகத்தில் ஒரு ஒழுங்குமுறையான வரையறைக்குள் வாழ எம்மை வழிப்படுத்துகின்றன. மேலும் பாடசாலையில் மாணவர் - மாணவர் தொடர்புகள் மட்டுமன்றி ஆசிரிய - மாணவ உறவுநிலைகளும் தொடர்புகளும் வலுப்படுத்தப்படுகின்றன. இதனால் அவர்கள் சமூகத்தில் எவ்வித தவறுகளும் செய்யாது உரிய முறையில் வாழும் நிலையினைப் பெறுகின்றார்கள்.

எமது சமூகத்திலுள்ள இளந்தலைமுறையினரைத் தொழிற்சந்தைக்கு (Job Market) ஆயத்தஞ்செய்யும் பாரிய பொறுப்பான பணியினைப் பாடசாலைகளே நிறைவு செய்கின்றன. பல சமூக நிறுவனங்களுக்கும் இவையே அறிமுகஞ் செய்கின்றன. இதனூடாகச் சமூகமயமாக்கல் (Socialization) சமூக அபிவிருத்திக்குப் பங்களிப்புச்செய்தல் போன்றவற்றினூடாகச் சமூக நிலைத்திருப்புக்குப் பங்காற்ற முடியும்.

உயர் கல்வி
**Higher Education**

உயர்கல்வி என்று பார்க்கும்போது பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்கள் முக்கிய இடம்பெறுகின்றன. உயர்கல்வியானது ஒரு நாட்டின் அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்யும் உயர்தொழில் நிபுணர்களையும் கல்விமான்களையும் உருவாக்குகின்றது. பல்கலைக்கழகங்கள் புதிய சிந்தனைகளையும், கண்டுபிடிப்புக்களையும் உருவாக்கி, பராமரித்துப் பரவலாக்கி வருகின்றன. இதன் பொருட்டு ஆராய்ச்சித்துறையில் அதிக கவனம் செலுத்தி முதலீடு செய்து வருகின்றன. உயர் கல்வி வளர்ச்சியானது நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்குப் பெரிதும் பங்களிப்புச் செய்கின்றது.

இந்த அடிப்படையிலேயே அரசு அரச பல்கலைக்கழகங்கள் மட்டுமன்றித் தனியார் பல்கலைக்கழகங்களின் வருகையையும் அனுமதித்து ஊக்குவித்து வருகின்றது. இவ்வாறே தொழில்நுட்பக் கல்லூரிகளும் பல்வேறு கற்கைநெறிகளை வழங்கிவருகின்றன. ஒவ்வொருவரும் தமது தகமைக்கேற்ப பொருத்தமான கற்கை நெறியினைத் தேர்வுசெய்து தொடர்ந்து கற்கக்கூடிய வாய்ப்பு இத்தகைய நிறுவனங்களில் உண்டு.

## தொழில் மற்றும் தொழிநுட்பக் கல்வி
## Professional and Technical Education

தொழில்சார் கற்கைகள் என்றவகையில் கணக்கீட்டு நுட்பங்கள் சங்கம் (Association of Accounting Techniques - AAT), முகாமைக் கணக்கீட்டுச் சான்றிதழ் (Certificate of Management Accounting - CMA), பட்டயக்கணக்காளர் நிறுவனம் (Chartered Institution of Management Accountant), சான்றளிக்கப்பட்ட பட்டயக் கணக்காளர் சங்கம் (Association of Chartered Certified Accountants - ACCA), சந்தைப்படுத்தல் பட்டய நிறுவனம் (Chartered Institute of Marketing - CIM), ஆளணி முகாமைத்துவ நிறுவனம் (Institute of Personnel Management - IPM) போன்ற கற்கைநெறிகளைக் குறிப்பிடலாம். பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி கிடைக்கப் பெறாதவர்கள் இத்தகைய கற்கைநெறிகளினூடாகத் தம்மை வளம்படுத்திக்கொள்ள முடியும். இன்றைய காலங்களில் பல்கலைக்கழகங்களிலோ அன்றேல் வேறு உயர்கல்வி நிறுவனங்களிலோ கல்விபயிலும் மாணவர்கள் சமாந்தரமாகவே இத்தகைய தொழில்சார் கற்கைநெறிகளையும் கற்றுவருவதை அவதானிக்க முடிகிறது. இன்னும் சொல்லப்போனால் பல்கலைக்கழக அனுமதியினைப் பெற்ற சிலர் அவ்வாய்ப்பினை இடைநிறுத்திவிட்டு இத்தகைய தொழில்சார் கற்கைநெறிகளில் நாட்டம் காண்பது விசேடமாகக் குறிப்பிடப்படவேண்டியது. ஏனெனில் தொழிற்சந்தையில் (Job Market) வேலைவாய்ப்பினைப் பெற்றுக்ககொள்ள முடிவதுடன் பெருமளவு வருமானத்தினையும் பெறமுடிகிறது. இக் கற்கைநெறிகள் கணக்கில், முகாமைத்துவம் சார்ந்ததாக இருக்கின்றபோதிலும் பல்துறைசார் மாணவர்களாலும் விரும்பிக் கற்கப்படுகின்றன. இதுவே இத்தகைய கற்கைநெறிகளின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்துகின்றது.

இவ்வாறே தொழிநுட்பரீதியான கற்கைநெறிகளும் சமூகத்தில் முக்கியத்துவம் பெறுகின்றன. தொழிநுட்பக்கல்லூரிகளில் இத்தகைய கற்கைநெறிகள் பலவற்றினை கற்றுக்கொள்ளலாம். அதேநேரம் இன்று மூன்றாம்நிலைக் கல்வி (Territory Education) என்ற அடிப்படையில் பதிவுசெய்யப்பட்ட நிறுவனங்கள் பலவும் கணினி மற்றும் தொழிநுட்பவியல்சார் கற்கைநெறிகளைப் போதித்து வருகின்றன. இந்நிறுவனங்களில் கற்பவர்களில் பலர் அந் நிறுவனங்களிலேயே பணிபுரிகின்ற வாய்ப்பினையும் பெற்றுவருகின்றார்கள். முறைமையான முறையில் பல்கலைக்கழகக் கல்வியைப் பெறமுடியாதவர்கள் தமது தகுதிக்கேற்ப இத்தகைய நிறுவனங்களில் பொருத்தமான கற்கைநெறிகளைத் தெரிவுசெய்துகொள்ள முடியும். குறிப்பாகத் திறந்த பல்கலைக்கழகத்தில் (Open University) பல கற்கைநெறிகள் காணப்படுகின்றன. க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் முழுமையான தேர்ச்சி பெறாதவர்கள் கூட டிப்ளோமாக் கற்கைநெறிகளைத் தெரிவுசெய்து அதனூடாகப் பட்டப்படிப்பையும், பட்டப்பின்படிப்பினையும் பெற்றுக்கொள்ளமுடியும். இந்த விழிப்புணர்வு எமது சமூகத்தில் போதுமானதாக இல்லை. எனவே கல்வியாளர்கள் இத்தகைய வாய்ப்புக்களைப்பற்றி மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் எடுத்துரைக்கவேண்டியது அவசியமானதாகும். இவ்வாறு சமூகத்தில் விழிப்புணர்வு ஏற்படுமாயின் வீதிகள் தோறும் வீணாகநின்று வம்பளக்கும் இளைஞர்களைப் பயனுள்ள வகையில் வலுவூட்டமுடியும். இதுதொடர்பில் கற்றவர்களும் பெற்றோர்களும் ஒன்றுசேர்ந்து செயற்படவேண்டியது அவசியமாகும்.

## முறைசாராக்கல்வி
## Informal Education

முறைசார்ந்த கல்விமுறைகளுக்குள் அனைவரும் உள்வரமுடியாது. குறிப்பாக பாடசாலைக்கல்வியைப் பொறுத்தவரை சிலர் க.பொ.த சாதாரண தரம் வரையே கற்கமுடிகின்றது. இன்னும் சிலர் உயர்தரம் வரை கற்கின்றனர். ஆயினும் எமது நாட்டைப் பொறுத்தவரை ஒரு குறித்த வீதத்தினரே பல்கலைக்கழகத்தில் பல்விபயிலும் வாய்ப்பினைப் பெறுகின்றனர். சிலர் வெளிவாரியாகவும் இன்னும் சிலர் தொழிநுட்பக்கல்லூரி மற்றும் திறந்த பல்கலைக்கழகத்தினூடாக உயர்கல்விபெறும் வாய்ப்பினைப் பெறுகின்றனர். எனவே மொத்த மாணவப்படையின் பெரும்பகுதியினர் கல்விபயிலும் வாய்பினை இழந்தவர்களாகக் கருதப்படுகின்றனர். உண்மையில் இவர்கள் முறைசாராக் கல்வி முறைமைகளுக்குள் தம்மை உள்நுழைத்துக் கொள்ளமுடியும். முறைசாராக்கல்வி என்பதற்குள் தொழிற்கல்வி (Vocational Education), சமுதாயக்கல்வி (Social Education), முதியோர் கல்வி (Adult Education) போன்ற பல்வேறு கல்வி முறைமைகளை குறிப்பிடலாம். தொழிற்கல்வி என்பதற்குள் மரவேலை, உலோக வேலை, ஒட்டுத்தொழில், மின்னியல் வேலை, நீர்க் குழாய் வேலை, இயந்திரம் திருத்துதல் போன்ற பல்வேறு வேலைப்பயிற்சிகளைப் பெற்றுக்கொள்வதுடன் அதன்மூலம் வருமானத்தினையும் உழைத்துக்கொள்ள முடியும். பாடசாலைகளில் கூட இத்தகைய முறைசராக்கல்வி மையங்கள் அமைக்கப்ட்டு செயற்படுத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

## முடிவுரை
## Conclusion

சமூகமயமாக்கல், சமூக நகர்வு, சமூக மாற்றம் போன்றவற்றின் வளர்ச்சிக்கு கல்வி அவசியமாக இருக்கின்றது. மேற்குறித்த மாற்றங்களினூடாகவே மாறுபடும் அம்சங்களுக்கூடாக நிலைத்திருக்கும் சமூகத்தை உறுதிப்படுத்திக்கொள்ள முடியும். எமது நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சேவைத்துறையின் பங்களிப்பே அதிகமாக இருக்கின்றது. இதன்மூலம் நாட்டின் அபிவிருத்தியில் கல்வி குறிப்பிடத்தக்க இடத்தைப் பெறுகின்றது என்பது உறுதிப்படுத்தப்படுகின்றது. தொழில் சார் கற்கைநெறிகளினூடாகப் பல நாடுகள் தம்மை வளம்படுத்தியுள்ளன. குறிப்பாக ஐக்கியராச்சியம், கனடா போன்ற நாடுகளைக் குறிப்பிடலாம். தொழிநுட்ப கல்விவளர்ச்சியினூடாக சீனா, ஜப்பான் போன்ற நாடுகள் பெருமளவு வளர்ச்சியினைக் கண்டுள்ளன. கல்வி மருத்துவம் என்பவற்றின் மூலம் இந்தியா, மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகள் வளர்ச்சியடைந்துள்ளன. எனவே இத்தகைய பல்பரிமாணத் தன்மையின் மூலம் இலங்கை தன்னை வளம்படுத்திக் கொள்ளவேண்டுமாயின் தொடர்ந்து கல்வித்துறையின் வளர்ச்சியில் கூடிய கவனம் செலுத்த வேண்டும்.

# விநாயகர் வடிவங்களும் வழிபாட்டு முறைகளும் தத்துவ நோக்கு

**பேராசிரியர் டாக்டர் மா. வேதநாதன்** M.A., Ph.D தலைவர் இந்துநாகரிகத்துறை
இணைப்பாளர், சைவசித்தாந்த முதுகலை
யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்

**அறிமுகம்**

விநாயகர் வழிபாடு மிகவும் புராதனமானது. தனிப்பெருஞ் சிறப்புடைய இவ்வழிபாடு சிந்துவெளி நாகரிகத்தில் நிலவியதை அறிஞர் குறிப்பிடுகின்றனர். இருக்கு வேதத்தில் விநாயகர் "கணபதி" என்ற சொல்லினால் சுட்டப்பட்டுள்ளார். தேவாரங்களிலும் அவர் "கணபதி" என்ற சொல்லால் சுட்டப்படுவது இங்கு நோக்குதற்குரியது. விநாயகர் வழிபாட்டினைக் "கணபதி வழிபாடு" என்றும் வழங்குவர். விநாயகரைப் பரம்பொருளாகக் கொள்ளும் சமயநெறி "காணாபத்தியம்" எனப்படும். விநாயகரின் திருவடிவங்களும் திருவுருவங்களில் காணப்படும் ஆயுதங்களும் அவர் சக்தியுடன் விளங்கும் திருக்கோலங்களும், அவர் எழுந்தருளியிருக்கும் வாகனங்களும் அவரின் திருநாமங்களும் விநாயகர் வழிபாட்டு முறைகளும் இந்துசமய நம்பிக்கையை மட்டுமன்றி அறிவார்ந்த தத்துவப் பொருளையும் உணர்த்துபவையாக விளங்குகின்றன. அவற்றை எடுத்துக்காட்டுவதாக இக்கட்டுரை அமைகின்றது.

**விநாயகர் வடிவங்கள் பற்றிய மூலங்கள்**

சைவநெறியில் இறை ஒருவரேயாயினும் "நிறுத்திடுவன் நினைத்த உரு நிமலன் தானே" என்ற சித்தாந்த சைவ தத்துவ அடிப்படையில் சிவன் அவ்வப்போது பற்பல வடிவங்கள் கொண்டதை சைவசமய சாத்திர நூல்கள் நன்கு புலப்படுத்து கின்றன. அகோரசிவாசாரியார் பத்ததி பதினாறு வகையான விநாயகர் வடிவங்களைக் குறிப்பிடுகின்றது. ஸ்ரீ தத்துவநிதி என்ற சிற்பநூலில் விநாயகரின் முப்பத்திரண்டு வடிவங்கள் இடம்பெற்றுள்ளன. கணபதி ஹ்ருதயம் என்ற நூல் விநாயகரின் ஐம்பத்தொரு பேதங்களைச் சுட்டுகின்றது. ஸ்ரீ தத்துவநிதி கூறும் விநாயகரின் முப்பத்திரண்டு திருவடிவங்கள் பற்றியும் விநாயகர் திருவுருவம் உணர்த்தும் தத்துவப் பொருள் பற்றியும் முதலில் நோக்கப்படுகின்றது.

**1. பால விநாயகர்**

இவர் குழந்தை வடிவத்தில் உள்ளவர். யானை முகத்தோடும் நான்கு திருக்கரங்களோடும் விளங்குகின்றார் மாம்பழம், வாழைப்பழம், பலாப்பழம் ஆகிய முக்கனிகளையும், கரும்பையும் தனது நான்கு திருக்கரங்களில் ஏந்தியுள்ளார். துதிக்கையில் ஒரு மோதகத்தைத் தாங்கியுள்ளார். இவர் இளம் சூரியனை ஒத்த நிறமுள்ளவர். பால விநாயகர் ஒரே இடத்தில் உட்காராமல் ஓடி விளையாடும் இயல்பினர். ஆரம்ப நிலையில் ஞானத்திற்குச் சலனம் உண்டு என்பதையே இத் திருவடிவம் உணர்த்துகின்றது.

**2. தருண விநாயகர்**

இவர் இளம் பருவத் தோற்றம் உள்ளவர். யானை முகத்தையும் எட்டுத் திருக்கரங்களையும் கொண்டவர். பாசம், அங்குசம், மோதகம், விளாம்பழம், நாவற்பழம், ஒடிந்த கொம்பு, நெற்கதிர், கரும்பு என்பவற்றைத் தனது எண் கரங்களிலும் ஏந்தியுள்ளார். இவர் சிவந்த சூரியனின் நிறம் உடையவர்.

**3. பக்தி விநாயகர்**

இவர் யானை முகத்தையும் நான்கு திருக்கரங்களையும் உடையவர். தேங்காய், மாம்பழம், வாழைப்பழம், சர்க்கரைப் பாயாச பாத்திரம் ஆகியவற்றைத் தனது நாற்கரங்களிலும் ஏந்தியவராகக் காட்சியளிப்பார். இவர் சரத்கால சந்திரனைப் போன்ற தூயவெண்மையான நிறம் உடையவர்.

**4. வீர விநாயகர்**

இவர் யானை முகத்தையும் பதினாறு திருக்கரங்களையும் உடையவர். கத்தி, வாள், வில், அம்பு, கேடயம், சம்மட்டி, தடி, அங்குசம், பாசம், சூலம், பரசு, குந்தம், வேதாளம், கதை, கொடி, சக்கரம் ஆகிய பதினாறையும் பதினாறு திருக்கரங்களில் ஏந்தி நின்ற கோலத்தில் பதினாறு பேறுகளைத் தருபவராக விளங்குகின்றார். உணவுப் பொருட்கள் இல்லாமல் ஆயுதங்கள் மட்டும் ஏந்தியுள்ள வீரத்திருவுருவம் இது ஒன்றே ஆகும்.

**5. சக்தி விநாயகர்**

இவர் யானை முகத்தையும் எட்டுக் கரங்களையும் உடையவர். தனது எட்டுக் கரங்களிலும் கிளி, மாதுளம்பழம், தாமரை, மணி, பொன்னால் செய்த நீர்ப் பாத்திரம், அங்குசம், பாசம், கல்பசாத்திரம் (மூப்பு வராமல் செய்யும் மருத்துவ நூல்) ஏந்தியவராய் விளங்குகின்றார். பச்சைத் திருமேனியுடைய தேவியை இடுப்பில் கைகொடுத்துத் தழுவிக் கொண்டுள்ள நிலையில் காட்சி தருகின்றார். இவர் அந்திவானம் போன்ற செம்மை நிறமுடையவர்.

**6. துவிஜ விநாயகர்**

நான்கு திருக்கரங்களிலும் முறையே புஸ்தகம், அட்சமாலை, தண்டம், கமண்டலம் இவற்றைத் தரித்தவர். நான்கு யானை முகங்களை உடையவர் மின்னற் கொடிபோல விளங்குகின்ற கைவளையல்களை உடையவர் சந்திரன் போல் வெண்மையானவர்.

**7. சித்தி விநாயகர்**

இவர் மாம்பழம், பூங்கொத்து, கரும்புத்துண்டு, எள்ளுருண்டை, பரசு என்பவற்றைத் தனது ஐந்து கரங்களில் தரித்தவரும், பொன்கலந்த பசுமை நிறமுடையவருமாக விளங்குகின்றார்.

**8. உச்சிஷ்ட விநாயகர்**

நீலோற்பலம், மாதுளம்பழம், வீணை, நெற்கதிர், அட்சமாலை இவற்றைத் தரித்தவரும், நீல நிறத்திருமேனி உடையவருமாக விளங்குபவர். பிறிதொரு நிலையில் இவர் பெண்ணின் யோனியில் துதிக்கையை வைத்தவராக காம மோகிதராகவும், நீலவர்ணம் உடையவராகவும் விளங்குகின்றார். ஊச்சிஷ்டம் என்பதற்கு ஒருவர் உபயோகித்த பின் ஒதுக்கிய அசுத்தமான பொருள் என்பது கருத்து ஆகும். எச்சில் என்றும் அர்த்தம் உண்டு. சுத்தமான நிலையை மட்டுமன்றி அசுத்தமான நிலையினையும் கடந்து நிற்கும் நிலையே எமது வாழ்வின் குறிக்கோளாக இருக்க வேண்டும். அசுத்தமான பொருள்களும், செடி, கொடிகளுக்குப் பசளையாகி எமக்கு நலன் பயக்கின்றது. இவ்வாறு "அழுக்கை அழுக்காகக் கருதக் கூடாது அவையும் நன்மை செய்யும்" என்ற தத்துவத்தை உச்சிஷ்ட விநாயகர் வடிவம் சுட்டி நிற்கின்றது. சிற்றின்பம் தெய்வீக நோக்குடன் அமையும்போது பேரின்பம் பெறப்படும் என்பதும் இத்திருவடிவத்தின் நுண்பொருள் ஆகும்.

**9. விக்ன விநாயகர்**

சங்கு, கரும்புவில், புஷ்பபாணம், கோடரி, பாசம், சக்கரம், கொம்பு, மாலை, பூங்கொத்து, பாணம் முதலியவற்றோடு கூடிய திருக்கரங்களையுடையவராகவும், ஆபரணங்களை நிரம்பத் தரித்தவராகவும் பொன்மேனியுடையவராக விளங்குகின்றார்.

**10. ஷிப்ர விநாயகர்**

தந்தம், கற்பகக் கொடி, பாசம், ரத்ன கும்பம், அங்குசம் இவற்றை ஏந்தியவர், செவ்வரத்தம்பூப் போன்ற அழகிய மேனியர். செந்நிறமானவர்.

**11. ஹேரம்ப விநாயகர்**

அபயம், வரதமாகிய கைகளையுடையவர். பாசம், தந்தம், அட்சமாலை, மாலை, பரசு, சம்மட்டி, மோதகம், பழம் இவற்றைத் தாங்கியவர். சிங்க வாகனத்தில் ஏறியவர். யானைமுகம் ஐந்துடையவர். பசுமைகலந்த கருமைநிறம் உடையவர்.

**12. இலட்சுமி விநாயகர்**

எட்டுக் கைகளிலும் கிளி, மாதுளம் பழம், கலசம், அங்குசம், பாசம், கற்பகக் கொடி, கட்கம், வரதம் இவற்றையுடையவர். அமுதப் பிரவாகம் போன்ற வெண்மை நிறத்தோடு நீலத் தாமரைப்பூவை ஏந்திய இருபெருந் தேவிமார்களோடு திகழுபவர்.


**13. மஹா விநாயகர்**

மாதுளம்பழம், கதை, கரும்பு, வில், சக்கரம், தாமரை, பாசம், நீலோற்பலம், நெற்கதிர், தந்தம், ரத்னகலசம் இவற்றைத் திருக்கரங்களில் தாங்கியவர். செங்கதிர் போன்ற நிறம் உடையவர். முக்கண்ணர், பிறைமுடியர், மடிமீது எழுந்தருளியிருக்கின்ற - தாமரையை ஏந்திய தேவியாற் சுவையோடு தழுவப் பெற்றவர்.

**14. விஜய விநாயகர்**


பாசம், அங்குசம், தந்தம், மாம்பழம் இவைகளைத் தரித்தவர். பெருச்சாளி வாகனத்தில் ஏறியிருப்பவர். செந்நிறமானவர்.

# கணபதியின் ஆயுதங்கள்




15


16



17


18


19


20


21


22


23


24


25


26


27


28


29

**15. நிருத்த விநாயகர்**

இவரைக் கூத்தாடும் பிள்ளையார் என அழைப்பர். மோதிரங்களணிந்த விரல்களையுடைய கைகளால் பாசம், அங்குசம், அபூபம், கோடரி, தந்தம் என்பவற்றைத் தரித்தவர். பொன்போன்ற நிறமுடைய திருமேனியர். கற்பக விருட்சத்தினடியில் எழுந்தருளியிருப்பவர்.

**16. ஊர்த்துவ விநாயகர்**

நீலப்பூ, நெற்பயிர், தாமரை, கரும்பு வில், பாணம், தந்தம் இவற்றையுடையவர். பொன்வண்ண வண்ணர், பச்சைநிற மேனியோடு விளங்குகின்ற தேவியைத் தழுவியிருப்பவர்.

**17. ஏகாட்சர விநாயகர்**

செந்நிறமானவர், செம்பட்டாடையர், செம்மலர், மாலையர், பிறை முடியர், முக்கண்ணர், குறுந்தாளர், குறுங்கையர், மாதுளம்பழம், பாசம், அங்குசம், வரதம் இவை தாங்கிய கரங்களையுடையவர். யானைமுகவர். பதுமாசனத்திருப்பவர். பெருச்சாளி வாகனர்.

**18. வர விநாயகர்**

செவ்வண்ணர், யானைமுகவர், முக்கண்ணர், பாசம், அங்குசங்களைத் தரித்தவர், தேன்நிறைந்த கபாலத்தை உடையவர், பிறைமுடியர்.

**19. திரயாக்ஷர விநாயகர்**

அசைகின்ற செவிகளாகிய சாமரையணிந்தவர். பொன்னிறமானவர், நான்கு கரங்களையுடையவர், பாசம், அங்குசம், தந்தம், மாம்பழம் இவற்றைத் தாங்கியவர். துதிக்கை நுனியில் மோதகம் உடையவர்.

**20. க்ஷிப்ரபிரசாத விநாயகர்**

பாசம், அங்குசம், கல்பலதை, மாதுளம்பழம், தாமரை, தருப்பை, விடரம் இவற்றைத் தரித்தவர். திருவாபரணங்களை அணிந்தவர். பேழை வயிற்றையுடையவர்.

**21. ஹரித்திரா விநாயகர்**

மஞ்சள் நிறமானவர், நான்கு கரங்களையுடையவர். அவற்றில் பாசம், அங்குசம், தந்தம், மோதகம் இவற்றைத் தரித்திருப்பவர். பக்தர்களுக்கு அபயமளிப்பவர்.

**22. ஏகதந்த விநாயகர்**

பேழை வயிற்றுடன் நீலமேனியர் கோடரி, அட்சமாலை, லட்டு, தந்தம் இவற்றையுடையவர்.

**23. சிருஷ்டி விநாயகர்**

பாசம், அங்குசம், தந்தம், மாம்பழம் இவற்றைக் கரங்களில் ஏந்தியவர். பெருச்சாளி வாகனத்தையுடையவர். சிவந்த மேனியர்.

**24. உத்தண்ட விநாயகர்**

நீலம், தாமரை, மாதுளம்பழம், கதை, தந்தம், கரும்புவில், ரத்ன கலசம், பாசம், நெற்கதிர், மாலை இவற்றையேந்திய பத்துக்கைகளை உடையவர். அழகிய தாமரைப்பூவை ஏந்திய பச்சைமேனியாளாகிய தேவியால் தழுவப் பெற்றவர். சிவந்த மேனியுடையவர்.

**25. ரணமோசன விநாயகர்**

பாசம், அங்குசம், தந்தம், நாவற்பழம், இவற்றைத் தரித்தவர், வெண்பளிங்கு போன்ற மேனியர் செந்நிறப் பட்டாடையுடுத்தியவர்.

**26. துண்டி விநாயகர்**

அட்சமாலை, கோடரி, ரத்னகலசம், தந்தம் இவற்றை ஏந்தியவர்.

**27. துவிமுக விநாயகர்**

தந்தம், பாசம், அங்குசம், ரத்ன பாத்திரம் இவற்றைக் கையில் ஏந்தியவர். பசுநீல மேனியர் செம்பட்டாடையும் ரத்தின கிரீடமும் அணிந்தவர். இருமுகம் உடையவர்.

**28. மும்முக விநாயகர்**

வலது கைகளில் கூரிய அங்குசம், அட்சமாலை, வரதம் இவற்றை உடையவர். இடது கைகளில் பாசம், அமுத கலசம், அபயம் இவற்றை உடையவர். பொற்றாமரையாசனத்தின் நடுப்பொகுட்டில் மூன்று முகங்களோடு எழுந்தருளியிருப்பவர். புரசம் பூப்போன்ற சிவந்த நிறம் உடையவர்.

**29. சிங்க விநாயகர்**

வீணை, கற்பகக் கொடி, சிங்கம், வரதம் இவற்றை வலது கைகளில் தாங்கியவர். தாமரை, ரத்னகலசம், பூங்கொத்து, அபயம் இவையமைந்த இடது கைகளையுடையவர். வெண்ணிறமான மேனியர், யானைமுகர், சிங்கவாகனத்தில் எழுந்தருளியிருப்பவர்.

**30. யோக விநாயகர்**

யோக நிலையில், யோக பட்டம் தரித்துக்கொண்டு, இளஞ்சூரியன் போன்ற நிறத்தோடு, இந்திரநீலம் போன்ற ஆடையை உடுத்திக் கொண்டு, பாசம், அட்சமாலை, யோகதண்டம், கரும்பு இவற்றை ஏந்தி இருப்பவர்.

**31. துர்க்கா விநாயகர்**

சுட்ட பசும்பொன்னிறம், எட்டுக்கை, பெரியமேனி, அங்குசம், பாணம், அட்சமாலை, தந்தம் இவைகளை வலது கைகளில் ஏந்தியவர். பாசம், வில், கொடி, நாவற்பழம் இவைகளை இடது கைகளில் உடையவர், செந்நிற ஆடையர்.

**32. சங்கடஹர விநாயகர்**

இளஞ்சூரியன் போன்ற நிறத்தோடு, இடப்பக்கத் தொடையில் சக்தியை உடையவரான விளங்குகின்றார். சத்தி பசிய மேனியளாக நீலப்பூவினை ஏந்தியவளாக இருப்பாள். வலது கையில் அங்குசம், வரதம் உடையவர். இடது கையில் பாசம், பாயச பாத்திரம் ஏந்தியவர். செந்தாமரைப் பீடத்தில் நிற்பவர். நீலநிறமான ஆடையணிந்தவர்.

மேலே காட்டப்பட்டுள்ள விநாயகரின் திருவடிவங்களை நோக்கும்போது அவர் பொதுவாக யானை முகம் கொண்டவராகவும் ஒன்று,. இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து என்ற எண்ணிக்கையுடைய திருமுகங்களை உடையவராகவும், நான்கு, ஐந்து, ஆறு, எட்டு, பத்து, பன்னிரண்டு, பதினாறு என்ற திருக்கரங்களைக் கொண்டவராகவும், அவற்றில் வெவ்வேறு ஆயுதங்களைத் தரித்துள்ளவராகவும், செம்மை, வெண்மை, மஞ்சள், கருநீலம், நீலம் ஆகிய நிறங்களை உடையவராகவும், தேவி அற்ற திருமேனியராகவும், ஒரு தேவியை உடையவராகவும், இரு தேவியர்களுடன் விளங்குபவராகவும் எலி, சிங்கம் ஆகிய வாகனத்தில் எழுந்தருளி இருப்பதாகவும் விளங்குகின்ற தத்துவநிலை தெரிய வருகின்றது. மேலும், விநாயகர் படிமங்கள் நின்ற கோலத்திலும் அமர்ந்த கோலத்திலும் ஆடற் கோலத்திலும் அமையும் மெய்மையும் புலப்படுகின்றது. நின்ற கோலத்தில் இயற்றும்போது ஆபங்கம் அல்லது சமபங்கத்தில் விநாயகரின் படிமம் அமைதல் வேண்டும். அமர்ந்த கோலத்தில் அமைக்கும்போது உடலையும் தலையினையும் நேரியதாக அமைத்து வலது காலை ஆசனத்தில் தொடையுடன் சேர்த்து, மடக்கி, ஊன்றி, இடது காலைக் கிடத்தியதாயிருத்தல் வேண்டும். இல்லங்களில் வைத்து வழிபடுவதற்கும்? கோயில்களில் பிரதிட்டை செய்வதற்கும் அமர்ந்த விநாயகர் கோலப்படிமமே ஏற்றதாகும். உற்சவங்களுக்கு அமர்ந்த கோலம் ஏற்றுக் கொள்ளப் பட்டிருப்பினும் நின்ற கோலமுடைய விநாயகரே விசேடமென்பது தத்துவமாகும்.

**விநாயகரின் திருவுருவத் தத்துவம்**

விநாயகர் திருவுருவத்தின் தத்துவ நிலை பரமரகசியமானதாகும். அவரின் தத்துவத்தையும் அவரின் வீரதீரச் செயல்களின் உட்பொருளையும் சிறப்பாகப் புலப்படுத்துவது "விநாயக புராணம்" ஆகும். ஔவையார் பாடியருளிய "விநாயகர் அகவல்" விநாயகர் உருவம் பற்றியும் அவ்வுருவம் சுட்டும் தத்துவப் பொருளையும் விளக்கி நிற்கும் சைவத்தமிழ் இலக்கியமாகும். இவ்விலக்கியத்தில் விநாயகரின் திருவுருவத்தில் சிலம்பு அணிந்து விளங்கும் திருவடிகள், பொன்னால் செய்யப்பட்ட இடைக்கொடி, பெருவயிறு, ஒற்றைக்கொம்பு, சிவந்த குங்குமப் பொட்டு, ஐந்து கரங்கள், அங்குசமும் பாசமும் தரித்த கைகள், நீலமேனி பெரியவாய், நான்கு திருத்தோள்கள், சூரியன், சந்திரன், அக்கினி ஆகிய மூன்று திருக்கண்கள், கன்ன மதம், கைம்மதம், கோசமதம் என்னும் மதங்களைப் பொழிதலால் உண்டாகும் தழும்புகள் இரண்டு பெரிய காதுகள், பொன்னால் செய்யப்பட்ட கிரீடம், திரண்டு மூன்று வடமாக விளங்கும் பூநூல், பெருச்சாளி வாகனம் என்பன திகழ்வதையும் அவர் சொல்லும், பொருளும் கடந்த தத்துவப் பொருளாக விளங்குவதையும் தன் அடியவர்களுக்கும் தமது தத்துவப் பெருநிலையைக் கொடுத்து ஆட்கொள்ளும்

பேரருட் திறத்தையும் தத்துவார்த்த ரீதியாக விளக்குகின்றது. இதனை ஔவையார் விநாயகர் அகவலில்,

"சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பல இசைபாடப்
பொன் அரை ஞாணும் பூந்துகில் ஆடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும் பாரக் கோடும்
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீலமேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதம் கடந்த துரிய மெய்ஞ்ஞான
அற்புதம் நின்ற கற்பகக் களிறே
முப்பழம் நுகரும் மூஷிக வாகன
..........................................................................
தத்துவ நிலையைத் தந்தெனை ஆண்ட
வித்தக விநாயகர் விரைகழல் சரணே"

என்று குறிப்பிடுவதால் அறியலாம் திருமூலரும் விநாயகரின் திருவுருவத்தை "ஐந்து கரத்தனை யானை முகத்தனை இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை" என்று திருமந்திரத்தில் குறிப்பிடுகின்றார். அருணந்தி சிவாச்சாரியரும் விநாயகரின் திருவுருவத் தத்துவத்தை,

"ஒரு கோட்டன் இருசெவியன் மும்மதத்தன்
நால்வாய்ஐங் கரத்தன் ஆறு
தருகோட்டம் பிறையிதழித் தாழ்சடையான்
தரும் ஒருவா ரணத்தின் தாள்கள்"

என்று மொழிவர். விநாயகர் தனது திருக்கையொன்றில் மோதகம் ஏந்தி விளங்குவதை ஆதி சங்கரர் தனது கணேசபஞ்சரத்தினத்தின் முதற் பாடலில் "முதாகராத்த மோதகம்" என்று சுட்டுவதால், அறிய முடிகின்றது.

"ஓம்" எனும் பிரணவப் பொருளாக விளங்கும் விநாயகரின் திருவுருவ உறுப்புக்கள் உணர்த்தும் மறைஞான தத்துவப் பொருளை இங்கு நோக்குவோம்.

**ஐந்து கரங்களின் தத்துவம்**

விநாயகர் நான்கு கரங்களுடன் தும்பிக்கையையும் சேர்த்து ஐந்து கரங்கள் உடையவராக விளங்குகின்றார். பாசம் தரித்துள்ள கரம் படைத்தற்றொழிலைக் குறிக்கின்றது. அங்குசம் ஏந்திய கரம் அவரின் அழித்தற்றொழிலை அறிவிக்கின்றது. உயிர்களுக்கு அபயம் அளித்துக் காக்கும் அபயகரம் அவரின் காத்தற்றொழிலைச் சுட்டி நிற்கின்றது. மோதகம் ஏந்தி நிற்கும் வலதுகரம் உயிர்களுக்கு அருள்புரியும் அருளற்றொழிலைப் புலப்படுத்துகின்றது.

தும்பிக்கை எனப்படும் துதிக்கை உறு உணர்ச்சி, மணம் அறிதல், உணவை எடுத்தல் என்ற முத்திறங்களை உடையது. அத்துதிக்கை காட்டியும் மறைத்தும் நிற்கும் திரோதானம் ஆகிய மறைப்புத் தொழிலை உணர்த்தி நிற்கின்றது. இங்ஙனம் விநாயகரின் ஐந்து திருக்கரங்களும் படைத்தல், அழித்தல், காத்தல், அருளல், மறைத்தல் என்ற ஐந்து தொழிலுக்கும் அவரே அதிபதி என்பதையும், இதனால் அவர் அளவில் ஆற்றல் உடையவராக விளங்குகின்றார் என்பதையும் உணர்த்தி நிற்கின்றன.

**யானை முகத்தின் தத்துவம்**

விநாயகர் யானை முகம் உடையவராக விளங்குவது. அவரே "ஓம்" என்ற பிரணவப் பொருள் என்பதைச் சுட்டி நிற்கின்றது. அவர் ஓங்கார வடிவினன் என்பது, அவரின் அட்டோத்திர சத நாமங்களில் "ஓங் காராய நம" என்று அவர் துதிக்கப்படுவதால் உணரலாம். யானைக்கு நினைவு வன்மை, காண்டல், கேட்டல், ஊறு, ஒன்றையும் ஒரு காலத்தும் மறவாமை, மிக்க வலிமை உடைமை, அளப்பரும் சாந்தமுடைமை, இதம் செய்பவர்களுக்கு வசமாய் உதவுவது ஆகிய இவை அருங்குணங்களாக உள்ளன. அதனாலேயே இக்குணங்களெல்லாம் ஒருங்கே அமைந்த விநாயகருக்கு யானைமுகம் அமைந்து விளங்குகின்றது.

**கொம்புகளின் தத்துவம்**

விநாயகரின் திருமுகத்தை நோக்கும்போது ஒரு பக்கம் யானைத் தந்தமாகிய கொம்பு காணப்படுகின்றது. இது ஆண்வடிவின் அடையாளமாகும். மறுபக்கம் யானைத்தந்தமாகிய கொம்பு காணப்படவில்லை. இந்நிலை பெண்வடிவைச் சுட்டி நிற்கின்றது. இந்நிலையானது விநாயகர் ஆண்பாலா பெண்பாலா என்று கேட்பவர்களுக்கு அவர் எப்பாலுங் கடந்த அப்பாலுக்கப்பாலாய் நிற்கும் இயல்பினர் என்ற தத்துவத்தை உணர்த்தி நிற்கின்றது. ஒடிந்த கொம்பு அபரஞானமாகிய விந்துவைக் குறிக்கும். மற்றைய ஒற்றைக் கொம்பு இறைவனை உணர்வதற்கு வாயிலாகவுள்ள பரஞானத்தைச் சுட்டி நிற்கின்றது. விநாயகரின் திருவுருவத்தில் காணப்படும் கொம்புகளைப் பதிஞானம், பாசஞானம் என்று கூறுதலும் உண்டு. வலது கொம்பாக விளங்கும் ஒடிக்கப் பெற்ற கொம்பு பாசஞானம் ஆகும். பாசஞானம், உணர்வரிய கலைஞானமாகிய சிவஞானத்திற்கு வாயிலாக விளங்கும் தன்மையது ஆகும். அதன் காரணமாகவே அது பாரதம் எழுத உதவிய எழுத்தாணியாக உதவியது. இடது கொம்பு பதிஞானத்தைச் சுட்டிநிற்கின்றது. அதனாலேயே அது விநாயகரைப் பொருந்திப் பிரிவின்றி இருக்கின்றது.

**மூன்று கண்களின் தத்துவம்**

சூரியன், சந்திரன், அக்கினி என்ற முச்சுடர்களையும் கண்களைக் கொண்டு அவற்றிற்கு ஒளியைக் கொடுத்து நிற்பவர் விநாயகர் என்ற தத்துவத்தை அவரின் மூன்று கண்கள் சுட்டி நிற்கின்றன. பகலில் சூரியன் என்ற கண்ணாலும், இரவில் சந்திரன் என்ற கண்ணாலும் அக்கினி என்ற கண்ணாலும் எந்நேரமும் அறியும் ஆற்றல் உடையவர் என்பதே விநாயகரின் மூன்று கண்கள் புலப்படுத்தும் தத்துவமாகும்.

**மும்மதம் என்பதன் தத்துவம்**

விநாயகர் அறிவு, இச்சை, தொழில் என்ற மூன்றும் உடையவர் என்பது மும்மதம் என்ற சொல்லால் சுட்டப்படும். உவமையிலாக் கலைஞானம், உணர்வரிய மெய்ஞ்ஞானம், திருப்பெருகு சிவஞானம் என்ற மூன்று ஞானங்களும் மும்மதங்களாக சுட்டப்பெறுவதில் உண்டு. இதனடிப்படையில் இந்த மூன்று ஞானங்களையும் உணர்த்துகின்றவர் விநாயகர் என்பதே மும்மதம் என்பதன் தத்துவப் பொருளாகும்.

**பெரு வயிற்றின் தத்துவம்**

விநாயகரின் பெருவயிறானது (பேழை வயிறு) எல்லா உலகங்களும் தம்முள் அடங்கியுள்ளன என்ற தத்துவத்தைச் சுட்டி நிற்கின்றது.

**பாம்பாபரணத்தின் தத்துவம்**

விநாயகர் பாம்பை ஆபரணமாக அணிந்து விளங்குவது அவரின் திருவுருவத்தில் குண்டலினி சக்தியின் தரிசனத்தைக் காட்டி நிற்கின்றது. பாம்பு குண்டலினி சத்தியின் குறியீடாக விளங்குவது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். இங்கு “இருத்தியே நாகரூபம்” என்று குறிப்பிடுவது நோக்குதற்குரியது. இருத்தி என்பதற்கு நல்ல செல்வம், ஐஸ்வரியம், மேலாந்தன்மை என்பது பொருளாகும். இதனடிப்படையில் நோக்கும்போது இவைகளை உடையவர் விநாயகர் என்பது மட்டுமன்றி அடியவர்களுக்கு அவற்றைத் தருபவர் விநாயகர் என்பதையும் அவர் அணிந்துள்ள பாம்பாபரணம் புலப்படுத்துகின்றது. விநாயகரின் பூநூலும் அரைஞாணும் பாம்பாகவும் விளங்குவது உண்டு.

**பிறை சூடியிருப்பதன் தத்துவம்**

விநாயகர் பிறை சூடியிருப்பது அறியாமை அகன்று மெய்ஞ்ஞானம் கைவரப்பெற்ற உயிர்களை உயர் நிலைக்கு உயர்த்தி உய்விப்பவர் என்பதையும், அவர் ஞானமே வடிவினர் என்பதையும் உணர்த்துகின்றது.

**பூநூல் அணிந்திருப்பதன் தத்துவம்**

விநாயகர் பூநூல் அணிந்துள்ளமை, அவர் பிரம்ம ஞான உபதேசத்திற்குரிய பிரம்மஞானி என்பதையும், அவர் முப்புரிநூல் தரித்துள்ளமையானது பிரம்மா, விஷ்ணு, உருத்திரன் என்ற முப்பெரும் கடவுளரும் அவருள் உறைகின்றனர் என்ற பெரும் தத்துவத்தையும் சுட்டிநிற்கின்றது. எங்கும் நிறைந்த அக்கினி வடிவானவர் என்பதையும் சுட்டிநிற்கின்றது.

**மோதகம் ஏந்தியிருப்பதன் தத்துவம்**

விநாயகர் மோதகம் ஏந்திய திருக்கையானது அனைத்து உலகங்களும் அவ்வுலகத்திலுள்ள அனைத்துப் பொருள்களும் விநாயகரிடத்தில் அடங்கியுள்ளன என்பதை உணர்த்துகின்றது. மோதகம் பூரணப் பொருளின் ஓர் அடையாளமாகும். மேலும், அடியார்கள் பசுஞானத்தைக் கவளமாக மோதகவடிவில் படைக்கின்றன ரென்பதையும், அவர் அதனை உண்டு தமது பேழை வயிற்றைத் திறந்து சிவஞானத்தை அவர்களுக்கு வழங்குகின்றார் என்பதையும் உணர்த்தவே கவள

உணவாகிய மோதகத்தை அவர் கையில் கொண்டு காட்சி தருகின்றார் என்பது தத்துவமாகும். மேலும், விநாயகரின் திருக்கரத்தில் காணப்படும் மோதகம் அவருக்கு மோதகம் மீதுள்ள விருப்பத்தைப் புலப்படுத்துகின்றது. அவருக்கு மோதகம் படைத்து வழிபட்டால் அவ்வடியார்களுக்கு அவர் பேரின்பமாகிய முக்திப் பேற்றினைக் கொடுப்பார் என்பதை உணர்த்தவே ஆதிசங்கரர் தனது கணேச பஞ்சரத்தினத்தில் நுட்பமாக "முதாகராத்த மோதகம் ஸதாவி முத்தி சாதகம்" என்று அவரைப் பாடியுள்ளார் எனலாம்.

**திருத்தாள்களின் தத்துவம்**

விநாயகரின் திருவுருவமும் திருத்தாள்களும் ஞானத்தின் அடையாளங்களாகும். விநாயகர் ஞானக் குழந்தையாக விளங்குவதை "ஞானக் கொழுந்து" என்ற திருமந்திரக் குறிப்பால் அறியமுடிகின்றது. சிவபெருமானை ஞானத் திருவுருவாகக் காட்டும் குமகுருபர அடிகள் அவரின் திருவடிகளும் ஞானம் என்பதைச் சுட்ட "ஞானம் திருவடி" என்றே குறிப்பிடுகின்றார். தத்துவ நோக்கில் உயிர்களைப் பற்றி நிற்கும் மும்மலங்களை இயக்கி அருமையின்பத்தை அளிப்பது ஞானம் ஆகும். இந்த ஞானம் ஏற்பட்டதும் உயிர்கள் விளக்கம் பெறுகின்றன என்பது சைவ தத்துவ முடிவாகும். இவ்வகையில் உயிர்களை உய்வித்து அவ்வுயிர்களுக்குப் பேரின்பப் பேற்றை அளிக்கும் சித்தாந்த சைவ தத்துவத்தைச் சுட்டி நிற்பதாக விநாயகரின் திருத்தாள்கள் விளங்குகின்றன.

**விநாயகர் ஏந்தியுள்ள ஆயுதங்களின் தத்துவம்**

விநாயகர் பிரணவ தத்துவ வடிவமாவார். அவர் தமது திருக்கரங்களில் பல வகையான ஆயுதங்களை ஏந்தியவராக விளங்குகின்றார். (ஆயுதங்களின் விபரம் காட்டப்பட்டுள்ளது.) அவ்வாயுதங்கள் நல்வர்களைக் காப்பாற்றவும், தீயவர்களை அழிக்கவும் தம்மை வழிபடுகின்ற அடியவர்களின் இடையுறுகளைப் போக்கவும் பயன்பட்டதை விநாயகரின் தெய்வீக வரலாறு பற்றிய கதைகள் நன்கு புலப்படுத்து கின்றன.

தனது அடியவர்களுக்கு ஆன்மீக அழகுப் பொருட்களாகவும், அபயம் அளிக்கும் கருவிகளாகவும் காட்சி அளிக்கும் அவ்வாயுதங்கள் தீயவர்களுக்கு அச்சத்தைக் கொடுப்பனவாக விளங்குகின்றன.

விநாயகர் தனது திருக்கரங்களில் ஏந்தியுள்ள ஆயுதங்களைக் கூர்ந்து நோக்கினால், அவர் வாழ்வில் வெற்றியீட்டித் தரும் வீரம்மிகு கடவுளாக விளங்குவது புலப்படுகின்றது. விநாயகர் தனது திருக்கரங்களில் ஏந்தி நிற்கும் ஆயுதங்கள் அவர் ஒரு வெற்றித் தெய்வம் என்ற விநாயக தத்துவத்தைப் புலப்படுத்துகின்றது. விநாயகர் தனது திருக்கரங்களில் ஏந்தி நிற்கும் ஆயுதங்கள் சுட்டும் தத்துவப் பொருளை ஈண்டு நோக்குவோம்.

பாசம்

இது விநாயகருக்குரிய சிறப்பான ஒரு போர்க் கருவியாகும். கயிறு என்றும் இதனை வழங்குவர். தீயவர்களின் கை கால்களைக் கட்ட இது பயன்படுகின்றது. இது மூன்று வடமாகவுள்ள கயிற்றை வளைத்துப் பிடித்த அமைப்பாகும். எளிதில் அவிழக்கூடிய முடிச்சாக முறுக்கி இதனை அமைப்பர். சுருக்கு இடாமல் வளையமாகவும் இது அமைதல் உண்டு. விநாயகருக்கு சிறப்பான ஆயுதமாக அமையும் நாகமே, பாசமாக அமைவதும் உண்டு. இதனை "நாகபாசம்" என்பர். இது நான்கு வகைப்படும். யானையைப் பாசத்தால் கட்டுவது போல் ஆன்மாக்களின் ஆணவ மலத்தைக் கட்டி, அதனை வலிகுன்றச் செய்ய உதவும் கருவி பாசம் ஆகும். மூன்று வடமாகவுள்ள பாசக்கயிறு "பாசத் திரயம்" என்ற ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களைக் குறிக்கும் விநாயகர் உயிர்களுக்குப் போகங்களைக் கொடுத்து, அதனோடு கட்டுண்டிருக்கச் செய்யும் கருத்தைப் பாசம் என்ற கயிறு சுட்டுகின்றது. பாசமாகிய பற்று அறுத்தலையும் பாசம் என்பது புலப்படுத்துகின்றது.

அங்குசம்

விநாயகர் தாங்கியிருக்கும் சிறந்த கருவிகளில் அங்குசமும் ஒன்றாகும். இது யானையை அடக்கப் பயன்படுகின்றது. யானைப்பாகன் இதனை யானையின் காதிலே மாட்டித் தொங்கவிட்டிருப்பான். உயிர்களைப் பாதிப்படையச் செய்யும் ஆணவ மலத்தை பாசக்கயிற்றால் கட்டி அங்குசத்தில் அதனை அடக்கி மறைத்தல் என்னும் அருளைப் புரிபவர் விநாயகர் என்பதை அங்குசம் என்ற கருவி உணர்த்து கின்றது. இது வயப்படாத பொருளை வயப்படுத்தும் ஆயுதமாகும். இது உயிர்களின் சித்த மலமாகிய ஆணவத்தை அடக்கி இறுதியில் உயிர்களைத் தன்வயப்படுத்துதலை உணர்த்தும் தத்துவத்தைச் சுட்டிநிற்கின்றது.

தந்தம்

இது ஒடிந்த யானைக் கொம்பு ஆகும். வேதவியாசர் மகாபாரதத்தை எடுத்துரைத்தபோது, அந்த இதிகாசம் அழியாது அதனை அனைவரும் படித்துப் பயன் பெறும்பொருட்டு விநாயகர் தமது தந்தங்களில் ஒன்றை ஒடித்து அதையே எழுத்தாணியாகக் கொண்டு எழுதி வைத்தார். அந்த எழுத்தாணியே அவரது திருக்கரத்தில் விளங்கும் ஒடிந்த ஒற்றைக் கொம்பாகிய தந்தம் என்பதன் விளக்கம் ஆகும். இக்கொம்பானது "எழுத்தறிவித்தவன் விநாயகரே' என்ற விநாயக கல்வித் தத்துவத்தைச் சுட்டிநிற்கின்றது.

மேலும், விநாயகர் தந்தத்தைக் கையில் வைத்திருப்பது பிறிதொரு தத்துவ விளக்கத்தையும் தருகின்றது. ஓர் அசுரன் தனக்கு எந்த ஆயுதத்தினாலும் மரணம் நேரக்கூடாது என்ற வரத்தைப் பெற்றிருந்தான். வரம்பெற்ற காரணத்தினால் நல்லவர்களுக்கெல்லாம் சொல்லொண்ணாத துயர் விளைவித்தான். ஆயுதப் பிரயோகம் இன்றி அக்கொடிய அசுரனைக் கொல்வதெப்படி என்று தேவர்களெல்லாம் அஞ்சி நின்ற வேளையில் விநாயகர் தமது தந்தங்களில் ஒன்றை முறித்து அதனால் அசுரனைக் கொன்ற தத்துவப் பொருளை நினைவுபடுத்துவதாகவும், அவர் திருக் கரத்தில் திகழும் ஒடிந்த கொம்பாகிய தந்தம் விளங்குகின்றது.

**வேதாளம்**

அச்சமும் அருவெறுப்பும் தரத்தக்க தசை நாரில்லாத பூதவடிவமாக இது விளங்குகின்றது. பகைவர்களை விழுங்கச் செய்ய இது ஏவப்படும். வீர விநாயகரின் ஒரு கரத்தில் இது இருக்கின்றது.

**சக்தி**

இதனை வேலாயுதம் என்பர். இது முருகனுக்கும் சிறப்பாக அமைந்த ஓர் ஆயுதம் ஆகும். ஆறு கூரிய பகுதிகளை உடையது. தகட்டு வடிவானது. விநாயகர் வீர கணபதியாக விளங்கும்போது இதனைத் தாங்கியிருப்பார். இது எதிரியை எறிந்து அழிக்க உதவும் ஒரு போர்க் கருவியாகும். இதனை நடுவில் பிடித்து எறியலாம். இரு பக்கமுங்குத்தும் இயல்பு இவ்வாயுதத்திற்கு உண்டு. இவ்வாயுதம், மூன்று சாய் சதுரங்களின் சோடிகள் ஒன்றோடொன்று நெருங்கியிருக்கு மாறும் வரிசையாகவும் அமையப்பெற்று அப்பகுதி ஒரு தண்டத்தின் நுனியில் பொருத்தப்பட்ட நிலையிலும் அமையலாம். இதன் மேற்பகுதி இச்சா சக்தியையும், நடுப்பகுதி ஞான சக்தியையும், கீழ்ப்பகுதி கிரியா சக்தியையும் குறிக்கும். இதனடிப் படையில் நோக்கும்போது இச்சை, கிரியை, ஞானம் ஆகிய மூன்று சக்திகளும் விநாயகருள் அடங்கும் என்பது இவ்வாயுத்தின் தத்துவப் பொருளாகும்.

**அம்பு**

இது வில்லை வளைத்து அதில் வைத்து எய்யப்பெறுங் கருவி. நுனி கூரிய முள்போன்றது. நுனி மட்டும் இரும்பாலானது. நுனியை ஒரு கழியிற் செருகியிருப்பார்கள். அதனது வால்ப் பக்கத்தில் கழுகின் இறகுகளையும், மற்றப் பறவை இறகுகளையும் கட்டியிருப்பார்கள். பெரும்பாலும் கழுகிறகே இதற்குப் பயன்படும். விரைந்து காற்றை ஊடுருவிச் செல்வதற்காகவே இறகு கட்டப்படுகின்றது.

**வில்**

இது அம்பு எய்யப் பயன்படுவது. மூங்கில், சிலையென்னும் மரம் முதலான வளையக்கூடிய நார் மரத்தால் செய்யப்பெறுவது. இந்த வில்லில் தோல் அல்லது நார்க் கயிற்றானியென்ற நாண் கட்டப் பெற்றிருக்கும். வில்லை வளைத்து நாணை இறுகக் கட்டி அதன் நடுவில் அம்பை வைத்து விடுவது வழக்கம். எவ்வளவுக் கெவ்வளவு வில்லின் வலிமையும் நாணின் உறுதியும் இழுத்து விடுபவனின் வன்மையும் இருக்கின்றனவோ அவ்வளவுக்கவ்வளவு அம்பின் வேகமும், தைக்கும் வன்மையும் மிகும். அம்பு பட்டவுடன் இறப்பதற்காக அதன் நுனியில் விஷம் தேய்த்து வைத்தலும் வழக்கம். அம்பின் நுனி பிறைமதி போலக் கவர் பட்டதாகவும் இருக்கும். இதற்குப் பிறையம்பு என்ற பெயர்.

**சக்கரம்**

இது விநாயகருக்கும் விஷ்ணுவுக்கும் உரிய சிறப்பான ஆயுதம் ஆகும். விஷ்ணுவின் சக்கரத்திற்குச் "சுதர்சனம்" என்று பெயர். இதன் அமைப்பு அனைவருக்கும் நன்கு தெரிந்ததே. அதில் இருவகையுண்டு. ஒன்று தேருருளை போன்றது. மற்றது வளையம் போன்றது. இது வட்ட வடிவமாகவும் நான்கு திசை களில் தீச்சுடர்களைக் கொண்டதாகவும் விளங்கும். சக்கரம் தர்மத்தின் அடையாளம் ஆகும்.

**கத்தி**

இது இன்று அறவே மறந்துபோன ஒரு கருவி. தலைப்பகுதி குண்டாகத் தடித்துள்ள நீளக்கழியிற் கோக்கப் பெற்றுள்ள கருவி. இதுவும் பகைவரை அடிக்கப் பயன்படுவது. தலைப்பக்கம் ஒரு மண்டை ஓடு போலவும் கம்பி முழங்கால் எலும்பாகவும் கூட அமைந்திருப்பதுண்டு. இதனைக் குத்துக்கத்தியாகிய பிச்சுவா என்பாரும் உளர்.

**கேடயம்**

இது கத்தி வெட்டைத் தடுப்பதற்காகப் பயன்படுவது. பலகையாலும் வலுவுள்ள காட்டெருமை, கடமா, நீர்யானை, காண்டாமிருகம் இவற்றின் தோலாலும் செய்யப்பெறும் சதுரம், நீள்சதுரம், வட்டம், முக்கோணம் முதலிய பல வடிவங்களிற் செய்யப்பெறும். இன்னல், இடையூறுகள் என்பவற்றைத் தடுத்து நிறுத்தும் கேடயம் என்ற கருவி தர்மத்தின் ஓர் அடையாளமாகக் கொள்ளப்படுகின்றது.

**சம்மட்டி**

இது இரும்பாலான கனத்த தலைப்பகுதியை உடையது. இதன் நடுவில் துளையிடப் பெற்றிருக்கும். இதில் கைபிடிக்கும் சிறுகழியைக் கோத்திருப்பார்கள். இதுவும் உடையவன் கையைவிட்டு அகலாதபடி எதிரியை அடித்துத் தாக்கப் பயன்படுத்தப்பெறும்.

**கதை**

குண்டாந்தடி, இதில் பலவகைகள் காலாந்தரத்தில் ஏற்பட்டன. பகைவர்களை அடித்து நொறுக்கப் பயன்படுவது. கையைவிட்டு அகலாதபடி காவலாக இருந்து உடையவனைப் பாதுகாப்பது.

**நாகபாசம்**

பாசவகைகளுள் "நாகபாசம்" என்பதும் ஒன்றாகும்.

**சூலம்**

இது மூன்று நுனிகளையுடையது. விநாயகர் தரித்திருக்கும் இவ்வாயுதம் சிவபெருமானுக்கும் சிறப்பாக உரியது. கரைவரையிலும் எஃகு இரும்பாற் செய்யப் பெற்றது. நீளமான மரக்கம்பிற் கோக்கப் பெற்றிருக்கும். இதனை மூவிலை நெடுவேல், முத்தலைவேல் என்றும் கூறுவர். இதன் மூன்று நுனிகளும் ஆரணி, ஜெனனீ, ரோதயித்ரி என்ற முச்சக்திகளைக் குறிக்கும். ஜெனனீ ஆக்கலையும், ஆரணி அழித்தலையும், ரோதயித்ரி காத்தலையும் குறிக்கும். பிரம்மா, விஷ்ணு உருத்திரன் என்ற மும்மூர்த்திகளையும், சாத்துவிகம், ராஜசம், தாமசம் என்ற முக்குணங்களையும் சுட்டி உணர்த்துவதாகவும் இவ்வாயுதம் திகழ்கின்றது.

**குந்தாலி**

இன்று, வன்மையான நிலப்பாறைகளை உடைக்கப் பயன்பெறும். தலை கனத்துக்குரிய நுனியோடு இருக்கும். இரும்பானியன்ற கருவி இது. இதில் பல வகைகள் உள்ளன.

**மழு**

இன்று மரங்களை வெட்டப்பயன் பெறுவதாக எறியென்னும் பெயருடன் வழங்குகின்றது. மிகக் கூர்மையானது 'வாய்ச்சி' என்னும் மரஞ்செதுக்கும் கருவியினின்றும் முற்றிலும் வேறுபட்டது. தீப்பிழம்பு என்பதும் உண்டு. சிவபெருமானுக்கு விருப்பான கருவி. விநாயகரின் சத்தியம் என்ற உயர் குணத்தைச் சுட்டும் கருவி மழு ஆகும்.

**கொடி**

கொடி வெற்றிக்கு ஓர் அடையாளம் ஆகும். துணியாலியன்றது. அடையாளம் எழுதப்பெற்றது. இதனையும் விநாயகப் பெருமான் தமது திருக்கையில் தாங்கியிருக்கின்றார்.

**தண்டம்**

இது நீளமான கைத்தடி ஆகும். மரத்தாலானது. மரணத்தையும் தண்டனையையும் இது சுட்டிக் காட்டுகின்றது.

**கமண்டலம்**

நீர் வைத்துள்ள கலம். ஒரு மரத்தின் காயால் உண்டானது. முனிவர்கள் அந்தணர்கள் தங்கள் நாட்கடன்களைக் கழிப்பதற்காக அதனை வைத்திருப்பார்கள். இது ஆயுதமாக இல்லாவிட்டாலும் திருவுரு நிலையை அறிந்துகொள்ள உதவும் கருவி ஆகும். பரந்த ஞானம் தம்முள் நிறைந்தவர் என்பதைக் கமண்டலம் சுட்டி நிற்கின்றது.

**பரசு**

இது சற்றேறக்குறைய மழுப்போன்ற கருவி ஆகும். ஆனாலும் மழுவின் வாய் சதுரமாக இருக்கும். இதன் வாய் சற்று வளைந்து கூரியதாக இருக்கும். இதுவும் காம்பில் செறிக்கப்பெற்றுப் பயன்படுத்தப்பெறும் கருவியாகும். விநாயகரின் சத்திய குணத்திற்கு இது ஓர் அடையாளமாகும்.

**கரும்பு வில்**

கரும்பால் செய்யப்பெற்ற வில். இது மன்மதனுக்குரிய சிறப்பான கருவி. யோகியாக இருக்கும் மற்றைய தெய்வங்களும் காமேஸ்வரியாகிய காமாட்சியும் இதனைத் தாங்கியிருப்பர்.

**சங்கு**

இது விநாயகருக்கு மட்டுமன்றி விஷ்ணுவிற்கும் சிறந்த ஆயுதம் ஆகும். இது வெற்றியை அளிக்கும் கருவியாகும். பகைவர்கள் இதன் ஒலி கேட்டதுமே ஒடுங்குவர். இது ஓர் அச்சக் கருவியாகும். இதிலும் பல வடிவங்கள் உள்ளன. சங்கு வலம் சுழித்ததாகவோ இடம் சுழித்ததாகவோ இருக்கலாம். சங்கிலிருந்து விநாயகரின் வடிவத்தைச் சுட்டும் ஓங்கார ஒலி எழும்புவதால் இது ஆக்கல் தொழிலைக் குறிக்கும் தத்துவச் சின்னத்தின் குறியீடு எனலாம்.

புஷ்பபாணம்

இது தாமரை, அசோகு, மா, முல்லை, நீலம் என்ற ஐந்து பூக்களால் இயன்ற பாணம் ஆகும். இவற்றை மன்மதன் மக்களிடத்தில் காம நினைப்பூட்ட எய்வன். இதனைப் போக நிலையில் மற்றத் தெய்வங்களும் தாங்குவதுண்டு. காமத்தை எரிப்பவர் என்பது புஷ்ப பாணத்தின் நுண்பொருள் ஆகும்.

கோடரி

மரம் பிளக்கப் பயன்படும் கருவியைப் போன்று பகைவரின் உடலைப் பிளக்க இது பயன்படும். இக்கருவி இரும்பால் ஆனது.

அட்சமாலை

இது உருத்திரா அட்சமாலை ஆகும். இது தனித் தனியே ஒரு மாலையாகத் திருவுருவங்களில் தொங்குவது உண்டு. மிகப் பழமையான திருவுருவங்களில் இது ஓராயுதம் போல் இருப்பதைக் காணலாம். அட்சமாலை கால தத்துவத்தின் ஓர் அடையாளம் ஆகும்.

சாமரம்

இது கவரிமானின் வால் மயிரால் ஆனது ஆகும். இது ஓர் ஆயுதம் அன்று. இருந்தபோதிலும் விநாயகருடைய திருவருவ அடையாளங்களில் ஒன்றானயால் ஆயுத வரிசையில் இதுவும் இடம் பெற்றிருக்கின்றது.

கட்டுவாங்கம்

இது ஒரு நீளமான கத்தியாகும். போரில் பகைவர்களை வெட்டப்பயன்படு கின்றது. இதில் ஒரு முனையுடையதும் இரு முனையுடையதும் என இரு வகையுண்டு. குத்துக் கத்தியாகக் கூரிய நுனியை உடையதாகவும் இது விளங்கும். இது உயிர்களின் மீது படிந்துள்ள பாசங்களை அறுக்கும் கருத்தைச் சுட்டிநிற்கிறது.

தீ அகல்

இது ஒரு தீப்பிழம்பு ஆகும். தீ அகலாகிய மழுவின் வடிவம் இதைப் போன்றே இருக்கும். இது விநாயகரின் அழிக்கும் ஆற்றலைக் குறிக்கும். உயிர்கள் மீது படிந்துள்ள பாசங்களைச் சுட்டு உயிர்களைத் தூய்மைப்படுத்துகின்ற இறைவனின் ஆற்றலைக் குறிக்கும் ஓர் அடையாளம் ஆகும்.

வீணை

இது ஓர் இசைக்கருவி ஆகும். போர்க் காலங்களில் தளர்ச்சியடைந்திருக்கும் படை வீரர்களுக்கு உணர்ச்சி ஊட்ட இக்கருவி பயன்படும்.

விநாயகர் தரித்திருக்கும் மேற்கூறப்பட்டுள்ள ஆயுதங்கள் சிவன், அம்பிகை, விஷ்ணு, முருகன் ஆகிய கடவுளர்களின் திருக்கரங்களிலும் விளங்கக் காணலாம். சிவனின் திருக்கரத்தில் திகழும் மழு, பரசு, சூலம் என்பன அம்பிகை கைகளில் ஏந்தியுள்ள அங்குசம், பாசம், அட்சமாலை, கரும்புவில், கத்தி, வாள், வீணை

ஆகியவை விஷ்ணுவின் கரங்களில் விளங்கும் சங்கு, சக்கரம் என்பவவை முருகன் திருக்கரங்களில் தரித்துள்ள சத்திவேல், வில், அம்பு, தண்டம் போன்றவை விநாயகரின் திருக்கரங்களிலும் திகழ்வதைக் கண்டு மகிழ முடிகின்றது. கடவுள் ஒருவரே அவ்வப்போது பற்பல வடிவங்கள் எடுக்கிறார் என்ற ஓர் இறை தத்துவத்தை கடவுளர் எல்லோரிடத்திலும் ஒரே விதமாகக் காணப்படும் சிறப்புமிகு ஆயுதங்கள் நுட்பமாகப் புலப்படுத்துகின்றன எனலாம்.

**விநாயகர் வடிவங்களில் சத்தி தத்துவம்**

விநாயகர் வடிவங்களில் சத்தி இடம் பெற்றிருப்பதும் விநாயகரே சில இடங்களில் பெண் வடிவத்தில் காட்சி தருவதும் விநாயகரின் தத்துவச்சிறப்பை நன்கு புலப்படுத்துவதாகவுள்ளது.

தமிழகத்திலும், ஈழத்திலும் விநாயகரைப் பெரும்பாலும் பிரம்மச்சாரியாகவே வழிபடுவது பிரசித்தமான வழிபாட்டு மரபாகக் காணப்படுகின்றது. 'பவன் பிரம்மச்சாரி' என்ற சைவ சித்தாந்த தத்துவம் இங்கு நினைவு கூரத்தக்கதாகவுள்ளது. தமிழகம், ஈழம் போன்ற இடங்களில் விநாயகரைப் பிரமச்சாரியின் கோலத்தில் வழிபடுவதே சிறப்புற்றிருப்பினும், தமிழகத்தில் விநாயகர், வல்லபை என்ற சத்தியுடன் கூடிய நிலையிலும் 'சித்தி புத்தி' என்ற இரு சக்திகளுடன் சேர்ந்த கோலத்திலும் தொழப்படுவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. வட இந்தியாவில் விநாயகர் பெரும்பாலும் சக்தியுடன் சேர்ந்த நிலையிலேயே விளங்குகின்றார். இவ்வடிவத்தை அவர்கள் 'லட்சுமி விநாயகர்' என அழைக்கின்றனர்.

தமிழகத்திலும், ஈழத்திலும் 'வல்லபை' என்ற சத்தியுடன் விளங்கும் விநாயகரை 'வல்லப விநாயகர்' அல்லது 'வல்லப கணபதி' என்று வழங்குகின்றனர். வல்லபை என்ற சத்தியை விநாயகர் தனது இடது பக்க மடியில் அணைத்து வைத்திருக்கும் அமைப்பில் வல்லபை விநாயகர் படிமம் காணப்படுகின்றது. சிவாகமங்கள் விநாயகரின் சத்தியாக வல்லபையைக் குறிப்பிடுகின்றது. வல்லபம் என்பதற்கு வல்லமை என்பது பொருளாகும். வல்லமை என்றால் ஆற்றல் என்பது கருத்தாகும். எனவே ஆற்றலின் ஓர் அடையாளத்தைச் சுட்டி நிற்பதாக விநாயகருடன் வல்லபை என்ற சத்தி விளங்குகின்றாள் எனலாம்.

உமாதேவியின் அம்சமான இவள் யமுனை ஆற்றின் அருகேயுள்ள ஒரு தடாகத்தில் ஒரு தாமரை மலரில் பெண்வடிவமாக அவதரித்து மரீசி முனிவரால் வளர்க்கப்பட்ட தெய்வீக சத்தியாவாள்.

விநாயகர் சித்தி, புத்தி என்ற இரு சத்திகளுடனும் 'சித்தி விநாயகராக' விளங்குகின்றார். சித்தியும், புத்தியும் பிரமதேவனது புத்திரிகளாவர். விநாயகர் சித்தி, புத்தி, எனும் இரண்டு சக்திகளுடன் விளங்குவது பெரும் தத்துவத்தைச் சுட்டி நிற்கின்றது. சித்திதேவி கிரியா சக்தியின் வடிவமாவார். புத்திதேவி இச்சா சத்தியின் அம்சமாவார். விநாயகர் பிரம்மஞான வடிவமுடையவர். இச்சையும், கிரியையும் இருந்தால் தான் ஞானத்தின் மூலம் ஒரு காரியத்தைச் செய்ய முடியும்

என்ற தத்துவத்தைச் சுட்டவே விநாயகர் சித்தி, புத்தி எனும் இரு சத்திகளுடன் விளங்குகின்றார். இந்நிலையில் இவர் இல்லற ஞானியாகத் திகழ்கின்றார் எனலாம். பிரபஞ்சம் ஒடுங்கும்போது இச்சை, கிரியை எனும் இரு சத்திகளை விநாயகர் தன்னுள்ளே ஒடுக்கிக்கொண்டு, தாம் ஞானவடிவமாகத் திகழ்கின்றார். அப்போதே விநாயகர் பிரம்மச்சாரியாக விளங்குகின்றார்.

உலகில் அவ்வவ்போது அஞ்ஞானத்தின் உருவமாகச் சில அரக்கர்கள் தோன்றி தர்மத்தை அழித்து அதர்மத்தை மேலோங்கச் செய்து உலகில் பெரும் கொடுமைகளைச் செய்ய முற்படும்போது விநாயகர் சித்தி, புத்தி எனும் தேவிகளின் பிரம்மச்சாரிய வடிவமாக தாம் மட்டுமே ஞான வடிவமாக நின்று அதர்மம் செய்பவர்களை அழிக்கிறார் என்று அவர் பற்றிய தெய்வீக வரலாறுகள் அமைந்து விளங்குகின்றன. அவருடன் பெண் அம்சமான சத்திகள் இருக்குமாயின் சத்தியின் இயல்பாக கருணை எண்ணமே மேலோங்கி நிற்கும். இதனால் அதர்மத்தை அழிக்க முடியாத நிலை ஏற்படும். தீயவர்களை அழித்து நல்லவர்களை காப்பாற்ற வேண்டிய வேளைகளில் கருணையின் அடையாளமாக சத்திகளின்றி தாம் தனியாகவே பிரம்மச்சாரியாக அவர் விளங்குகின்றார். துட்ட நிக்ரஹ சிட்ட பரிபாலனம் செய்ய வந்ததே பிரம்மச்சாரிய விநாயகர் ஆவார். மேலும், விநாயகர் திருமாலின் புத்திரிகளான மேதை, பிரமோதை, சுமநசை, சுந்தரி, மநோரமை, மங்கலை, கேசினி, காந்தை, சாருஹாலை, சுமத்தியமை, நந்தினி, சாமதை என்ற பன்னிருவரை மணந்தார். என்றும் சமய நூல்கள் குறிப்பிடுகின்றமை குறிப்பிடத்தக்கது.

சத்தியுடன் விளங்கும் விநாயகர் படிமங்களாக சத்தி விநாயகர், லட்சுமி விநாயகர், மஹாவிநாயகர், ஊர்த்துவ விநாயகர், உத்தண்ட விநாயகர், ஸ்ரீசங்கட ஹர விநாயகர், வல்லப விநாயகர், சர்ப்பாபரண விநாயகர் என்போர் காட்சி தருவது கண்டு களித்தற்குரியதாகும்.

மஹாவிநாயகர், சித்திவிநாயகர், சக்தி விநாயகர், மோட்ச விநாயகர், வித்யா விநாயகர் என்ற ஐந்து விநாயகர் வடிவங்களின் அரிய இணைப்பாகக் காட்சி தரும் "பஞ்சமுக விநாயகர்' வடிவம் விநாயகரின் சத்தி தத்துவத்தை மேலும் பெருமைப்படுத்தி நிற்கின்றது.

இவ்வாறு விநாயகர் சத்தியுடன் சேர்ந்த நிலையிலும் சத்தியுடன் சேராத நிலையிலும், சத்தியாகவே விளங்குகின்ற நிலையிலும் காணப்படும் விநாயக தத்துவ நிலை வியக்கத்தக்கதாகவுள்ளது.

**விநாயகரின் வாகனத்தத்துவம்**

விநாயகர் நான்கு யுகங்களிலும் நான்கு வாகனங்களில் விளங்குகின்றார். அவர் கிருதயுகத்தில் சிங்க வாகனத்திலும், திரேதா யுகத்தில் மயில் வாகனத்திலும், துவாபரயுகத்தில் எலி வாகனத்திலும், கலியுகத்தில் குதிரை வாகனத்திலும் விளங்குவதாகச் சமய நூல்கள் குறிப்பிடுகின்றன. நந்தி, பூதம், கருடன் என்பனவும் விநாயகருக்கு வாகனங்களாக விளங்கக் காணலாம். விநாயகரின் சிறப்பான வாகனம்

மூஷிகம் ஆகும். இன்றைய காலகட்டத்தில் விநாயகர் மூஷிக வாகனத்தில் விளங்குவதையே பெரிதும் காணமுடிகின்றது.

**மூஷிகவாகனம்**

விநாயகருக்கு மூஷிக வாகனன் என்று ஒரு பெயர் உண்டு மூஷிகம் என்பது எலி, பெருச்சாளி என்பவற்றைக் குறிக்கும் வடமொழிச்சொல்லாகும். பென்னம் பெரிய விநாயகர் சின்னஞ்சிறிய மூஷிகத்தை (எலி பெருச்சாளி) வாகனமாகக் கொண்டது பெருந்தத்துவத்தைப் புலப்படுத்துகின்றது. நல்லவர்களைக் காப்பாற்றுதல், தீயவர்களை அழித்தல் என்ற இறை தத்துவத்தைச் சுட்டி நிற்பதே விநாயகர் எழுந்தருளியிருக்கும் மூஷிக வாகனமாகும்.

நல்லவர்களாகிய தேவர்களின் துயர் களைந்து, அவர்களைக் காப்பாற்றும் பொருட்டாகவே அசுரனாக விளங்கிய கஜமுகாசுரனை விநாயகர் அழித்தார். அசுரனாகிய கஜமுகாசுரனை அழித்தபோது அவன் பெருச்சாளி வடிவம் (எலி) பெற்று விநாயகருக்கு வாகனமாயினன் என்பது விநாயகரின் தெய்வீக வரலாற்றுக் கதைகளால் அறியப்படும் செய்தியாகும். இக்கதை ஓர் அரிய சித்தாந்த சைவதத்துவத்தைப் புலப்படுத்துகின்றது. ஆணவ மலத்தின் அடையாளமாக விளங்கிய கஜமுகாசுரன், அம்மவலம் வலிகுன்றிய நிலையில் சின்னஞ்சிறிய பெருச்சாளியாக விளங்க அதனை விநாயகர் வாகனமாகக் கொண்டார் என்பது தத்துவமாகும். இவ்வகையில் நோக்கும் போது மூஷிக வாகனம் ஆணவமலத்தின் ஒரு குறியீடாக விளங்கும் தத்துவம் என்பது நன்கு புலப்படுகின்றது.

பாற்கடலில் தோன்றிய ஆணவமாகிய பெரும் விஷமானது. சிவபெருமானின் திருமிடற்றிடலடங்கி முதல் கெடாது வலிகெட்டு நிற்பதைச் சுட்டுவது போலவே, ஆணவமல வடிவமாகிய கஜமுகாசுரனும் முதல் கெடாது வலிகெட்டு மூஷிக வடிவில் (எலி) விநாயகரின் வாகனமாக விளங்குவது புலப்படுகின்றது.

**சிம்ம வாகனம்**

விநாயகர் ஐந்து முகங்களுடன் விளங்கும் நிலையில் அவர் ஏரம்ப விநாயகர் என வழங்கப்படுகின்றார். ஏரம்ப விநாயகரின் வாகனம் சிம்ம வாகனம் ஆகும். விநாயகரின் திருநாமங்களுள் சிம்மவாஹனாயக என்பது ஒன்றாகும். அம்பிகை காளியாக விளங்கும் நிலையில் அவள் சிம்மத்தை வாகனமாகக் கொண்டு விளங்குவாள். இதனால் அவளுக்குச் 'சிம்மவாஹினி' என்ற பெயர் உண்டு. மிகக்கொடிய சிங்கத்தை அடக்கி ஆள்வதை சிம்மவாஹனம் காட்டுகின்றது. மிகக்கொடிய ஆணவ மலம் அழியாது அடக்கப்பட்டிருத்தலையே விநாயகரின் சிம்மவாகனம் சுட்டி நிற்கின்றது.

**யானை வாகனம்**

யானை முகக் கடவுளாகிய விநாயகருக்கு யானை வாகனம் அமைந்து விளங்குவது பொருத்தமாக உள்ளது. திருச்செந்தூர் ஆவுடையார் குளக்கரையிலுள்ள அரசாள்வார் விநாயகர் முன்பும், ஸ்ரீவில்லி புத்தூர் (காமராசர்) மடவார்வளாகம் வைத்தியநாதசுவாமி கோயில் நுழைவாயிலில் உள்ள கல்யாண விநாயகர் முன்பும்

யானை வாகனம் காணப்படுகின்றது. யானை ஆணவ மலத்தின் ஓர் அடையாளமாகும். அதனை அடக்குவதைக் காட்டுவதே யானை வாகன விநாயகர் சுட்டும் தத்துவமாகும்.

**மயில் வாகனம்**

திருச்சியிலுள்ள திருவானைக்கா அகிலாண்டேஸ்வரி கோயிலில் காணப்படும் ஓவியத்தில் விநாயகர் மயில்வாகனத்தில் உள்ளார். பாண்டிச்சேரி மலைக்குகை விநாயகர் கோயிற் சுவரிலுள்ள கதை சிற்பத்திலும் மயில்மீது காட்சி தருகின்றார். அருப்புக்கோட்டை தாதன்குள விநாயகர் கோயிலிலும் மயில் வாகனம் உள்ளது. மயிலும் ஆணவமலத்தின் குறியீடாகும். மயில் வாகனம் இதையே சுட்டிநிற்கின்றது.

**குதிரை வாகனம்**

குதிரையானது மூன்று விதமான கோலங்களில் வாகனமாகக் கொள்ளப்படும். நின்ற கோலம், பாய்ந்து நிற்கும் கோலம், நாட்டிய கோலம் ஆகியவை அம்மூன்று கோலங்களாகும். குதிரை யோகத்தின் ஓர் அடையாளம் ஆகும். குதிரைகள் திசைகளையும், புலன்களையும் குறிக்கின்றன. கடலூர் வட்டம், சென்னப்ப நாயக்கன் பாளையம், மலையாண்டவர் விநாயகர் கோயிலில் குதிரை வாகனம் அமைந்துள்ளது. கோயம்புத்தூரில் குருபதேசிக கவுண்டர் விநாயகர் கோயிலிலும் குதிரை வாகனம் உள்ளது.

**நந்தி வாகனம்**

நந்தி தர்மத்தின் அடையாளம் ஆகும். சுசீந்திரம், வில்லி புத்தூர் மடவார் வளாகம், இராசபாளையம் முதலிய இடங்களில் உள்ள விநாயகர் கோயில்களில் நந்தி வாகனம் உண்டு.

**பூதவாகனம்**

மதுரை திருப்பரங்குன்றம் பழைய சொக்கநாதர் கோயில் முன்மண்டபத் தூணில் போருக்குப் புறப்படும் நிலையில் விளங்கும் சிற்பம் ஒன்றைக் காணலாம்.

**கருட வாகனம்**

விநாயகர் விஷ்ணுவின் அம்சமாகவும் விளங்குவதால் அவருக்கு முன் கருடனை நிறுவலாம் என்று விஸ்வக்சேன சம்ஹிதை குறிப்பிடுகின்றது.

**விநாயகரின் நாமதத்துவம்**

விநாயகருக்குப் பலநாமங்கள் உள்ளன. அவற்றுள் அவரின் அருட்பேராயிரத்தைக் கூறும் 'ஸ்ரீமஹா கணபதி ஸஹஸ்ர நாமாவளி' யும் முந்நூறு நாமங்கள் கொண்ட 'த்ரிசதீ நாமாவளி' யும் குறிப்பிடத்தக்கவை. இவற்றுள் வரும் திருநாமங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வோர் தத்துவப் பொருளைப் புலப்படுத்துகின்றன. விநாயகரின் முக்கிய திருநாமங்கள் சுட்டும் தத்துவப்பொருள் பின்வருமாறு அமைகின்றது.

### விநாயகர்.

விநாயகர் என்ற பெயர் பல தத்துவப் பொருள்களைத் தந்து நிற்கின்றது. விநாயகர் என்பதற்கு தமக்குமேலொரு நாயகரும் (தலைவரும்) இல்லாதவர் என்பது பொருளாகும். அதாவது தலைவரற்றவர் என்பது பொருளாகும். இதனை வி+நாயகர், = விநாயகர் - நாயகன் இல்லாதவர் என்று நோக்கி அறியமுடிகின்றது. (வி+மலன் = விமலன் மலமில்லாதவன் எனப் பொருள்படுவதுபோல) ஆதி சங்கரர் தனது கணேச பஞ்சரத்தினத்தின் முதலாவது சுலோகத்தில் 'அநாயகைக நாயகம்' என்று விநாயகரைக் குறிப்பிடுகின்றார். இந்த அநாயகை நாயகம் என்பது அநாயக, ஏகநாயகம் என்ற இரு சொற்களால் ஆனது. இதன் பொருள், தனக்கு ஒரு நாயகன் இல்லாத அநாயக நிலையிலும் எல்லா நாயகர்கட்கும் நாயகராகிய நிலையில் உள்ளவர் என்பதாகும். மேலும் 'வி' என்றால் கல்வி நாயகர் என்றால் தலைவர். இதன்படி தன்னை வணங்குபவர்களுக்குக் கல்வியைத் தருபவர் என்பது பொருளாகும். இதனையே உமாபதிசிவாசாரியரும் "நற்குஞ் சரக்கன்று நண்ணில் கலைஞானம் கற்கும் சரக்கன்று காண்' என்று திருவருட்பயன் ஆரம்பத்தில் குறிப்பிடுகின்றார். அடுத்து 'வி' என்றால் திசை என்றும் நாயகர் என்றால் தலைவர் என்றம் பொருள் கொண்டு "எத்திசைக்கும் தானே தலைவர்' என்றும் விநாயகர் என்ற சொல்லுக்குப் பொருள் கூறலாம். விநாயகர் எனும் பெயரின் தத்துவப்பொருள் விநாயக புராணத்தில்,

"விக்கின முழுதுநீக்கி வேண்டிய வரங்கணல்கி
மக்கள் விண்ணவர்கள் யாரும் வழிபடு தெய்வமாகி
யெக்கடவுளர்க்கு முன்னர்ப் பூசனையேற்பாராகி
மிக்கவரின்மை தோன்ற விநாயக ரெனும் பேர் தாங்கி'

என வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

### வக்கிரதுண்ட விநாயகர்

பிரளய முடிவில் தோன்றி பிரமன் விஷ்ணு உருத்திரன் என்ற மூவர்களைப் படைத்து படைத்தல், காத்தல், அழித்தல் என்ற முத்தொழில்களைக் கற்பித்தமையால் 'வக்கிர துண்ட விநாயகர்' எனும் பெயர் பெற்றார்.

### சிந்தாமணி விநாயகர்

கபிலருடைய சிந்தாமணியைக் கவர்ந்து சென்ற கணராஜனை வென்று அதனைமீட்டு அவர்க்கு அளித்தமையால் "சிந்தாமணி விநாயகர்" எனும் பெயர்பெற்றார்.

### கஜானன விநாயகர்

பிரமதேவனின் கொட்டாவியினின்றும் தோன்றிய சிந்தூரனைக் கொன்று தேவர்களைக் காத்தமையால் "கஜானன விநாயகர்" என்னும் பெயர் பெற்றார்.

### விக்கினராஜ விநாயகர்

காலரூபனென்கின்ற விக்கினனை அழித்து உலகத்தைக் காத்தமையால் 'விக்கினராஜ விநாயகர்' எனும் பெயர் பெற்றார்.

#### மயூரேச விநாயகர்

பிரமதேவனிடமிருந்து வேதங்களைக் கவர்ந்து சென்ற கமலாசுரனையும், தேவர்களைச் சிறை வைத்த சிந்தாசுரனையும் கொன்று ஏனைய அவுணர்கள் செய்த மாயையினை ஒழித்து மீட்டும் அவ்வேதங்களைப் பிரமதேவனுக்கீந்து தேவர்களை மீட்டு உலகுக்கு இதஞ்செய்தமையால் "மயூரேச விநாயகர்" எனும் பெயர் பெற்றார்.

#### பாலசந்திர விநாயகர்

யமனிடத்தினின்றும் உதித்த அனலாசுரனை ஒரு சிறு பிராமணப்பிள்ளை போல் சென்று அவ்வசுரனை விழுங்கித் தேவர்களைக் காத்தமையால் "பாலசந்திர விநாயகர்' எனும் பெயர் பெற்றார்.

#### கணபதி விநாயகர்

கஜமுகாசுரனைக் கொன்று விஷ்ணுவின் சாபம் தீர்த்தமையால் "கணபதி விநாயகர்" எனும் பெயர் பெற்றார்.

#### தூமகேது விநாயகர்

மாதவராசனுக்கும் அவர் மனைவியாகிய தமதைக்கும் தீங்குசெய்த தூபராசனைக்கொன்று அவ்விருவரையும் காப்பாற்றியமையால் "தூமகேது விநாயகர்" என்று பெயர் பெற்றார்.

#### கணேச விநாயகர்

தன்னிடத்தில் அளவற்ற வரங்களைப் பெற்ற பெபி என்ற ஓரசுரன் மூவுலகங்களையும் அழிக்கமுற்பட்டபோது தேவர்கள் விநாயகரை வேண்டுதல்செய்ய அவர் ஐந்து முகங்களோடு தோன்றி அவ்வசுரனை அழித்து தேவர்களைக் காப்பாற்றியதால் "கணேச விநாயகர்" எனும் பெயர் பெற்றார்.

#### மகோற்கட விநாயகர்

நராந்தகனையும், தேவாந்தகனையும் நாசம்செய்து காசிராஜனுக்கு முத்தி அளித்தமையால் "மகோற்கட விநாயகர்" என்றும் பெயர் பெற்றார்.

#### துண்டி விநாயகர்

துராசதனை வென்று திவோதரசன் மனத்தை மகிழ்வடையச் செய்து விஸ்வநாத மூர்த்திக்குக் காசிமாநகரை அளித்தமையால் "துண்டி விநாயகர்" எனும் பெயர் பெற்றார்.

#### கணபதி

விநாயகருக்குக் "கணபதி" என்பதே தொன்மையான பெயராக உள்ளது. கணபதி என்பதற்கு பிரமகணம், தேவகணம், பூதகணம், அசுரகணம், மனிதகணம் முதலிய எல்லாக் கணங்களுக்கும் தலைவர் என்பது பொருளாகும். 'கணபதி'

என்ற பெயரில் உள்ள 'க' என்பது புத்தி. "ண" என்பது ஞானம் "பதி" என்பது தலைவர். இதனடிப்படையில் நோக்கும்போது. "கணபதி" என்பதற்குப் புத்திக்கும் ஞானத்திற்கும் தலைவர் (அதிபதி) என்பது பொருளாகின்றது. இதனால் புத்தியையும் ஞானத்தையும் வளர்த்துக் கொள்ளுதலே உண்மையான கணபதி வழிபாட்டின் தத்துவப் பொருள் என்பது புலப்படுகின்றது.

**விக்கினேஸ்வரர்**

விக்கினேஸ்வரர் என்பதற்கு விக்கினங்களை (இடையூறுகளை" ஆக்கவும், நீக்கவும் வல்லவர் என்பதே மெய்ப்பொருளாகும்.

**பிள்ளையார்**

விநாயகரைப் பொதுவாக எல்லோரும் "பிள்ளையார்" என்றே அழைப்பர். சிவசக்திக்கு முதற்பிள்ளை என்பதால் முதலில் "பிள்ளை" எனும் பெயர் பெற்றார். மரியாதைக்காக "பிள்ளை" என்பதுடன் "யார்" என்ற விகுதி சேர்க்கப்பட்டு பிள்ளையார் என்று பின்னர் அவர் அழைக்கப்பட்டார். பிள்ளை என்றால் "குழந்தை" என்ற எண்ணமே முதலில் வருகின்றது. இதனைக் கருதியே அவரை "ஞானக்கொழுந்து" என்று திருமூலர் குறிப்பிடுகின்றார். பொதுவாக ஒரு கிராமத்திலோ அல்லது சிற்றூர்களிலே இருக்கும் பெரிய குடும்பத்துப்பிள்ளை எல்லோருக்கும் குழந்தையாகவே செல்வாக்கின் காரணத்தினால் செல்லமாகக் கருதப்பட்டு அழைக்கப்படுவதைக் காண்கிறோம். இவ்வாறே அனைத்து உலகங்களுக்கும் தந்தையான சிவபெருமானின் முதற்பிள்ளை என்ற காரணத்தால் அவர் பிள்ளையும் அனைவராலும் "பிள்ளை" என்றே அழைக்கப்பட்டு பின்னர் மரியாதைக்காக "யார்" என்ற அடைமொழி சேர்க்கப்பட்டு "பிள்ளையார்" என அழைக்கப்படுகின்றார் எனக் காஞ்சிப் பெரியவர் குறிப்பிடுவதும் இங்கு எண்ணி மகிழ்வதற்குரியது. பிள்ளைச் செல்வத்தை வழங்கும் தெய்வம் என்பதாலும் "பிள்ளையார்" எனும் பெயர் பெற்றார்.

**நவக்கிரக விநாயகர்**

விநாயகரை வணங்கினால், நவக்கிரக வழிபாடும் நிறைவுறுமென்பது நவக்கிரக விநாயகர் சுட்டும் தத்துவமாகும். இதனைப் புலப்படுத்தும் விதத்தில் விநாயகரின் திருவுருவத்தில் ஒன்பது நவக்கிரகங்களும் அமைந்து விளங்க காணலாம். இத்தகைய வியத்தகு விநாயகர் வடிவத்தினையே "நவக்கிரக விநாயகர்" என அழைக்கின்றனர். இவ்வாறான நவக்கிரக விநாயகரின் திருவுருவத்தில் அவர் தனது நெற்றியில் சூரியனையும், நாபிக்கமலத்தில் (தொப்பூழ்) சந்திரனையும், வலது தொடையில் செவ்வாயினையும், இடது தொடையில் கேதுவையும் வலது மேற்கையில் சனியையும், வலது கீழ்க்கையில் புதனையும், இடது மேற்கையில் இராகுவையும், இடது கீழ்க்கையில் வெள்ளியையும் தலையில் வியாழனையும் கொண்டவராகக் காட்சியளிக்கின்றார். நவக்கிரக தோசம் உடையவர்கள் விநாயகரை வழிபடுவதன் மூலம் தோச நிவர்த்தி பெறுவர் என்பது நவக்கிரக விநாயகர் வழிபாட்டின் தத்துவ நிலை ஆகும். தமிழகத்திலுள்ள சில விநாயகர் ஆலயங்களில் நவக்கிரக விநாயகர் ஓவிய வடிவத்தில் கண்டு வணங்க முடிகின்றது.

### விநாயகரின் வழிபாட்டுத் தத்துவம்

விநாயகரின் வழிபாட்டுத் தத்துவத்தில் விநாயகர் விரதங்கள் அறுகம்புல்லினால் அர்ச்சித்தல், தோப்புக்கரணம் போட்டு வழிபடல், சிதறு தேங்காய் உடைத்தல் என்பன தத்துவப்பொருள் உணர்த்துகின்றவனவாக விளங்குகின்றன.

### விரதங்கள்

விநாயகர் வழிபாட்டிற்குரிய விரதங்களில் ஆவணிச் சதுர்த்தியும், மாசி சங்கடஹர சதுர்த்தியும் விசேடமானவை ஆகும். குற்றம் செய்கின்றவர்களை மன்னித்து அவரவர் விரும்பிய போக மோட்சங்களை விநாயகர் அளிக்கின்றார் என்பதே ஆவணி மாத விநாயகர் சதுர்த்தியின் உட்பொருளாகும்.

### அறுகால் அர்ச்சித்தல்

விநாயகரை அறுகு மற்றும் வன்னிப் பத்திரங்கள், மந்தாரைப்பூ என்பவற்றால் அர்ச்சித்தல் வழக்கமாயினும் அறுகம்புல் அர்ரச்சனைமிகு சிறப்புடையதாகும் எனக் கூறப்படுகின்றது. அறுகம்புல்லால் விநாயகரை அர்ச்சித்தால் இடம், கழுதை, புலைச்சி என்போருக்குச் சாலோகமுத்தி கிடைத்ததாக விநாயக புராணம் குறிப்பிடுகின்றது. எனவே அறுகம்புல்லால் விநாயகரை அர்ச்சித்தால் பெறுதற்கரிய முத்திப் பேரின்பம் கிடைக்குமென்பது அறுகம்புல்லின் தத்துவச் சிறப்பாகும். அறுகு ஓரிடத்தில் முளைத்துக் கொடிபோல் நீண்டு ஆறிடங்களில் வேரூன்றிப்படர்ந்து கொண்டே போகும் இயல்புடையது. அங்ஙனமே மூலாதார மூர்த்தியாக விளங்கும் விநாயகர் மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், விசுத்தி, அநாகதம ஆஞ்ஞை என்ற ஆறிடங்களிலும் பரந்து விளங்கி சகஸ்ரதளத்தில் விளங்கி அருளுகின்றார் என்பது அறுகம்புல் உணர்த்தும் தத்துவப் பொருளாகும். ஆறிடங்களில் படர்ந்து வேரூன்றும் இயல்பு அறுக்குக்கு மட்டுமே இருப்பது குறிப்பிடத்தக்கது. அதன் இருப்புத்தன்மை உறுதியானது என்பதையே 'அறுகுபோல் வேரூன்றி' என்ற பழமொழியும் சுட்டிநிற்கின்றது.

### தோப்புக்கரண வழிபாட்டு முறை

விநாயகரை வழிபடுகின்றவர்கள் முதலில் தோப்புக்கரணம் போட்டு அவரை வழிபடத் தொடங்குவர். வலக்கையால் இடக்காதின் கீழ்ப்பகுதியினையும், இடக்கையால் வலக்காதின் கீழ்ப்பகுதியையும் பிடித்துக்கொண்டு நின்ற நிலையில் மூன்றுமுறை அல்லது பலமுறை உட்கார்ந்தும் எழுந்தும் வழிபடுவர். தோர்பி, கர்ணம் என்ற இரண்டு சொற்களும் இணைந்தே தோப்புக்கரணம் என மருவி வந்துள்ளது. தோர்பி என்றால் கைகளினால் என்றும், கர்ணம் என்றால் காது என்றும் பொருளாகும். எனவே தோர்பிகரணம் எனின் கைகளால் காதைப் பிடித்துக்கொள்வது என்பது கருத்தாகும். இதுவே மருவி தோப்புக்கரணம் என வழங்குகின்றது. தோப்புக்கரணம் போட்டு விநாயகரை வழிபடும் வழிபாட்டு முறையானது உடலின் நரம்புமண்டல நல்லியக்கத்திற்கு வழிவகுக்கும் ஆன்மீக தத்துவ சாதனை முறையாக விளங்குகின்றது.

**சிதறுதேங்காய் உடைத்தல்**

விநாயகரை வழிபடும் முறைகளுள் "சிதறு தேங்காய் உடைத்தல்" சிறப்பிடம் பெறுகின்றது. சிதறு தேங்காய் உடைத்தல் என்பது ஒன்று அல்லது பல தேங்காய்களை எடுத்து அது பல சிறுதுண்டுகளாகச் சிதறுமாறு விநாயகர் ஆலயமுகப்பில் உள்ள ஒரு கல்லில் அல்லது அதற்குரிய இடத்தில் எறிந்து உடைத்தல் எனப்பொருள்படும். சிதறுதேங்காய் உடைத்தல் என்பதே இன்று எல்லோரும் செய்யம் விநாயகர் வழிபாடாக விளங்கக்காணலாம். உயர்வு தாழ்வு எதுவும் இன்றி எவரும் செய்கின்ற விநாயகர் வழிபாட்டு முறையாக இது நடைபெறுகின்றது. சிதறு தேங்காய் உடைக்கும் வழிபாட்டு முறை பற்றிய தத்துவ விளக்கம் பின்வருமாறு அமைகின்றது.

விநாயகர் ஒருமுறை தன் தந்தையாகிய சிவனிடம் சென்று அவரது தலையைத் தனக்குப் பலியாகத் தரவேண்டும் என்று கேட்டாராம். "மூன்று கண்கள் உடைய எனது தலையைத்தானே வேண்டும்" என்று சிவன் விநாயகரிடம் கேட்டபோது, விநாயகர் அதற்கு 'ஆம்' என்று பதில் கூறினார். இதன் பிரகாரம் சிவனே மூன்று கண்களை உடைய தேங்காயை எறிந்து உடைத்தார். இந்த விளக்கத்தின் பிரகாரம் சிதறு தேங்காய் உடைத்தல் என்பது ஒருவன் தனது கண்கள் உள்ள தலைப்பகுதியை இறைவனுக்குத் தியாகம் செய்யும் மாபெரும் வழிபாட்டுத் தத்துவத்தைச் சுட்டி நிற்கின்றது. இது பலி வழிபாட்டின் ஒரு வளர்ச்சி நிலையாகும். இன்று விநாயகர் ஆலயங்களில் சிதறுதேங்காய் உடைத்து வழிபடும் முறை காணப்படுகின்ற போதும் ஈழத்தில் உள்ள "திருமுறிகண்டி விநாயகர்" கோயிலில் நாளாந்தம் ஆயிரக்கணக்கில் சிதறு தேங்காய் உடைத்து வழிபடும் மரபு சிறப்பாக நடைபெறுகின்றது. தமது பிரயாணம் தங்கு தடையின்றிச் சிதறாமல் நடைபெற வேண்டும் என்பதற்காக இவ்வாலய வீதியால் செல்லும் பயணிகள் சிதறுதேங்காய் அடித்து முறிகண்டி விநாயகரை வழிபட்டு வருகின்றனர். சிதறு தேங்காய் உடைத்தல் என்பது மக்களின் உளநல தத்துவ வெளிப்பாடாகவே விநாயகர் ஆலயங்களில் சிறப்பாக நிகழ்த்தப்படுகிறது. சிதறு தேங்காய் உடைத்து வழிபடும் மரபு விநாயகர் ஆலயங்களில் மட்டுமன்றி பிறஇந்துசமய ஆலயங்களிலும் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

**முடிவுரை**

இவ்வாறாக விநாயகர் வியக்கத்தக்க விதத்தில் பற்பல திருவுருவங்களைக் கொண்டு திகழ்வதையும், அவரின் திருவுருவ உறுப்புக்களும், அவர் தனது திருக்கரங்களில் ஏந்தியுள்ள ஆயுதங்களும் அவரின் திருநாமங்களும், அவர் எழுந்தருளும் வாகனங்களும் மற்றும் அவரின் வழிபாட்டு முறைகளும் விநாயகர் தத்துவத்தைச் சிறப்பாக வெளிப்படுத்தி நிற்பதையும் அறியமுடிகின்றது.

# தமிழர் மெய்யியல் சைவ சித்தாந்தம் ~ ஓர் வரலாற்றுப் பார்வை

**பேராசிரியர் க. சிவானந்தமூர்த்தி** மெய்யியற்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,

நதிக் கரையோரங்களில் நாகரிகங்கள் தோற்றம் பெற்றன. நைல்நதி, சிந்துநதி, யூபிரட்டீஸ் டைக்கிரீஸ் நதி நாகரிகங்கள் இதற்கான சான்றுகளாகின்றன. நாகரிகத்தின் முக்கிய அலகுகளாய் மெய்யியற் சிந்தனைகளும், சமயவாழ்வும் அமையப் பெற்றிருக்கும். இல்லையெனில் அவை நாகரிகம் என்கின்ற அந்தஸ்தினைப் பெறா. இதுபோன்றே பழமை மிகு மொழிகளிலும், மெய்யியற் சிந்தனைகள் காணப்பெறும். கிரேக்கம், சீனம், ஜேர்மன் மொழிகளுக்கென, மொழிபேசுபவர்களுக்கென மெய்யியற் சிந்தனைகள் அமையப்பெற்றிருந்தன. இவ்வழியில் வடமொழி பேசும் இந்தியர் களுக்கென இருக்கு வேத காலத்திலிருந்து மெய்யியற் சிந்தனைகள் இருந்திருக்கின்றன.

இந்தியாவில் தொன்மைக் குடியினர் என இனங்காணப்பெற்றவர்கள் மூன்று சாகியம் சார்ந்தவர்கள் என வரலாறு சாற்றிடும் "காந்தியுடைய தோலும், உயரமான தோற்றமுடையவரும் நீண்ட மூக்கினையுடையவர்களுமான ஆரியர். இவர்கள் கி.பி. 2000-1500 காலப்பகுதியளவில் ஆசியாவின் ஒன்றில் Arcticor, Caucasian பகுதி யிலிருந்து வந்து குடியேறியவர்கள். வடமொழி பேசுபவர்கள்" இன்று தென்னிந்தியாவில் அடர்த்தியாக வாழ்வோரும், தமிழ், கன்னடம், தெலுங்கு, மலையாள மொழிபேசுபவர்களும். அன்று சிந்துவெளிப் படுக்கையில் வாழ்ந்தவர்களுமான "திராவிட இனத்தவர் இவர்கள். ஆரியர்களது நிறத்திலிருந்தும் உருவ அமைப்பில் இருந்தும் வேறுபட்டவர்கள். மூன்றாமவர் காடு, மலைகளில் வசித்து வந்த மலைவாசிகள் கறுத்த நிறமும், குள்ள உருவமும், சப்பை மூக்கும் கொண்ட கோலர், பில்கள் முண்டர் (Kols, Bhils Mundas) இனம் சார்ந்த மலைவாசிகள்[1]. ஆரியர்கள் இந்தியாவுக்குள் நுழைய முன்னரே மலைவாசியினரும் திராவிடரும் இந்தியாவில் வாழ்ந்து கொண்டிருந்தனர். ஆரியர் குறித்த எழுத்து மூலச் சான்றுகளாக வேதங்கள் அமைகின்றன. வேதங்களின் முதற்பகுதி இந்தியாவில் எழுதப்படாது. அவர்களது சொந்த ஊரான சைப்பிரியாவில் எழுதப்பட்டுள்ளது என்ற செய்தியை பி.ஜீ.திலக் உறுதிப்படுத்துகின்றார்.[2].

திராவிடர்களது கிறீஸ்த்துவுக்கு முற்பட்ட வாழ்க்கை முறை குறித்தாய் எழுத்துச் சான்றுகள் சில கிடைக்கப் பெற்றிருப்பினும் அவ் எழுத்துக்களை அறிந்து கொள்ளும் ஆராய்ச்சி முற்றுப் பெறவுமில்லை, சமகாலத்தில் முனைப்புடன் முன்னெடுக்கப்படவும் இல்லை. இருப்பினும் கூட ஆராய்ந்து அறியப்பட்ட எழுத்து மூலச் சான்றுகளிலிருந்தும், தொல்லியல் சான்றுகளிலிருந்தும் இவர்களது நாகரிகப்பாங்கினை, மொழிச் சார்பின்றியே அறிந்து கொள்ளப் போதுமானது என்று கொள்ளலாம்.[3].

மொழி, கலை, மருத்துவம், சமயம், அரசியல், அறிவியல் குறித்தாய் உயர் பண்பாட்டு விழுமியங்களுடன் இன்றுவரை வாழ்ந்து கொண்டிருக்கும் திராவிட இனம், தனது தொன்மைமிகு மெய்யியற் சிந்தனை, சமயவாழ்வு குறித்த வளத்தினை, வரலாற்றினைக் கண்டுகொள்ள ஆரியமொழி வழியாகவும், ஆரியசிந்தனை வழியாகவும் முயன்று கொண்டிருப்பது ஏன் என்கின்ற வினாபுரியாத புதிராகவே அமைகின்றது. திராவிட சமய, சிந்தனை வரலாறுகள் ஆரிய மாயைக்குள் அமிழ்ந்து போய் உள்ளது. மேலும் வரலாற்றின் ஆரம்ப காலங்களில் ஆரிய பிராமணீய சிந்தனைகளாலும், செயல்பாடுகளாலும் அழிக்கப்பட்டும் அல்லலுக்கு உள்ளாக்கப்பட்டும், கையறவு நிலைக்குள் தள்ளப்பட்டதுமான திராவிடஇனம் தனக்கெனவுள்ள வரலாற்றுத் தடயங்களையும், அருகிய நிலையில் தானும் தோற்றம் பெற்றிருந்தநூல் முகங்களைக் கொண்டும் தனித்துவமான சமய, சிந்தனை வரலாற்றினைக் கண்டுகொள்ள முடியாமைக்கான காரணம்தான் என்ன? நாகரிக வாழ்வியலைக் கொண்டதோர் மொழிக் குழுமத்திற்கு, வழிநடத்தும் மெய்யியற் சிந்தனைப் பாங்கும் சமய அனுட்டான முறைமைகளும் நிச்சயமாக இருந்திருக்கவே செய்யும். அதன்மூலம் மிகத் துல்லியமானதும் தெளிவானதுமான சிந்தனைகளைக் கண்டுகொள்ள முடியும். இத்தகைய கருத்தமைவை மனதிருத்தி ஆரியரது வரலாற்றில் மறைக்கப்பட்ட, மறுக்கப்பட்ட பக்கங்களில் பார்வை செலுத்துகையில் திராவிட வரலாறு புதியதாய் புலரும். எம்முன்னோரின் செம்பாங்கான சிந்தனைகளையும், செயற்பாடுகளையும் வெளிக்கொணரவும் முடியும்.

இந்திய மெய்யியற் சிந்தனை ஆராய்ச்சியாளர்கள், ஆய்வின் பொருட்டாய், காலவகுப்பினை வேதகாலத்திலிருந்தே ஆரம்பிப்பர். எழுத்து மூலச்சான்றுகள் இங்கிருந்துதான் கிடைக்கப்பெற்றதால் இங்கிருந்துதான் தொடங்குகின்றோம் என்பர். வடநாட்டு மெய்யியற் சிந்தனை ஆராய்ச்சியாளர்கள் ஆரம்பித்து வைத்த இந்த முறைமையிலேயே, இவ் ஆராய்ச்சிகளில் ஈடுபாடுகொண்ட மேலைநாட்டு அறிஞர்களும் பயணித்தனர். 1955ம் ஆண்டு காலப்பகுதியில் மொகஞ்சதாரோ, ஹரப்பா நகரங்களில் கிடைக்கப்பெற்றிருந்த தொல்பொருள், எழுத்துச் சான்றுகளுக்குப் பின்னராயும், இந்நிலையே தொடர்வது சிந்தித்தற்குரிய விடயமாகும். சிந்துவெளியில் கிட்டிய ஏடுகளின் எழுத்துகளின் ஆய்வுகள் முடிவுநிலையினை எட்டாதபோதும், தொல்பொருள் ஆராய்ச்சியின் பேறாய் பெறப்பட்டவை பூரணப்படுத்தப்பட்டதோர் வரலாற்றினை அறிந்திட உதவும்.[4]

சிறிதளவிலாய் சிந்துவெளிப் பகுதியில் நடந்த ஆய்வுகளை நடத்திய சேர் மார்ஷல் போன்ற ஆய்வாளர்கள் வேதகாலத்து வாழ்க்கை முறைக்கும் அதற்கு முற்பட்ட சிந்துவெளி வாழ்க்கை முறைக்கும் இடையில் அருகிய தொடர்போ நெருங்கிய தொடர்போ இருந்து இருக்கவில்லை எனக் குறிப்பிடுவது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். இக்கருத்தமைவு மேலுமாய் இது சார்ந்த ஆய்வுகளின் தேவைப்பாட்டினை பிரேரித்து நிற்பதாய் அமைகின்றது. மேலும் வேதகாலத்துக்கு முன்னராகவே, சீரமைக்குமிகு வரலாறொன்று இந்தியாவில் இருந்திருக்கிறது. என்பதைக் கோடிட்டுக் காட்டுகின்றது. ஆனால் இது ஆரியர்களுக்குச் சொந்தமானதல்ல.

இந்திய வரலாற்றையும், இந்தியச்சிந்தனை மரபையும் வடிவமைத்து ஒழுங்கு படுத்துவதில் அதீத ஈடுபாடு காட்டிய சிந்தனையாளர்கள் வடநாட்டைத் தளமாகவும், வடமொழியைப் பேசும் மொழியாகவும் கொண்டவர்கள். தெய்வத்தைப் பாடிப் பரவும் 'தேவபாஷை' வடமொழியே எனக்கண்டு காட்டியவர்கள். இவர்கள் அமைத்து வைத்த தளமே மேற்கத்தேய ஆய்வாளர்களுக்கும் மேடையாய் அமைந்தது. இவர்களது ஆராச்சிப் பாங்கும் ஏற்கனவே உள்ள தளஅமைப்பையே கொண்டதாகை யால் அவர்கள் காட்டிய வழியிலேயே இவர்களும் வளர்த்துச் சென்றனர். மேற்கத்தேய ஆய்வாளர்களான 'மாக்ஸ் முல்லர்' போன்றவர்கள் வேதத்தில் காணப்பெறும் தெய்வங்களின் பெயர்களை ஒத்த பெயர்கள், கிரேக்கத்துத் தெய்வங்களோடு ஒத்துக் காணப்பெறுகின்றன[5]. என்கின்ற கருத்தமைவைப் பெற்றதுடன் திருப்திப்பட்டுக் கொண்டார்கள்.

இந்திய மெய்யியல் சிந்தனைகளை ஆராய்ந்த அறிஞர்களுள் இலைமறைகாய் போல் சில ஆய்வாளர்கள் குறிப்பாக 'பி.ரி. ராஜ்' போன்றோர் இந்திய மெய்யியற் சிந்தனைகளினதும், இந்தியச் சமயங்களினதும் வரலாற்றுப் போக்கினையும், வளர்ச்சிப் போக்கினையும் பின்வருமாறாய் வகுத்துக் காட்டினர்.

அ. கிறிஸ்துவுக்கு முற்பட்ட 4000-3000 ஆண்டு காலப்பகுதியைச் சார்ந்த மொகஞ்சதாரோ, ஹரப்பா, நாகரிகத்தின் சமய வாழ்வும் சமய மெய்யியலும்.

ஆ. ஹோமங்களையும் (யாகங்கள்) பலியிடுதலையும் அடிப்படையாகக் கொண்ட கி.மு. 2000 - 1500 காலப்பகுதியைச் சார்ந்த பழமை வாய்ந்த ஆரிய சமயமும் மெய்யியலும்

இ. கி.மு.900 ஆண்டு காலப்பகுதியைச் சார்ந்த ஆழமான கருத்துக்களைக் கொண்ட உபநிடதக் கருத்தியற் சிந்தனைக்காலம்.

ஈ. கி.மு 8ம் நூற்றாண்டு காலப்பகுதியைச் சார்ந்த ஜைன, பௌத்த மெய்யியல்களும் சமயங்களும்

உ. கி.பி 8ம் நூற்றாண்டு சார்ந்த குமரில்ல, மௌரியர் சங்கரர் போன்றவர்களின் விமர்சன மெய்யியற்காலம்[6].

சைவசித்தாந்த கருத்துக்களின் பிறப்பாக்கத்தை மொகஞ்சதாரோ, ஹரப்பாகால சிந்தனைகளிலிருந்து வளர்த்துச் செல்வதே இங்கு பொருந்தும் எனினும், பாரம்பரியமாக சைவசித்தாந்தத்தின் வரலாற்றினை வரைவோர் வேதகாலத்திலிருந்தே சித்தாந்தத்திற்கு உவப்பான கருத்தமைவுகளைத் தேடிக் கண்டு கொள்ளும் மரபே சிறப்பெனப் பேணுவதால் இக்கட்டுரையும் அவ்வழிச் சென்று வருவதன் வழியாக அங்கிருந்து வருவித்தும், வருடித்தும் பெற்றுக்கொண்ட கருத்துக்களை இங்கு குறிப்பிட்டு அதன் பொருத்தபாட்டினை மதிப்பிடும் பணியை, வாசகர்களிடமாய் சமர்ப்பிக்கின்றது.

வேதம் நான்கு. முறையே அவை இருக்கு, யசூர், சாமம், அதர்வணம் ஆகும். காலம் கி.மு 2000 - 1500. இக்காலத்தேய ஆரியர்கள் இயற்கைச் சக்திகளை நேரடியாகவே வழிபட்டனர். ஆரியர்களிடம் உருவவழிபாடோ, வழிபாட்டுத் தலங்களோ இருந்திருக்கவில்லை[7].

இயற்கைச் சக்திகளை விண்ணைச் சார்ந்தவை, மண்ணைச் சார்ந்தவை, விண்ணுக்கும் மண்ணுக்கும் இடைப்பட்டவை என வகைப்படுத்தி வழிபட்டனர். இங்கு இயற்கைச் சக்திகளே தெய்வீக அந்தஸ்தினைப் பெற்றிருந்தன. வழிபாடுகள் செல்வத்தையும், மகிழ்வையும், பாதுகாப்பையும் எதிர்பார்த்ததாய் இடம்பெற்றன. இவ்வுலகமே வாழ்வின் பெரும் பேறாய்க் கருதப்பட்டது. இக்காலத்து மக்களிடம் தீர்க்கமான எண்ணங்களோ, மெய்யியற் சிந்தனைகளோ இருந்திருக்கவில்லை. சூரியனைச் சந்திரனை, காற்றை, ஆகாயத்தை, பூமியை நெருப்பை வழிபட்டனர். வேதகால மக்கள் இறைவனின் இருப்பை சரியாக உணரத் தவறினர் என்கிறார் சி.வி.நாராயணஐயர்[8].

வழிபாட்டின் வளர்ச்சி நிலையில் உருத்திரன் என்கின்ற கடவுளைச் சிருஷ்டித்தனர். உருத்திரன் என்கின்ற சொல் ஊழையிடுபவன் என்கின்ற வேர்ச்சொல்லின் வழிவந்தது. மழைக்காலத்தில் மருதர் போன்ற கடவுளர்களுடன் ஊழையிட்டுக் கொண்டு திரிந்து பெருமழை, இடிமுழக்கம், மின்னல் போன்ற பயங்கர நிகழ்வுகளைத் தோற்றுவித்து "நான்கு கால் பிராணிகளையும், இரண்டுகால் மனிதர்களையும் அழிப்பவன் மேலும் கொள்ளை வழிப்பறி செய்வோரின் தலைவராக விளங்குபவர் என்றே கண்டுகொண்டும் கற்பித்துக்கொண்டும் வழிபட்டனர். மேலும் "தங்கள் சினத்தால் மக்களையும் பசுக்களையும் கொல்லாதீர்கள்" (இருக்கு வேதம் 1:114:8) எனப் பயத்தால் வேண்டிக் கொண்டனர். இங்கு பயம் மட்டுமே வழிபாட்டின் வித்தாய் அமைந்தது"

ஆரியர்களது மனோபாவத்தை வெளிப்படுத்தும் சுலோகம் (இருக்குவேதம்VI 100.8) பின்வருமாறு அமைகின்றது. "நாங்கள் நாற்புறமும் அரக்கர்களால் சூழப்பட்டுள்ளோம். அவர்கள் இறை நம்பிக்கையற்றவர்கள். யாகம் செய்யாதவர்கள். அவர்களுடைய ஆச்சாரங்கள் எங்களுடையது போல் இல்லை. அவர்கள் மனிதர்கள் இல்லை. பகைவர்களை அழித்தொழிக்கும் இறைவா இந்த அரக்கர்களை அழிப்பாயாக" இந்த ஆரியர் குறிப்பிடும் அரக்கர்கள் யார் எனின் இவர்கள் முன் வாழ்ந்த திராவிடர்களே என்பதனை ஊகித்துப் பெறலாம். ஏன்எனில் மலைவாழ்மக்கள் நாகரிக வாழ்வினுள் இன்றும் வராதவர்கள். எனவே காள்பொப்ரின் ஊகமும் நிராகரிப்பும் என்கின்ற முறையியல் மூலம் மேற்குறித்த கருத்தமைவைப் பெறலாம். மேலும் ஆதிகால வடமொழி நூல்கள், இந்தியர்களை அரக்கர்கள், குரங்குகள், தஸ்யுக்கள் (அடிமைகள்) என்றவாறாகவே இளக்காரமாக குறிப்பிட்டிருந்தன[9].

ஆரியர்களது வழிபாட்டு முறைமை முதிர்ச்சியற்ற குழந்தைத் தனமானது. வெற்றியிலும் தோல்வியிலும், இன்பத்திலும், துன்பத்திலும் போர்க்காலத்திலும், போர் ஓய்ந்த காலத்திலும் விவசாயத்திற்காகவும், கால்நடைகளுக்காகவும் நல்ல சிறந்த ஆண், பெண் குழந்தைகளைப் பெறுவதற்காகவும், மழைக்காகவும் எதிரியிடமிருந்தாய் தம்மைக் காத்துக் கொள்வதற்காகவும், காரியங்கள் கைகூடவுமே வழிபாடியற்றினார். உலகியல் மட்டத்தில் மட்டுமாய் உன்னத நிலையை அடைய விரும்பினர். சிந்துவெளி மக்கள் அன்று வருடித்துக் கொண்டிருந்த உயர் சிந்தனைகளையோ இன்று சைவசித்தாந்திகள் கொண்டிருக்கும் கருத்தமைவுகளையோ

வேதகாலம் கொண்டிருக்கவில்லை. இந்நிலையில் சைவசித்தாந்தத்தின் முன்னோடிக் கருத்துக்களை வேதங்களிலிருந்ததாய பிறப்பாக்கிட முயன்றனரோ புரியவில்லை.[10]

வேத காலத்தின் பிற்பகுதியில் உருத்திரன் என்கின்ற தெய்வம் உயர்ந்த குணாம்சங்களைக் கொண்ட ஒருவராகச் சித்திரிக்கப்படுகின்றார் என மெய்யியற் சிந்தனையாளர்கள் எடுத்துக் காட்டினர். உருத்திரன் என்கின்ற சொல் பிற்காலத்தில் சிவனை விழித்து நிற்கும் சொற்களில் ஒன்றாதலால் அச் சொல்லமைவு வேதகாலத்திலும் காணப்பட்டதெனக் காட்டிப் பெருமைப்பட்டுக் கொண்டனர். ஏற்கனவே குறிப்பிட்டதைப்போல் சி.வி.நாராயணஐயர், கடவுள் என்கின்ற கருத்தமைவை இருக்கு வேதகால மக்கள் சரிவர உணர்ந்திருக்கவில்லை என்பதை இவ்விடத்தில் மனத்திருத்திக் கொள்வோம். பின்னர் அவரே சாயணர், என்பவரது கருத்தின் அடிப்படையிலாய் உருத்திரன் என்கின்ற சொல் குறித்து அவ்விளக்கத்தையே மேற்கோளாய்க் கொண்டு "ருத்" என்பது துன்பம் அல்லது அதற்கான காரணம் உருத்திரன் துன்பத்தை நீக்குபவர் என எடுத்துக்காட்டுகின்றார். இக்கருத்தைத் துணைக்கொண்டு இருக்குவேத சுலோகம் (VI.74.3) "நாங்கள் செய்யக்கூடிய யாதாயினும் எங்கள் உடலைப் பற்றியுள்ள அதனை நீக்குவீராக" என்கின்ற சுலோக வழி சைவம்சார் அர்த்தம் இருக்குவேத காலத்தில் இருந்திருக்கிறது எனக் காட்ட முனைகின்றார். மேலும், ஐயர் அவர்கள் உருத்திரன் என்கின்ற சொல் சிவனாகும் முறைமையைச் சித்தாந்த கௌமுகி அடிப்படையில் சோ - என்னும் சொல்லுக்கு மெலிவாக்குதல், தேய்த்தல் எனப் பொருள் உண்டு எனக் கண்டு சப்தகல்ப தருமத்தின் பிரகாரம் உருத்திரன், சிவன் ஆகிய இரு சொற்களும் பாவத்தை நீக்குபவர் எனப் பொருள் தருகிறார்[11]. இவ்வாறாக சிந்தனைவரலாற்றாய்வாளர்கள் வருடித்துப்பெறுவதிலும் வருவித்துப்பெறுவதிலும் ஏன் பெருமை கொண்டனரோ தெரியவில்லை. ஒரு வேளை தேவபாஷையில் சிவன் குறித்த கருத்தமைவுகளைக் கண்டு கொண்டால் மட்டுமே தெய்வீக அந்தஸ்துக் கிடைக்கும் என எண்ணினரோ அல்லது ஆரிய மாயை வழி வந்தவர்கள். திராவிட சிந்தனைகளிலும் வழிபடு நிலைகளிலும் தம்சாகியம் சார்ந்தவர்களை எப்போதுமாய் முதன்மைப்படுத்திட முயன்றிடும் உள்நோக்கிலோ தெரியவில்லை.

ஓமங்களிலும் யாகங்களிலும் அவிர்ப்பாவமாக உயிர்ப்பலியையும், உணவுக்காய் உயிர்கொல்வதிலும் நன்கு தேர்ச்சி பெற்றவர்கள் ஆரியர்கள். இதனால்தான் தமிழ் வேதம் திருக்குறள், கொல்லாமை என்கின்ற அதிகாரத்தில் அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன் உயிர் செகுத்துண்ணாமை நன்று[12]. என்கின்றது. ஆரியர்கள் இரும்பில் உருவான ஆயுதங்களைப் பயன்படுத்தினர். பயன்படுத்துவதிலும் வல்லவர். தற்காப்புக் கலையில் மட்டுமல்ல, எதிர்த்தாக்குதலிலும் போர்த்திறன் கொண்டவர்கள் இவர்களே. ஏற்கனவே இந்தியாவில் வாழ்ந்து கொண்டிருந்த திராவிடர்களை அழித்தவர்கள் சிந்துவெளித் திராவிடரை அழித்தும், விரட்டியும், அல்லல் படுத்தியும் துன்பம் விளைவித்தவர்கள். சிந்துவெளி நாகரிகத் திராவிடரைத் துரத்தி அடித்து விரட்டி அவ்விடங்களைத் தமது குடியிருப்பாக்கினர் என்கின்ற கருத்தமைவை வரலாற்று ஆசிரியர் டபிள்யூ.எச் மோர்லண்டும் ஏற்றுக் கொண்டிருக்கின்றார்[13].

திராவிடரது வழிபடு முதற்பொருளான சிவனை, வேதகாலப் பிற்பகுதியில் உருத்திரன் என நாமகரணம் செய்து, தமது மெய்யியற் சிந்தனையின் செம்மைப் பொருட்டாய், ஆரியர் வேதத்துள் புகுத்தினர் என்பதே ஊக வழி உறுதிப்படுத்தக் கூடியதாய் உள்ளது. சிவன் என்கின்ற சொல் இருக்கு வேதத்தில் எங்குமில்லை. யசூர் வேத ஸ்ரீருத்திரத்தில் 'நமசிவாயச', 'சிவதாரயச', என்னும் சொற்றொடர்கள் இடம்பெறுகின்றன. சைவசித்தாந்த பஞ்சாட்சர மந்திரத்திற்கு இக்கருத்துக்கள் உடன்பாடானது என எடுத்துக் காட்டுவார் சில சிந்தனை ஆய்வாளர்கள். எனினும் பேராசிரியர் ஹிரியண்ணா 'உருத்திரன் குறித்ததாய் வேதத்தில் பேசப்படும் பாடல்கள் மிகச் சிலவென்றும் அவற்றில் கண்டுகொள்ளக் கூடியவை முறையே, மலைகளில் உறைதல், சடைமுடி தரித்தல், தோல் உடை அணிதல் என்பவையே' என்கின்றார். இக்கருத்து இங்கு ஒப்பீடு செய்யத்தக்கது. இவ்விடத்தில் மேலும், பேராசிரியர் சி.க. சிற்றம்பலத்தின் கூற்றென்றினைக் குறிப்பிடப்படல் பொருந்தும். ஆரியக் கலாசாரம், சிந்துவெளிக் கலாசாரத்தின் வழிப்பட்டதே" என்கின்றார்[14]. எனவே சிந்துவெளி நாகரிகத்தின் செம்பாங்கான கருத்தமைவுகள் ஆரிய நாகரிகத்தவரால் எடுத்தாளப்பட்டதென்பதே வெளிப்படை.

வேதகாலத்தை ஒட்டி வரும் பிராமண காலத்துச் சிந்தனைகளை நோக்கின் இங்கு உருத்திரன் எனும் எண்ணக்கரு கலக்கமுற்றதொன்றாகவே காணப்படுகின்றது. கௌசீதஷி, ஐதரேய பிராமணங்கள் உருத்திரனின் பிறப்பு பற்றி வேறுபட்ட கருத்துக்களை குறிப்பிடுகின்றன. கௌசீதஷியில் உருத்திரனின் எதிர்கணியமான அச்சம் விளைவிப்பவன் என்பது குறித்த குறிப்புக்கள் இல்லை. மாறாக உருத்திரன் பவ, சர்வ பசுபதி உக்கிரமாக தேவ, ஈசான என்கின்ற பெயர்கள் பொருந்தும் என்கின்றது. உருத்திரனின் இயல்புகள் இங்கும் நிர்ணயிக்கப்படவில்லை. தெளிவாகவும் இல்லை. இறைஇருப்பு நிச்சயிக்கப்பட்ட பின்னர் தான் இறையியல்பை நிச்சயித்துக் கொள்ளலாம்.

உபநிடதங்கள் இந்திய மெய்யியல்களின் மையக்கருத்துக்களை உள்வாங்கியிருப்பவை. வேதத்தின் முடிவுகளாய் முகிழ்ந்தவை என்கின்ற கருத்தமைகளும் உபநிடதங்களுக்குண்டு. பிரம்மம் ஆன்மா, குறித்த கருத்தமைவுகள் உபநிடதங்களில் இடம்பெற்றிருப்பினும் அவற்றின் இயல்பு குறித்த தெளிவு நிலை இல்லை. பிரம்மனே நிறைவுடைய தூய்மைப் பொருள் என உபநிடதங்கள் குறிப்பிட்டாலும் கூடவேறு சில உபநிடதங்கள் ஆன்மாவை வரையறைக்குட்பட்டது என்று குறிப்பிடும் அவ்வேளை, பிரம்மத்திற்கு நிகரானவை என குறிப்பிடத் தவறவில்லை.[15]. வரையறைக்குரியதும், வரையறையற்றதும் சமநிலை கொண்டவை என குறிப்பிடல் பொருந்தாது. பொருள் என்பதற்கு பெயர் (Name) அமைப்பு (form) செயற்பாடு (Action) இருத்தல் வேண்டும்.

மேலும் தொடக்கநிலை உபநிடதங்கள் மாயையை மாயாக்காட்சி அதாவது Illusion என்கின்ற கருத்தமைவாய்கானது உற்பத்திக்குரிய பரிக்கிரண சக்தி என ஏற்கின்றன. பின்வந்த உபநிடதங்கள் இக்கருத்தமைவிலிருநது திரிபுற்று மாயை என்பது மர்மமானது விளங்கிக் கொள்ள முடியாதது என்றவாறாய் அழுத்திக்

குறிப்பிடுகின்றன. உபநிடதங்களைப் புரிந்து கொள்ளல்களில் உள்ள முரண்பாடுகளை சரி செய்ய வாதராயணர் பிரம்ம சூத்திரத்தை யாத்து உதவினார். பிரம்சூத்திரத்தை புரிந்து கொள்ள முயன்றோர்களின் முயற்றுக்கள் முறையே நிலகண்டரால் நீலகண்ட பாஷ்யமாக சிவனை முழுமுதல் பொருளாய் கொண்டு உருவானது. சங்கரரால் சங்கரபாஷ்யம் உருவாக்கப்பெற்று முழுமுதல்பொருளாய் நிர்குணப்பிரம்மம் கற்பிக்கப்பட்டது. தொடர்ந்து இராமானுஜயரது வேதாந்தத்திலிருந்து வேறுபட்டாலும் திருமாலை முதல் பொருளாய்க் கொண்டு உருவாக்கப்பட்டது. மேலும், மத்துவரது மத்துவ வேதாந்தம் இராமானுஜயரது வேதாந்தத்திலிருந்து வேறுபட்டாலும் திருமாலையே முதற்பொருளாகக் கொண்டு உருவானது.[16].

நூல் ஒன்று நூல்வழிப்பிறந்த ஏற்பாடுகள் பல. எனவே இந்திய மெய்யியலில் வெவ்வேறாய தத்துவக் குழுமங்கள் உருவாவதற்கு உபநிடதங்கள் வழிசமைத்தனவே தவிர சமய அனுட்டானங்களை நேரடியாகவே வழங்கி ஆன்மா ஈடேற்றத்திற்கு வழிசமைக்கவில்லை. தத்துவ விசாரணைக்கு மட்டும் தளம் அமைத்தன. ஆதலால் ஆன்ம ஈடேற்றத்துக்காய் நான்கு மார்க்கங்களை முன்மொழிந்த சைவசித்தாந்த சமயத்திற்கான முன்னோடிச் சிந்தனைகளை உபநிடதங்களில் தேடுதல் தேவையோ என சிந்திக்க வைக்கின்றது.

ஆகமசிந்தனைகளை நோக்கின், ஆகமங்கள் காலத்தால் பிந்தியவை காலவரை யறையினை வரைவதில் வரலாற்று ஆசான்களுக்கிடையே கருத்தொருமிப்பு இல்லை. வேத உபநிடதங்களுக்கு அதிமுக்கியத்துவம் வழங்கும் இந்திய சிந்தனை ஆராய்ச்சியாளர்கள் அத்துணை முதன்மையில் சிறு அளவினதே ஆகமங்களுக்கு வழங்கினர்[17]. ஏகம்ஷத், அகம்பிரம்மாஸ்மி (Ekamsat) (AhamBrahasmi) என்கின்ற சிந்தனைப் பாங்குகள் வலுப்பெற்றிருந்த காலத்தில், வேதகால வழிபாட்டு முறை வழக்கிழந்த காலத்தில், பழைய மரபுகளும், பழைய சிந்தனைகளும் ஒன்று சேர்ந்து ஒன்றையொன்று அனுசரித்தும் முரண்பட்டும் பயணிக்கையில், மீண்டும் ஆகமங்கள் வழியாகப் பிரமாணியத் தலையீடும், பலியிடல் சம்பிரதாயங்களும் புத்தூக்கம் பெறுகின்றன. ஆகமங்கள் சைவம், சாக்தம், வைணவம் சார்ந்தவை என வகைப்படுத்தப்பட்டுக் காணப்படினும் இவை காலத்தால் பிந்தியவை.

இதுவரையிலான ஆய்வுகள், சைவசித்தாந்த முன்னோடிச் சிந்தனைகளை வடமொழி நூல்கள் கொண்டிருக்கவில்லை என்கின்ற நிறுவலையே முயற்றுக்களாக கருதாமல், அங்கிருந்து பெறப்படுகின்ற கருத்தமைவுகள் வருடித்தும் வலிந்தும் பெறக்கூடியனவாகவே இருந்தன என்பதனை எடுத்துக் காட்டுவதையே நோக்கமாகக் கொண்டதாகும். இத்தகைய இரண்டாம்பட்ச முயற்சிகளைக் காட்டிலும் கி.மு 4000-3000 முற்பட்ட காலத்தேய சிந்துவெளிச் சின்னங்களில் இருந்தும் மொழி எச்சங்களில் இருந்தும் பெறக்கூடியவைகள் கூடிய உடன்பாட்டைச் சைவசித்தாந்தத்துடன் கொண்டிருப்பதையும்: மேலுமாய் ஒரு இனத்தின் அதாவது திராவிட இன மக்களின் நாகரிக வாழ்க்கைப் பாங்கினையும் கண்டுகொள்ளவும் பெரிதும் உதவுவதாக அமையும்.

1955 ம் ஆண்டு காலப்பகுதியில் சேர் மார்ஷல் தலைமையில் சிந்து மாகாணத்து லார்க்னா மாவட்டத்திலுள்ள மொகஞ்சதாரவிலும், பஞ்சாப்பு மாகாணத்தில் மாண்டகோமாரி மாவட்டத்தில் உள்ள ஹரப்பாவிலும் அகழ்வாராய்ச்சிகள் இடம்பெற்று இருந்தன[18]. இதன்வழியில் கி.மு 4000 - 3000 இடைப்பட்ட காலப்பகுதியில் உயர் நாகரிகம் கொண்ட மக்கள் கூட்டமொன்று, வாழ்ந்திருந்தமையை உறுதி செய்கின்றன. எழுத்து வடிவம் கொண்டதும், கொண்டிராததுமான இலட்சனைகள், முத்திரைகள், சிற்பங்கள், சக்தியின் வடிவங்கள், விக்கிரகங்கள், சிவலிங்கங்கள், சித்திரதகடுகள் உருக்குலைந்த கட்டுமானச் சிதைவுகள், உருக்குலைந்த நிலையிலான கேணிகள், வடிகால் வாய்க்கால்கள், இங்கு வாழ்ந்த மக்களின் வாழ்க்கை முறை குறித்த தடயங்களாக அமைகின்றன. இத்தகைய பண்பாட்டு விழுமியங்களைக் கொண்ட மக்கள் கூட்டத்தினரின் இனக்குழுமம் குறித்தும், மொழி குறித்தும் சமயச் சிந்தனைகள் குறித்தும் ஆய்வுகள் தேவை. ஆய்வுப் பேறுகள் மக்கள் கூட்டத்தினரைப் புரிந்து கொள்ளவும், தொன்மையைத் தெரிந்து கொள்ளவும் உதவும்.

ஆய்வினைச் சிறப்பாய் வழிநடத்த ஈடுபடுத்தப்படும் முறையியல்கள் குறித்துக் குறிப்பிடல் இவ்விடத்தில் பொருத்தமாய் அமையும். குறிப்பாகக் குற்றவியல் ஆய்வுகளில் எழுத்து மூலச் சான்றுகளோ, கண்கண்ட சாட்சியங்களோ இல்லாதவிடத்து தடயங்களை மட்டுமே சான்றுகளாகக் கொண்டு மூலத்தை தெரிந்து கொள்ளும் முறைமை இன்றும் நீதிமன்ற நடைமுறைகளில் உண்டு என்பதனைக் கருத்திருத்தல் வேண்டும். கால் பொப்பரால் முன்வைக்கப்பட்ட மெய்யியல் அறிகை முறைகளில் ஈடுபடுத்தப்படும் பொய்ப்பித்தல் தத்துவம், ஊகமும், நிராகரிப்பும் போன்ற முறையியல்களும் கருதுகோள்களை அமைத்து வாய்ப்பானதை தெரிதல். மேலும் மொழிச் சிக்கலே மெய்யியலின் சிக்கல் என்கின்ற கருத்தமைவுக்கு தெளிவுபெற விக்கின்ரைன் முன்வைத்த படக்கொள்கை முறைமைகள் இங்கு ஈடுபடுத்தப்படுகின்றன. மேலுமாய் ஒப்பீடு செய்தல், தொகுத்தறிதல் ஈர்த்துப் பெறல், வரலாற்று நோக்கு போன்ற முறையியல்களையும் பிரயோகித்தலின் மூலம் தெளிவினைப் பெறலாம்.

ஏற்கனவே இக்கட்டுரையின் வழிகுறிப்பிட்டதைப் போன்று இந்தியாவின் பூர்வீக குடிகள் மலைவாழ் சாதியினர், திராவிடர், ஆரியர். கி.மு.2000 - 1500 காலப்பகுதியில் சுமேரியாவில் இருந்து இந்தியாவுக்குள் புகுந்தவர்கள் ஆரியர்கள். கி.மு 3000 ஆண்டுகளுக்கு முற்பட்டது. மொகஞ்சதாரோ, ஹரப்பா நாகரிகங்கள், இந்த நாகரிகத்தை அழித்தவர்களும் அவர்களது சமய வாழ்வை சீர்குலைத்தவர்களும் ஆரியர்களே[19]. மேலும் கி.மு 1800 காலப்பகுதியில், இன்றைய ஈரான் ஈராக்கிலிருந்து பகுதிக்குடிபெயர்ந்த ஒரு தொகுதி மக்கள், ஆப்கானிஸ்தான் வழியாக சிந்துவெளியில் வந்து குடியேறினர். குடியேறிய மக்கள் அங்கு வாழ்ந்த மக்களுடன் போர் தொடுத்தனர். வெற்றி கொண்டனர். அங்கு வாழ்ந்த திராவிட இனத்தவர்களின் கோட்பாடுகள் சிலதை தங்களுடன் சேர்த்துக் கொண்டனர். திராவிடர்களுடன் திருமண உறவையும் ஏற்படுத்திக் கொண்டனர். என்கின்ற கருத்தினை இந்துமதம் வேதகாலம் என்கின்ற நூலில் எம்.எஸ் மரியதாஸ் குறிப்பிடுகின்றார்.[20]

புதிய கற்காலத்தின் தோற்றத்தில், கிமு. 3000 ஆண்டு காலப்பகுதியில் பழந்தமிழர் தமிழகம் நோக்கிப் பரந்தனர். மேலும், சிந்துவெளி நாகரிகத்திற்கு வித்திட்டதும் புதிய கற்கால குடியிருப்புக்களே. மேலும், பழந்தமிழர் முதாதையரின் ஒரு பகுதியினர் சிந்துவெளியை மையமாகக் வைத்து வட இந்தியாவரை படர, இன்னொரு பகுதியினர் மகாராஷ்ரம் வழியாக தென்னிந்தியாவை அடைந்தனர். மேற்குறித்த வரலாற்றுக்குறிப்புகள் வரலாற்றாசான் பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் அவர்களால் முன்வைக்கப்பட்டது[21]. இக் கூற்றுகளை அடியொற்றிப் பார்க்கின்றபோது, சிந்துவெளியல் வாழ்ந்த மக்கள் திராவிடர் மட்டுமல்ல. அந்த நாகரிகத்தைத் தொடக்கி வைத்தவர்களும் திராவிடர் என்பது தெளிவாகின்றது.

மேற்குறித்த சான்று வழியாக திராவிடர்கள் சிந்துவெளியில் வாழ்ந்தனர் அவர்கள் ஆரியர்களால் அழிக்கப்பட்டனர் அல்லது துரத்தப்பட்டனர். அக்காலத்திலேயே இந்தியா முழுவதும் திராவிடர் பரந்து வாழ்ந்தனர். தென் பாரதத்தை தமது தாயகமாக்கிட அங்கு செறிந்து வாழ்வதில் ஆர்வம் காட்டினர் என்கின்ற கருத்துகளைத் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம்.

தகவல்கள் தரும் தெளிவின் பேறாக ஆரிய சமயசிந்தனைகளுக்கு முற்பட்டவையே திராவிட சமய சிந்தனைகள் என்பதும் ஆரிய சமய சிந்தனைக்குள் சில திராவிட சிந்தனைப் போக்குகளை உள்வாங்கினர் என்பதும் புலனாகின்றன. திராவிடர்கள் என அழைக்கப் பெறுபவர்கள் இன்று தமிழ்மொழியை தாய் மொழியாகக் கொண்ட திராவிடர்கள் தமிழ்மொழி கன்னடம், தெலுங்கு, மலையாளம் போன்ற மொழிகளையும் பேசுபவர்களாகவுள்ளனர். தேசியவிநாயகம்பிள்ளை, மனோன்மணியம் என்கின்ற நூலில் இக்கருத்தினை உறுதிப்படுத்துகின்றார்[22]. பாரதியாரின் உள்ளுணர்வின வெளிப்பாடாய் அமைந்த பாடலொன்றில் மொழி வகைப்படுத்தும் உணர்வும், வர்த்தகத்தை வளம்படுத்தே அறிவுரையும் வெளிப்படுத்தப்படுகின்றது[23]. இக்கருத்தமைவுகள் எல்லாம் திராவிடரின் தொன்மையையும், பண்பாட்டுச் சிறப்பையும் அநாதிவாசிகள் என்கின்ற பெருமையையும் உணர்த்திடப் போதுமானதாகின்றன.

சிந்துவெளித் திராவிடரது மொழி குறித்த ஆய்வுகள் சைவசித்தாந்த சமயத்தின் தொன்மையை உணர உதவும். இந்தியப் பண்பாட்டில் தமிழும், தமிழகமும் என்கின்ற நூலில் க.நெடுஞ்செழியன் "சிந்துவெளி எழுத்துக்களைப் படிக்கும் முயற்சியில் தொடர்ந்து ஈடுபாடு கொண்டிருந்த இரஸ்சியா (Russia) நாட்டு அறிஞர்கள். இம்மொழி அமைப்பு திராவிடமொழி சார்ந்தவை என்கிறார்.

திராவிடர் சமய வாழ்வியலையும் சிந்துவெளி சமய வாழ்வியலையும் ஒப்பிட்ட அல்சின் தம்பதியினர் பழந்தமிழ் திராவிட நாகரிகமும் சிந்துவெளி மக்களும் ஒரே குழுமத்தைச் சார்ந்தவர்கள் என்கின்றார்கள்.[24]. மேலும் சிந்துவெளி நாகரிக எழுத்துக்கள் ஐயம் திரிபு வாசிக்கப்படாது விட்டால் கூட இம்மக்கள் திராவிட மொழியை பேசினார்கள் என்கின்ற எழுத்தமைவை கியாஷ் (Hears) என்கின்ற அறிஞர் வெளிப்படுத்தினார் என மகாதேவர் தனது நூலில் குறிப்பிடுகின்றார்[25]. விரிவஞ்சி வரலாற்று ஆதாரங்கள் மேலுமாய் காட்டாது இன்னும் பல ஆதாரங்கள்

இக்கருத்தமைவை உறுதிப்படுத்திட உண்டு எனக் கூறிக்கொண்டு சிந்துவெளி மக்கள் திராவிட மொழி பேசியிருக்கிறார்கள் என்பதை உறுதிப்படுத்தலாம்.

சிந்துவெளி மக்களது சமய சிந்தனைகளையும் சமய வாழ்வையும் நோக்குகையில் சைவ சித்தாந்தம் இன்று நடைமுறையில் கொண்டிருக்கும் இறைக் கோட்பாடுகளையும், சமய வாழ்க்கையையும் அன்று சிந்துவெளிமக்கள் கொண்டிருந்தனர் என்கின்ற தெளிவுநிலையும், மேலும் இவ்வகைத் தத்துவங்களுக்கும், சமய வாழ்க்கை முறைக்கும் அருகிய தொடர்புதானும் ஆரம்ப நிலையில் இருக்கு வேதகால வழிபாட்டு முறைகளுக்கும் இடையில் இருக்கவில்லை என்பதும் அழுத்திக்குறிப்பிடத்தகும் உண்மையாகும். ஆனால், காலவோட்டத்தில் திராவிடர்களது சமய சிந்தனைகளையும் சமய வாழ்க்கை முறையையும் உள்வாங்கிக் கொண்டும் பிராமணீயத்திற்கு முதன்மை கொடுக்கும் ஆரிய மரபினைத் தொடர்ந்து கொண்டும் தமது சமய சிந்தனைகளை வாழ்க்கை முறைகளை மெருகூட்டிச் செம்பாங்கடையச் செய்வித்தனர் ஆரியர். இதுவே வரலாற்று வழி நின்ற நேர்மை மிகு ஆய்வுகள் பெற்றுத்தரும் உண்மையாகும்.

சமயங்கள் சடவாதச் சிந்தனைகளை அடிப்படையாகக் கொள்ளாது ஆன்மீகத்தை அதாவது தெய்வீகத்தை அடிப்படையாய் கொண்டிருப்பதால் சமயங்களின் தோற்றுவாயை நோக்கிப் பயணிக்கையில் தான் மெய்யியல் சிந்தனைகளை அறிந்திட முடிகிறது. இந்திய மெய்யியலானது இந்திய சமயங்கள் ஊடாகவே வளர்ச்சி பெற்றது என்பது மெய்யிலாளர்களது ஏகோபித்த முடிவாகும். இந்திய வாழ்க்கை முறை தர்மம் (மெய்மை) என்கிற எண்ணக்கருவினை நடுவண் புள்ளியாகவே கொள்கின்றது. சிந்துவெளி நாகரிக மக்களது சமயவாழ்க்கை உருவ வழிபாட்டினையும், தல வழிபாட்டினையும் அடிப்படையாகக் கொண்டது. ஆனால் ஆரியரது முறைமையில் உருவங்களும் இல்லை. தலங்களும் இல்லை. வெறுமனே இயற்கையில் பிரகாசமாகவுள்ள சக்திகளை மட்டுமே வழிபட்டனர். இந்நிலையில் கெகலினது கருத்தமைவொன்றை இவ்விடத்தில் குறிப்பிடுதல் பொருந்தும். கலாசாரம் பண்பாடு இல்லாத பௌதீகவதீதம் (கோட்பாட்டில் விளக்கம்) விக்கிரகங்கள் இல்லாத வெறும் கோவில் போன்றதே அங்கு ஆன்மீகம் இல்லை என்கிறார்.[26]. எனவே கோவிலும் கொண்டாட்டமுமான திராவிட வாழ்க்கை முறைக்கும் சமய சிந்தனைகளுக்கும் உடன்பாடற்றதே அரிய சிந்தனைகளும் வழிபாடுகளும் சிந்துவெளி வழிபாடு முழுமையானதும் முதிர்ச்சி ஆனதும் ஆகும்.

சிந்துவெளி மக்கள் தாய்தெய்வ (சக்தி) வழிபாட்டினையும், சிவ வழிபாட்டினையும் ஒருங்கே கொண்டிருந்தனர். என்பதனை அங்கு கண்டெடுக்கப்பட்ட தாய்த்தெய்வ விக்கிரகங்களும், சிவலிங்கங்களும் விலங்கினம் புடை சூழ தியானத்தில் வீற்றிருக்கும் "பசுபதி" வடிவமும் சான்றுகளாகின்றன. மேலும் பசுபதி வடிவமைப்புக் கொண்ட சிவ இலட்சணையிலிருந்து எழும் இருகொம்புகள் பிற்காலத்தைய திரிசூலத்தையும், நந்தி பொறிக்கப்பட்ட முத்திரைகள் இன்றுமாய் சைவசித்தாந்த வழிபாடு முறைமையில் முதன்மை பெறும் நந்தியைக் குறிப்பதாய் அமைகிறது. எனவே சைவசித்தாந்திகள் இன்றும் பின்பற்றும் வழிபடு முறைமையில் முதன்மை

பெறும் நந்தியைக் குறிப்பதாக அமைகிறது. எனவே சைவசித்தாந்திகள் இன்றும் பின்பற்றும் முறைமைகளே சிந்துவெளி வழிபாட்டிலும் அன்றும் இடம்பெற்றிருந்த தென்பதை தெளிவுடன் தெரிந்து கொள்ளலாம். மொழிவழிச் சொற்கள் மயக்கத்தை தரலாம். ஆனால் படங்கள், சித்திரங்கள், சிலைகள் சின்னங்களாக அமைந்து மொழிச்சிக்கலைத் தவிர்த்து சிந்தனைத் தெளிவைத் தரும். சிந்துவெளி நாகரிகத்துக்கு இவை உண்டு. எனவே விக்கின்ரைனின் படக்கோட்பாட்டு மெய்யியலின் பிரகாரம் தடயங்கள் வழி ஆய்வு(படக்கோட்பாட்டு மெய்யியல்) உண்மை நிலைமைகளை அறிந்துகொள்ள இங்கு மிகப்பொருத்தமாய் அமையும்.ஆரியரது வழிபாட்டு முறையின் ஆரம்பகாலத்தில் இவை எதுவும் இருக்கவில்லை. பசு முக்கியப்படுத்தப்பட்டது. குதிரை முக்கியப்படுத்தப்பட்டது. சிவனும் இல்லை சிவலிங்கமும் இல்லை, அம்மையும் இல்லை சக்தி வழிபாடும் இல்லை. விடியற்காலைத் தெய்வமாக உஷா மட்டுமே விண்ணுக்கும் மண்ணுக்கும் இடைப்பட்டபெண் தெய்வமாக வழிபாட்டிலிருந்தது.

ஆரியவழிபாட்டு முறைமை யாகம் செய்தல், அவிர்ப்பாகங்களாக உயிர்களைப் பலியிடல் போன்றன மையவிசையாய் அமைந்திருந்தன. விலங்குகளை ஆகுதி செய்தலில் அஸ்வம்(குதிரை) சிறப்பிடம் பெற்றது. அசுவமேதயாகம் செய்தலை ஆரியச் சக்கரவர்த்திகள் ராஜாங்கப் பெருமையாய்க் கருதுவர். அசுவ ஆகுதி வழியாய் உள்ளும் புறமும் பரிசுத்தம் பெறுவதாகப் பாவனை செய்யப்பட்டது. இக்கருத்தமைவைப் பிருதகாரணிய உபநிடதம் உறுதிப்படுத்துகிறது.[27]. யாகம் செய்தல் வழிபாட்டின் உயிர்நிலை உயர்நிலை எனக் கொள்ளப்பட்டது. இத்தகைய யாக வழிபாடுகளில் சிந்துவெளி வழிபாட்டிற்குமிடையில் உடன்பாடில்லை. சிந்துவெளியில் சிதைவுண்ட நிலையில் காணப்பெற்ற கட்டிடத்தொகுதி அதன் அருகாய் அமைந்த சிதைவுண்ட கேணி ஆலயம் அமைத்து வழிபடும் முறைமையே அங்கிருந்ததென்பதை உறுதி செய்கிறது. மேலும், உருவபூசை, வழிபாடுகள் இடம்பெற்றிருந்தன என்கிற கருத்தினை மார்ஷல் மட்டுமல்ல ஏச்கியேஸ், மகாதேவன் போன்ற ஆய்வாளர்களும் உறுதிப்படுத்தியுள்ளனர். இவ்விரு நாகரிகங்களும் வெவ்வேறான வழிபாடுகளைக் கொண்டிருந்தன என்கின்ற கருத்தமைவு தெளிவானதாகும்.

வாழ்வியலைப் பொறுத்தவரை ஆரியர்களது வாழ்க்கை முறையும் திராவிடர்களது வாழ்க்கை முறையும் வெவ்வேறானது. ஆரியர் விவசாயம் மேற்கொண்டனர். விவசாயத்திற்கு பொருத்தமான இடம்தேடித்தேடி அலைந்து திரிந்தவர்கள். கிராமிய வாழ்க்கை வாழ்ந்தவர்கள். இவ்வுலக வாழ்வையே மேலானதும் முடிவானதும் என ஏற்று வாழ்ந்தவர்கள். மேலும் நாடுவிட்டு நாடுவந்து குடியேறியவர்கள். இத்தகையவர்கள் இயல்பாகவே சமுதாயத்தில் கௌரவமானவர் களல்ல. பண்பாட்டினைக் காட்டிலும் உடல் வலிமைக்கும் துணிச்சலுக்கும் கொடுக்கும் பின்தங்கிய கூட்டத்தினர். பஞ்சாப்பிற்குள் வந்த ஆரியர்களும் இத்தகையவரே[28]. சிந்துவெளி மக்கள் நகர வாழ்க்கை வாழ்ந்தவர்கள். கழிவுநீர் வாய்க்கால்கள் அமைத்து சுகாதாரம் பேணியவர்கள். விலங்கினங்களை நேசித்தவர்கள். விலங்குகள் புடைசூழ வீற்றிருந்த பசுபதி சின்னம் இதனைத் தெளிவுபடுத்துகிறது. மனித வாழ்விற்கும் மனித விருப்புக்கும் வரம்பிட்டவர்கள். ஆண் பெண் உறவு முறை குறித்தும் குறிக்கும். சிவலிங்கத்தை வழிபடு பொருளாய்

கொண்டவர்கள். எதற்கும் வரம்பிட்டு வாழ்ந்த உயர்ந்த நாகரிகம் கொண்டவர்கள். இத்தகையோரது தத்துவ சிந்தனைகளும் சமய நடைமுறைகளும் உயர் பண்பாடு சார்ந்தது. ஆரியரது நடைமுறைகள் இவற்றிலிருந்து வேறானவை.

எடுத்துக்காட்டிய சான்றாதாரங்கள் திராவிட, ஆரிய சமய சிந்தனைகளும் சமய வாழ்க்கையும் வெவ்வேறானவை என்பதனைத் தெளிவுபடுத்தப்போதுமான தாகின்றது. வரலாற்று ஆசான்கள் குறிப்பிட்டதைப் போல், சிந்துவெளி இழப்புக் களுக்குப் பின்னாய் அங்கிருந்து தென் பாரதம் நோக்கித் திராவிடர் புலம் பெயர்ந்தனர். அடர்த்தியான குடியிருப்புக்களை அமைத்துக் கொண்டனர். தமிழ்மொழி வந்த கன்னடம், தெலுங்கு, மலையாளம் போன்ற பாஷைகளை தம் பேச்சுவழக்கு மொழியாகக் கொண்டனராயினும் திராவிட சமய சிந்தனை மரபுகளையும் தொடர்ந்தும் பின்பற்றினர். சைவசித்தாந்த சமயச்சிந்தனைகளை வடமொழி வழி நோக்குவதைக் காட்டிலும் சிந்துவெளி வளர்ச்சிவழிவந்த திராவிட இனம்சார் மொழிவழி குறிப்பாய் தமிழ்மொழிவழி நோக்குதலே பொருத்தமாய் அமையும். நிறைவானதோர் சமய சிந்தனைகளையும் சமய வாழ்க்கை முறைமைகளையும் தமிழ்நூல்கள் வெளிப்படுத்துகின்றன.

தமிழகத் திராவிடர்கள் காலவரையறை அடிப்படையில் தமது நூல்களை வகையீடு செய்துள்ளனர். சங்கம், சங்கம்மருவிய, பல்லவர், சோழர் காலப்பகுதிகள் என வகைப்படுத்தல் தொடரும். கி.பி முதலாம் நூற்றாண்டினை தொடக்கப் புள்ளியாகக் கொண்டு இவ்வகைப்படுத்தல் ஆரம்பமாகிறது. முந்நூறு ஆண்டுகளைக் கொண்டதாக ஒவ்வொரு காலப்பகுதியும் தொகுக்கப்பட்டுள்ளது. சங்ககாலத்துக் கருப்பொருளாய் வீரமும் காதலும் போற்றப்பட்டது. ஆரியரின் போர்த்திறனுக்கு அடிபணிந்த காரணத்தால் வீரத்தின் தேவை உணர்ந்து அதனை வளர்த்தெடுக்க வீரம் கருப்பொருளாய் கொள்ளப்பட்டது. அவ்வாறே ஆரியரிடம் சந்தித்த உயிர் அழிவுகளைச் சரிசெய்ய காதல் முக்கியத்துவப்படுத்தப்பட்டது. இவ் எண்ணக்கருக்கள் இங்கு முதன்மை பெற்றிருந்தாலும், சமய சிந்தனைகளும் சமய வாழ்வும் இங்கு காணப்பட்டன. தமிழ்மொழி வரலாற்றில் நூல்கள் ஒரு கருப்பொருளுக்கு முதன்மை வழங்கினாலும் கூட அவை வாழ்வின் பல் பரிணாமங்களையும் உள்ளடக்கியதாகவே காணப்பெறும்.. இலக்கண நூல் சமயம் பேசும். அறநூல் அரசு பற்றிப் பேசும். இவ்வாறாகத்தான் நூல் அமைப்புக்கள் இடம்பெற்றிருந்தன.

சங்க இலக்கியங்களில் 'சிவன்' என்கிற சொல் பிரயோகப்பட்டிருக்கவில்லை. எனினும் தொல்காப்பியத்தில் வரும் 'வேந்தன்' எனும் பதம் சிவனை விளிப்பதாகவே ஆராய்ச்சியாளர்கள் கொள்வர். மேலும், சங்க இலக்கியங்களில் 'தொன்முதற்கடவுள்' என்கிற சொற்பிரயோகம் இடம்பெறுகிறது. இது தொல்காப்பியம் குறிப்பிடும் வேந்தனுக்கும் மேலாய் சிந்துவெளியில் திராவிடர் வழிபட்ட சிவனைக் குறிப்பதாகவே கருதலாம். சங்ககாலத்திற்கு முற்பட்ட கி.மு இரண்டாம் நூற்றாண்டில் ஆட்சி செய்த குறுநில மன்னர்கள் அரும்பு போன்றவர்கள், தமது நாணயங்களில் சிவத்தலங்கள், சிவன், நந்தி,சிவலிங்கம், மழு, திரிசூலம் போன்ற வடிவங்கள் சித்திரிக்கப்பட்டுள்ளன. மேலும், மன்னரது மாளிகைகள் சிவதத்த, சிவரக்கித,

சிவதாஸ எனக் குறிக்கப்பட்டதைக் காணமுடிகின்றது[29]. மதுரைக்காஞ்சியில் 'பிறைமுதல் விளங்குமொருவன்; பிறைநுதற்பொலிந்தசென்னி; நீலமணிமிடற்றொருவன்; நீணிமீர் சடைமுதல்வன்; மழுவாள் நெடியோன் ; காரியுண்டிக்கடவுள்; ஆல்கொழு கடவுள் 'முக்கண் மூவையில் முரண்மிகு செல்வன்' போன்ற பெயர்கள் இடம்பெறுகின்றன[30]. இவை அன்றும், இன்றும் கூடத் தேவாரங்களிலும் சிவனைக் குறிக்கும் பெயர்களாகவே இடம்பெறுகின்றன.

மாதொருபாகன் சிவன் என்கிற கருத்தையும் உலகங்களின் சிருஷ்டிகர்த்தா சிவன் என்பதையும் சங்கச்செய்யுள் பின்வருமாறாய் எடுத்தும் கூறுகின்றது.
"நீலமேனி வாலிழை பாகத்து ஒருவன் இருந்தான் நிழற்கீழ் மூவகை யுலகமும் முகிழ்ந்தன முறையே." மேலும், உமையுடன் உறைபவன் என்கிற கருத்தமைவை 'உமையமர்ந்து விளங்கும் உமையா முக்கண்' என்கின்றவாறாக சங்கச் செய்யுள் குறிப்பிடுகின்றது.[31].

யாவற்றுக்கும் சிகரம் போல் சிந்தனைகளின் சிகரம் போல் தமிழ் மொழியின் எழுத்துவடிவ அமைப்பு சித்தாந்த சிந்தனைகளுக்கு உடன்பட்டவாறாகவே அமைந்துள்ளன. அவ்வாறே வாழ்க்கை முறையும் அமைந்துள்ளன. என்பதனைத் தொல்காப்பியம் தெளிவுபடுத்துகிறது. தமிழ்மொழி எழுத்துவகை உயிர்மெய் என்னும்வகையின. சித்தாந்தத்தின் பிரகாரம் உயிர் தனித்தன்மையதும் தனித்தியங்க கூடியதும் ஆகும். மெய்யுடன் (உடம்பு) இணைந்ததாயும் இயங்கும் மெய்யின்றியும் இயங்கும். மெய்யிலிருந்து விடுபடும் போது விடுதலைபெறும். மெய்யெழுத்துகளைப் பொறுத்தவரை உயிர் எழுத்துகளின்றி இயங்காது. ஆக, சித்தாந்த சிந்தனைகள் வழிவகுப்பே தமிழ்மொழி எழுத்துக்களில் வகுப்பும் காணப்படும். இக்கருத்தமைவை திருக்குறள்

*"அகரமுதல எழுத்தெல்லாம் ஆதிபகவன்*
*முதற்றே உலகு என்கின்றது"* [32]

இக்கருத்தை வழிமொழிவதுபோல் திருவருட்பயன்

*"அகரவுயிர்போல் அறிவாகி எங்கும்*
*நிகரில் நிறைநிற்கும் நிறைந்து"* [33] *என்கிறது.*

இல்லற தா்மத்தின் பிரகாரம் ஆண், பெண் பாலுறவு முறைமையை இறையும் - உயிரும் கலக்கும் பேரின்பத்தின் முதற்படியாகவும் மாதிரியாகவும் தொல்காப்பிய சூத்திரம் ஒன்றின் வழியாக கண்டு கொள்ளலாம். பேரின்பப் பெருவாழ்வு பெறலே உலகில் வாழக் கிடைத்ததன் பாக்கியம் எனக்கொள்வதே சித்தாந்த மரபும் தமிழியற்சிந்தனை மரபுமாகும். இதனையே பின்னர் இவ் உடம்பு கிடைத்தது இறைவனை வணங்கி முத்தி இன்பம் பெறற்பொருட்டே என்கிறார் 'நாவலர் பெருமான்'

*"காமம் பகுதி கடவுளும் வரையார்*
*ஏனோர் பாங்கினும் எம்மனார் புலவர்'*[34]

இல்லற ஒழுக்கம் இல்லறத்து வழி உறவுகளினதும் இல்லற தர்மத்திற்கும், அரச நீதிக்கும் காப்பரண் போன்ற மன்னரது கடமைகளும் மனிதவாழ்வின் இறுதி இலக்குக் குறித்தும் எல்லாவற்றிற்கும் மேலாய் மகவின் கடன் நாட்டையும் வீட்டையும் காத்தல் என்பவையும் எடுத்துக் கூறப்படுகிறது.இவ்வாறாக சங்கப்பாடல் குறித்து நிற்கும் தகவல்கள் சைவசித்தாந்தக் கோட்பாடுகளையே உள்ளடக்கமாக கொண்டுள்ளது.

*"ஈன்று புறந்தருதல் எந்தலைக்கடனே*
*சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே*
*நன்நடை நல்கல் வேந்தற்குக் கடனே*
*களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே"*

மேலும் இல்லறத்தினை நல்லறமாக்கிட குருவின் கடாட்சம் தேவை. சைவசித்தாந்தத்தின் பிரகாரமும் பக்குவம் வரும் போது குருவின்வடிவில் குருநாதர் வருவார் என்பதாகும். குருவின் அருள்பெறக் குடும்பத்தலைவன் மட்டுமல்ல ஏனைய சுற்றமும் சூழவாய் குருவிடம் செல்லல் வேண்டும் என்பதனைப் பின்வரும் தொல்காப்பிய சூத்திரம் தெளிவுபடுத்துகிறது.

*"காமம் சான்ற கடைக்கோல் காலை*
*ஏமம் சான்ற மக்களொடு துவன்றி*
*அறம் புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்*
*சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே"*[35]

எனவே சங்கப்பாடல்களின் கருத்தமைவுகளின் சாராம்சமாக இறையின் இருப்பு, இறையின் இயல்பு ஆன்ம இருப்பு, ஆன்ம இயல்பு, உலக இருப்பு, உலக இயல்பு, உலகியல் ஒழுங்கு பேணலின் அவசியம், குருவின் தேவை, உலகிற்கும் மேலாய் ஒரு பேரின்பப் பெருவாழ்வு உண்டு என்கிற சித்தாந்த அடிப்படைகளையே வெளிப்படுத்தி நிற்கின்றன.

யாவற்றுக்கும் மகுடமாய், தொல்காப்பியத்தில் இடம்பெறும் கந்தழி என்னும் எண்ணக்கரு, எவ்வித பற்றுதலுமின்றி அருவமாகித்தானே நிற்கும் தத்துவம் கடந்த பொருளைக் குறிக்கின்றது. இக்கருத்தமைவுக்கு விளக்கம் தரும் விளக்கவுரையாளர்கள் திருவாசகப் பாடல் வரியை விளக்கத்திற்கான துணையாகக் கொள்வர்.

*"உற்ற ஆக்கையின் உறுபொருள் நறுமலர் எழுதரும் நாற்றம் போல*
*பற்றலாது ஓர்நிலையிலாப் பரம்பொருள்"*

மணிவாசகரது கருத்தமைவை பின்வரும் குறள் மீள் வலியுறுத்துகிறது.

*"பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றை*
*பற்றுக பற்று விடற்கு"*

கந்தழி என்கிற கருத்தமைவு, தன் கருத்தாலும் பின்வந்த ஆய்வாளர்களின் புரிந்து கொள்ளலாலும் பின்வருமாறு விளக்கம் பெறுகிறது. சார்போ பற்றோ இல்லாதவன் இறைவன். (பதி) சரியான சார்பு உணராததால் பற்றப்பெற்ற உயிர் (பசு) தவறான சார்பும் பற்றுமாகிய தலை (பாசம்) மைதீர் தூய்மையதாம் சுடர்

(இறை) மை தீர்ந்து தூய்மை பெற வேண்டிய சுடர் (உயிர்) மையாகிய தளை (பாசம்) என்கிற முப்பொருளின் இயல்பும் இருப்பும் கந்தழி என்கிற சொல்வழிப் பெறுகையாகும். இச்சொற்றொடரில் சைவசித்தாந்த முழுமையும் முகிழ்கிறது.[36].

சங்க நூல்கள் மொழிந்த சைவசித்தாந்தக் கருத்துக்களையே சங்ககாலத்திற்குப் பிற்பட்ட சமய தத்துவ ஒழுக்க இலக்கிய நூல்கள் பொழிப்புடனும், சிறப்புடனும் எடுத்துக் கூறுகின்றன. சங்கம்மருவிய காலத்தைய நூல்கள் மனித வாழ்வினை மேலுமாய் அறமும் பொருளும் இன்பமும் நிறைந்ததாய் ஆக்கிட அறவழிக்கருத்துக்களைக் கருவாய் கொண்டு வாழ்வினைத் திருவாக்குகின்றன. உலக வாழ்விற்கு உரமூட்டி ஊறுகளைந்து உயிர்துடிப்புடன் வாழ்ந்திட மனிதநேய மேம்பாட்டிற்கான செய்திகளைக் கூறுகின்றன. வாழ்க்கை தடம் புரளாது அறம் என்கிற தளத்தில் பயணிக்க வழிகாட்டுகின்றன. அறநெறி நின்றே பொருளையும் இன்பத்தையும் துய்க்க வேண்டும் என வலியுறுத்துகின்றன. இத்தகைய வாழ்வுப் பாதையே வானுறை தெய்வத்துள் வைத்தெண்ணப்படும் பெற்றுத்தரும் என்கின்ற கருத்தமைவு வலியுறுத்தப்படுகிறது. இறைவணக்கம் இல்லறம் போற்றல் துறவறம் பேணல் இயற்கையைப் போற்றுதல் என்றவாறாக வாழ்க்கையின் படிநிலைகள் வரைவு செய்யப்படுகிறது. திருக்குறள் இன்னா நாற்பது, இனியவை நாற்பது, பத்துப்பாட்டு , பதினெண்கீழ்க்கணக்கு போன்ற நூல்கள் முதன்மை பெறுகின்றன.

ஒழுக்க வாழ்வு குறித்து நிறையவே கூறிய சங்கம்மருவிய காலப்பிற்பகுதியில் மனிதாயம் நிறைவு பெற்ற மனிதனின் மனம் பக்திநெறி வழிப்பட இலக்கியங்கள், பக்திப்பாடல்களாக வெளிப்படுகின்றன. பக்தி எனும் கருப்பொருள் தோத்திரப் பாடல்களாகப் பரிணமிக்கின்றது.சரியை, கிரியை, யோகம்,ஞானம் என்கிற விடுதலைப்பாதைகள் அமையப்பெறுகின்றன. நாயன்மார்கள் எனப்படும் சம்பந்தர், அப்பர், சுந்தரர், மணிவாசகர் மேலும் சமய மேலாளர்கள் எனப்பெறும் திருமூலர் போன்றவர்கள் சித்தாந்தக் கருத்துக்களை மனிதமயப்படுத்துவதிலும் பண்ணுடன் இசைத்தாய் இலகுபடுத்துவதிலும் பெரும் வகிபாகம் கொண்டு விளங்குகின்றனர். பக்தியாத்திரைகள் நடத்தி, திருத்தலம் தோறும் சென்று வணங்கித் தோத்திரப் பாடல்களையும் பாடியதோடு பல அற்புத நிகழ்வுகளை நிகழ்த்தி சைவத்தின் பெருமையை நிலைநாட்டினர். இக்காலப் பகுதியில் தமிழ்த்திராவிடர் மத்தியில் தலையெடுத்த பௌத்த சமண தத்துவங்களுக்கு எதிராக வாதப்பிரதிவாதம் செய்து சித்தாந்த சைவமே உயர்நத்து, சித்தாந்த சிந்தனைகளே உயர்ந்தது என எடுத்துக்காட்டி, மாற்று மதங்களில் மனப்பதிவு கொள்ளாதவாறாய் தடுத்தருளினார். மன்னர்கள் மத்தியிலும், முதன்மை பெற்றிருந்த மாற்று மத சிந்தனைகளை அற்புதச் செயல்களை நிகழ்த்தி மன்னர் மனங்களை சைவத்தின் பாலாய்த் திடப்படுத்தினர். நாவுக்கரசரைப் பொறுத்தவரை, சைவனாய்ப் பிறந்தும் சமணத்தின் பாற்கொண்ட மயக்கத்தால் மனம்மாறி மதம் மாறினார். சகோதரியாரின் பக்தி வைராக்கியத்தின் பேறாய் பிரார்த்தனைகளின் பேறாய் நாவுக்கரசர் நோய்வாய்ப்பட்டார். மீளவும் சிவன் அருளால் நோய் தணிந்து சைவசமயியானார். சமண மன்னர்களது சித்திரவதைகளுக்கு ஈடு கொடுத்து அவற்றிலிருந்து மீண்டார். யேசு மட்டும் சிலுவையில் அறையப்படவில்லை. நாவுக்கரசரும் கல்லோடு கட்டி கடலில் இடப்பட்டார்.

சுண்ணாம்பறையில் பூட்டி வைத்து சித்திரவதை செய்யப்பட்டார். இந்நிலையிலும் இசையுடன், மாறாத மனத்தினராய் "தாமார்க்கும் குடியல்லா சங்கரன்தாழ் பற்றி நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்" எனப் பாடினார். யாவற்றுக்கும் மேலாய் இனியனாய் இறைவனைக் கண்டவர்

*"கனியினுங் கட்டிபட்ட கரும்பினும்*
*பனி மலர்க் குழல்பாவை நல்லாரினும்*
*தனி முடி கவித்தாழு மரசினும் ..........*
*இனியன் சிவன் எனக் கண்டவர்."*

இந்தியாவில் ஆரியரது ஆதிக்கம், வரலாற்று ஆரம்பத்தில் மட்டும் இடம்பெற்றிருக்கவில்லை, எண்ணிக்கையில் பெருமளவான பிராமணர்கள் கி.பி. 7ம் நூற்றாண்டளவில் தமிழ்நாட்டில் வந்தேறு குடிகளாய், வந்து குடியேறினர். வந்தவர்கள் மேலாதிக்கம் செலுத்தவே முற்பட்டனர். தமிழ்நாட்டுக் கோவில்களின் பூசைகளை விழாக்களினை கையகப்படுத்திக் கொண்டு பொருளாதார நிலையில் உயர்வடைந்து தமது மேலாதிக்கத்தை திராவிடர் மீதாய் மீளவும் தக்க வைத்துக் கொண்டனர். ஆரிய மாயை மேலோங்க சாதீயம் மேலும் இறுக்கமடையத் தொடங்கியது. இந்தநிலையில் இதற்கு முடிவுகட்டும் ஒரு முயற்சியாக அறுபத்து நான்கு நாயன்மார்களை நிரல்படுத்துகையில் உயர்ந்த தாழ்ந்த சாதியினர் என்கின்ற பாகுபாடின்றி அனுபூதி நெறிநின்றோர் நிரல்படுத்தப்பட்டனர். மேலும் இவர்கள் வழிபாட்டுக்குரியவர் என விதிக்கப்பட்டும் வழிகாட்டிகளாகவும் ஏற்கப்பட்டனர்.

தேவபாஷையாக வடமொழியில் ஏற்புடையதென ஏற்கப்பட்டு பூசை வழிபாடுகளில், வடமொழியே பயன்படுத்தப்பட்டது. உயிர் பலியுடன் கூடிய வேதகால யாகமுறை தொடரப்பட்டது. இந்நிலையில் வடமொழிசார் குடும்பத்திலிருந்தாய் வந்த சம்பந்தர்பெருமான் தன்னிலும் சாதி நிலையில் தாழ்ந்த நாவுக்கரசருடன் சேர்ந்து பக்திநெறியினைச் சாதீயத்திற்கும் அப்பால், அனைவருக்கும் எனப்பரவ வழிசெய்தார். வேதகால யாகங்களுக்குப் பதிலாக தமிழ்நாட்டுக் கோவில்களில் சைவ யாகங்களை மேற்கொள்ளல்பொருட்டு ஆவன செய்தனர். உயிர்ப்பலியிடலுக்குப் பதிலாக யாககுண்டங்களில் தானியம், பால், தயிர், நெய் போன்றவைகளை ஆகுதியாக்கினார். தமிழ் மறைகளைத் திருமறைகளாக்கித் தமிழை பூசைக்குரிய மொழியாக்கினர்.

சுந்தரா் உலக வாழ்வியலில் ஈடுபாடு கொண்டு சைவநெறி வளா்த்தவா். மாதா் இருவரை மணந்தவா். சுகபோகம் துய்த்தவா். இறைவனைத் தோழனாக மட்டுமல்ல கூலியாகவும் கூப்பிட்டு உதவி பெற்றவா். பொய் சொல்வதால் கிடைக்கப்பெறும் தண்டனையைத் தன்செய்கையால் தானே பெற்று அனுபவித்து எத்தன்மையராயினும் தீய செய்கை செய்பவராயின் தண்டனை பெறுவா் என்கின்ற சைவ நற்சிந்தனைக்கு எடுத்துக்காட்டானவா்.

மணிவாசகா் முதலமைச்சராக இருந்து பதவியைத் துறந்து மெய்ப்பொருள் நாடிச் சென்றவா். சமய அற்புதங்கள் நிகழ்த்துவதற்கு கால்கோளாய் இருந்தவா்.

மனிதமையச் சிந்தனையை தனது பாசுரங்களின் கருப்பொருளாய் கொண்டவர். மனிதக்கரு உற்பத்தியிலிருந்து உருவாகி திருவாய் வரும் வரையிலான துன்பங்களைச் சொன்னவர். உலக இன்பங்களான மண், பெண், பொன், பொருள் வழிவரும் இன்பங்களின் நிலையற்ற தன்மைகளை அழுத்திக் கூறியதுடன் நிலையான இன்பம் எதுவெனவும் விளக்கி வாழ்வினை ஒரு நீண்ட பயண அனுபவமாய் கண்டவர். பல்லவர் காலத்துப் பக்தி இலக்கியங்களுள் திருமூலரின் திருமந்திரம் பல்பரிமாணம் கொண்டது. இதனை ஒரு வாழ்வியற் கலைக்களஞ்சியம் எனலாம். முப்பொருள் பற்றிய முழுமைக் கருத்தமைவுகளையும் உள்ளீடாய் கொண்ட பாடல்கள். அன்பில் சிவத்தைக் கண்டவர். அன்பாய் சிவத்தைக் காட்டியவர். அன்பே சிவம் என்றவர். அன்பின் வழியதாய் உயிர்நிலை அமைய வழிசெய்தவர்.

சோழர்காலம் தமிழ்மொழி வரலாற்றில் பொற்காலம். வான் அளாவிய கோபுரங்களுடன் கோவில்கள் பல அமைக்கப் பெற்ற காலம். அரச அனுசரனையுடன் சைவ சித்தாந்த சிந்தனைகளும் சைவசமயமும் வளர்ச்சி பெற்றன.கடல் கடந்து ஈழம் முதற்கொண்டு பன்னீராயிரம் தீவுகள் வரை சைவம் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்திய நாகரிகத்தை இன்றுவரை உயர்நிலையில் வைத்தெண்ண வழிசெய்த கலைப்பொக்கிசங்கள் இக்காலத்தவையே. சங்ககாலத்து கலை குறித்த எழுத்து வடிவங்களை இக்காலத்துச் சிற்பிகள் கல்லில் வடித்து கலையாத காவியங் களாக்கினர். சிவபெருமானின் அட்ட வீரட்டமும் கூத்தாகக் காட்டப்பெற்றன. கலித்தொகையின் கடவுள் வாழ்த்தின் பிற்பகுதியில்: படுபறை பல இயம்ப........ என வரும்பாடல்பகுதி கல்லில் வடிவம்பெற்றன.[37].

மெய்கண்ட சாஸ்திரங்கள் பதினான்காகும். சைவ சித்தாந்த தத்துவம் குறித்தாய் கூறுவன. இச்சாஸ்திரநூல்கள் பதினான்கும். சோழர்காலப்பகுதியிலேயே தோற்றம் பெற்றன. மெய்கண்ட தேவரால் இயற்றப்பட்ட சிவஞானபோதமே சைவசித்தாந்த தத்துவத்தின் முதன்மை சாஸ்திரநூலாக அமைகிறது. சைவசித்தாந்தம் அமைப்பியல் வடிவினை இக்காலப்பகுதியிலேயே பெறுகிறது. அதாவது நிறுவனமயப்படுத்தப்படுகிறது. சிவஞானபோதம் பன்னிரண்டு சூத்திரங்களினா லானது.இவற்றின் விளக்கமாய் முப்பத்தொன்பது அதிகரணங்களும் எண்பத்தொரு பாடல்களும் அமைந்துள்ளன. சிவஞானபோதம் உள்ளிட்ட அனைத்து சாஸ்திர நூல்களும் முப்பொருள் உண்மையை விளக்குவதாகவே அமைகின்றன. சிவஞானபோதச் சுலோகங்கங்கள் பன்னிரண்டில் முதல் ஆறும் முப்பொருளின் பொது இலக்கணத்தைக் கூறுவனவாயும் பின்னைய ஆறு சூத்திரங்களும் சிறப்பு இயல்புகளைக் கூறுவனவாயும் அமைகின்றன. மேலும் முப்பொருள் உண்மையை உணர்த்தும் பிரமாணவியல் அவற்றின் இலக்கணத்தைக் கூறும் இலக்கணவியல் சாதனைவழி, சாதிக்கும் முறை கூறும் சாதனவியல், பாச நீக்கம், சிவப்பேறு சீவன்முத்தர் இயல்பு ஆகியவற்றைக் கூறும் பயனியல் எனும் இயல்களாக இந்நூல் வகுக்கப்பட்டள்ளது.[38].

சிவஞானபோதத்தின் விளக்கவுரையாக அமைந்த சிவஞானசித்தியார் பரபக்கம் சுபக்கம் என அமைந்து முறையே பரபக்கம் 301 செய்யுள்களையும் சுபக்கம் 328 செய்யுள்களையும் கொண்டவாறாய் அமையப்பெற்றுள்ளது. சிவஞானபோதத்தின் பன்னிரண்டு சுலோகங்களையும் பன்னிரண்டு அதிகாரங்களாக விரித்து புறச்சமயம், புறப்புறச்சமயம், அகச்சமயம், அகப்புறச்சமயம் என வகுத்து இதன் வழியாய் வருகின்ற சமய தத்துவங்களினதும், சமய நடைமுறைகளினதும் வலிதற்ற தன்மைகள் உலக நடைமுறைக்கு ஒவ்வாத செயற்பாடுகள் சிறப்புற எடுத்துக்காட்டப்படுகின்றன. உலோகாயுதம், சௌத்திராந்திகம், யோகசாரம், மாத்தியமிகம், வைபாடிகம், நிகண்டவாதம், ஆசீவகன்மதம், பட்டாச்சாரியன் மதம், பிரபாகரன் மதம், சுத்தபிரம்மவாதம், கிரீடாப்பிரமவாதம், பார்காரிய வாதம், மாயாவாதம், சாங்கியம், பாஞ்சராத்திரம் ஆகிய மதப்பிரிவுகளின் கொள்கைகள், கோட்பாடுகள் எடுத்துக்காட்டப்பட்டு அவை விடுதலைக்கு உகந்ததல்லாதவை என எடுத்துக்காட்டப்படுகின்றது. மேலும் சுபக்கம் சைவசித்தாந்தம் கொண்டிருக்கும் அறவியல், அறிவியல், அளவையியல், பிரபஞ்சவியல் , விடுதலையியல் குறித்த கருத்தமைவுகளை சிறந்த முறையில் எடுத்துக்காட்டிச் சைவசித்தாந்த மார்க்கமே விடுதலைக்கான சிறந்தவழி உயர்ந்தவழி என்பனவற்றைத் தெரிவிக்கின்றன. ஏனைய சிவப்பிரகாசம் உள்ளிட்ட சாஸ்திரநூல்களும் பிற சித்தாந்தம் சார் விளக்கப்பொழிப்பு, விமர்சன நூல்கள் பல இக்காலத்தில் தோற்றம் பெற்று தமிழர் மெய்யியலாம் சைவசித்தாந்தத்தினைப் பூரணப்படுத்துகின்றன.

இச்சைவசித்தாந்த வளர்ச்சி குறித்த வரலாற்று நூலானது சைவசித்தாந்த சிந்தனைகளினதும், சமயவாழ்வினதும் வளர்ச்சியினைச் சிந்துவெளியில் பெறப்பட்ட தடயங்களிலிருந்து ஆரம்பித்துச் சங்கத்தமிழ்நூல்களில் கால்பதித்துப் பின்வந்த தமிழ்மொழிநூல்களைக் கருத்தில்கொண்டும் திராவிட இனத்தினதும், தமிழ்மொழியினதும் செம்பாங்கை, தொன்மைச்சிறப்பினை வெளிக்கொணரும் முயற்சியே தவிர ஆரிய கலாசாரத்தையோ, வடமொழி வழிவந்த சமய சிந்தனைகளையோ, நிந்தனை செய்யும் நோக்கோ தரம் தாழ்த்தி மதிப்பிடும் போக்கோ, மனப்பாங்கோ சிறிதும் இல்லை என்பதனை வாசகர்கள் மனதிருத்தலே ஆரோக்கியமானதாய் அமையும்.

உலகுவாழ் ஆதிக்குடியினர் என்றும், ஆதிமொழிகளில் தொன்மைமிகுந்தது ஒன்றென்றும் இனம்காணப்பட்ட திராவிடருக்கும் , தமிழ் மொழிக்குமென தனித்துவமான சமயசிந்தனைகளும், சமயவாழ்க்கை முறைமையும், பண்பாட்டு விழுமியங்களும் இருந்திருக்கவில்லையோ என்கின்ற ஆதங்கத்தின் பாற்பட்ட ஒரு தேடலே இவ்வாய்வின் பெறுகையாகும். இவ்வாக்கத்தின் அமைப்பியலும், ஆய்வு முறைமையும் இவ்வடிப்படையிலேயே ஒழுங்கமைகின்றது.

மேலுமாய் ஈழம்வாழ் தமிழர்களின் சமயதத்துவம் சைவசித்தாந்தமாயும், வாழ்வியல் சைவசமயமாகவும் அமைந்திருக்கும் தனித்துவம் வாய்ந்தது. வைஸ்ணவ தெய்வங்களுக்கென தனித்திருத்தலங்கள் ஈழத்தில் காணப்பெறினும் அங்கு வழிபடுபவர்களும் ஸ்சைவசித்தாந்த சிந்தனைகளை அடிப்படையாகக்கொண்டு வாழும் தமிழர்களேயாகும். தளஅமைப்பு இதுவாயிருக்கையில் இதிலிருந்து எழும் ஆக்கங்களும் இவ்வாறாய் அமையப்பெறுதலே பொருத்தமாயும் அமையும்.

ஆரியரது முதல்நூலான இருக்குவேதம் உருவ, தல வழிபாட்டு முறைகளுக்கு உடன்படாத இயற்கை சக்திகளை வழிபடும் முறைமையையே கொண்டிருக்கின்றன. திராவிட இனத்திற்கு உடன்பாடில்லாத சாதியம், வர்ணச்சிரம தர்மம் போன்ற முறைமைகளை ஆரியம் அழுத்தமான போக்கில் கைக்கொள்ளுகின்றது. இன்றயியல் குறித்த சிந்தனைகளில் காணப்படும் வேறுபாடுகளைக்காட்டிலும் வாழ்வியல் குறித்த வடிவமைப்பில் ஆரியமும், திராவிடமும் தூரத்தூரவே விலகிநிற்கின்றன. பிராமணரே எல்லாம், பிராமணியமே எதிலும் என்கின்ற சிந்தனைப்போக்கு ஆரிய மாயையாய் அமையப்பெற்றுள்ளது. இது சைவசித்தாந்திகளுக்கோ, சைவசமயிகளுக்கோ உடன்பாடற்றதொன்று. ஆரிய மாயையிலிருந்தாய் விலகி , திராவிட சமய சிந்தனைகளையும் , நாகரிகத்தையும் மட்டும் அடிப்படையாய்க்கொண்டதோர் பார்வை காலத்தின் தேவை மட்டுமல்ல ஓர் இனக்குழுமத்தின் சமய பண்பாட்டுப்பாங்குகளை மீள் வலியுறுத்தும் இனம்சார் கடமையும் தேவையுமாகும். இனம் ஒன்றின் இருப்பினையும் அதன் இயல்புகளையும் இருப்பியல் ஆக்கம் செய்தலே ஆகும்.

1. மம்தார் R.C, ராய் சௌதுரி, H.C தத்தா K (தமிழாக்கம் தி.வே.குப்புசாமி) இந்தியாவின் சிறப்பு வரலாறு I, தமிழ் வெளியீட்டுக்கழகம் தமிழ்நாடு அரசாங்கம் 1965 பக் 16.
2. Tillak B.G The Arctic home of Vedas, Tillak Bross, Poona 1956 P.7.
3. மே.கு.நூல்
   மம்தார் R.C ராய் சௌதுரி H.C தத்தா K 1965பக் 17.
4. மே.கு.நூல் 1965. பக் 17.
5. Ibid Tillak B.G 1956. P. 10.
6. Raju. P.T The Philosophical Radition of India,Motilal Banarsiddas Publishes Delhi.1992.P 33.
7. Ibid Raju P.T 1992 P.28 .
8. தேவ சேனாதிபதி வ.ஆ.சைவசித்தாந்த அடிப்படைகள் டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன்
   மெய்யுணர்வு மேன்நிலைக் கல்வி நிலையம் சென்னைப் பல்கலைக்கழகம். 1981 பக்கம் 2.
9. தவத்திரு தர்மகீர்த்தி அடிகளார், இந்துமதக் கொடுங்கோன்மை வரலாறு, சேகர் ஆப்செட் சென்னை 5 2003 பக் 40.
10. மு.கு. நூல் தர்மகீர்த்தி அடிகளார் 2003 பக்.
11. கெங்காதாரன் எஸ். சைவசித்தாந்த அடிப்படைகளும் கொள்கை வரலாறும் அங்கயற் கண்ணி அகம் மதுரை 1992 பக் 230.
12. திருவள்ளுவர் திருக்குறள் புலால் மறுத்தல்.259.
13. மேர்லாண்டு டபிள்யூ.எச்,சட்டர்ஜீ எ.சி (தமிழாக்கம் பெருமாள் முதலியார்) இந்தியவரலாற்றுச் சுருக்கம், சென்னைப் பல்கலைக்கழகம், 1951. பக்கம்56.

14. சிற்றம்பலம் சி.க பழந்தமிழகத்தில் இந்துசமயம், ஒரு தொல்லியல் நோக்கு, சிறப்புமலர் இரண்டாவது உலக இந்து மகாநாடு இலங்கை 2003, பக்கம் 348.
15. Ibid,Ragu P.T 1992 P.36.
16. சிவானந்தமூர்த்தி.க. காசிவாசி செந்திநாதையரும் சைவவேதாந்தமும் சிறப்புமலர், இரண்டாவது உலக இந்துமகாநாடு இலங்கை 2003.பக் 303.
17. பாஸ்கரன்.க, சைவ ஆகமங்கள் - ஒரு நோக்கு சிறப்புமலர் இரண்டாவது உலக இந்துமகாநாடு இலங்கை 2003. பக்.121.
18. மு.கு.நூல், மம்தார் R.C, ராய் சௌதுரி HC, தத்தா K 1965 பக். 16.
19. Ibid Raju P.T.1992.P.30.
20. இந்திராணி மணியம் இந்து சமயக் கோட்பாடுகளும் நடைமுறை வாழ்க்கையும் சிறப்புமலர் இரண்டாவது உலக இந்துமகாநாடு, இலங்கை 2003. பக் 441.
21. மே.கு.நூல் சிற்றம்பலம் சி.க 2003 பக்.348.
22. ..........கன்னடமும், கவின்தெலுங்கும், கவின்மலையாளமும் உன்னுதிரத்தே உதித்து எழுந்து ஒன்று பல ஆயிடினும்..............
23. சிந்து நதியின் மிசை நிலவினிலே
    சேர நம் நாட்டுடன் பெண்களுடனே
    சுந்தரத் தெலுங்கினில் பாட்டிசைத்து
    கங்கைநதிப்புறத்து கோதுமைத்தங்கம், காவிரி வெற்றிலைக்கு மாறுகொடுமோ.....
24. Allchin B, Allchin F.R, The Rise of Civilization India and Pakistan, Cambridge Press. 1982. P213-216.
25. Mahadevan I. The Indus script texts concordance and tables, New Delhi 1977 P.78.
26. Ibid Raju P.T.1992 P.32.
27. Ibid Raju P.T.1992 P.37.
28. மே.கு.நூல், தவத்திரு தர்மகீர்த்தி அடிகளார்.2003.பக்.45.
29. Banerizea J.N. The development of Hindu Iconography New Delhi 1985 P.110.125.
30. வித்தியானந்தன் சு. தமிழர் சால்பு (மூன்றாம் பதிப்பு) சென்னை.1954.பக் 126-127.
31. மு.கு.நூல் தேவசேனாதிபதி வ.ஆ.1981.பக்.18.
32. திருவள்ளுவர் திருக்குறள் 1
33. உமாபதி சிவாச்சாரியார், திருவருட்பயன், பதிமுதுநிலை
34. மே.கு.நூல் தேவசேனாதிபதி வ.ஆ.1981.பக்.23.
35. மே.கு.நூல், கங்காதரன் ச, 1992. பக்.289.
36. மு.கு.நூல் கங்காதரன் ச. 1992.பக்.286.
37. இரத்தினசபாபதி.வை(தொகுப்பு), மெய்கண்ட சாஸ்திரங்கள் சென்னைப் பல்கலைக்கழகச் சைவசித்தாந்தத்துறை வெளியீட்டு வரிசை[1] சித்தாந்தத்துறை சென்னைப்பல்கலைக்கழகம் 1988.பக் 1-XIV
38. மு.கு.நூல் இரத்தினசபாபதி 1988 பக் 1- XIV

# தேரின் கட்டமைப்பு

**ஜீ. ஜெயதீஸ்** நுண்கலைச் சிறப்புப்பகுதி
யாழ் பல்கலைக்கழகம்.

## அறிமுகம்


எமது பண்பாட்டுப் பாரம்பரியங்களுடன் ஒன்றிணைந்த படைப்பாக தேர் காணப்படுகின்றது. தேர் என்ற சொல்லுக்குப் பெயர், வினை ஆகிய இரு வடிவங்களிலும் தமிழ் மொழியில் பொருள் உண்டு. அதாவது "தேர்" என்ற பெயர் வடிவிலும் "தேர்ந்தெடுத்த" என்ற வினை வடிவிலும் இது அமைகின்றது. தேர் என்பதோடு இரதம் என்ற சொல்லும் நடைமுறை வழக்கில் உள்ளது. இரதம் என்ற சொல் உயர்ந்த அமைப்புடையது என்று பொருள்படும். அதேவேளை தேர் என்பது மேல் விதானம் சேலையால் (சிவப்பு, வெள்ளை) கட்டியிருப்பது என்றும் மாறாக மேல் விதானம் எழுதக வரியால் நிரந்தர அமைப்பாகவும் பந்தல் அலங்காரங்களோடும் அமைவது ரதம் எனவும் சொல்லும் வழக்கம் யாழ்ப்பாண மரபில் உண்டு.

தேர் என்பது தமிழ் சொல் என்றும் இரதம் என்பது வடமொழிச் சொல் என்றும் நோக்கும் போது இரண்டும் ஒரே ஊர்தியைக் குறிக்கும் இரு மொழிச் சொற்களாகவே அமைந்திருப்பதை பலர் எடுத்துக் காட்டியுள்ளார்கள்.

சக்கரம் அல்லது சில்லு பாவனைக்கு வரத் தொடங்கி அவற்றின் படிப்படியான வளர்ச்சிக் கட்டத்திலே தேர் உருவாகியிருக்கலாம் என்று ஊகிக்க முடிகின்றது. தொடக்க காலத்தில் போர்களுக்கும் போக்குவரத்திற்கும் பயன்படுத்தத் தொடங்கிய தேர் பின்னர் மக்கள் தாம் வணங்கும் தெய்வத்திற்கும் தம் ஊர்தியை சமர்ப்பணம் செய்திருக்கலாம். இதனாலே காலப் போக்கில் தேர் தெய்வ சம்பந்த முடையதாக மாறியிருக்கக் கூடிய வாய்ப்புண்டு.

தேர் என்பது கோயிலின் அமைப்புப் போன்றது எனவும் தேரின் அடிப்பாகம் பூலோக வாழ்க்கையையும் மேல் பாகம் சுவர்க்கலோக வாழ்க்கையையும் சித்தரிக்கின்றன என்று கலைக்களஞ்சியம் கூறுகிறது. இதைவிட மனிதனின் தேகத்தையும் உருவகிக்கும் ரீதியில் தேர் அமைந்துள்ளது எனவும், அதன் சிங்காசனமே இருதயத்தின் பிரதியாமிசம் எனவும் கூறப்படுகிறது.

## தேரின் வடிவ அமைப்பும், சாஸ்திரங்கள் கூறும் அளவுப் பிரமாணங்களும்



ஏழு வகையான தேர் வடிவங்களை மானசாரம் கூறுகிறது. நபஸ்வனபத்ரகம் (நாற்கோணம்), பிரபாஞ்சனபத்ரகம் (அறுகோணம்), விதானபத்ரகம் (இரு கோணம்), பவளபத்ரகம் (பத்து கோணம்), இந்திரகபத்ரகம் (பத்து கோணம்), அநிலபத்ரகம் (பன்னிருகோணம்) என்பவற்றைக் கூறும் இதே நேரம் நீள் சதுரம், சதுரம், வட்டம், நீள்வட்டம், எண்கோணம், அறு கோணம், முட்டை வடிவம் என்பன தேர் வடிவங்களாகக் குறிப்பிடும் மரபு உண்டு.

கோயில்களின் கருவறை, நாகரம், திராவிடம், வேசரம் முதலிய கட்டமைப்பில் அமைக்கப்படுவது போல தேவர்களின் அமைப்பும் நாகரம், திராவிடம் போன்ற வடிவங்களில் அமைய வேண்டும் என மானசாரம் கூறுவதன் மூலம் தேரும் கோயிலும் அமைப்பில் ஒரே தன்மை உடையவை என்பதை உணர்த்துகிறது. இதைவிட தேர் கோயிலின் கருவறை அமைப்பு போன்றே உபபீடம், அதிட்டானம், பாதம், விமானம் போன்ற உறுப்புக்களால் ஆனது. ஆகவே கோயிலின் மறு உரு என்று சொல்லப்படலாம். மேற்கூறியதின் வழி சதுரவடிவமான தேர் நாகரம் என்றும் எண்கோண வடிவமான தேர் திராவிடம் என்றும், வட்டவடிவமான தேர் நாகரம் என்றும், எண்கோண வடிவமான தேர் திராவிடம் என்றும் வட்டவடிவமான தேர் வேசரம் என்றும் அறுகோண வடிவமான தேர் அந்திரம் என்றும் முட்டை அல்லது சமகோண வடிவமான தேர் கலிங்கம் என்றும் அழைக்கப்படும்.

தேரின் சில்லுத் தொடக்கம் கோபுர கலசம் வரை ஒவ்வொரு அளவு பிரமாணத்தினைச் சிற்ப சாஸ்திரத்திலே சொல்லியிருக்கிறார்கள். ஆலய கற்பக்கிரஹ காற்புறவாய் அளவினை அடிப்படையாகக் கொண்டே தேர்ப்பிரமாணம் அமைவதாகும். இதன் அடிப்படையில் 24 இல் 10, 24 இல் 11, 24 இல் 13 முதலான அளவுகள் அமைவது குறிப்பிடத்தக்கதாகும்.

இவ் அமைப்புக்களைவிட எண்பதுகளின் பின் யாழ் மரபில் புதிய தேர் வடிவம் உருப்பெற்றது. இவ் அமைப்பு அம்மனுக்குரிய தேராக விளக்கமளிக்கப்படு கிறது. இவ் வடிவத் தேர்களை திருநெல்வேலி முத்துமாரி அம்மன் கோண்டாவில் காளி கோவில் ஆகிய கோயில்களில் காணலாம்.

அனேகமாக ஈழத்தில் பெரும்பாலான சிவன் கோயில்கள் தவிர்ந்த ஏனைய கோயிற் தேர்கள் திராவிட அமைப்பிலேயே செய்யப்பட்டிருப்பதைக் காணக் கூடியதாகவுள்ளது.

வடிவமைக்கப் பெற்ற தேர்கள் எவ்வாறு பெயர் பெறுதல் வேண்டும் என்பதை விளக்கும் மானசாரம் சாதுரியமுடைய சிற்பியானவன் இரதங்களை அவைகளுக்குரிய தேவதேவிகளின் பெயரால் அழைக்க வேண்டும் என்றும் குறிப்பிடுகிறது.

சிற்ப சாஸ்திர பிரமாணங்களின் அடிப்படையில் அமையும் தேர் முழுத்தேர், முக்கால்தேர், அரைத்தேர், என்னும் பிரமாண அமைப்புக்கள் உடையதாகும். 24 முழ உயரம் உடையது, முழுத்தேர் என்றும், 18 முழ உயரமுடையது முக்கால் தேர் என்றும், 12 முழ உயரமுடையது அரைத் தேர் என்றும் அமையும். இவையல்லாத குறைந்த அளவுகளில் அமையும் சிறு தேர்களும் பெருவழக்கில் உள்ளன.

மானசாரம் தேர் அகலத்தை பொதுவான அளவுப் பிரமாணங்களுக்கு அமைவாகவே கூறுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. இதன்படி தேர் அகலமானது 36 அங்குலம், அல்லது 48 அங்குலம் முதல் 120 அல்லது 132 அங்குலம் வரையில் கூடுதல் 6 அங்குலம் அமைவதாகும். தேரின் பத்துவித அளவுகளும் இவற்றுள்ளமையும். இவற்றின் ஐந்து அளவுகள் உச்சியிலும் ஐந்து கீழுமாக தேரின் உட்புறம் அமைவதாகும். அதன் எட்டுவித நீட்டுக்கள் 12 - 54 அங்குலங் களாகவும், கூடுதல் ஆறங்குலமாகவும் அமையும்.

இம்மானசாரம் கூறும் அளவுப்பிரமாணங்களை யாழ் மரபில் உள்ள ஸ்தபதிகள் அறிந்தும், அறியாமலும் இருந்தாலும் தமக்கென ஒரு முத்திரை பதிக்கும் அளவிற்கு தங்கள் பரம்பரை வழியாக (குருகுலமரபு) கீழ்வரும் அட்டவணை எந்தத் தெய்வத்திற்கு எந்த காற்புறவாய், என்ன தேர் வடிவம் அதனுயரம் எவ்வளவாக இருக்க வேண்டும் என்பவற்றை எடுத்துக் கூறுகிறது.

| *கடவுள்* | *கற்பக்கிரக காற்புறவாய்* | *வடிவம்* |
|---|---|---|
| பிள்ளையார் | 7.8 - 9.1 | வேசரம், திராவிடம் |
| முருகன் | 9.4 - 8.9 | அந்தரம், திராவிடம் |
| அம்மன் | 9.4 - 9.5 - 11.3 | திராவிடம்,<br>நவகோணம் |
| சிவன் | 9.3 - 10.7 - 11.5 | பூணாந்தரம் |
| வயிரவர் | 7.1 - 8.3 - 9.3 | பூணாந்தரம் |
| சண்டேஸ்வரர் | | நாகரம் |

பெற்றுக் கொண்ட அனுபவ நியமங்களின் வாயிலாகவே தேர்களைச் செய்கின்றார்கள்.

பொதுவாக கோயிலின் அனைத்து அமைப்புக்களும் காற்புறவாயை அடிப்படையாகக் கொண்டே தீர்மானிக்கப்படுகின்றது. (சுற்றுப் பிரகாரம் முதல்) ஆனால் இடப் பற்றாக்குறை காரணமாக சில கோயில்களில் இதன் வரம்பு மீறப்படுவதுமுண்டு. (தவிர்க்க முடியாததுமாக உள்ளது) இவற்றின் அடிப்படையிலும் தேரின் அளவுப் பிரமாணங்களில் மாற்றம் இடம்பெறுகின்றது. இக்காற்புறவாய் அளவு என்ற நிர்ணயத்திற்கு காரணம் கோயில் சார்ந்த அனைத்திலும் ஒருங்கிசைவைக் கொண்டு வருவதற்கும், இதன் மூலம் கோயிலின் அழகியல் அமைப்பு மாறாமல் பேணுவதற்கும், தொடர்ந்தும் புதிய பணிகளை வகுப்பதற்கும் ஒரு அளவு கோலாக அமைகிறது.

## தேரின் உறுப்புக்கள்

### சில்லு

தேரின் பிரதான உறுப்பாகவும், தாங்கியுருளும். ஆதாரமாகவும் அமையும் சில்லு சமவட்டவடிவம் கொண்டது. இரதங்கள் மூன்று சில்லுகளையும், கேலியுத்தம், சாதாரண பாவனை என்பவற்றிற்கான இரதங்கள் நான்கு சில்லுகளையும், நித்திய உற்சவம் சாதாரண விழாக்கோலம் என்பவற்றிற்கான இரதங்கள் ஆறு, ஏழு, எட்டு, ஒன்பது அல்லது பத்து சில்லுகளை உடையனவாகும்.

எமது நாட்டில் 21 அடி உயரத்திற்கு மேற்பட்ட தேர்களுக்கு 6 சில்லுகள் பயன்படுத்தப்படுகின்றது. 21 அடிக்கு உட்பட்ட தேர்களுக்கு 4 சில்லு உடையனவாகவும் உள்ளன. இதற்குக் காரணம் தேரின் உயரம் கூட அகலம் கூடுதலாகும். அத்தோடு அச்சின் மேல் செல்லும் பாரத்தை சமன் செய்வதற்காகவும் ஓடுபாதைகளில் சீரற்ற தன்மைகள் இருந்தால் புதையாமல் செல்வதற்காகவும் ஆகும். இவ் ஆறு சில்லுகள் பயன்படுத்தப்படுவது ஒரு அறிவியல் பூர்வமான காரணமாக இருக்கின்றதெனலாம்.


சம வட்டமுடைய சில்லு இரு பக்கங்களிலும் இரும்பு வளையச் சட்டங்களினால் உறுதியாக அமைக்கப்படுவதாகும். பதினைந்துவித குறுக்களவுகள் 3 - 12 அங்குலம் வரையிலும் கூடுதலாக ஆறங்குலம் அல்லது அவ்வளவுகள் 24 - 102 அங்குலம் வரையிலும் அமைவதாகும். சில்லின் விளிம்பாகிய ஓரத்தில் பதினைந்து வித கணங்கள் 2 - 17 அங்குலமாகவும், கூடுதல் ஓரங்குலமாகவும் அமையும்.

### அச்சு

பாரிலிருந்தமையும் தேரையும், அதனை தாங்கி உருளும் சில்லுகளையும் ஒன்றாக இணைத்து நிற்கும் அச்சின் நீளம் 84 - 120 அங்குலம், கூடுதல் 6 அங்குலமாக அமைய அதன் ஒன்பது வித அகலம் 5 - 12 அங்குலமாகவும் கூடுதல் இரண்டு அங்குலமாகவும் அதன் ஒன்பது உயரம் 7 - 23 அங்குலமாகவும் கூடுதல் 2 அங்குலமாகவும் அமையும், கீலம் அல்லது கடையாணியே அச்சாணியில் சில்லின் உருள்வினை நெறிப்படுத்தும்.

### பார்

தேரின் அடித்தளமாகிய பார் அல்லது ஆதாரம் அச்சின் மேலமைவதாகும். அதாவது பாரின் கீழேயே அச்சு பொருத்தமாக இணைந்திருக்கும். இவ் ஆதாரம் பதினைந்து வித அகலமுடையதாகும். 12 - 60 அங்குலங்கள் வரையில் அமைவதுடன், கூடுதலாக ஆறங்குலம் அமையும். முன்பின்னாக உள்ள ஒன்பது வித நீளங்களும் அகலத்தின் இரு மடங்கில் முடிவடையும். கூடுதல் நீளமாக (¼) காற் பகுதி அமையும். பாரின் அகலம் அதன் மெல்லிய பகுதியில் 3, 4, 5, 6, 7, 8, 9, 10 அங்குலங்களாக இருக்க வேண்டும். ஆயினும் முன் பின் எனும் இரு இடங்களில் இவற்றின் அளவில் இருமடங்காகும். பார் மரங்களின் உயரம் அகலத்தைப் பார்க்கிலும் ஐந்தில் ஒரு பங்கிலிருந்து இரண்டு பங்குவரை அதிகரிக்கப்படுதல் வேண்டும் என்பது கவனத்திற்குரியது.




பாரினுயரம் அதன் அகலத்திற்கு சமமாகவோ அல்லது முக்கால் பங்காகவோ அல்லது இரு பங்காகவோ இருப்பதாகும். மரத்தின் உயரம் அதன் அகலத்திற்கு சமமாக்கப்படுவதுடன் சகலாபரணங்களாலும் அலங்கரிக்கப்படுதல் வேண்டும்.

தேருக்கான பாரின் எண்ணிக்கை ஒவ்வொரு தெங்வங்களுக்கு ஒவ்வொரு எண்ணிக்கை யாழ் மரபில் பின்பற்றப்பட்டுவருவதாக யாழ் ஸ்தபதிமார் கூறுகிறார்கள். அதாவது விநாயகருக்கு 5 பார் எனவும், முருகன் அம்மனுக்கு 6 பார் எனவும், சிவனுக்கு ஏழு பார் எனவும், நியமம் கூறப்படுகிறது. இவ் நியமக் கூற்றுக்கு புற நடையாகவும் சில கோயில்களில் தேர்கள் உண்டு. உதாரணமாக யாழ் கன்னாதிட்டி காளிகோயில் தேர் 5 பாரில் அமைந்துள்ளதாக் குறிப்பிடலாம்.

பாரின் எண்ணிக்கையை அதன் உயரமே தீர்மானிக்கிறது போலுள்ளது. அதாவது சிவனின் தேரின் உயரம் 31 அடியாகவும் விநாயகரின் தேரின் உயரம் 21 அடியாகவும் நியமம் கூறப்படுகிறது. இவ் உயர வேறுபாட்டின் அடிப்படையில் பார்க்கும் போது தேரின் அடிச்சட்டமாகிய பார் உயரிய தேருக்கு வலுவை அதிகரிக்க வேண்டிய தேவை இருப்பதால் இப்பாருக்கான எண்ணிக்கை நியமம் தீர்மானிக்கப்படலாம்.

## உபதாரம் அல்லது உபபீடம்

பிரதான ஆதாரமாகிய பாரின் மேல் உபதாரம் அமையும் பார் நீளத்தில் 4, 5, 6 அல்லது 7 பங்குகளில் ஒன்று குறைந்ததாக உபபீடத்தின் அளவு அமைவதாகும் இவ் உயரம் ஆதாரத்தின் உயரத்திற்கு சமமாகவோ அல்லது இரு மடங்கு அல்லது மூன்று மடங்காகவோ இருக்க வேண்டும். சிங்கம், யானை, மகரம், போன்ற சிற்பங்களாலும், இவைகள் முதலாய சிற்பங்களாலும், நான்கு புறமும் நடனமாடும் பூதங்கள், யக்ஷர்களின் சிற்பங்களாலும் தோரணங்கள், சிறு தூண்கள் யானைக் காதுகள், தந்தங்கள் ஆகியவற்றாலும் உபபீடம் அணி செய்யப்படும்.




இவைகள் யாவும் மிகவும் ஜாக்கிரதையுடன் இரதத்தின் கீழ்ப்பாகத்தைத் தவிர மற்ற எல்லா உறுப்புகளின் எழிலுக்காகச் செய்யப்பட வேண்டும் என்று உபதாரவிதி கூறும். உபபீடத்தின் மேல் சித்திர வேலைப்பாடமைந்த ஓர் உறுப்பை உத்தரத்துடன் சேர்த்துப் பொருத்த வேண்டும்.

## வேதிகைகள் அல்லது தளங்கள்

**தேர் வேதிகைகள் என்பன உபதாரத்தின் மேலமையும் ஒன்பது வரையிலான தளங்களாகும்.**

கேலியுத்த இரதங்கள் இரண்டு வேதிகைகளையும் மகோற்சவ விசேட உற்சவம் ஆகியவற்றிற்கான இரதங்கள் ஒன்று முதல் ஒன்பது வரையிலான வேதிகைகளையும் உடையதாகும். இவற்றுடன் தெய்வங்களின் அடிப்படையில் அமையும் வேதிகைகளின்

மாற்றமும் முக்கியமானதாகும். சிவன், விஸ்ணு, ஆகியோருக்கு ஒன்று முதல் ஒன்பது வேதிகைகளும், ஏனைய தெய்வங்களுக்கு ஒன்று முதல் நான்கு வேதிகைகளும் உரியன. இறுதியில் கூறிய தெய்வ இரதங்களுக்கு மானசாரம் விதிவிலக்காக ஆனால் ஒரு திறமையுள்ள சிற்பி எந்த இரதங்களுக்கு ஒன்று முதல் ஐந்து மேடைகள் வரை அமைக்கலாம் என்று சிற்பிக்கு சுதந்திரம் அளிப்பது குறிப்பிடத்தக்கதாகும்.



மூன்று வகையிலே தளங்களினுயரம் அமையும். முதலாவது பிரதான அளவு முறையில் முதலாவது தளம் 12 - 24 அங்குலம், இரண்டாவது தளம் 5 - 17 அங்குலம், மூன்றாவது 12 - 30 அங்குலம், நான்காவது தளம் 24 - 36 அங்குலமும், ஐந்தாவது தளம் 27 - 39 அங்குலமும், ஆறாவது தளம் 30 - 42 அங்குலமும், ஏழாவது தளம் 36 - 48 அங்குலமும் எட்டாவது தளம் அங்குலமும், ஒன்பதாவது தளம் 39 - 51 அங்குலமும் உடையதாக இருக்கும். இவை ஒவ்வொன்றும் கூடுதல் அளவாக 3 அங்குலம் உடையனவாகும். இதன்படி தளங்களின் மொத்த அதி கூடிய உயரம் 29 அடி 11 அங்குலமாகவும், கூடிய உயரம் 27 அடி 8 அங்குலமாகவும், குறைந்தவுயரம் 17 அடி 4 அங்குலமாகவும் அமையும்.

இரண்டாவது அளவு முறையில் முதலாவது தளம் 12 - 28 அங்குலம், கூடுதல் இரண்டங்குலமாக அமைய 2 - 9 வரையிலான தளங்களும் தனித்தனியே 29 அங்குலங்களாகும். இதன்படி ஒன்பது தளங்களினதும் அதிகூடிய உயரம் 22 அடி 6 அங்குலமாகவும் குறைந்தவுயரம் 9 அடியாகவும் அமையும்.

மூன்றாவது மாற்ற அளவு முறையில் ஒன்று முதல் ஒன்பது தளங்களும் 12 - 20 அங்குலமாகவும் கூடுதல் ஓரங்குலமாகவும் அமையும். இம் முறையில் அதி கூடியவுயரம் 15 அடி 9 அங்குலமாகவும் கூடியவுயரம் 15 அடியாகவும் குறைந்தவுயரம் 9 அடியாகவும் அமையும்.

## மேல் விதானம்

தெய்வீக இரதங்களுக்கு ஒன்று முதல் மூன்று வரையிலான தளங்கள் அல்லது மாடிகள் அமையும் என்று கூறும் மானசாரம் ஒருவருடைய உசிதப்படி (மனோதர்மம்) அவைகளின் அளவுப்பிரமாணங்கள் இருக்கலாம் என்று சிற்பியின் கற்பனைக்கு பெருமளவு சுதந்திரம் அளிக்கிறது. இதனாலோ என்னவோ யாழ்ப்பாண மரபில் மேல் விதான அமைப்பில் தனக்கென பல முத்திரைகளை பொறித்த தேர்கள் பல உள. இவ்வாறு சுதந்திரமளிப்பினும் மற்றவை ஆக சாஸ்திரங்களில் விதிக்கப்பட்ட பிரகாரம் அமைய வேண்டும் என்று அதன் ஏனைய அமைப்புக்களுக்கு இறுகிய மரபை விதிப்பதும் குறிப்பிடத்தக்கது.

மேல்விதான அமைப்பைத் தாங்கி நிற்கும் பவளக்கால் எனச் சொல்லப்படும் தூண்கள் மற்றும் பந்தல் என்னும் விதானத்தில் அடிப்பகுதி, அலங்காரங்களில்

யாழ்ப்பாணத்துக்கென தனித்துவமான பாணி உள்ளது. இதற்கு பித்தளை வேலைப்பாடுகள் காணப்படுகிறது. நாகர, திராவிட, வேசர வடிவங்களுக்கு ஏற்ப மேல் விதான அமைப்புக்கள் மாறுபடுகிறது. கூம்பாக அமையும் மேல் விதானம் அடுக்குகளாக பிரிக்கப்பட்டு எழுதக வரியால் நிரப்பப்படுகிறது. திராவிட மரபில் எண்கோண மூலைகளுக்கு கர்ண கூடுகள் அல்லது கடவுளர்களுக்குரிய வாகனங்களை வைக்கும் வழக்கம் உண்டு.

அதே போலவே பவளக்கால் எனப்படும் வைக்கும் மூலைகளுக்குப் யாளி பொருத்தும் வழக்கம் உண்டு. இவ் யாளி பொருத்திய பின்னரே தேருக்கான அழகியல் முழுமையான வடிவத்தைக் காணலாம்.

யாழ்ப்பாணத்தில் பூணாந்தர மேல் விதான அமைப்பில் புதுமையானதும் தஞ்சாவூர் கோயில் விமானத்தை போன்ற அமைப்பு தேர்களையும் காணலாம். இவ் அமைப்புத் தேர்கள் திருநெல்வேலி சிவன் கோயில், ஆவரங்கால் சிவன் கோயில்களில் காணலாம்.

## சிற்பம், ஓவியம் மற்றும் அணிகலன்கள்

இந்து தெய்வ இரதங்களுக்கு, அவர்களுக்குரிய வாகனங்களும், விக்கிரகங்களாக அமைதல் வேண்டும் என்ற மானாசாரம் கூறும் சிவன், விஸ்ணு, கணபதி, சண்முகர், துர்க்காதேவி, சரஸ்வதி ஆகியோரின் விக்கிரகங்கள் சிற்பமாக பெயர் கூறும் முறையில் அமைவன மேல் விமானத்தில் வாயு தேவர்கள் எனப்படும் மாருதங்கள் சுவர்க்க சுந்தரிகள் மேல் இருந்து கீழ் வரையில் அமைக்கப்படும்.

தேருக்கான வர்ணம் தீட்டுதல் குறிப்பாக எண்ணெய் வர்ணத்தினாலேயே தீட்டப்படுகின்றது . இவ் எண்ணெய் வர்ணத் தெரிவு அதன் பளபளப்புத் தன்மை மற்றும் மரங்களுக்கான பாதுகாப்பு அடிப்படையில் அதிகம் இப்போது பாவனையில் உள்ளது.

சிற்பப் பகுதிகள் நிறைந்த தேரின் அடித்தளம் வாணிஸ் எனப்படும் எண்ணெய்க் கலவையினால் பூசப்படுகிறது. (பழைய காலங்களில் இலுப்பெண்ணெய் பயன் படுத்தப்பட்டது) இவ் வாணிஸ் மரச் சிற்பங்களுக்கான மேற்பரப்பு இயல்பைத் தோற்றுவிப்பதோடு அதன் வெளிப்பாட்டிற்கும் உதவுகிறது.

வர்ணங்கள் தேரின் மேல் விதானம் பவளக்கால் பந்தல் (மணி மண்டபம்) முகப்புக் குதிரை யாளிகள் சாரதி என்பவற்றுக்குப் பயன்படுத்தப்படும்.

சிற்பங்கள் ஓவியங்கள் தவிர்ந்த ஏனைய தேரணிகளாக மயில் இறகுகள் தோரண வளைவுகள் பல வித மணிகள் விசிறிகள் தாளம் பூ மாலைகள் என்பன அமைக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

## முகபத்திரம்

தேர் அமைப்புத் தொழில்நுட்பத்தில் கட்டிடத் தொழில் நுட்பமாக அமையும் முகபத்திரம் பற்றி மானசாரம் குறிப்பிடுவது கவனத்திற்குரியது. உத்தர மட்டம், முகபத்திரம், இரட்டைப் பஞ்சாங்களம் என்னும் அமைப்பு முறைகள் இன்று

நடைமுறையில் உள்ளது. இவை பற்றிய சிறு குறிப்புக்களை மானாசாரத்தில் காணலாம்.

தலைவாயில்கள் அல்லது முகப்பு மண்டபங்கள் எனப்படும் முகபத்திரம் ஓர் மடக்கை முறை எனலாம். ஒரு கோண மட்டத்திலிருந்து வெளியே நீட்டப்பட்டதன் பிதுக்கமே முகபத்திரமாகும். இம் முகபத்திர பிதுக்கலாகிய மடக்கையின் அளவு 22 - 36 அங்குலமாகவும் கூடுதல் 3 அங்குலமாகவும் அமையும் தேரடித்தளமாகிய பாரிலிருந்து மேலேறும் இம் மடக்கையின் கலம் பாரகலத்தில் 1/3 அல்லது 3/4 அல்லது 3/5 அல்லது பங்குமானம் உடையதாகும்.

நான்கு கோணங்களாலும் நான்கு பத்திரம் இருக்க வேண்டும் என்று மானசாரம் கூறும். அவ்வாறு கோணத்திற்கு முகபத்திரம் அமைக்கப்படாவிடின் ஒவ்வொரு பக்கத்திலும் மூன்று அல்லது 2 சிங்கத்தின் உருவம் இருக்க வேண்டும் என்று அது விதிப்பதிலிருந்து தேரமைப்பு முறையில் முக பத்திரத்தின் முக்கியத்துவம் புலப்படுகிறது எனலாம்.

ஒரு முக பத்திரத்தினுள் இன்னொன்றை செய்யலாம் என்று மானசாரம் கூறுவதன் விரிவே இரட்டைப் பஞ்சாங்கம் ஆகும். தலை வாயில் ஆகிய முகபத்திரத்தினுள் முகப்பு அறைகளாகிய நாசிறைகள் பொருத்தமாக நிரப்பப்படலாம் என்று மானசாரம் குறிப்பிடுவது சிறப்பானதே.

இவ் முகபத்திர தேர்கள் தெல்லிப்பளை துர்க்கை அம்மன் கோயில், திருநெல்வேலி முத்துமாரி அம்மன் கோவில்களில் உள்ளது.



# உள்ளமதில் கோயில் கொண்ட உமாசுதன்

கல்வயல் **திரு. அ. கதிரவேற்பிள்ளை** அவர்கள்
(கணக்காளர் கொழும்பு)

சாவகச்சேரி கல்வயல் கிராமத்தில் சைவ வேளாளர்கள் சூழ உள்ள இடந் தான் புலுட்டையன் வளவு. புலுட்டையன் வளவில் குடில் ஒன்றின் கீழ் தமது அருளாட்சி வழங்க அமர்ந்தவர் தான் புலுட்டையன் பிள்ளையார் என்று போற்றிப் புகழப்படும் ஆயிலடி வீரகத்தி விநாயகர் ஆவார் கல்வயல் பெருங்குளம் அம்பலவாண வீரகத்தி விநாயகரின் ஆதி மூல விக்கிரகத்தை மாற்றி புதிய மூலவர் பிரதிஷ்டை செய்த சமயம் அந்த நாட்களில் வழிபாடியற்றிக் கொண்டிருந்த அடியவர் ஒருவரின் மனதினிலே குடிகொண்டு குடியிலின் கீழ் வந்து அமர்ந்தவர் தான் புலுட்டையன் பிள்ளையார். இவ்வாதிமூல வெள்ளைக்கல் விநாயகர் உருவம் இன்றும் புலுட்டையன் திருமஞ்சன தீர்த்தக் கிணற்றில் அமைர்ந்திருந்து அருள்வாரி வழங்கி வருகிறார். இவ்வற்புதத்தை எண்ணும் கால் எம்பெருமானின் திருவருளை என்னென்று இயம்புவது. கிழக்கு முகமாக அமர்ந்த எம்பெருமான் அயல்வீட்டில் ஏற்பட்ட ஒரு புலுட்டல் மணம் காரணமாக மேற்குத்திசை நோக்கித் திரும்பி அமர்ந்த நிகழ்வு ஆலய வரலாற்றில் அடியேன் அறிந்த ஆரம்ப அற்பதம். புலுட்டையன் பிள்ளையாரின் வடக்குத் திசையில் சித்திகள் வாரி வழங்கிக் கொண்டிருக்கும் சித்தன் மாவடிப்பிள்ளையாரும் வடகிழக்குத் திசையில் வினைதீர்க்கும் வேதவன விநாயகப் பெருமானும் கிழக்குத் திசையில் தம்மையும் சிவனையும் ஒரு சேர வழிபட வேண்டும் என்ற நோக்குடன் அம்பலவாண வீரகத்தி விநாயகர் எனும் நாமத்துடன் பெருங்குளம் பிள்ளையார் கோயிலும் தென்மேற்குத் திசையில் சர்வரோகதன்வந்திரி மூர்த்தியாக மருதடிப் பிள்ளையாரும் மேலும் அன்னை துர்க்கை அம்பாள் தழையடிப் பதியிலும் காவல் தெய்வமாக வில்பத்து வைரவசுவாமி கோயிலும் சுற்றஞ் சூழ அமர்ந்திருப்பது கல்வயல்வாழ் சைவமக்கள் செய்த பூர்வபுண்ணிய பலன் என்றே சொல்லலாம். அடியேனின் சிறுபிராயத்தில் செய்யக் கிடைத்த பூத்தொண்டு, சாத்துப்படி அலங்காரங்கள் அடியேனின் மாமனார் காட்டிய அற்புதத் தொண்டுகளே. தற்போது ஆலயத் திருப்பணிகள் வெகு சிறப்பாக திரு.சி.விவேகானந்தனின் பெருமுயற்சியால் செய்யப்பட்டு இவ் வருடம் புதிய சித்திரத் தேர் வலம் வரும்வேளை மலர இருக்கும் பத்தகத்தில் ஒரு சிறிய வரலாற்றுக் குறிப்பை எழுத எம்பெருமான் தந்த திருவருளை நினைத்து எம்பெருமானின் தொண்டுகள் மென்மேலும் சிறப்புற விநாயகர் பாதார விந்தங்களைப் பணிந்து நிறகின்றேன்.

"என்றும் ஐங்கரன் சேவையில்."





பரிவார மூர்த்திகள்

# இராஜகோபுரம்

'செந்தமிழ்ச் சொல்லருவி' ச.லலீசன் M.A. (தமிழ்) M.Ed., S.L.T.E.S. – Class III

(விரிவுரையாளர், கோப்பாய் ஆசிரிய கலாசாலை)

இயற்கை முழுவதிலும் அழகு உண்டு. சில இடங்களில் அமைந்துள்ள அழகு நமது எண்ணங்களைக் கொள்ளை கொண்டுவிடுகின்றது. மனத்தகத்து மேலான சிந்தனைகளைத் தூண்டுவதற்கு இவ்வழகு வழி கோலுகின்றது. இயற்கையின் சக்தி குறித்துப் புரிந்து கொண்ட நம்முன்னோர், வேதகாலந்தொட்டு இயற்கைக்கு முதன்மை கொடுத்து வழிபாடாற்றத் தலைப்பட்டனர். நதிக்கரைகளிலும் மர நிழல்களிலும் ஆரம்பித்த வழிபாட்டிடங்கள் ஆகமங்களை அனுசரித்து ஆலயங்களாகப் புதுக்கப்பெற்றன.

ஆலயம் ஒன்று உடல் என்னும் ஆலயத்தின் புறச்சின்னமாகும். புறச்சின்னத்தை நம் மனம் போன போக்கில் அமைத்துவிட முடியாது. மூல அமைப்பு ஆகிய சரீரத்திற்கும் அதன் குறியீடாக விளங்குகின்ற ஆலயத்திற்கும் இயைபு இருத்தல் வேண்டும். இதனாலேயே ஆலயங்களைக் கட்டுவதற்கு ஆகமகாரர் விதி முறைகளை வகுத்தனர். தேசப் படத்தின் துணைக் கொண்டு தேசத்தை நன்கு அறிந்து கொள்வது போல கட்டப்பெற்றுள்ள ஆலயம் ஒன்றின் துணைக் கொண்டு சரீரம் என்னும் ஆலயத்தின் தத்துவங்களை புரிந்து கொள்ள முடியும்.

ஒரு மனிதன் நீட்டி நிமிர்ந்து படுத்திருக்கின்ற கோலத்தில் ஆலயம் அமைந்துள்ளது. மூலஸ்தானம் அல்லது கருவறை மனிதனின் சிரசையும் அர்த்த மண்டபம் கழுத்தினையும் மகாமண்டபம் மார்பினையும் தரிசனமண்டபம் வயிற்றினையும் அடுத்துள்ள மண்டபங்கள் கால்களையும் ராஜகோபுரம் பாதங்களையும் கோபுர ஸ்தூபி பாதத்தின் விரல்களையும் குறிப்பதாகக் கொள்வர். வழிபடநாடிவரும் அடியவர் கோவிலின் வனப்பையும் கம்பீரத்தையும் புரிந்து கொள்ளக் கூடிய வகையில் இராசகோபுரமே வெளிப்பட்டுத் தெரிகின்றது. நெடுந்தூரத்திற்கு அப்பால் உள்ளவர்களுக்கும் தெய்வசொரூபத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திக் காட்சி தருவதால் தூலலிங்கம் எனக் கோபுரத்தை அழைப்பர்.

திருக்கோவிற் கோபுரத்தைச் சூழவந்து வணங்காத கால்களால் பயனென்ன? எனக் கேட்கிறார் நாவுக்கரசர்

"கால்களாற் பயனென் - கறைக் கண்டன் உறைகோயில்

கோலக் கோபுரக் கோகரணஞ் சூழாக் கால்களாற் பயனென்?"

என்பது திருஅங்கமாலையில் இடம்பெறும் பாடல்.

கோபுரமானது கீழ்ப் பகுதியில் அகன்றும் மேல்நோக்கிச் செல்லச் செல்லக் குவிவாக ஒடுங்கியும் காணப்படும். இந்த அமைப்பானது இடரில் சிக்கிய ஆன்மா இறைவன்பால் சிந்தையை ஒரு நிலைப்படுத்தினால் ஈடேற முடியும் என்பதன் குறியீடு

எனக் கொள்ளலாம். மனித எண்ணங்களை ஒரு நிலைப்படுத்துவதன் அவசியத்தையும் கோபுரம் நினைவூட்டுகின்றது.

கோபுரம் என்ற சொல் வடமொழியில் இருந்து தமிழுக்கு வந்த ஒரு சொல் என அறிஞர்கள் கருதுகின்றனர். சங்க இலக்கியங்களிலோ அல்லது அதற்குச் சற்றுப் பிற்பட்ட சிலப்பதிகாரம் முதலிய நூல்களிலோ கோபுரம் பற்றிய செய்திகள் காணப்படவில்லை. ஆயினும் வடமொழியில் எழுந்த மகாபாரதம் முதலிய நூல்களில் கோபுரம் என்ற சொற்கையாட்சி இடம்பெற்றிருக்கிறது.

வேதகாலத்தில் பசுக்களே மேலான செல்வம். இவற்றை மூங்கிலால் வேலியிட்டு அடைத்து வைத்தனர். மூங்கிலால் ஒரு வாயிலும் அமைத்தனர். இதனையே கோபுரம் எனக் குறித்தனர் எனச் சில ஆய்வாளர்கள் கருதுகின்றனர். கோ என்பது பசுவையும் புரம் என்பது காத்தலையும் குறிப்பதால் இக்கருத்து ஏற்பட்டிருக்க வேண்டும்.

எல்லையிடப்பட்ட அமைப்பு ஒன்றின் வாயிலுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் வழக்கம் மிக நீண்ட காலமாகக் காணப்படுகின்றது. கி.மு. 1500 ஆம் ஆண்டிற்கு முன்னரேயே பண்டைய எகிப்தில் வாயிற் கட்டிட அமைப்புக்களுடன் கூடிய கோவில்கள் இருந்துள்ளன. இந்துக் கோவில் கோபுர வரலாற்றில் கி.பி. ஆறாம் நூற்றாண்டிற்குப் பின்னரே கோபுரம் அமைக்கும் வழக்கம் ஏற்பட்டது எனக் கருதுவர். ஆயினும் வேதகால ஊர்களில் கோபுரங்களின் கருத்துருவுக்கான ஆதாரம் இருப்பதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

ஆந்திராவில் அமராவதி, நாகார்ச்சுனகொண்டா முதலிய இடங்களில் கிடைத்த சிற்பத் தொகுதிகளில் கோபுர அமைப்புக் காணப்படுவதாக வாழ்வியற் களஞ்சியம் குறிப்பிடுகின்றது. எனவே கி.பி. முதலிரண்டு நூற்றாண்டுகளுக்குள்ளேயே தென்னிந்தியர்கள் கோபுரம் பற்றிய அறிவைப் பெற்றிருந்தனர் என உணரமுடியும்.

இயற்கைப் பொருள்களினால் நிறுவப்பட்ட வாயிற் கட்டட அமைப்புக்கள் காலப்போக்கில் நின்று நீடித்து உழைக்கும் கட்டடப் பொருள்களால் ஆக்கப்பட்டிருக்கலாம். இப்படி அமைக்கப்பட்ட விசேட வாயில் தோரணவாயில் என அழைக்கப்பட்டது. பௌத்த ஆலயங்களில் தோரணவாயில் அமைக்கும் வழக்கம் நீண்ட காலமாகக் காணப்படுகின்றது.

தமிழகத்தின் கோபுரங்களில் மிகவும் தொன்மையானது காஞ்சிபுரம் கைலாசநாதர் கோவிலில் உள்ள கோபுரம் ஆகும். இது பல்லவர்காலத்தில் அமைக்கப்பட்ட கோபுரம் ஆகும். அக்காலத்தில் கோபுரம் ஒரு முதன்மைக் கூறாக அமையாமையால் ஒப்பீட்டளவில் சிறிய பருமனுடையதாகவே இக்கோபுரம் அமைக்கப்பட்டுள்ளது. பல்லவர், சோழர் காலங்களில் கோபுரங்களின் மீது அதிக கவனம் செலுத்தப்படவில்லை.

கோவில்களில் கருவறைக்கு மேல் அமைக்கப்படும் கட்டடப் பகுதியை விமானம் என அழைப்பர். பல்லவர், சோழர் காலங்களில் கோபுரத்தை விட விமானத்திற்கே அதிக முக்கியத்துவம் கொடுத்தனர். கோவிற் கட்டிடக்கலை மிகச்

சிறப்பான வளர்ச்சியைப் பெற்ற சோழர் காலத்தில் அமைக்கப்பட்ட மிகப் பிரதான ஆலயங்களான தஞ்சை, திரிபுவனம், கங்கை கொண்ட சோழபுரம் முதலிய இடங்களில் கர்ப்பக்கிருகத்தின் மீதுள்ள விமானம் அவ்வவ் கோவில்களின் கோபுரங்களைக் காட்டிலும் உயரமாக அமைந்திருக்கிறது. இறைவன் வீற்றிருக்கும் கருவறைக்கு முக்கியத்துவம் கொடுக்கும் முகமாக விமானத்தைப் பெரிதாக அமைக்கும் வழக்கம் அக்காலத்தில் காணப்பட்டது.

கோவில்களில் கோபுரம் அமைக்கப்பட்ட வரலாற்றைக் குறிப்பிடும் பேர்சி பிறவுன் கோவில்களின் புனிதத்தன்மை காரணமாக அதன் கருவறையை இடித்துப் பெரிதாக்க விரும்பாத இந்துக்கள், கால மாற்றத்திற்கு ஏற்ப கோவிலை விஸ்தரிக்கும் நிலையில் கருவறையில் மாற்றத்தைச் செய்யாது அதனை அண்டி வேறு அமைப்புக்களை உருவாக்கினர் என்கிறார். கோவிலின் முக்கியத்துவம் காரணமாகக் கோவிலைச் சூழப் பெரிய மதிற் சுவர்களை எழுப்பிய இந்துக்கள் அதன் வாயில்களில் விமானத்தைவிட மிகஉயரமாகக் கோபுரத்தை அமைத்தனர் என மேலும் குறிப்பிடுகின்றார். கோபுரங்களின் உயரம் வளர்வது கோயிலின் பெருமையை உயர்த்தியது மட்டுமன்றி அதனைக் கட்டுவித்தவரது அதிகார பலத்திற்கும் சாட்சியாக அமைந்தது.

சோழர் காலத்தில் ஆலயங்களில் பல கோபுரங்கள் அமைக்கப்படும் மரபும் தோற்றம் பெற்றது. தஞ்சைப்பெரியகோவிலில் இரண்டு கோபுரங்கள் உள்ளன. இவை விமானத்தை விடச் சிறியவையாக இருப்பதால் அதிக கவனத்தைப் பெறுவதில்லை.

விஜயநகர நாயக்கர் காலமே கோபுரகாலம் எனப் போற்றப்படத்தக்க காலம் ஆகும். இவர்களது காலத்தில் ஒப்பீட்டளவில் விமானம் சிறிதாகவும் கோபுரம் பெரிதாகவும் அமைக்கப்பட்டன. திருவண்ணாமலை, திருவில்லிபுத்தூர், மதுரை, திருவரங்கம் போன்ற இடங்களில் அமைக்கப்பட் உயர்ந்த கோபுரங்கள் இன்றும் அழகாகக் காட்சி தருகின்றன. கிருஷ்ணதேவராயர் காலத்தில் 180 அடி உயரத்திற்கு மேல் கோபுரங்கள் அமைக்கப்பட்டன.

இந்துக் கோவில்களில் மிக உயரமான கோபுரம் என்ற பெருமைக்குரியது திருவரங்கக் கோபுரம் (ஸ்ரீரங்கம் ஸ்ரீ ரெங்கநாதசுவாமி கோவில்) ஆகும். இது 17 ஆம் நூற்றாண்டுக்குரியதாயினும் 1987 ஆம் ஆண்டிலேயே இக்கோபுரத்தை முழுமையாகக் கட்டி முடித்தனர். 13 தளங்களையுடைய இக்கோபுரத்தின் உயரம் 236 அடியாகும். திருவண்ணாமலைக் கோபுரம் 217 அடி உயரத்தையும் திருவில்லிப் புத்தூர்க் கோபுரம் 192 அடி உயரத்தையும் உடையவை. திருவில்லிபுத்தூர்க் கோபுரம் தமிழக அரசின் சின்னமாகவும் அமைந்திருக்கிறது.

இலங்கையில் உடப்புப் பிரதேசத்தில் அமைந்துள்ள ஸ்ரீருக்மணி சத்யபாமா சமேத ஸ்ரீ பார்த்தசாரதி (திரௌபதை அம்மன்) ஆலயக் கோபுரம் அண்மையில் (2011 தை) அமைக்கப்பட்டதாகும். இது 108 அடி உயரமானது. 9 தளங்களை

உடையது. எட்டுக் கோடி ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ள இக்கோபுரத்தை அமைப்பதற்கு ஐந்து ஆண்டுகள் எடுத்தது. இதே போல மாத்தளை ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயக்கோபுரமும் 108 அடி உயரமானதாகும். இங்கும் ஒன்பது தளங்கள் உள்ளன. கடந்த ஆண்டு (2011) திருக்குடமுழுக்குக் கண்ட நல்லூர்க் கந்தசுவாமி கோவிலின் தெற்கு வாசல் கோபுரம் 120 அடி உயரமுடையது எனக் கொள்ளப்படுகின்றது. நயினை நாகபூசணி அம்மன் ஆலயம், பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயம் ஆகிய இடங்களிலும் அண்மையில் 108 அடி உயரமுள்ள இராஜகோபுரங்கள் அமைக்கப்பட்டு திருக்குடமுழுக்கு இடம்பெற்றுள்ளன.

கோபுர அமைப்பில் நில மட்டத்தில் இருந்து அமையும் முதலாவது அமைப்பை வியாழ மட்டம் என்பர். இவ்வியாழ மட்டத்திற்கு மேல் ஒன்றன் மேல் ஒன்றாக பிரமாண அடிப்படையில் அமைவது தளங்கள் ஆகும். ராஜகோபுரத்தின் தளங்கள் ஒற்றைப்படை எண்ணிக்கையில் அமைந்திருக்கும். அவ்வெண்ணிக்கையில் உச்சியில் கலசங்களும் அமைந்திருக்கும்.

கோபுரம் ஒன்றின் ஒவ்வொரு வாயிலின் இரு மருங்கிலும் காவல் தெய்வங்கள் அமைக்கப்படவேண்டும் என்பது விதியாகும். அதாவது ஆண் தெய்வத்துக்குரிய கோபுரமாக இருந்தால் துவார பாலகர்களும் பெண் தெய்வத்துக்குரிய கோபுரமாக இருந்தால் துவார சக்திகளும் அமைக்கப்படுவர். தூரத்தே நின்று கோபுரத்தை வழிபட்டுப் பின் துவார சக்திகளை வணங்கி அனுமதி பெற்று கோவிலினுள் செல்ல வேண்டும் என்பது ஆலய வழிபாட்டுக்குரிய ஒழுங்கு ஆகும்.

திருக்கோவிற் கோபுரங்கள் பற்றி காசியப சிற்ப சாஸ்திரம், மயமதம், மானசாரம் என்னும் சிற்ப சாத்திர நூல்களும் காமிகம், காரணம், சுப்பிரபேதம் ஆகிய ஆகமங்களும் எடுத்து விளக்குகின்றன.

மானசாரம் என்ற சிற்ப நூல் ஐவகைப் பிரகாரங்களில் (வீதி) கோவிலிற்கு முற்பகுதியில் கோபுரம் அமைத்தல் வேண்டும் எனக் கூறி இவற்றைப் பற்றித் தனித்தனியே குறிப்பிடுகின்றது. அந்தர் மணடபத்திற்கு அணித்தான கோபுரம் துவார சோபை என்று பெயர் பெறும். இதையடுத்து இருக்கும் கோபுரம் துவாரசாலை எனப்படும். மூன்றாவது கோபுரம் துவாரப் பிரசாதம் எனவும், நான்காம் ஐந்தாம் கோபுரங்கள் முறையே துவாரர்மயம், மாமர்யாதை எனவும் பெயர்பெறும். இவ்வைந்தாவது கோபுரத்திற்கு **"கோபுரம், இராஜகோபுரம்"** என்ற பெயர்களும் உண்டு. எமது பிரதேச ஆலங்களில் பெரும்பாலும் இரண்டு பிரகாரங்களே காணப்படுகின்றன. இதனால் இங்கு அமைக்கப்படுகின்ற ஒரு கோபுரத்தை இராஜ கோபுரம் என அழைக்கும் வழக்கத்தை நாம் கொண்டிருக்கிறோம்.

கோபுரமானது உபபீடம், அதிட்டானம், சுவர், மஞ்சம் என்றும் அதன் மேல் கர்ணகூடு, மஞ்சம், கண்டம், சிகரம், தூபி என்றும் பல அங்கங்களைக் கொண்டதாகும். மேலே அமையப் பெறும் சிகர அமைப்பு நீண்ட சதுர வடிவுடையதாக அமைக்கப்படும். கோபுரங்களின் கீழ்ப்பகுதி கருங்கற்களாலோ அல்லது வேறு உறுதியான கற்களாலோ அமைக்கப்படும். வியாழ வரியின் மேல் செங்கற்களால் அமைக்கப்படும் வழக்கம் காணப்படுகின்றது. தற்போது துளையுள்ள கொங்கிறீட் கற்களையும்

பயன்படுத்துகின்றனர். அதாவது பாரம் குறைந்த கற்களே வியாழ மட்டத்தின் மேல் வைக்கப்படுகின்றன.

கோபுரம் ஒன்றில் எண்ணற்ற வடிவங்கள் உள்ளன. பிரபஞ்ச அமைப்பில் காணப்படக் கூடியவைகளைக் குறித்துக் காட்டும் விதமாக மக்கள் கூட்டம், தேவர் கூட்டம், சிற்றுயிர்கள், பேருயிர்கள், விலங்குகள் என்பனவற்றைக் கோபுரத்தில் அமைத்துக் காட்டுவர். இந்துப் பண்பாட்டு மரபுகளைத் தழுவியதாக இசை, ஓவியம், சிற்பம், நடனம் போன்ற கலை அம்சங்களும் கோபுரத்தில் அமைந்திருக்கும். புராணக் கதைகளை அடியொற்றி இறைவன் திருவிளையாடல்களை அமைத்துக் காட்டுவதும் உண்டு. காலதிகாலமாக இக்கதைகள் வாழ்வதற்கு கோபுரங்களில் உள்ள சிற்பங்கள் வழிசமைக்கின்றன. சமூகத்தின் உயர்வுக்காக வாழ்ந்த மனிதர்களைக்கூட கோபுரத்தில் அமைக்கும் வழக்கமும் உள்ளது.

கோவிலில் நுழைவதற்கு வசதியில்லாதவர்கள் கோபுரத்தில் இறை அம்சத்தைக் கண்டு வழிபாடாற்றும் வசதி உள்ளது. கோபுரத்தைத் தூல லிங்கம் என அழைக்கும் வழக்கம் இதனாலும் ஏற்பட்டிருக்கலாம். மக்களுள் இருந்த சமூக வேறுபாடுகள் காரணமாகக் கோபுர தரிசனத்துடன் வழிபாட்டை முடித்துக் கொள்ளும் தன்மையும் சில சமூகத்தவர்களுக்கு ஏற்பட்டிருக்கலாம்.

*கோபுர தரிசனம் கோடி புண்ணியம்*

*கோபுர தரிசனம் பாப விமோசனம்* போன்ற பொன்மொழிகள் இச்சூழமையிலேயே ஏற்பட்டிருக்க வேண்டும்.

இராஜகோபுரத்தின் மேல்நிலை (தளங்கள்) ஒற்றைப்படை எண்ணிலேயே அமைந்திருக்கும். இதன் தத்துவார்த்த விளக்கத்தைக் குறிப்பிடும் சுகந்தினி சிறீமுரளிதரன், மூன்று, ஐந்து, ஏழு, ஒன்பது, பதினொன்று, பதின்மூன்று இவ்வாறு அமைந்துள்ள நிலைகள் (மாடங்கள்) ஒன்றன்பின் ஒன்றாக ஒற்றை எண்ணிலேயே காணப்படும். இதில் மூன்று நிலைகள் ஜாக்கிரத, ஸ்வப்ன, சுழுத்தி என மூன்று அவத்தைகளைக் குறிக்கும். ஐந்து தளங்கள் ஐம்பொறிகளைக் குறிக்கும். ஏழு தளங்கள் ஐம்பொறிகளோடு மனம், சித்தத்தையும் குறிக்கும். ஒன்பது தளங்கள் ஏழு தளங்களுக்குரிய அம்சங்களுடன் சித்தம், அகங்காரம் ஆகிய இரண்டையும் சேர்த்துக் குறிக்கும். என்கிறார்.

கட்டடக்கலை, சிற்பக்கலை, ஓவியக் கலை என்பன சிறந்தோங்கி நிற்பதன் அடையாளமாகக் கோபுரத்தைக் கொள்ளமுடியும். இந்தியா சுதந்திரம் பெற்ற காலப்பகுதியில் தமிழக அரசின் சின்னமாக ஸ்ரீவில்லிபுத்தூர் கோவில் கோபுரத்தை அமைத்தனர். மதச்சின்னத்தை அரசுச் சின்னமாக அமைக்கலாமா? என அப்போதைய பிரதமர் நேரு இச்சின்ன வடிவமைப்புக்குப் பொறுப்பேற்ற சென்னை மாகாண முதல்வர் ஓமந்தூர் ராமசாமி ரெட்டியாரிடம் விளக்கம் கோரினாராம். கோபுரம் மதச் சின்னமல்ல. தமிழர்களின் பெருமையின் சின்னம். தமிழகக் கட்டடக் கலைக்குள்ள சிறப்பு கோபுரம்தான் என மாகாண ஆளுநர் பதிலளித்தாராம். பதிலில்

திருப்திப்பட்ட நேரு தமிழக அரச இலச்சினையாகக் கோபுரச் சின்னத்தை ஏற்றுக் கொண்டார்.

தற்போது எமது பிரதேச ஆலயங்களில் கோபுரத்திற்கு வெளியே வில்லு மண்டபம் அமைக்கும் கலாசாரம் தொற்றிக்கொண்டுள்ளது. நல்லூர் கந்தசுவாமி கோவிலின் அழகைக் கண்டு இலயித்தவர்கள் தமது ஆலயத்திற்கும் இத்தகு வில்லு மண்டபத்தை அமைக்கின்றனர். ஆனால் முற்காலங்களில் கோபுரமே வெளி வாயில் அதற்கு வெளியே வில்லு மண்டபம் அமைத்தால் அது கோபுரத்தின் அழகைக் குறைத்துவிடும் எனக் கருதினர்.

எமது பிரதேச ஆலயங்களின் கருவறைக்கும் இராஜகோபுரத்திற்கும் இடையிலான தூரம் குறுகியதாக இருப்பதால் பக்தர்கள் நின்று வணங்குவதற்குரிய இடம், மற்றும் சொற்பொழிவுகள் முதலிய செயற்பாடுகளை நடத்துவதற்குரிய இடம் போதாமல் இருக்கிறது. இதனால் வில்லு மண்டப அமைப்புச் செல்வாக்குப் பெற்றுக் காணப்படுகின்றது.

கல்வயல் ஆயிலடி வீரகத்தி விநாயகருக்கு அடுத்து நிறைவேற்ற வேண்டிய திருப்பணியாக இராஜகோபுரம் அமைந்துள்ளது. எம்பெருமானின் திருவருளால் விரைவில் கைகூடப் பிரார்த்திப்போம்.



# சிவமகாபுராணம் கூறும் சிவத்தொண்டு மகிமை

க. ஈஸ்வரன் B.A. Hons, M.A (ஆசிரியர், யா/நாவற்குழி மகாவித்தியாலயம்)

இந்துப்பண்பாட்டிலே இதிகாசங்கள், புராணங்கள் எனப்படும் இலக்கியங்கள் தோன்றி வேதஇலக்கியக்கருத்துக்களை கருத்து நிலையிலிருந்து காட்சிநிலைக்குக் கொண்டுவந்தன. இதிகாசங்கள் எனப்படுபவை மண்ணுலகில் நிகழ்ந்த மண்: பெண், பொன் ஆசைகளால் ஏற்பட்ட ஆதிக்கப் போர் பற்றியும் அவை தர்மத்தின் அடிப்படையில் முடிவுற்றமையையும் எடுத்துக்கூறுவனவாக அமைந்துள்ளன. அரசவைகளில் பாடப்படுகின்ற வீரப்பாடல்களாகவும் இவை விளங்கி நிற்க புராணங்கள் விண்ணுலகில் தேவர்களுக்கும் அசுரர்களுக்குமிடையே ஏற்பட்ட அதிகாரப் போர் பற்றிய செய்திகளை விளக்கி இறைவனின் பெருமை பேசுவனவாக அமைந்துவிட்டன.

இந்துசமயம் பற்றிய விளக்கத்திற்கு துணைபுரியும் சமய இலக்கிய வரிசையில் பதினெண்புராணங்கள் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெறுகின்றன. இவை இந்துசமய மரபு, வழிபாட்டு முறைகள், தெய்வ இயல், விரத மகிமை, தீர்த்தமகிமை, தொண்டு மகிமை முதலிய விடயங்களை உள்ளடக்கியனவாக விளங்கி பக்தி நெறியை வளம்படுத்துவதில் பெரும் பங்கு வகிக்க்ன்றன. வேதங்களுக்கு அடுத்தநிலையில் போற்றப்படும் பெருமை இப்புராணங்களுக்கு உண்டு என்பர் அறிஞர்.

புராணம் என்ற சொல் "பழைமை வாய்ந்தது" "பழைமையான வரலாறு" என்ற கருத்துக்களுடன் கையாளப்படுகின்றது. திருவாசகத்தில் வரும் சிவபுராணத்தில் 'சிவனது அநாதி முறையான பழைமை' என மணிவாசகரால் விளக்கப்படுகின்றது. புராதனம் என்ற சொல்லின் மறுவடிவமே புராணம் என்று ஆயிற்று என்பர். இன்னும் பூர்வம், பழைமை, பழங்கதை, பண்டையவரலாறு என்னும் பொருள் தருவதாகப் புராணம் எனும் சொல்விளக்கப்படுகின்றது.

இறையனார் களவியல் முதற்பாவுரையில் நக்கீரர் இடைச்சங்கமிருந்த புலவர்களைக் கூறியபின் அவர்களாற் பாடப்பட்டவற்றை வரிசைப்படுத்தும்போது அகத்தியமும் தொல்காப்பியமும், மகாபுராணமும், இசைநுணுக்கமும், பூதபுராணமும் எனவரிசைப்படுத்துவார். எனவே புராணம் இடைச்சங்க காலத்திலேயே தோற்றம் பெற்றுவிட்டது எனில் அதில் மிகையில்லை.

புராணங்களின் காலம் பற்றிய கருத்துக்களிலும் பலமுரண்பாடுகள் காணப்படுகின்றன. ஐயாயிரம் வருஷங்களுக்கு முந்திக் கலியுக ஆரம்பத்தில் வியாசர் புராணங்களைக் கொடுத்தார். என்பது சாஸ்திரங்களில் சொல்லியுள்ள விடயமாகும். எனினும் அவருக்கு முன்பே புராணங்கள் உள்ளனவென்று தந்திவனப்புராணம் தந்த கமலை ஞானப்பிரகாசத்தின் கருத்தாகும்.

சுமார் நான்கு இலட்சம் கிரந்தங்களில் வியாசர் இந்தப் புராணங்களை எழுதியுள்ளார். அவை பதினெட்டாகச் சொல்லப்படுகின்றன. வடமொழியில்

அஷ்டதசபுராணம் எனவும் அழைப்பர்.

| | |
|---|---|
| சிவபுராணம் - | 10 |
| விஷ்ணு புராணம் - | 04 |
| பிரம்மபுராணம் - | 02 |
| அக்கினிபுராணம் - | 01 |
| சூரியபுராணம் - | 01 |
| | 18 |

இவை பல கிரந்தங்களால் ஆனவை. கிரந்தம் என்பது 32 எழுத்துக்களைக் கொண்ட சுலோகம் ஆகும்.

பொதுவாகப் புராணங்கள் எல்லாம் நைமிசாரணியத்தில் சூதாமாமுனிவரால் சனகருக்கும் ஏனைய பல முனிவர்களுக்கும் சொல்லப்பட்டன. இப்புராணங்கள் எல்லாம் ஒரே காலத்தில் தோன்றியிருத்தல் என்பது இயலாத காரியம். அது பற்பல காலங்களில் பல்வேறு நோக்கங்கள் கருதித் தோன்றியிருத்தல் வேண்டும். இங்கு வியாசர் என்பவர் யார் என்ற வினா எழுவது தெரிகின்றது. வியாசர் என்பது தொகுப்பாளர் மாத்திரமே என்ற கருத்தும் நிலவுகின்றது. புராணங்களில் மிகவும் பழைமையானது விஷ்ணுபுராணம் புராணங்களின் காலம் கி. மு. 200 - கி.பி 500 வரை என்பது வாழ்வியற் களஞ்சியம் தரும் செய்தியாகும்.

பதினெண் புராணங்களும் வேதாகமங்களின் சாரம் இன்னது என நியாயப் பிரமாணங்களால் தேற்றி விளக்குவதால் உபாங்கம் எனவும் 'உபப்பிருங்கணம்' எனவும் யாவராலும் கொள்ளப்படுவதோடு முதல்வனால் அருளப்பட்டமை பற்றிச் சுத்தவித்தையெனவும் பழைய வரலாறுகளையுணர்துவதாற் "புராணம்" எனவும் அழைக்கப்பட்டது.

இப் பதினெண்புராணங்களும் ஆதியிற் சிவபெருமானால் திருநந்திதேவருக்கும் அவரால் சனற்குமார முனிவருக்கும் உபதேசிக்கப்பட்டு வழங்கப்பட்டு வந்தன. முன்னர் நூறுகோடி கிரந்தமுடையதாய் பிரமாண்டபுராணமென்னும் பெயரில் ஆதிபரமாப்பதியாகிய சதாசிவனாந் திருவாய் மலர்ந்தருளப்பட்டதோர் புராணமே முன்னிருந்துள்ளது. அதனை உலகோர் அறியும் பொருட்டு கிருத யுகத்திலே பிரமதேவர் நூற்றுப்பதினொரு சங்கிதைகள் கொண்ட பதினெண் காண்டங்களும் ஒருகோடி கிரந்தமுமாகச் செய்தார். அதுவும் அறிதல் மிக அருமையாதலால் துவாபர யுகத்திலே வியாச முனிவர் நான்கிலட்சத்து எண்ணாயிரம் கிரந்தத்தில் சுருக்கி ஆக்கியானங்களும் உபாக்கியானங்களும், சுவேதவராகற்பம், இலக்குமி கற்பம், பிரமாண்ட கற்பம், முதலிய கற்ப நிர்ணயசந்தங்களும், சிருஷ்டி முதலிய பஞ்ச லட்சணங்களும் சரியையாதி நாற்பாதங்களும், தருமா தருமங்களும் விளங்கும் பதினெண் புராணங்களாகத் தொகுத்து தம்மக்களுக்குப்தேசிப்பதாக வைணவம், இலிங்கம் சைவம் முதலிய புராணங்களில் கூறப்பட்டுள்ளமை காணலாம்.

புராணங்கள் பதினெட்டினுள்ளும் சிவபுராணங்கள் பத்து அப்பத்தினுள் ஒன்றாக அமைவதே சிவமகாபுராணம் அல்லது சைவபுராணம் என்பதாகும்.

சிவபுராணங்கள் 10

1. சிவபுராணம் / சிவமகாபுராணம், சைவபுராணம், வாயுபுராணம்
2. பவிஷ்ய புராணம்
3. மார்க்கண்டேய புராணம்
4. இலிங்கபுராணம்
5. கந்தபுராணம்
6. வராகபுராணம்
7. வாமனபுராணம்
8. மச்சபுராணம்
9. கூர்மபுராணம்
10. பிரமாண்டபுராணம்

விஷ்ணுபுராணம் - 04

1. கருடபுராணம்
2. நாரதீயபுராணம்
3. விஷ்ணுபுராணம்
4. பாகவத புராணம்

பிரம்ம புராணங்கள் - 02

1. பிரம்மபுராணம்
2. பதுமபுராணம்

சூரிய புராணம் - 01

1. பிரம்மவைவர்த்த புராணம்

அக்கினி புராணம் - 01

1. ஆக்நேய புராணம்

சிவமஹாபுராணம் மகாபுராணமா? அல்லவா? என்பது விவாதத்திற்குரிய தாயினும் சைவசமயம் பற்றியும் கைலசம்பிரதாயங்கள் பற்றியும் பலசெய்திகள் அதிற்காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். சிவமஹாபுராணம் பற்றி வரலாற்று அறிஞரான 'அல்பெரூணி' தனது நூலின் குறிப்பிட்டுள்ளதால் இந்நூலின் காலம் எவ்வாறாயினும் கி. பி. பத்தாம் நூற்றாண்டிற்கு முற்பட்டதாயிருக்க வேண்டும் என்பதில் எதுவித ஐயமுமில்லை.

சிவபுராணம் ஒரு மஹாபுராணம் என்ற வகையில் பிரபஞ்சத்தின் தோற்றம், படைப்பு, மனுவந்தரங்கள், புகழ்பெற்ற அரசர்களான மனுசத்தியவரதன், இஷ்வாகு ஆகியவர்களது பரம்பரை அவர்கள் காலத்துச் சம்பவங்கள், சிவதத்துவமும், சிவவழிபாடும் அதன் சிறப்பும், சிவத்தொண்டு பற்றியும் அவற்றின் சிறப்புப் பற்றியும் விரிவான குறிப்புகளைத் தருகின்றது.

சிவமஹாபுராணம் பற்றி ஆய்வுசெய்து மொழிபெயர்ப்பு நூல்கள் வெளியிட்டோர் பலராகக் காணப்பட்ட போதிலும், அவர்களில் இருவர் இங்கு குறிப்பிடத்தக்கவர்களாக விளங்குகின்றனர். ஒருவர் பேராசிரியர் J. L. சாஸ்திரி மற்றையவர் துர்க்காதாஸ் எஸ். .கே. ஸ்வாமி என்பவர்களாவார். J. L. சாஸ்திரி மூலங்களைப் பரிசோதித்து ANCIENT INIAN TRADITION AND MYTHOLOGY SIVA PURANA என்ற பெயரில் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளார்.

மற்றயது ஸ்ரீ சிவமஹாபுராணம் என்ற பெயரில் துர்க்காதாஸ் எஸ். கே. ஸ்வாமி அவர்களால் மூலங்கள் பரிசோதிக்கப்பட்டு பிரேமா பிரசுரத்தாரால் வெளியிடப்பட்டதாகும். இது தமிழில் உள்ளது.

இச்சிவமஹாபுராணம் ஆறு சம்ஹிதைகளைக் கொண்டதாகும்.

1) ஞானசம்ஹிதை 2) தர்மசம்ஹிதை
3) கைலாயசம்ஹிதை 3) சநற்குமாரசம்ஹிதை
5) வாயு சம்ஹிதை (பூர்வபாகம், உத்தரபாகம்
6) விதியேஸ்வரசம்ஹிதை

சிவமஹபுராணத்தில் எல்லாமாக பன்னிரு சம்ஹிதைகள் விபரிக்கப்படுகின்றன. எல்லாமாக ஒருலட்சம் கிரந்தங்கள் காணப்படுகின்றன. இவற்றுள் தேவலோகத்தில் நின்றவற்றுள் இருபத்து நான்காயிரம் கிரந்தங்களே பூமியில் வந்து வழங்கப்பட்டன என்றும் ஸ்வாமி அவர்கள் கூறுகின்றார்.

இதில் வித்தியேஸ்வர சம்ஹிதையில் சிவனது மகிமை சிவவழிபாட்டுக்குரிய கிரியைகள், மெய்யியல் அடிப்படைகள், அவதாரங்கள், சிவலிங்கத்தின் தோற்றம் அதன்முக்கியத்துவம், அதற்குரிய வழிபாட்டுமுறை, அதனை வழிபட்டோர்க்குரிய பலாபலன் பற்றியும், ஓங்காரமந்திரம், வில்வம், ருத்திராட்சம், விபூதி என்பவற்றின் முக்கியத்துவம் பற்றி விரிவாகக் கூறுகின்றன. ஏனைய சம்ஹிதைகளிலும் இவ்விடயங்களே பெரும்பான்மையும் விபரிக்கப்படுகின்றன.

தொண்டு என்பது யாரென நோக்கின் மனம் மொழி மெய்களால் இறைவனைத்துதித்தலும் வழிபாட்டுக்குரியன செய்தலும் ஆன்மாக்கள் மீதுகொண்ட கருணைமேலீட்டால் இயற்றப்படும் நற்செயல்கள் அனைத்தும் தொண்டு நெறி என்பதனுள் அடங்கும். "மக்கள் தொண்டே மகேசன் தொண்டு" வாடிய பயிர்களைக்கண்டபோதெல்லாம் உள்ளம் வாடிய வள்ளலார் கண்டது தொணடு நெறியின் உச்சநிலை. புணர்வதன் முன் அலகிட்டு மெழுக்குமிட்டு பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடி என்பது நாவுக்கரசரின் தொண்டுநெறி.

யாவர்க்கு மாம்இறை வற்கொரு பச்சிலை
யாவர்க்கு மாம்பசு வுக்கொரு வாயுறை
யாவர்க்கு மாம்உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்குமாம் பிறர்க்கின்னுரை தானே.

என்பது திருமந்திரம் காட்டும் தொண்டு நெறி.

இத்தகைய தொண்டு நெறியின் மகிமை சிவமஹாபுராணத்தில் விபரிக்கப்படு மாற்றினை நோக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். சிவமஹாபுராணத்தில் சிவனது பெருமை பேசப்படுகின்றபோதும் சிவனே முழுமுதல் மூலப்பொருள் என்பதை நிலைநாட்டத்தவறவில்லை. சிவனை முழுமுதலாகக்கொண்டு அமையப்பெற்றிருக்கின்ற ஏனைய தெய்வங்கள் ஆன்மாக்களின் தேவைகளின் நோக்கம்கருதி அமைக்கப் பெற்றனவகும். ஏனைய பிரம்மா, விஷ்ணு, முதலிய தெய்வங்களின் தொழில்கள் வேறுபடுத்தப் பட்டபோதிலும் அவை அனைத்தும் சிவனால் கட்டுப்படுவதை நாம் புராணக்கதைகள் மூலம் அறிய முடிகின்றது. குறிப்பாகச் சொல்வதானால் திருமால் சிவனை வழிபட்டு சக்கராயுதம் பெற்றகதை நல்ல எடுத்துக்காட்டாகும். இத்தகைய செய்திகள் சிவமஹாபுராணம் தன்னில் மிகவும் விரிவாகப்பேசப்படுகின்றமை கண்கூடு.

இவை ஒருபுறமிருக்க அசுரர்கள் என்று சொல்லப்படும் விண்ணவர்கள் செய்த சிவத்தொண்டு மகிமைபற்றி சிவமஹாபராணம் மிக விரிவான கருத்துக்களைத்தந்து நிற்கின்றது. தம்மை ஒறுத்து சிவத்தொண்டு புரிவதும் சிவதவம் செய்வதும் புராணம் தரும் புதுமைத்தகவல்களாகும். குறிப்பாக தாராகாசுரன் என்ற அசுரன் தேவர்களை வெற்றிகொள்வதற்காக இருகைகளையும் ஒருகாலையும் தூக்கிக்கொண்டும் சூரியனைப்பார்த்துக்கொண்டும் நூறு ஆண்டுகள் கடும்தவம் செய்தான். பின்பு மீண்டும் நூறு ஆண்டுகள்வரை பெருவிரலை ஊன்றிக் கொண்டும் நூறு ஆண்டுகள் வரை வெறும் நீரை மட்டும் உண்டுகொண்டும் நூறு ஆண்டுகள் வெறும் காற்றை மட்டும் உட்கொண்டும், நூறு ஆண்டுகள் ஜலத்தில் இருந்துகொண்டும் நூறு ஆண்டுகள் வெய்யிலிலும் நூறு ஆண்டுகள் பஞ்சாக்கினியிலும் நூறு ஆண்டுகள் மரங்களின் கிளைகளைப் பிடித்துக்கொண்டும் நூறு ஆண்டுகள் அதேமுகமாகவும் இருந்து கேட்பவர் மனமும் அஞ்சத்தக்க வகையில் அகோர தவம் செய்தான். அதனால் அநேக வரங்களைப் பெற்று வாழ்ந்தான். வாழ்ந்தான் என்பதைவிட தேவர்களுக்குப் பெரும் துன்பம் விளைவித்தான் என்பதே பொருந்தும்.

தேவர்கள் இந்திரன் தலைமையில் ஒன்றுகூடி ஆலோசித்தனர். இத்துன்ப விடுதலைக்குச் சிவபெருமானின் துணைவேண்டுமென்றனர். சிவன் யோக நிஷ்டையில் இருக்கிறார். நிஷ்டை கலைய எவ்வளவு நாளாகுமோ. அங்கு பணிவிடை செய்ய மலயத்துவசன்மகள் பார்வதி வந்திருக்கிறார் சிவபூசை செய்கின்றாள்.

இந்த இடத்தில்தான் சிவமஹா புராணத்தின் தொண்டு மகிமை எமக்குப் புலனாகின்றது. தன்னை வெறுத்துத்தவம் செய்த தரகாசுரன் தொண்டுக்குகந்த பரிசு கிடைத்தது. அதை அவன் நேரிய வழியில் பிரயோகிக்காததால் அழிந்தான். பார்வதி தேவியின் தொண்டு எவ்வித நோக்கமும் அற்றது. ஆனால் தேவர்களின் தூண்டுதலால் மன்மதன் அம்பெய்ய யோசித்த சிவபெருமான் கனநேரத்தின்பின் தன்னுணர்வு பெற்றவராக காமனை எரிக்கின்றான். பார்வதிக்குத்தண்டனை கொடுக்கிறார். இது சிவத்தொண்டு மகிமைக்குக் கிடைக்கும் பரிசு என்று கூறவேண்டும். சிவத்துரோகம் செய்பவர் எவராயினும் தண்டனை அனுபவிப்பர் என்பது சிவமஹாபுராணம் தரும் செய்தியாகும்.

இவைமுடிந்துவிட்டன. பின்பு பார்வதி தவமிருக்கின்றாள். சிவனை அடைவதற்காகக் கடுந்தவம் புரிந்தாள். தவம் புரிந்தாள் என்றால் வெறுமனே கண்ணைமூடி இருக்கவில்லை. இமயமலையிலே புனித நதிகள் பெருகும் கௌரீகுளம் என்னும் இடத்தில் இருந்துகொண்டு தவம் செய்தாள். மரங்களை நட்டாள். தண்ணீர் ஊற்றினாள். அதிதி பூஜை செய்தாள். அவள் தவம்செய்த இடத்தினருகே இருந்த சிங்கம், புலி, மான், பசு முதலிய மிருகங்கள் இயற்கைப் பகையின்றி வாழ்ந்தன. பார்வதி செய்த தவத்தின் காரணமாய் அதைக்காண வந்த முனிவர்கள் எல்லோரும் திருக்கைலாயம் சென்று சிவனைத் தரிசிக்கும்பேறு பெற்றனர். பார்வதியின் தவம் பற்றியும் எடுத்துரைத்தனர். என்றால் சிவத்தொண்டு மகிமைபற்றி இதைவிட வேறு சான்று தேவையில்லை என்றே சொல்லிவிடலாம்.

திருமால் சக்கராயுதம் பெற்ற கதைப்பகுதியில் விஷ்ணு மூர்த்தியின் சிவபெருமானைக் குறித்த தவம்பற்றிக் கூறப்படுகின்றது. கைலாயமலையில் ஓமகுண்டம் அமைத்து யாகம் வளர்த்து பலவித ஸ்தோத்திரங்களாலும் மந்திரங்களாலும் சேவித்து மானஸரஸிலிருக்கும் தாமரை மலர்களால் பூசித்துத் பத்மாசனத்தில் வீற்றிருந்து யோக நிலையாடைந்தார். அநேக காலம் பூஜை இயற்றியும் சிவபெருமான் காட்சியளிக்காததால் சிவனது ஆயிரம் நாமங்களை ஆயிரம் தாமரை மலர்களால் பூஜிக்கத்துணிந்து மலர்களையும் பறித்துவைத்தார். சிவன்விஷ்ணுவை பரீட்சிக்க விரும்பிக் கடைசியில் ஒரு நாமத்துக்கு ஒருபெயர் குறையும்படி செய்தார். அதனால் தனது சிவபூஜா நியமத்துக்கு குறைபாடு ஏற்படுவதைச் சகிக்காமல் எனது கண் தாமரைமலரேயாகும். இதனாலேயே என்பூஜை முடிப்பேன் என்று அதைப்பறிக்கத் தொடங்கினார். காத்தல் கடவுளராகிய மகாவிஷ்ணுவுக்கே இந்நிலையென்றால் சாதாரண மாந்தர் எமக்கு எம்மாத்திரம். இது சிவத்தொண்டு மகிமைக்கான பிறிதொரு எடுத்துக்காட்டு.

இவைமட்டுமன்றி சிவராத்திரி விரத பலன்கள், சிவபூஜாபலன் புண்ணிய ஷேத்திரங்களை வழிபடுதல், மலர்களின் மகிமை சிவபுண்ணியம், மாதஉபவாசமகிமை, நாமாஸ்டமி விதி, தானப்பலன், திருநீற்றின் பெருமை, பிரணவ உச்சாரண பலன், பிராணாயாம விதிமுறை, நாடிச்சிறப்புகள், சிவபுரத்தின் சிறப்புகள், சிவஞானநிலை, காலஅளவு, தேவர்களின் ஆயுள், உபமன்யு முனிவர் பெற்றபேறு, சிவ தீக்ஷை சிவசக்தி மகிமை, பஞ்சாஷரமந்திரமகிமை, குருதீக்ஷாவிதி ஏனைய தீக்ஷாவிதிகள், ஆச்சாரிய அபிஷேகம், நித்திய நைமித்திய கர்மங்கள், மானஷபூஜாவிதி, கிரியா பூஜாவிதி, சிவஹோமம், காமிய கன்மபலன், ஸ்தோத்திரம் அக்கினிகாரியம், சிவவிரதம், சிவலிங்கவழிபாடு, தீர்த்தமகிமை, பஞ்சயக்ஞமும் வாரபூஜையும் முதலிய இன்னோரன்ன விடயங்கள் கூறப்படுகின்றன. இவையனைத்தையும் தனித்தனி ஆராயப்புகின் இந்தநாள் போதுமா? இத்தகைய சிவமஹாபுராணத்தைப் படிப்பதன் மூலம் பூவுலக ஆன்மாக்கள் ஆன்மீக வீடுபேறு அடைகின்றன.


எனவே 'தொண்டு' என்பது வெறுமனே மண்ணுலகத்தார்க்கு மட்டுமன்றி விண்ணுலகத்தார்க்கும் ஏன் மூவுலகத்தார்க்கும் ஆன்மீக வீடுபேற்றை விளைவிக்கும் என்று கூறினால் அதி மிகையில்லை.

முற்றிற்று.


உ
சிவமயம்



ஆலயத்தின் முகப்புத் தோற்றம்



திருமண மண்டபம்

திருக்கணித பதிப்பகம் - சாவகச்சேரி. 021 227 0257